


# ஊருணி

பிரதேச செயலகம், நல்லூர் - 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# ஊருணி

[புதிய செயலக திறப்பு விழா சிறப்புமலர்]

DIVISIONAL SECRETARIAT, NALLUR
பிரதேச செயலகம், நல்லூர்

PUBLIC LIBRARY
JAFFNA.

இதழாசிரியர்
பரமலிங்கம் தமிழ்மாறன்

பிரதேச செயலகம்
நல்லூர்
2010


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5951(P) PL.

| | | |
|---|---|---|
| மலரின் பெயர் | :- | ஊருணி |
| Title | :- | Ooruni |
| மொழி | :- | தமிழ் |
| Language | :- | Tamil |
| பதிப்புரிமை | :- | இதழாக்கக்குழு |
| Copy Right | :- | Book Publication Committee |
| இதழாசிரியர் | :- | ப. தமிழ்மாறன் (கலாசார அபிவிருத்தி உதவியாளர்) |
| Editor | :- | Mr. P. Thamilmaran (Cultural Development Assistant ) |
| வெளியீடு | :- | ஐப்பசி 2010 |
| Publication | :- | October 2010 |
| அட்டைப்படம் | :- | கலாபூஷணம் ஆசை இராசையா |
| Cover art Design | :- | Kalapoosanam Asai Rasaiah |
| நூல்வடிவமைப்பு | :- | இதழாசிரியர் |
| Book Design | :- | Editor |
| பதிப்பு | :- | கரிகணன் பிறிண்டேர்ஸ்,<br>இல. 424, காங்கேசன்துறை வீதி,<br>யாழ்ப்பாணம். |
| Printing | :- | Harikanan Printers<br>No. 424, K.K.S. Road, Jaffna. |
| அளவு<br>Size | :- | B5 |
| பக்கங்கள்<br>Page | :- | 225 |
| பிரதிகள்<br>Copies | :- | 500 |
| விலை<br>Price | :- | Rs.250.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நல்லூர் பிரதேச வரைபடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச கீதம்

**இராகம் : வலஜி** **தாளம் : சதுஸ்ர ஏகம்**

வாழ்க புகழ்நிறை நல்லை எழிற் பிர
தேசமே வாழியவே!
மாண்பில் உயர்ந்து வளம் பல பெற்றென்றும்
வாழ்க சிறப்புடனே ! (வாழ்க)

ஆன்மிக ஊற்றில் தினம் வளர்ந் தோங்கிடும்
ஆத்ம பலத்துடனே...
அன்னைத் தமிழ்மொழி வெல்ல உழைப்பவர்
அன்பின் துணையுடனே...
நீண்டபண் பாட்டின் நிழல்தனில்... எம் அடை
யாளங்கள் காத்திடவே.....
நெஞ்சுள சைவ, கிறிஸ்தவ மார்க்கத்தால்
நீதி செழித்திடவே... (வாழ்க)

**இராகம் : கானடா**

ஆழ்ந்த கலை மலர்ந்தாடிடக் கல்வியில்
அறிவியலிற் செழித்தே
ஆற்றல் தரும் விளையாட்டு, தொழில்களில்
அதிசயம் செய்துயர்ந்தே...
சூழ்ந்த வயல், கடல், தோட்டம் தனில்... தினம்
அபிவிருத்தி தொடர்ந்தே...
சொர்க்கம் இம்மண்ணெனச் சொல்லி நிமிர்ந்து எம்
சூழலைக் காப்பமின்றே...!

**இராகம் : ரேவதி** (வாழ்க)

அற்புத ஞானியர், சித்தர், துறவிகள்
ஆடி அமைந்த நிலம்
முத்தமிழ்க் காவலர், கற்றவர், வீரரின்
மூச்சு நிறைந்த இடம்
எத்தனை கோவில்கள், கல்வியின் சோலைகள்,
இன்றுஞ் செழிக்குந் தலம்
இங்குள மாந்தர்க்கு சேவை செய்வோம் .... இது
எமக்குக் கிடைத்த வரம். (வாழ்க)

கவிஞர்: த. ஜெயசீலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாக்கக் குழு

**தலைவர்** திரு.அ.சோதிநாதன்
உதவிப்பிரதேச செயலர்

**இதழாசிரியர்** திரு.ப. தமிழ்மாறன்
கலாசார அபிவிருத்தி உதவியாளர்

**உறுப்பினர்கள்**

திரு. ப. காண்டீபன்
அபிவிருத்தி உதவியாளர்

திரு.பு. தஜிதரன்
கிராம உத்தியோகத்தர் (J/92)

திரு. டி. தயாகரன்
முகாமையாளர், சமுர்த்தி வங்கிச் சங்கம், கோண்டாவில்

திரு. P.K.B. பாலசங்கர்
முகாமைத்துவ உதவியாளர்

திரு. ச. பிறேம்குமார்
முகாமைத்துவ உதவியாளர்

திரு. வை. சுரேஸ்
கிராம உத்தியோகத்தர் (J/97)

திருமதி கு. ரஜனி
கலாசார உத்தியோகத்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலகம், நல்லூர்.



இதழாக்கக் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊருணியின் ஊற்றுக்கள்


| | |
|---|---|
| நல்லைக்குருமணியின் அருளாசிச் செய்தி | vii |
| யாழ் ஆயரின் அருளாசிச் செய்தி | viii |
| வடமாகாண சபை பிரதம செயலாளரின் வாழ்த்துச் செய்தி | ix |
| அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி | x |
| முன்னாள் அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி | xi |
| மேலதிக அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி | xii |
| கட்டிடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளரின் வாழ்த்துச் செய்தி | xiii |
| பிரதேச செயலரின் செய்தி | xiv |
| முழுநகை சிந்தும் ஊருணி (இதழாக்கக் குழுத் தலைவரின் செய்தி) | xvi |
| நூன்முகம் | xvii |


**பொய்கை**


| | | |
|---|---|---|
| 01. | நல்லூர் பிரதேச (மும்) செயலக (மு) ம் | 01-07 |
| 02. | "நல்லூர்" தமிழ் இராசதானியின் தலைநகராகத் தோன்றிய வரலாறு - ஒரு மீள் வாசிப்பு | 08-18 |
| 03. | நல்லூர்ப் பிரதேசத்தில் இந்துப்பண்பாடு | 19-24 |
| 04. | ஈழத்துத் தமிழ் இலக்கியமும் நல்லூர்ப் பிரதேசமும் | 25-34 |
| 05. | மேழிச்செல்வம் சிறக்கவேண்டும் | 35-37 |
| 06. | வளங்கள் நிறைந்த நல்லூர் | 38-39 |
| 07. | நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அரச காணிகளும் அவை பிரித்து வழங்கப்பட்ட முறைகளும் | 40-46 |
| 08. | நல்லூர் பிரதேச அபிவிருத்தியில் கைத்தொழில் துறையின் முக்கியத்துவம். | 47-57 |
| 09. | பிரதேச செயலகங்களில் சமூக பராமரிப்பு நிலைய செயற்றிட்டமும் அதன் பயன்களும் | 58-61 |
| 10. | நல்லூர் பிரதேச செயலகப்பிரிவில் வெள்ளப்பாதிப்பும் அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேவையும் | 62-67 |
| 11. | பிரதேச செயலக நிதிசார்ந்த செயற்பாடுகள் | 68-77 |
| 12. | இலங்கையின் நிர்வாக அமைப்பு ஒரு மீள்பார்வை | 78-83 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. கிராம நிர்வாக முறைமையும் கிராம உத்தியோகத்தர் பதவியும் - ஒரு மீள் பார்வை 84- 87
14. வறுமைத் தணிப்பு நடவடிக்கைகளில் சமுர்த்தித் திட்டத்தின் பங்கு 88-93
15. ஞான நல்லூர் 94-95
16. பல்லாண்டு வாழி பழுத்து 96
17. நல்வாழ்வு வாழியவே 97-98

**நதி**

18. பரப்புவோம் பைந்தமிழை 101
19. அமைதிக்குத் திரும்பிய பிரதேசங்களுக்குரிய மீள் அபிவிருத்தி: அனுபவங்களும் சிந்தனைகளும் 102-108
20. இலங்கைப் பொருளாதார அபிவிருத்தியில் **GSP+** சலுகைகொண்டிருக்கும் பங்கு 109-113
21. வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவம் 114-119
22. How To Plan Your Project Successfully? 120-124
23. இரசானுபவம் 125-133
24. நம்பிக்கைகளும் நடைமுறைகளும் ஓர் ஆய்வு நோக்கு 134-140
25. நல்லாட்சியும் அபிவிருத்தியும் 141-143
26. உற்பத்தித் திறன் தொடர்பான ஐவகை எண்ணக்கருக்கள் **(5S)** 144-147
27. பிரதேச திட்டமிடலில் நீர்வள முகாமையின் முக்கியத்துவம் 148-152
28. உலகை வியக்கவைக்கும் நனோ தொழில் நுட்பம் 153-161
29. பால்நிலை சமத்துவமும் சமுதாய முன்னேற்றமும் 162-165
30. பெண் தலைமைத்துவம் - ஒரு பார்வை 166-170
31. மனிதகுலநெருக்கடியும் முதலாளித்துவ அமைப்பும் 171-175
32. யாழ்ப்பாணப் புகைப்படக்கலை வரலாறு 176-183
33. அறிவார்ந்த சமூக மறுமலர்ச்சி நோக்கிய படிமுறைகள் 184-188
34. வெற்றிகரமான உறவுப் பேணுகையில் தொடர்பாடல் ஒரு குறிப்பு 189-192
35. அறிவியல் வளர்ச்சியும் சமுதாய மாற்றங்களும் 193-200
36. நல்லூர் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் 201-205



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் அவர்களின்

# அருளாசிச்செய்தி



அன்புசார் பெருந்தகையீர்,

நல்லூர் பிரதேச செயலகத்துக்குப் புதிதாக கட்டிடம் அமையப்பெற்று திறப்பு விழா நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். பழைமையும், பெருமையும், பல சிறப்புக்களையும் கொண்ட நல்லூர்ப் பிரதேச மக்களுக்கான சேவையை மிகச் சிறப்பாகச் செய்வதற்கு நிறைவான கட்டிடம் அமையப்பெற்றிருப்பது அனைத்து மக்களுக்கும் மிக மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாகும். இந் நிகழ்ச்சியைச் சிறப்பிக்கும் வகையில் "ஊருணி" என்ற பெயரில் ஒரு இதழ் மலர்வது வரவேற்கத்தக்கது. மனித வாழ்க்கை மகத்தானது. இதனை 'மனிதனுக்குச் செய்யும் சேவை, மகேசனுக்குச் செய்யும் சேவை' எனக் கூறுவர். இதனை வெளிப்படுத்தும் வகையில், இம்மலரில் இப்பிரதேசத்தின் இலக்கியம், கலாசாரம், அறிவியல், தொழில் நுட்பம், விவசாயம், உளவியல், அபிவிருத்தி போன்ற பல விடயங்களையும் உள்ளடக்கி நூலுருப்பெறுவது மேலும் வலுச் சேர்ப்பதாக அமையும் என நம்புகின்றோம். இப் பிரதேச செயலகப் பணிகள் மேலும் வளர்ச்சியடைந்து சிறப்புற நல்லூர் முருகப் பெருமானின் ஆசிகள் என்றும் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக<br>ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்<br>இரண்டாவது குருமஹாசந்நிதானம்,<br>நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,<br>நல்லூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் ஆயரின்

# ஆசிச் செய்தி



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தில் தன் பணியைப் புதுப்பொலிவுடன் ஆரம்பிக்கும் நல்லூர், பிரதேச செயலகமானது தன் நினைவாக வெளியிடும் "ஊருணி" என்ற சிறப்பு மலருக்கு நானும் என் ஆசிச் செய்திகளை வழங்குவதில் மகிழ்ச்சியடை கின்றேன்.

மக்களின் தேவைகளை உணர்ந்து கடந்த போர்க் காலங்களில் தனது பழைய இடத்தில் நல்லூர் பிரதேச செயலகமானது ஆற்றிய பணிகள் பாராட்டத்தக்கது. தனது சேவையின் வசதிக்கு ஏற்ப இடம் காணாத காரணத்தால் இன்று புதிய இடத்தில் புதிய கட்டடத்தை அமைத்துத் தன் சேவையைப் புது உற்சாகத்துடன் ஆரம்பிக்கும் இப் பிரதேச செயலகம் மென்மேலும் தன் சேவையில் வளர வாழ்த்துகின்றேன். குறிப்பாக, போர்க்காலங்களில் தன் பணியை ஆற்றியதுபோல இன்று போர்முடிந்து மக்கள் தம் மீள்குடியேற்றங்களை ஆரம்பித்துப் பல இன்னல்களை அனுபவிக்கும்வேளை இப்பிரதேச செயலகமானது தொடர்ந்தும் தன் அர்ப்பணம் நிறைந்த சேவையால் மக்கள் துயரைத் துடைக்க வழிகாட்ட வேண்டும் என்றும் இச் செயலகத்தில் பணிபுரியும் எல்லோரும் தம் சேவையில் சிறந்துவிளங்க இறை ஆசியையும் வேண்டுகின்றேன்.

நன்றி

மேதகு இ. தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ். ஆயர்
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு மாகாண சபை பிரதம செயலாளரின்

# வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம், உலக கலாசாரத்தில் ஒரு மையமாக இன்றுவரை விளங்கி வந்துள்ளதுடன் அவ்வாறே என்றும் விளங்கத்தக்கதாகும். அந்தக் கலாசார விழுமியப் பேணுதலில் அரசாங்க நிறுவனமான நல்லூர் பிரதேச செயலகத்தின் வகிபாகம் முக்கியத்துவமானது. தமிழ் பண்பாட்டு, கலாசாரம் என்றதும் மணிமகுடமாகத் தெரிவது "நல்லூர்" என்னும் நனி சிறந்த ஊராகும். இந்நல்லூரிலே; நல்லூர் பிரதேச செயலகம் நவீனமயப்பாட்டுடன் கவினுறு கட்டிடத்தில் காலடி எடுத்துவைப்பதையிட்டு ப் பெருமைசால் களிப்படைகின்றேன்.

நல்லூர் செயலகத்தின் நற்பணிகள் தொடர்ந்து கிளைபரப்பி, விழுதெறிந்து சிரஞ்சீவித்துவத்துடன் நிலைக்கவும், புதிய செயலகத்தின் புகுமுக விழாவில் பொலிவுடன் மலர்கின்ற "ஊருணி"யின் ஊற்றுப் பெருக்கால் தமிழ் உள்ளமெல்லாம் தலைநிமிர்ந்து சிலிர்க்கவும் எல்லாம் வல்ல அலங்காரக்கந்தனாம் நல்லைக்கந்தன் அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

"உண்ணு நீர் தேடி ஓடுகின்ற உயிர்களுக்கு ஊட்டமளிப்பது எமது சேவை" என்பதற்கிணங்க நல்லூர் பிரதேச செயலக ஆற்றுகை விழுமியங்களைப் பிரதிபலிப்பதாக அமையப்பெற்ற மலராம் "ஊருணி" ஓங்கிச் சிறக்கவென வாயார வாழ்த்துகின்றேன்.

"நல்லோர் சிந்தையில் நலம்மிகத் தோன்றிய நல்லெண்ணங்கள் எல்லோரும் களிக்க இனிது நிறைவெய்தும்" என்பதற்கு இப்பிரதேச புதிய செயலகப் பணிகளும் ஊருணி மலரும் உதாரணமாகட்டும்.

ஆ. சிவசுவாமி
பிரதம செயலாளர்,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க அதிபரின்

# வாழ்த்துச் செய்தி



நீலமயிலேறி, ஞாலம் வலம்வந்த கோலமுருகன் அலங்காரக் கந்தனாய் அருளாட்சி செய்யும் நல்லையம் பதி, கிராமியச் செழுமையும், நகரத்தின் நவீனமும் ஒருங்கிணைய, ஆண்ட தமிழ்ப் பரம்பரையின் அழியாத வரலாற்றுச் சான்றான சங்கிலியன் தோப்பும், அரண் மனையும் அணிசெய்ய, யாழ். மண்ணின் பெருமை தனைப் பகர்ந்து நிற்கும் பாரம்பரியப் பிரதேசமாகும். இத்தகைய சிறப்புக்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்ட நல்லூரின் நிர்வாகத்தினைச் சிறப்புற நடாத்திவரும் பிரதேச செயலகத்திற்கெனப் புதிய கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டு, மேற்கொள்ளப்படவுள்ள திறப்பு விழாவின் சிறப்பு மலராம் ஊருணிக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

"ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு" காலத்தை வென்று நிற்கும் வள்ளுவன் குறள் ஊருணியின் சிறப்பைப் பொருள்பட நவில்கிறது. ஊருணியில் நிறைந்துள்ள நீர் உலக மக்களுக்கும் பயன்படல்போல, சமூகத்தின் அனைத்துத் தேவைகளையும் தனது நிர்வாக அலகின்கீழ் திறம்படப் பூர்த்திசெய்யக் காத்திருக்கும் நல்லூர் பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவினை ஒட்டி, முகைய விழ்க்கும் ஊருணி சமூகம்சார்ந்த அனைத்து விடயங்களையும் தன்னகத்தே உள்வாங்கி, பேரருளாளனிடத்துப் பெருநிதியாய், பிரதேசத்து மக்களுக்கு மட்டுமன்றி, படிப்போர் அனைவர்க்கும் பயன்தரும் என்பது திண்ண மாகும். நல்லூர் பிரதேச செயலகத்தின் திறப்பு விழா சிறப்புற நிகழவும், ஊருணியின் நன்னோக்கம் எண்ணியவாறெய்தவும் மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

திருமதி இமெல்டா சுகுமார்
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்,
யாழ் மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் அரசாங்க அதிபரின்

# வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நல்லூர்ப் பதியிலே, நல்லூர் பிரதேச செயலகத் திற்கான புதிய கட்டிடத்திறப்பு விழா இடம் பெறுவது குறித்தும், ஊருணி என்ற மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவது குறித்தும் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மிகவேகமாக வளர்ச்சியடைந்துவரும் உலகியல் மாற்றத் திற்கு ஈடுகொடுக்கும் வகையில் அரச நிறுவனங்களின் செயற்பாடுகளை மாற்றியமைப்பதன்மூலமே நிறைவான சேவையை வழங்கமுடியும். அந்த வகையில் முன்னைய அலுவலகத்தில் பாரிய இடநெருக்கடிகள் இருந்த நிலையில், தேவைகருதிப் புதிய கட்டிடத்தை நிறுவியதன்மூலம் நல்லூர் பிரதேச மக்களுக்கான சேவையினைச் சிறப்பாகவும், துரிதமாகவும் செய்வதற்கு வாய்ப்பேற்பட்டுள்ளது. பிரதேச செயலகங்கள் இன்று அபிவிருத்திக்குரிய கேந்திர நிலையங்களாகக் கருதப்படுகின்றன.

நல்லூர் பல்வேறு பெருமைகளைக்கொண்ட மக்கள் செறிந்து வாழும் சிறந்த பிரதேசமாகும். கணினி மயமாகிவிட்ட இன்றைய உலகில் புதிய கட்டிடத்தொகுதியில் செயற்படவுள்ள நல்லூர்ப் பிரதேச செயலகத்தின் செயற்பாடுகள் உலகத்தரமுடையதாக அமைவதோடு சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் மக்களுக்கு இதய சுத்தியுடனும், அர்ப்பணிப்புடனும் நல்லாட்சிக்கு வரைவிலக்கணமாகவும் சேவையாற்ற வேண்டும் என்பதே எனது வேண்டுகோளாகும்.

புதிய கட்டிடத்திறப்பு விழாவின் பொருட்டு வளத்தினைக் குறிக்கும் வகையில் ஊருணி என்ற பெயரினைக்கொண்டு பல்வகை அம்சங்களையும் சித்தரிக்கும் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் இம்மலர் சிறக்கவும் நல்லூர்ப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தன்னிகரில்லாச் சேவையினை வழங்கவும் இறைவனைப் பிரார்த்தித்து என் வாழ்த்துக் களைத் தெரிவிப்பதிற் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

க. கணேஷ்
முன்னாள் அரசாங்க அதிபர் ,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிக அரசாங்க அதிபரின்

# வாழ்த்துச் செய்தி



நல்லைக் கந்தனின் அருள் சுருக்கும் நல்ல ஊரில், சங்கிலிய மன்னன் அரசாண்ட வரலாற்று மண்ணில் நிர்மாணிக்கப்பட்டுள்ள, நல்லூர் பிரதேச செயலகப் பணி ஆரம்பிப்பு நன்னாளில், பொய்கையும், நதியும் பிரவாகிக்கும் "ஊருணி" என்னும் நயப்பிதழுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் களிபேருவகையடைகின்றேன்.

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகப்பிரிவுகளில் வரலாற்று ரீதியாகவும், இலக்கியப் பெருமைகளாலும், கலை, கலாசார விழுமியங்களாலும், இயற்கை நளினங்களாலும் அதிகம் பேசப்படுகின்ற நல்லூர் பிரதேச செயலகப் பிரிவு; தனக்கெனச் சில தடங்களைப் பதித்து மிளிர்ந்துகொண்டிருப்பது காலத்தால் அழியாத உண்மையாகும்.

ஒரு காலத்தில் தோன்றும் இலக்கியமானது, அக்கால சமுதாயத்தின் சமூகம், சமயம், கலை, பொருளாதாரம், வாழ்வியல், கல்வி, தொழில், அபிவிருத்தி முதலான இன்னோரன்ன விடயங்களையும் தெளிவுபடுத்திக் காட்டும் வல்லமைகொண்டதாய் இருத்தல்வேண்டும். அந்த வகையில் பல்துறைசார் விடயங்களையும் உள்ளடக்கி யாழ்ப்பாணத்தில், இலங்கை யின் தமிழர்களின் வாழ்வியல் மற்றும் தொலைநோக்கு அம்சங்களை விபரிப்பதாக இந்நூல் அமைந்திருப்பது பாராட்டுதற்குரியதாகும்.

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் என்பது ஆன்றோர் வாக்கு. தற்போது இளையவர்களிடம் வாசிப்புப்பழக்கம் அருகிவரும் நிலையில் வெளிவரும் "ஊருணி" எல்லோராலும் படித்தின்புறத் தக்கதாயும், நீண்டகாலம் பேணத்தக்கதாயும் அமைந்து சிறப்புற, என் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் நிறைவடைகின்றேன்.

திருமதி ரூபினி வரதலிங்கம்
மேலதிக அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடத் திணைக்களப் பிரதம பொறியியலாளரின்

# வாழ்த்துச் செய்தி



அழகுக் கந்தனாம் நல்லூர் முருகன் அருகே புத்தம் புதிதாய் வடிவமைக்கப்பெற்ற இக்கட்டிடம் எம்மக்களின் புனித சேவைக்காக ஆயத்தமானதையிட்டுக் கட்டிடத்திணைக்களம் சார்பாக நாம் மிக்க மகிழ்வுறு கின்றோம்.

புதிய புதிய முகாமைத்துவ நெறிமுறைகளுடன் சிற்றூழியரிலிருந்து பிரதேச செயலர்வரை ஒன்றிணைந்து நீதிவழி நின்று மக்கள் தேவைகளை நிறைவேற்றுவதில் அனைவரும் தம்மை அர்ப்பணிப்பார்கள் என்பதை நினைத்து மனமகிழ்கின்றோம்.

நல்லூரில் ஆயிரமாயிரம் மக்கள் தம் தேவைகளை, குறைகளைத் தீர்த்துவைக்கும் இன்னோர் கோயிலாக இச்செயலகம் செயற்படப் போவதையிட்டு நாம் மனநிறைவுகொள்கின்றோம்.

போர் அனர்த்தங்களால் சகலதையும் தொலைத்துவிட்ட நம் மக்களுக்குப் பிரதேச செயலக ஊழியர்கள் அனைவரும் இன்முகத்துடன் உபசரித்து, தாமாகத் தேவைகளைக் கேட்டறிந்து பூரண திருப்தி அளிக்கும் வகையில் சேவைகளை இப்புதிய கட்டிடம் ஊடாக அன்புடன் அள்ளி வழங்கப் போகிறார்களே என்பதை எண்ணிப் பார்க்கையில் கட்டிட உருவமைப்பில் பங்குகொண்ட எம் திணைக்கள ஊழியர்கள், ஒப்பந்தகாரர் உள்ளிட்ட தொழிலாளர்கள் அனைவரும் பட்ட கஸ்ரங்கள் எல்லாம் காற்றாய்ப் பறந்து மனம் பூரித்து நிற்கின்றோம்.

"வாழ்க மக்கள் சேவை
நிறைவுடன் வளர்க நம் மக்கள்"

கந்தசாமி குகநேசன்
பிரதம பொறியியலாளர்,
கட்டிடங்கள் திணைக்களம் (வ.மா)
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலரின் செய்தி



இலங்கையில் பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக உருவாக்கப்பட்ட அரசாங்க அலுவலகங்கள் பல உள்ளன. அவற்றுள் பரவலாக்கப் பட்ட அதிகாரங்களுடன் சேவைகளை மக்களின் காலடிக்குக்கொண்டு செல்கின்ற அலுவலகங்களாகப் பிரதேச செயலகங்கள் விளங்கிவருகின்றன. ஆரம்ப காலங்களில் 'மணியகாரன்' முறையில் இருந்த பிரதேச நிர்வாகமானது இன்று பிரதேச செயலகமாகப் பலதரப்பட்ட சேவைகளை மக்களுக்கு ஆற்றும்வகையில் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

அந்த வகையிலே, தமிழரின் இருப்பையும், பண்பாட்டையும் பறை சாற்றுகின்ற யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்திலே, யாழ். நகருக்கு அண்மையிலமைந்து, சைவமும் தமிழும் சிறந்து மிளிருவது நல்லூர் பிரதேச செயலக பிரிவாகும். மிக நீண்டகாலமாகத் திருநெல்வேலி கிராமத்திலே அடிப்படை வசதிகள் குறைந்த கட்டிடத்தில் இப்பிரதேச செயலகம் இயங்கி வந்தது. அரியாலை தொடக்கம் கோண்டாவில் வரை 40 கிராம அலுவலர் பிரிவுகளைக்கொண்ட நல்லூர் பிரதேச செயலகப்பிரிவிற்கு நிரந்தர வசதிகள் நிறைந்த அலுவலகக் கட்டிடம் இல்லாத குறை தற்போது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. நல்லைக்கந்தன் ஆலயச்சூழலில் அரச, தனியார் நிறுவனங்கள் அமைந்துள்ள சுற்றாடலில், மக்கள் செறிவாக வசிக்கின்ற பருத்தித்துறை வீதியை அண்மித்து, விசாலமான கட்டிடத்தில் தனது பணிகளை ஆரம்பிக்கவுள்ளமை மட்டற்ற மகிழ்ச்சியையும், பெருமையையும் தருகின்றது.

நல்லூர் பிரதேச மக்களின் சேவைக்கான இக்கட்டிடம் அமைக்கப்படுவதற்கு உதவியவர்களுக்கும், பாடுபட்டவர்களுக்கும் இச்சந்தர்ப்பத்திலே எமது நன்றியைத் தெரிவிப்பதில் மனமகிழ்வடை கின்றேன். அந்தவகையில் கட்டிடம் அமைப்பதற்காகத் தமது காணியை மனமுவந்து வழங்கிய நல்லூர்க் கந்தசுவாமி ஆலய நிர்வாகத்தினர் என்றும் எமது நன்றிக்குரியவர்களாவார்கள். அதேபோல், இக்கட்டிடம் அமைப்பதற்குக் காணியைத் தெரிவுசெய்து, அது தொடர்பான பணிகளில் ஈடுபட்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கின்றேன். மேலும் கட்டிட நிர்மாணப்பணிகளுக்கு வேண்டிய ஆலோசனைகளையும், ஊக்கத்தினையும் வழங்கிய முன்னாள் அரசாங்க அதிபர் திரு. க. கணேஷ் அவர்களுக்கும், இந்நாள் அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அவர்களுக்கும் பிரதேச மக்கள் சார்பாகவும், அலுவலர்கள் சார்பாகவும் இதய பூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும்.

திறம்பட எமது பிரதேச செயலகத்தை நிர்மாணித்துத் தந்த வடமாகாணக் கட்டிடத் திணைக்களத்தினருக்கும், நிர்மாண ஒப்பந்தகாரர்களுக்கும் மனநிறைவுடன் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம். மேலும், இக்கட்டிடத் திறப்புவிழா மலர் வெளியீட்டுக்காகப் பாடுபட்ட இதழாக்கக் குழுவினருக்கும், ஆசிச் செய்திகளையும், ஆக்கங்களையும் தந்துதவிய பெரியோர்களுக்கும், கட்டுரையாளர்களுக்கும் உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இதேவேளை கட்டிடத்திறப்பு விழா சிறப்பாக நடந்தேற அல்லும் பகலும் பணியாற்றிய எமது செயலக உத்தியோகத்தர்களுக்கும், பிரதேசத்தில் இயங்குகின்ற வங்கிகள், வர்த்தக சமூகத்தினர், கிராம அமைப்புக்கள், பிரதேச நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது சிறப்பான நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன். இன்றைய நவீன கணினி யுகத்திற் சவால்களை எதிர்நோக்கி, நல்லூர் பிரதேசத்தின் அபிவிருத்திக்காக வினைத்திறனுடனும் இருதய சுத்தியுடனும் எமது புதிய செயலகக்கட்டிடத்தில் அர்ப்பணிப்புடன் மக்களுக்கு, சேவையாற்ற எமக்கு ஊக்கமளித்து, ஒத்துழைப்பும் நல்குமாறு அனைவரையும் இருகரம்கூப்பி வேண்டிக் கொள்கின்றேன்.

"மக்கள் சேவை மகேசன் சேவை"

பா. செந்தில்நந்தனன்
பிரதேச செயலர்,
நல்லூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழு நகை சிந்தும் ஊருணி



"தமிழுக்கு அமுதென்று பேர்
அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

ஆம்! தமிழின் சிறப்பைத் தரணியெலாம் எடுத்தோம்பப் பண்டுதொட்டு இன்றுவரை புகழ்பரப்பி நிற்கும் ஊர்; யாழ். மண்ணின் பண்பாட்டுத் திலகமான நல்லூர் எனில் அதற்கு மாற்றுக்கருத்தில்லை.

நல்லூர் பிரதேச செயலகம் வளமான வண்ணமுறு புதிய கட்டிடப் பிரவேசத்தில் தடம்பதிக்கும் வேளையிலே; பிரதேச செயலரின் நெறிப்படுத்தலிலே, "ஊருணி" என்னும் உயர்திரு நன்மலராள் கருவாக உருவாகித் திருவாக உதிக்கின்றாள். இந்நன்மலராளின் வருகைக்கு மலர்க்குழுத் தலைவராகச் செயற்பட்டதனை எண்ணிப் பெருமகிழ்வு கொள்கின்றேன். ஊருணி மலரானது பன்முகப்பார்வையில் காத்திரமாய்க் கலகலக்க வேண்டும் என்ற விருப்பினால், பற்பல பயனுள்ள கட்டுரைகள் சுமந்து நிற்கின்றது.

இவ்விதழின் ஒழுங்கமைப்பு, வடிவமைப்பு முதலான ஆக்கபூர்வ செயற்பாடுகளை அயராது பாடுபட்டுழைத்த இதழாசிரியர் என்றும் நன்றிக்குரியவர். இம்மலருக்கான ஆசியுரைகள், வாழ்த்துரைகள் வழங்கிய பெரியோர்க்கும்; ஆக்கங்கள் தந்துதவிய பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களுக்கும், அலுவலக உத்தியோகத்தர்களுக்கும்; மலராக்கப்பணிகளைச் செவ்வனே நிறைவேற்ற நின்றுதவிய செயற்குழு உறுப்பினர்களுக்கும்; எனது நிறைவான மனங்குளிர்ந்த நன்றிகள் உரித்தாகுக.

மலரிலே மெய்ஞ்ஞானம் மட்டுமன்றிக் கலைவகைமை, பண்பாடு, விந்தைமிகு விஞ்ஞானம், நவீனமுறு தொழிநுட்பம், பொருளாதாரம், மற்றும் ஏற்றமிகு சொல்லாடல்-கருத்தாடல் தொகுப்புக்கள் சிந்தைதொடு கவிதைத் தெறிப்புக்கள் விசாலிப்புடன் விரிக்கப்பட்டுள்ளன.

இம்மலரின் 'வா' சனை நிறைவிலே வளமான மனப்பதிவு மனிதருக்கு ஏற்படும் என்பது என் திடமான நம்பிக்கை.

அ. சோதிநாதன்
இதழாக்கக்குழுத் தலைவரும்,
உதவிப்பிரதேச செயலரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூன்முகம்



"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு"

என்பது வள்ளுவன் வாக்கு. ஊருணி என்றால் பல்லுயிர்க்கும் ஆகாரமாகத்தக்க நன்னீர்நிலை என்பது பொருள். ஆற்றுவழியாகவும் ஊற்றுவழியாகவும் நன்னீரைத் தன்னகத்தே பெற்றுக்கொள்ளும் ஊருணி எப்போதும் தண்மை வாய்ந்து, தாகத்தால் வருந்துவோருக்குத் தடையின்றி நீர் வழங்கும் பான்மையது. இளந்திரைகளுடனும், அழகு நன்மலர்களுடனும் தென்றற் செல்வனின் ஆக்கிரமிப்பு நிறைந்திருக்கும் இந்நீர்நிலையை அண்டி எண்ணில்லா உயிர்கள் வாழ்வுகொள்ளும். இந்நிலையில் மண்வளம், நீர்வளம், பொருள்வளம், சொல்வளம் முதலாய வளங்கள் பெருகி வரலாற்றுச் சிறப்பினையும், கலைப்பாரம்பரியங்களையும், கல்விப் பெருமைகளையும் கொண்டுவிளங்கும் நல்லூர் பிரதேசத்தின் ஆட்சி அலுவலகமான பிரதேச செயலகத் திறப்புவிழாச் சிறப்புமலருக்கு ஊருணி எனப் பெயர்சூட்டியுள்ளோம்.

கற்றார்-பாமரர், உயர்ந்தோர் - தாழ்ந்தோர், ஆண் - பெண் என்றிந்த வேறுபாடு நோக்காது, முகம் மலர்ந்து நீர்சொரியும் ஊருணி போல், செயலகத்துப் பணியும் ஓங்கிடும் என்பதாலும், வள்ளுவன் மொழிந்தவாறு தாம்மிகப்பெற்ற செல்வத்தை இல்லார்க்குத் தகுதியறிந்து வழங்கும் பான்மை எங்கும் பெருகவேண்டும் என்ற நல்லெண்ணத்தாலும், நாம் விட்டுத்தொலைத்த புராதனச் செல்வங்கள் பொதுநலன் கருதி மறுமலர்ச்சியடையவேண்டும் என்ற வாஞ்சையுடனும் இந்நாமம் சூட்டப்பட்டுள்ளது.

இந்நூலில் பிரதேசம், மற்றும் பிரதேச செயலகம்சார் ஆக்கங்கள் 'பொய்கை' என்னும் தலைப்பின்கீழ் முன்னும் எல்லோர்க்கும் பயன்தரும் பொதுவியல்சார் ஆக்கங்கள் 'நதி' என்ற தலைப்பால் பின்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்பட்டுள்ளன. பொய்கை நிலைத்திருந்து பயன்தருவது; குன்றில் பொழிந்த நதி தரை தவழ்ந்து, ஓடைகளாய் மாறி நீலக்கடலடைந்து நீரோடு நீராகும்வரை பல்தேசத்தார்க்கும் வேறுபாடின்றி ஈயுந்தன்மைய தன்றோ.

புராதனம் முதல் நவீனத்துவம் வரை பல்துறை அம்சங்களாலும் நயம்பெற்றுள்ள இம்மலரில் ஆக்கங்களின் முடிவிடங்களை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் தொல்பொருட்களின் நிழற்படங்களாற் பூரணப்படுத்தியுள்ளோம்.

இந்நல்லூருணியின் ஆக்கத்திற்கு வழிகாட்டி உதவிய பிரதேச செயலர் மற்றும் உதவிப்பிரதேச செயலர் (மலர்க்குழுத் தலைவர்) ஆகியோருக்கு என் தலையாய நன்றிகள். நூற்பெயருக்கும், பிரதேசச் சிறப்புக்கும் ஏற்றவாறு எழிலார்ந்த அட்டைப்படத்தை வரைந்துவந்த ஓவியர், கலாபூஷணம் ஆசை இராசையா மற்றும் அச்சுக்கலையால் நூலழகை மிளிரவைத்த கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் அன்புகலந்த நன்றிகள். இம்மலருக்கான ஆக்கங்களை வழங்கியவர் களுக்கும், இதழாக்கக்குழுவினருக்கும், நட்புக்காக வேண்டும் போதெல்லாம் நெருங்கி உழைத்த திரு. ம. தவேந்திரன் (விஞ்ஞானத் தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர்) திருமதி ரஜனி நரேந்திரா (கலாசார உத்தியோகத்தர், தற்காலிக இணைப்பு) திரு. சோ. சிவலிங்கம் (கிராம உத்தியோகத்தர் - நிர்வாகம்), செல்வி ப. சசிகலா (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்) ஆகியோருக்கும் என் நயமான நன்றிகள். அத்துடன் இந்நூலின் அனுசரணையாளர்களான S. V. முருகேசு நிறுவனத்தார்க்கும் நிறைவான நன்றிகள்.

நல்லூர்ப் பிரதேச செயலகத் திறப்புவிழா சிறப்பு மலராக "ஊருணி" பொலிவுபெற்றுள்ள வேளையில் இந்நூல் பற்றிய ஆக்கபூர்வமான கருத்துக்களையும், விமர்சனங்களையும் எதிர்பார்க் கின்றோம்.

நன்றி

பிரதேச செயலகம்
நல்லூர்,
10.10.2010

பரமலிங்கம் தமிழ்மாறன்
இதழாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொய்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச (மும்) செயலக (மு) ம்

**ப. தமிழ்மாறன்**
கலாசார அபிவிருத்தி உதவியாளர்,
பிரதேச செயலகம், நல்லூர்.

ஈழமணி நாட்டின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில், யாழ். நகரிலிருந்து சுமார் மூன்று கிலோ மீற்றர் தொலைவில் அமைந்து விளங்குவது நல்லூர்ப்பதியாகும். கி.பி. 12ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை விளங்கிய யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக விளங்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூரிலேயே நல்லூர்ப்பிரதேச செயலகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை சாலவும் பொருத்தமானதாகும். இப் பிரதேசத்தின் J/89 முதல் J/128 வரையுள்ள நாற்பது கிராம அலுவலர் பிரிவுகளிலும் 21744 குடும்பங்களைச் சேர்ந்த 65931 மக்கள் வசிக்கின்றனர். இவர்களில் 30998 பேர் ஆண்கள் என்பதும், 34933பேர் பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆதிகாலம் முதலே பச்சைப் பசேலெனப் பரவிய பயிர்நிலமும், பனந்தோப்பும் தெங்குத்தோட்டங்களும், சோலைகளும், நீர்நிறை குளங்களும், அருள்தரு வழிபாட்டிடங்களும், வளம் தரும் வர்த்தகமும் பெருகியிருக்கும் இப் பிரதேசத்தில் பல்லறிஞரும் கலைஞரும், கவிஞரும், உதாரண புருடர்களும் அதிகளவில் வாழ்கின்றனர். சித்தர்கள் வாழ்ந்த பூமியும் இதுவே. யாழ். பல்கலைக் கழகம் இலங்கை திறந்த பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி (கொக்குவில்) உள்ளிட்ட உயர்கல்வி நிறுவனங்களும், 40 பாடசாலைகளும் பிரதேசத்தில் அமைந்திருப்பதோடு; மாவட்டச்செயலகம், விவசாயத் திணைக்களம், கல்வித்திணைக்களம் முதலான உயர் நிர்வாக அமைப்புக்கள் பலவும் நிறுவப்பட்டுள்ளமையால் எக்காலத்திலும் சன நெரிசல் மிகு பகுதியாக விளங்குகிறது.

**கிராம மட்ட அமைப்புக்கள்**

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் 14 கிராம அபிவிருத்திச் சங்கங்களும், 26 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும், 8 விவசாய சம்மேளனங்களும், 4 மீனவர் சமாசங்களும், 69 சனசமூக நிலையங்களும் சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்றன. சனசமூக நிலையங்களில் மாநகர சபை எல்லைக்குள் 25உம் பிரதேச சபை எல்லைக்குள் 44உம் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**தொழிற்றுறை அபிவிருத்தி**

கடந்த காலங்களில் தொழிற்துறைத் திணைக்களத்திலிருந்தும், அரச சார்பற்ற நிறுவனங்களிலிருந்தும் பெற்றுக் கொண்ட உதவிகளால் நெசவு, பற்றிக்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரட்டைக்கைப்பணி, தையல் இயந்திரம் திருத்துதல் , கணினி வன்பொருட் பயிற்சி, கையடக்கத்தொலைபேசிதிருத்துதல், பன்ன வேலை, அலுமெனிய பொருத்துதல் முதலான பலதரப்பட்ட பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டு, தொழில் முயற்சிக்கான ஊக்கிவிப்புக்கள் தொடர்ச்சியாக வழங்கப் பட்டு வருகின்றன.

நல்லூர் பிரதேச செயலக தொழிற் துறைப்பிரிவு, சுயதொழில் நிலையங்களை நிறுவி உற்பத்தியாளர்களை ஊக்குவித்தல், சுயதொழிலாளர் சங்கம் அமைத்து உற்பத்தியாளர்களுக்கான மூலப்பொருட் களையும், கடனுதவிகளையும் பெற்றுக் கொடுத்தல், சுய முயற்சிக்கான சந்தை வாய்ப்பை ஏற் படுத்திக் கொடுத்தல், நவீன தொழிநுட்ப அறிவினை உற்பத்தியாளர் களுக்கு ஊட்டுதல், உள்நாட்டுப் பாவனைப் பொருட்களைப் பயன்படுத்து வதால் ஏற்படப் போகும் நன்மைகள் பற்றி மக்களுக்கு அறிவூட்டல் முதலான இலக்கு களை முன்வைத்து உரியமுறையில் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது.

**கலையும் கலாசாரமும்**

நாட்டார் இலக்கியங்களும், முத்தமிழும், அழகியற் சிந்தனைகளும் பெருகி விளங்கும் இப்பிரதேசத்திலே யாழ். வேய்ங்குழல், முழவு, ஆகுளி, கோடு, வங்கியம், பறை, கச்சதாளம், கொம்பு முதலிய இசைக்கருவிகளை மீட்டவும், தயாரிக்கவும் தெரிந்த விற்பன்னர்கள் வாழ்ந்துள்ளனர். குரவைக்கூத்து, குடக் கூத்து, பாவைக்கூத்து, அபிநயக் கூத்து, நாடகக்கூத்து, மெய்க்கூத்து முதலான வேத்தியல், பொதுவியல் ஆடல் முறைமை களும், ஐந்திலக்கணச் சுத்தியோடும், சொல், பொருளணி நுணுக்கங்களுடனும் வெளிவந்திருக்கும் இலக்கியங்களும் இப்பிரதேசத்தின் காலத்தால் அழியாத அரும்பெரும் சொத்துக்களாகும்.

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள நூற்றுக்கணக்கான ஆலயங் களும் மக்களது வாழ்வியல் நலன் கருதிப் பல சமூக நலப்பணிகளை காலங்காலமாக மேற்கொண்டுவரும் நிலையில் ஆலயங் களில், நடைபெறும் விழாக்களும், ஆலய அமைப்பு முறையும் கலைப்பாரம் பரியத்தை பறைசாற்றும் வகையில் அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

ஏழாவது வயதில் அந்தாதி பாடிய சின்னத்தம்பிப்புலவர், தமிழுக்கும் சைவத்திற்குமாகத் தன்னை அர்ப்பணித்துச் செயலாற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மற்றும் சந்திரசேகரபண்டிதர், சரவண முத்துப்புலவர், சதாசிவபண்டிதர், சுவாமிநாதபண்டிதர், சபாரத்தின முதலியார், ஞானப்பிரகாசர், பண்டிதமணி கணபதிப்பிள்ளை முதலான சான்றோர்கள் பிறந்தும், வாழ்ந்தும்; தமிழுக்கும் கலை களுக்கும் தொண்டாற்றிய இப் புண்ணியப் பதியிற் கலைகலாசார விழுமியங்கள் முதிர்ந்த நிலையில் உள்ளன எனலாம்.

**கலாசாரப்பிரிவும் கலாசாரப் பேரவையும்**

நல்லூர் பிரதேச செயலகக் கலா சாரப்பிரிவானது பாடசாலை மாணவர் களிடையே கலை-இலக்கியப் போட்டிகள் நடாத்துதல், ஆசிரியர்களுக்கான செயல மர்வுகளை ஒருங்கிணைத்தல், கலாசார விழிப்புணர்வினை ஊட்டுதல், இளங்கலை ஞர்களுக்கான பயிற்சிப் பட்டறைகளை

ஒருங்கிணைத்து நடாத்து தல், தொல்லியல் அம்சங்களைப் பேணிப்பாதுகாத்தல், பாரம்பரியக் கலைகளுக்குப் புத்துணர்ச்சி யளித்தல் முதலான பலதரப்பட்ட செயற்றிட்டங்களையும், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் முன்னெடுத்து வருகின்றது.

பிரதேசக் கலாசாரப் பேரவை ஆண்டுதோறும் கலை-இலக்கியப் பெருவிழாவினைப் பிரதேசத்திற்கே உரித்தான சிறப்பம்சங்களுடன் நடாத்தி வரும் அதேவேளை, தை மாதத்திற் பிரதேச வாரியாக பொங்கல் விழாவினையும் நடாத்திவருகின்றது. அத்துடன் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செயலமர்வு, நாடகப் பயிற்சிப்பட்டறை முதலானவற்றை நடாத்தியும் ஆக்ககர்த்தாக்களது கலை-இலக்கியப்பணிகளுக்குப் பக்க பலமாக இருந்தும் பணியாற்றிவருகிறது.

ஆண்டுதோறும் நடைபெறும் கலை-இலக்கிய விழாவில் பிரதேசத்தின் கலைச் செயற்பாடுகளுக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் கலைஞர்களுக்கு "கலைஞானச்சுடர்" என்னும் விருதினை வழங்கி மதிப்பளித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் 2009இல் ''கலைஞானம்'' என்னும் பெயரில் கலைஞர் விபரத்திரட்டு நூலினை தொகுத்து வெளியிட்டு, பிரதேசக் கலைஞர்களின் புகழை உலகறியச் செய்துள்ளமையும் இங்கு நினைவு கொள்ளத் தக்கதாகும்.

**சிறுவர் பிரிவு**

செயலகப்பிரிவில் ஐந்து சிறுவர் இல்லங்களும், 16 சிறுவர் கழகங்களும், இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதில் 12 சிறுவர் கழகங்கள் பதிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. வடக்கு மாகாணத்திலுள்ள ஒரேஒரு சான்றுபெற்ற பாடசாலை: 825, நாவலர் வீதி, அரியாலை என்னும் முகவரியில் செயற்பட்டு வருகிறது. வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை ஆணையாளரால் தாய்தந்தையை இழந்த 13 பேருக்கு நீதிமன்றக் கட்டளைப்படி பொருத்தமான நபர் கொடுப்பனவாக மாதாந்தம் 500/= என்ற வகையிலும், பதிவுசெய்யப்பட்ட சிறுவர் இல்லப்பராமரிப்பு நன்கொடையாக மாதாந்தம் 500/= என்ற அடிப்படையிலும் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத் தக்கதாகும். அத்துடன் யுனிசெப், சாந்தீகம் ஆகிய நிறுவனங்களின் உதவியுடன் வறுமை காரணமாகப் பெற்றோரைப் பிரிந்து இல்லங்களிலுள்ள சிறுவர்களுக்கும், பெற்றோருக்கும் அறிவூட்டி சுய தொழில் கொடுப்பனவாக 55000/= வரை வழங்கி, குடும்பமாக வாழவைப்பதற் குரிய நடவடிக்கைகள் துரிதமாக மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. நல்லூர் பிரதேச செயலக பிரிவிலுள்ள 5 சிறுவர் இல்லங்களிலும் 310 சிறுவர்கள் தங்கி வாழ்கின்றனர்.

**இந்து ஆலயங்களின் சமூக நலனோம்பு அபிவிருத்தி ஒன்றியம்**

நல்லூர் பிரதேச செயலர் மற்றும் உதவிப்பிரதேச செயலர் ஆகியோரின் நெறிப்படுத்தலின்பேரில் 2010ஆம் ஆண்டு, பிரதேசத்திலுள்ள இந்து ஆலயங்களின் நிர்வாக உறுப்பினர்களை அங்கத்தவர்களாக்கொண்டு இந்து ஆலயங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக நலனோம்பு அபிவிருத்தி ஒன்றியம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இவ்வொன்றிய மானது நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தாய், தந்தையரை இழந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்விக்காக உதவி வழங்குதல்; கல்விகற்கும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாணவர்களின் குடும்பத்திற்குச் சுயதொழில் ஊக்குவிப் பினை வழங்குதல். சமய ஆசாரப்படி ஆலயங்களை வழிப்படுத்தல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக 25 வறிய மாணவர்கள் தேர்வுசெய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் மாதாந்தம் 500/= கல்வி நன்கொடையாக வழங்கப்பட்டு வருகிறது.

**விளையாட்டுத் துறையும், அவையும்**

பிரதேச செயலக விளையாட்டுத் துறையானது, பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களைப் பதிவுசெய்து உரிய பயிற்சி களையும் ஆலோசனைகளையும் சமுதாய வளர்ச்சிக்கு வேண்டிய பங்களிப்பினையும் வழங்கிவருகிறது. பிரதேச செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு அவையின் ஒத்துழைப்புடன் ஆண்டு தோறும் விளையாட்டு விழா நடைபெற்று வருகிறது. நல்லூர் பிரதேச செயலகக் கூடைப்பந்தாட்ட, துடுப்பாட்ட, வலைப் பந்தாட்ட, பூப்பந்தாட்ட, மேசைப்பந் தாட்ட, கபடி அணிகள் மாவட்ட மட்டத்தில் தொடர்ச்சியாக முதலாம், இரண்டாம் இடங்களைப்பெற்று வருவதோடு; மாவட்ட, மாகாண, தேசிய அணிகளில் நல்லூர் வீரர்கள் அதிகளவில் இடம்பெற்றுச் சாதனைபடைத்து வருவது குறிப்பிடத் தக்கதாகும். தடகள விளை யாட்டுக்களில் குண்டெறிதல் போட்டி களில் பிரதேச மட்ட சாதனையாளரான S.வாகீசன் மாவட்ட, மாகாண மட்டங் களில் தடம்பதித்து தேசிய தடகளப் போட்டிகளில் வெண்கலப்பதக்கம் வென்றும், இலங்கை மெய்வல்லுனர் சங்க இளையோர் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றும், பிரதேசத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார். அத்துடன்; செல்வி க. மிதிலா நீளம் பாய்தல் போட்டியில் பிரதேச, மாவட்ட, மாகாண மட்டங்களில் ஈட்டிய சாதனை இன்றுவரை முறியடிக் கப்படாமல் உள்ளமையும் குறிப்பிடத் தக்கதாகும். இந்நிலையில், நல்லூர் பிரதேசத்தில் பொது விளையாட்டு மைதானங்கள் இல்லாதிருப்பது ஒரு பாரிய பின்னடைவாக இருந்துவருகிறது.

**பெண்கள் பிரிவு**

நல்லூர் பிரதேச செயலகப் பெண்கள் பிரிவானது, பிரதேசத்திலுள்ள பெண்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு வழங்கியும், தனித்துவாழும் பெண்களுக்கு உள, சமூக ஆற்றுப்படுத்தல்களைச் செய்து சமுதாயத்தில் பொருளாதார சமூக அந்தஸ்துடன் அவர்களை வாழவைப் பதற்கும் அரும்பணியாற்றி வருகிறது. சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலு வூட்டல் அமைச்சின்கீழ் மகளிர் விவகாரக் குழுக்கள் அமைக்கப்பட்டு மூன்று குழுக்களைப் பதிவுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வருடந் தோறும் மகளிர் தின விழாவை ஒருங் கிணைத்து பலதரப்பட்ட போட்டி களையும் ஏற்பாடு செய்து வருவதோடு, காலத்துக்குக் காலம் தொழில் வழி காட்டல் பயிற்சிகளையும் நடாத்தி வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திட்டமிடற் பிரிவு**

வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்து யாழ். மாவட்டத்தில் மீளக்குடியேறிய மக்களுக்கான மீள்குடியமர்வுப் பணியில் நல்லூர் பிரதேச செயலகம் தனிப்பெரும் பங்கெடுத்துச் செயற்பட்டதோடு, பிரிவில் மீள்குடியேறிய மக்களுக்கான அரச, அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் உதவிகளை மிகவும் துரிதமாக வழங்கிவருகிறது. 2009ஆம் ஆண்டு கமநகும திட்டத்தின்கீழ் 114700000 ரூபா ஒதுக்கப்பட்டு 15 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின்கீழ் 66 திட்டங்களுக்காக 5200000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. NEHRP உலக வங்கி வீடமைப்புத்திட்டத்தின் கீழ் 94 வீடுகள் அமைப்பதற்கு 30832000 ரூபாவும், வடக்கின் வசந்தம் விசேட செயற்றிட்டத்தின்கீழ் 05 திட்டங்களுக்காக 1503900 ரூபா நிதியும், சமூக நலத்துறை அமைச்சினால் ஒரு திட்டத்திற்காக 2030000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**விதாதா வள நிலையம்**

விஞ்ஞானத்தொழிநுட்பவியல் அமைச்சினால் கிராமத்திற்குத் தொழிநுட்ப முறைமைகளை அறிமுகப்படுத்தும் நோக்கில் பிரதேச செயலகங்கள் தோறும் விதாதா வளநிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நல்லூர் பிரதேச விதாதா வளநிலையம் தற்போது பலாலி வீதியில், கந்தர்மடச்சந்திக்கு அண்மையில் இயங்கி வருகிறது. உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு எளிய அல்லது கழிவுப்பொருட்களில் இருந்து அழகுசாதனப் பொருட்களை உருவாக்குதல், இனிப்புப்பண்ட உற்பத்தி, மண்புழுஉரம் தயாரித்தல், மெழுகுதிரி தயாரிப்பு, ஊதுபத்தி உற்பத்தி, தகவல் தொழிநுட்பம், பழங்கள் பதனிடல், வெதுப்பக உற்பத்தி, கணினித் தொழிநுட்பம் முதலான தொழிநுட்ப மாற்றீட்டுப் பயிற்சி நெறிகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் நல்லூர் விதாதா வள நிலையம், உலக விஞ்ஞான தினத்தையொட்டி போட்டிகள், விழாக்களையும் நடாத்தி வருகிறது.

**சமூக சேவைப்பிரிவு**

நல்லூர் பிரதேச செயலக சமூக சேவைப்பிரிவு, இலங்கை சமூகப்பாதுகாப்பு ஓய்வூதியத்திட்டத்தின்கீழ் இதுவரை 2420 பேரை இணைத்துக் கொண்டுள்ளது. பொதுசன மாதாந்த உதவிப்பணக்கொடுப்பனவு 2009 டிசம்பரில் 2507 பேருக்கும், 2010 ஆகஸ்ட் 2187 பேருக்கும் வழங்கப்பட்டுள்ளது. 81 பேர் புற்றுநோய்க் கொடுப்பனவினையும், 03 பேர் காசநோய்க் கொடுப்பனவினையும், ஒருவர்தொழுநோய் கொடுப்பனவினையும் பெறுகின்றனர். 2009இல் சுயதொழில் கொடுப்பனவாக 24பேருக்கு 35000/= என்ற வகையில் 38 பேருக்கு 15000/= என்ற வகையிலும், 2010இல் (செப்ரெம்பர் வரை) 07 பேருக்கு 7500/= என்ற வகையில் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 1037 முதியோர்களுக்கான அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**மறுமலர்ச்சி சமுதாய அபிவிருத்தித் திட்டம்**

நல்லூர் பிரதேச செயலகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவில் கடமையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கிராமங்களில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தன்னிறைவு நிலையில் கிராமங்களை அபிவிருத்தியடையச்செய்யும் நோக்கில் 2007 ஆம் ஆண்டில் மறுமலர்ச்சி சமுதாய அபிவிருத்தித்திட்டம் என்ற பெயரில் ஒரு திட்டத்தினை ஆரம்பித்தார்கள். கோண்டாவில் தென்மேற்கு (J/116) கிராமஉத்தியோகத்தர் பிரிவினை மாதிரிக் கிராமமாகக் கொண்டு பல்துறைசார் அபிவிருத்திப்பணிகளையும் ஒருங் கிணைத்துச் செயற்படுத்தியதோடு மற்றைய கிராம அலுவலர் பிரிவுகளிலும் அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மறுமலர்ச்சி சமுதாய அபிவிருத்தித் திட்டம் J/ 116 கிராமத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டமையினால் சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் (ILO) பொருளாதார மேம்பாட்டுக்கும், ஜீவனோபாய உருவாக்கலுக்குமான திறன் அபிவிருத்தி (CB-TREE) செயற்றிட்டத்திற்கு மேற்படி கிராமம் பரிந்துரை செய்யப்பட்டு 20 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. அதன் மூலம் கணினி வன்பொருள் பற்றிக் துணிவண்ணப்பூச்சு, சேதன விவசாயம், உணவுபதனிடல், பெறுமதிகூட்டல், அழகுக்கலை அலங்காரம் ஆகிய பயிற்சிகளும் உரிய பயனாளிகளுக்குரிய தொழில் உபகரணங்களும் வழங்கப்பட்டு ஊக்கிவிக்கப்பட்டுள்ளனர்.

**உளவளத்துணைப்பிரிவு**

பிரிவிலுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கும், கிராமசேவையாளர்களாலும், ஏனைய சமூகமட்டப் பணியாளர்களாலும் அடையாளப்படுத்தப்படுபவர்களுக்கும் உளவளத்துணை உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் சுயதொழில் செயற்பாட்டாளர்களை வலுவூட்டும் பயிற்சிக் கருத்தரங்கு; குடும்பப் பிரச்சனைகளுக்கு உட்பட்டோருக்கான வழிகாட்டல் கருத்தரங்கு போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

**சமுர்த்தி**

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் திருநெல்வேலி, கல்வியங்காடு, கோண்டாவில் ஆகிய இடங்களில் சமுர்த்தி வங்கிகள் நிறுவப்பட்டு மூன்று வலயங்களாக இயங்கிவருகின்றன. இவ் வங்கிகள்மூலம் சிறுகுழுசேமிப்பு, தனிநபர் சேமிப்பு மற்றும் கடன் வழங்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2005 ஜுலையில் நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் 4717 குடும்பங்களுக்கு சமுர்த்தி உதவிகள் வழங்கப்பட்டன. 2010 இல் 4461 குடும்பங்களுக்கு இவ்வுதவிகள் கிடைத்துள்ளன. இதனால் வறுமை நிலையிலுள்ள குடும்பங்கள் நன்மையடையும் அதே நேரம்; சமூகப் பாதுகாப்பு பிரதி இலாபத்திட்டங்களையும் பெற்றுப் பயனடைவது குறிப்பிடத்தக்கதாகும்.

**நிறைவுரை**

வறுமைக் கோட்டின் கீழ் உள்ளோரும், பொருளாதார நிலையில் மேம்பட்டவர்களும் கலந்து வாழுகின்ற நல்லூர் பிரதேச செயலகப்பிரிவில் வாழும் மக்களுக்கான சேவைகள் யாவும் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் திணைக் களத்தின் சேவை பெறுநர் பட்டயத்துக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைவாக மிகவும் துரிதமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. எனினும் காலத்தின் தேவை கருதி, பற்றுறுதியுடனும் சகோதரத்துவத்துடனும் பொதுமக்களுக்கான சேவைகளை வழங்கிப் பிரதேசத்தின் அபிவிருத்திக்காகவும் செயலகத்தின் நற்பெயருக்காகவும் ஒவ்வொரு உத்தியோகத்தரும் உழைப்பது அவசியமாகும்.

**குறிப்பு:-**

1) பிரதேச செயலகத்தின் வழக்கமான/ நாளாந்தச் செயற்பாடுகள் இக் கட்டுரையிற் குறிப்பிடப்படவில்லை.

2) காணிப்பிரிவு, நிதிக்கிளை, சமுர்த்தித்திட்டம் தொடர்பான தனித்தனிக் கட்டுரைகள் இந் நூலில் இடம் பெற்றுள்ளன.



முன்னைய நல்லூர் பிரதேச செயலக கட்டடத்தொகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நல்லூர்" தமிழ் இராசதானியின் தலைநகராகத் தோன்றிய வரலாறு - ஒரு மீள் வாசிப்பு

**பேராசிரியர் ப. புஷ்பரட்ணம்**
தலைவர்,
வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தமிழகத்தில் பண்டுதொட்டு பரவலாகப் பயன்பாட்டிலிருந்துவரும் வரலாற்றுச்சிறப்புடைய இடப்பெயர்களில் ஒன்றாக நல்லூர் காணப்படுகிறது. பல்லவர், பாண்டியர், சோழர் ஆட்சியில் அவர்களின் ஆட்சிக்குட்பட்ட பல நகரங்கள், நிர்வாக மையங்கள், ஆலயங்கள் என்பன அமையப்பெற்ற இடங்கள் நல்லூர் என அழைக்கப்பட்டதற்கு கல்வெட்டுக்களிலும், இலக்கியங்களிலும் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. இப்பெயர் ஏனைய இடப்பெயர்களை விடத் தமிழகத்தில் பல ஊர்களுக்குரிய பெயராக இருந்துவருவதற்கு அறிஞர்கள் பல்வேறு காரணங்களைக்கூறுகின்றனர். சோழர் ஆட்சியில் கோவிலுக்குத் தானமாக வழங்கப்பட்ட ஊர்களும், அரச வம்சங்களுக்கிடையிலான திருமணத்தால் ஒன்றிணைக்கப்பட்ட நிலங்களும், நல்லூர் என்ற பெயரால் அழைக்கப்பட்டதாக அவர்களின் ஆட்சிக்கால ஆவணங்கள் சில கூறுகின்றன. இப்பெயர் தமிழகத்தில் மட்டுமன்றி சமகாலத்தில் அல்லது சற்றுப் பிற்பட்டகாலத்தில் தமிழகத்துடனான தொடர்பால் இலங்கையில் தமிழர்கள் செறிந்து வாழ்ந்த இடங்களுக்கும் ஏற்பட்டிருக்கவேண்டும். இதற்கு குருநாகல், களுத்துறை, திருகோணமலை, பூநகரி, யாழ்ப்பாணம் ஆகிய பிராந்தியங்களில் உள்ள நல்லூர் என்னும் இடப்பெயரைச் சான்றாகக்காட்டலாம். அவற்றுள் யாழ்ப்பாணத்தில் உள்ள நல்லூர் என்ற இடப்பெயரே இலங்கைத் தமிழர் வரலாறு பற்றிய ஆய்வில் வரலாற்றுப்பழமையும், சிறப்பும் வாய்ந்ததாக நோக்கப்படுகிறது. இதற்கு, கி.பி.13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிருந்து 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை ஏறத்தாழ 350 ஆண்டுகள் இவ்விடம் தமிழ் இராசதானியின் தலைநகராக இருந்தமை முக்கிய காரணமாகக் காட்டப்படுகிறது.


நல்லூர் இராசதானிபற்றி ஆராய்ந்த வரலாற்று அறிஞர்கள் பலரும், இராசதானியின் தலைநகர் நல்லூர் என்ற பெயரைப் பெற்றமைக்கு கி.பி.13ஆம் நூற்றாண்டில் பாண்டியப் படைத் தளபதிகளான ஆரியச்சக்கரவர்த்திகள் நல்லூரைத் தலைநகராகக்கொண்டு ஆட்சியமைத்ததே காரணம் எனக் கூறுகின்றனர். இதற்கு இலங்கைமீது படையெடுத்த பாண்டியரின் படைத் தளபதிகளான இவ்வாரியச் சக்கரவர்த்திகள் வடஇலங்கையில் ஆட்சி செய்து கொண்டிருந்த சாகவனை ஆட்சியில் இருந்து அகற்றியதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் முதலாவது தமிழ் இராசதானியை அமைத்தபோது அதன் தலைநகருக்கு தமது நாட்டில் பெரிதும் புழக்கத்திலிருந்த இடப்பெயரை நினைவுபடுத்தும்வகையில் அதற்கு நல்லூர் எனப்பெயரிட்டனர் எனக் காரணம் கூறுகின்றனர். நல்லூர் இராசதானி கால வரலாற்றில் பாண்டியரின் செல்வாக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலாதிக்கமும் இருந்ததென்பதில் ஐயமில்லை. ஆனால், இலங்கையில் தமிழ் அரசமரபு தோன்றி வளர்ந்த வரலாறு மற்றும் நல்லூர் எனும் இடப்பெயரின் தொன்மை பற்றிய சமீபகால கண்டு பிடிப்புக்களை வைத்து நோக்கும்போது பாண்டியரின் மேலாதிக்கத்தால் முதலாவது தமிழ் இராசதானியும், நல்லூர் என்ற இடப்பெயரும் யாழ்ப்பாணத்தில் தோன்றியதெனக் கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை.

தமிழ்நாட்டு அரச வம்சங்கள், அதிலும் குறிப்பாகப் பாண்டிய, சோழ வம்சங்கள் இன்னொரு அரசை அல்லது இன்னொரு நாட்டை வெற்றிகொண்டு அங்கு தமது மேலாதிக்கத்தைச் செலுத்தும் போது அந்த வெற்றியை உறுதி செய்யத் தமது அரச இலச்சினையைத் தமது ஆட்சிக்கால ஆவணங்கள், கொடிகள், முத்திரைகள், நாணயங்கள் என்பவற்றில் பொறித்தமைக்குப் பல ஆதாரங்கள் உண்டு. அதில் பாண்டியர் தமது அரச இலச்சினையான மீன் சின்னத்தையும், சோழர் தமது அரச இலச்சினையான புலி இலச்சினையையும் பயன்படுத்தயமைக்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. அதில் பாண்டியர் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்த காலத்தில் ஒரு மீன் சின்னத்தையும், திருநெல்வேலியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்த காலத்தில் இரண்டு மீன் சின்னத்தையும் அரச இலச்சினையாகப் பயன்படுத்தியதற்கு கல்வெட்டுக்களிலும், நாணயங்களிலும் ஆதாரங்கள் காணப்படுகின்றன. பாண்டியர் திருநெல்வேலியை வெற்றி கொண்டு பரந்த அரசைப் ஏற்படுத்திய காலத்தில் அவர்கள் பல தடவைகள் இலங்கைமீது படையெடுத்ததாகப் பாண்டியக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. பாண்டியப் பேரரசு



நல்லூர் இராசதானி கால நாணயங்கள்

வரலாற்றில் தலைசிறந்த மன்னர்களில் ஒருவனாக மதிக்கப்படும் சடாவர்மன் சுந்தர பாண்டியனது ஐந்தாம் ஆட்சியாண்டிலிருந்து (1253 - 1268) வெளியிடப்பட்ட அவனுடைய மெய்க்கீர்த்தி சாசனங்களில் "துலங் கொளி மணியும் சூழிவேழமும் இலங்கை காவலனை இறை கொண்டருளி" என்ற தொடர் காணப்படுகிறது. இதிலிருந்து இலங்கை மன்னன் ஒருவனிடம் இருந்து பாண்டியர் திறைபெற்றனர் என்பது தெரிகிறது. மேலும் பாண்டியர் ஆட்சிக்கு உட்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 1262ஆம் ஆண்டுக்குரிய குடுமியாமலைக் கல்வெட்டுச் சிங்கள அமைச்சன் ஒருவன் பாண்டியரிடம் அடிபணிந்து உதவி கேட்டதன் பேரில் இலங்கை மீது படையெடுத்த பாண்டியர் வடஇலங்கையில் ஆட்சி செய்து கொண்டிருந்த "சாகவ" மன்னன் பாண்டியருக்கு அடிபணிந்து திறை கொடுக்க மறுத்ததால் அவனைக் கொன்று, திறைகொடுக்க சம்மதித்த அவன் மகனை ஆட்சியில் அமர்த்தியதுடன் தமது வடஇலங்கை வெற்றியின் நினைவாக சாகவ மன்னனது கொடிகள் பறந்து கொண்டிருந்த கோணாமலையிலும், திரிகூடகிரியிலும் (திருகோணமலை) தமது அரச இலச்சினையான இரட்டை மீன் சின்னத்தைப் பொறித்ததாக அக்கல்வெட்டுக் கூறுகிறது. இதை மேலும் உறுதிப்படுத்தும் வகையில்

திருகோணமலைக் கோட்டையில் கண்டு பிடிக்கப்பட்ட பாண்டியரது கல் வெட்டில் அவர்களின் அரச இலச்சி னையான மீன்சின்னம் பொறிக்கப் பட்டிருப்பதைக் காணலாம். இதிலிருந்து பாண்டியர் தமது மேலாதிக்கம் நிலவிய இடங்களில் தமது அரச இலச்சினையான மீன் சின்னத்தைப் பயன்படுத்திக்கொண்ட னர் என்பது தெரிகிறது.

இங்கே பாண்டியப் படைத் தளபதிகளான ஆரியச் சக்கரவர்த்திகளால் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட முதலாவது தமிழ் இராசதானி தோற்று விக்கப்பட்டிருந்தால் அவர்களின் மேலா திக்கத்தின் அடையாளச்சின்னமான மீன் இலச்சினையைப் பொறித்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் நல்லூர் இராசதானிகால அரச ஆவணங்கள் எதிலும் மீன் சின்னம் அரச இலச்சினை யாகப்பயன்படுத்தியதற்கு எந்த ஆதாரமும் காணப்படவில்லை. அதற்குமாறாக அவ்ராசதானி காலத்தில் அதன் அரச இலச்சினையாக "நந்தி" உருவம் பயன் படுத்தப்பட்டதற்கே ஆதாரங்கள் காணப் படுகின்றன. அவற்றுள் அவ்வரசால் வெளியிட்ப்பட்டு இதுவரை கிடைத் துள்ள ஆயிரக் கணக்கான செப்பு நாணயங் களிலும், ஒருசில பொன், வெள்ளி நாண யங்களிலும் நாணயத்தின் முன்பக்கத்தில் நிற்கும் நிலையில் அல்லது அமர்ந் திருக்கும் நிலையில் மன்னனின் உருவமும், நாணயத்தின் பின்பக்கத்தில் நந்தி உருவமும், அதற்கு கீழே "சேது" என்ற மங்கல மொழியும் பொறிக்கப்பட்டிருப் பதைக் காணலாம். இதை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் இவ்வரசு தொடர்பாகப் பிற்காலத்தில் எழுந்த தமிழ் இலக்கியங்கள் நல்லூர் இராசதானியின் அரச இலச்சினையாக நந்தி உருவம் பொறித்த இலச்சினை அவர்களது கொடிகளில் பொறிக்கப்பட்டதாகக் கூறுகின்றன.


சோழர் பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு 77 ஆண்டுகள் (கி.பி. 993 -1070) ஆட்சிசெய்த காலத்தில், இலங்கையில் தமிழ், நிர்வாக மொழியாகப் பின்பற்றப்பட்டதுடன் தமிழகத்தில் சோழர் பின்பற்றிய நிர்வாக முறையே இங்கும் பின்பற்றப்பட்டன. இதனால் இலங்கை முழுதும் மும்முடிச் சோழ மண்டலம் என அழைக்கப்பட்டதுடன், அம்மும்முடிச் சோழமண்டலம் வளநாடு, நாடு, ஊர், சபை, பிரமதேயம் எனப் பிரிக்கப்பட்டு அந்நிர்வாகப் பிரிவுகள் முதலியார், கங்காணி, உடையார், தலையாரி, வன்னியனார் முதலியோரால் நிர்வாகிக்கப்பட்டதைக் கல்வெட்டுக்கள் உறுதிசெய்கின்றன. ஆனால், யாழ்ப்பாண அரசுகால நிர்வாக முறையை விரிவாக ஆராய்ந்த பேராசிரியர் பத்மநாதன் அவ்வரசை நிர்வகித்த அதிகாரிகள் பலரின் பெயர்கள் தமிழகத்திலுள்ள பாண்டியர் கால நிர்வாக அதிகாரிகளின் பெயர்களை ஒத்ததென்பதைவிட, இலங்கையில் இருந்த சோழர்கால நிர்வாகிகளையும், சோழரின் பின்னர் பொலநறுவையில் ஆட்சிபுரிந்த நிர்வாகிகளின் பெயர்களை ஒத்ததெனக் குறிப்பிடுகிறார்.

இந்த வேறுபாடுகளை நோக்கும் போது பாண்டியரது செல்வாக்கு நல்லூர் இராசதானியில் ஏற்படுவதற்கு முன்னரே வடஇலங்கையில் தமிழ் இராசதானி யொன்று தோன்றியிருந்ததெனவும், அதன் ஆதிக்கம் நல்லூர் உட்பட யாழ்ப்பாணம் முழுவதையும் உள்ளடக்கியிருந்த தெனவும் கருத இடமுண்டு. அவ்வாறு கருதுவதற்கும் நம்பகரமான ஆதாரங் களும் காணப்படுகின்றன. பொல நறுவையில் கி.பி.1215ஆம் ஆண்டிலேற் பட்ட கலிங்கமாகனது ஆட்சியைத் தொடர்ந்து சிங்கள இராசதானி தெற்கு நோக்கி நகர்ந்தபோது வடக்கே தமிழருக் குச்சார்பான கலிங்கமாகன் தலைமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலான அரசு ஒன்று இருந்ததைப் பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. அந்த அரசின் மையப்பீடம் எது என்பதை அவ்விலக்கியங்கள் நேரடியாகக் கூறாவிட்டாலும், அவனது முக்கிய இராணுவ மையங்கள், கோட்டைகள் இருந்த இடங்களாக பதவியா,



சாகவன் பெயர் பொறித்த நாணயம்

திருகோணமலை, கந்தளாய், மன்னார், மாதோட்டம், இலுப்பக்கடவை, வலிகாமம், ஊர்காவற்துறை என்பவற்றைக் கூறு கின்றன. இவையனைத்தும் வடஇலங்கையில் உள்ள பெயர்களாகும். கலிங்க மாகனைத் தொடர்ந்து வடஇலங்கையில் இருந்த அரசை சந்திரபானு என்னும் மன்னன் ஆட்சிசெய்ததாக வரலாற்றேடுகள் கூறுகின்றன. இவனை பாளி, சிங்கள இலக்கியங்கள் "சாவகன்" என்ற இன்னொரு பெயராலும் அழைக்கின்றன. கலிங்கமாகன் பொலநறுவையிலும், வடஇலங்கையிலும் ஆட்சி செய்த வரலாறு இலக்கியங்களில் குறிப்பிடப் பட்டிருந்தாலும், அதை உறுதிப்படுத்தும் பிற ஆதாரங்கள் இதுவரை கிடைக்க வில்லை. ஆனால் சாவகன் வடஇலங்கையில் ஆட்சி புரிந்ததைப் இலக்கியங்கள் மட்டுமன்றி கல்வெட்டுக்கள், நாணயங் களும் உறுதி செய்கின்றன. அண்மையில் பூநகரி, மாதோட்டம், கந்தரோடை முதலான இடங்களில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வில் எமக்கு கிடைத்த பல நாணயங்களின் முன்பக்கத்தில் தேவநாகரி எழுத்தில் "ஸ்ரீசாவகன்" என்ற அம்மன்ன னின் பெயரும், நாணயத்தின் பின்பக்கத் தில் அரச இலச்சினையாக நந்தியும் காணப்படுகிறது. இதில் இருந்து நந்தியை அரச இலச்னையாகப் பயன்படுத்திய மரபு ஆரியச்சக்கரவர்த்திகளின் படையெடுப் பிற்கு முன்னரே இலங்கையில் இருந்துள் ளமை தெரிகிறது. இந்த நந்தியின் வடிவம் நல்லூர் இரசதானி காலத்தில் வெளியிடப் பட்ட நாணயங்களில் வரும் நந்தி வடித்தைப் பெருமளவு ஒத்ததாக உள்ளது. இவ்வாதாரம் ஆரியச்சக்கரவர்த்திகளால் முதலாவது தமிழ் இராசதானி நல்லூரை தலைநகராகக் கொண்டு தோற்றம் பெற முன்னர் நந்தியை அரச இலச்சினையாகக் கொண்ட சாவகனது தலமையிலான அரசு வட இலங்கையில் இருந்ததற்குச்சார்பாக உள்ளது. ஏன் சாவக மன்னனை வெற்றி கொண்டதாகப் புகழ்படக்கூறும் பாண்டி யரது குடுமியாமலைக் கல்வெட்டும் சாகவனுக்குப்பின்னர் அவன் மைந்தனுக்கு ஆட்சியுரிமை வழங்கி வீரக்கழல் அணி வித்து அவனை ஆனை மேல் ஏற்றி அவனது நகரத்திற்குச் செல்ல விட்டு பாண்டியர் திரும்பிச்சென்றனர் என்றே கூறுகிறது. இச்சாவக மன்னனது ஆட்சியில் அவனது ஆதிக்கம் யாழ்ப் பாணக்குடாநாட்டிலும், வன்னியிலும், திருகோணமலையிலும் அமைந்திருந்த தென்பதை 14ஆம் நூற்றாண்டுக்குரிய "திரிசிங்களகடயம் பொத்" என்ற நூல் மூலம் அறிய முடிகிறது. இந்த இராச்சியத் தின் எல்லையிலே தமிழ்ச் சாசனங்கள் பொறிக்கப்பட்ட தூண்கள் நாட்டப் பெற்றிருந்தன என்று இந்நூல் சொல்வதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்தில் இன்றும் சாவகச்சேரி, சாவாங்கோட்டை, சாவகக்கோட்டை முதலான ஊர்ப் பெயர்கள் புழக்கத்தில் இருப்பதற்கு 13ஆம் நூற்றாண்டில் சாகவனது ஆட்சி இங்கிருந்ததே காரணமாகும். இங்கே ஆரியச் சக்கரவர்த்திகளுக்கு முன்னரே சாவக மன்னனது அரசின் ஆதிக்கம் இருந்ததற்கு உறுதியான ஆதாரங்கள் காணப்படுதால் ஆரியச்சக்கரவர்த்திகளோடு நல்லூரைத் தலைநகராகக் கொண்ட முதலாவது தமிழ் இராசதானி தோன்றியதென்ற பாரம்பரிய கருத்துக்கள் வலுவிழந்து காணப்படுகிறது. அப்படியானால் நல்லூர் என்ற இடப்பெயர் எப்போது அரச தலைநகருக்குரிய பெயராக மாறியதென்பது முக்கிய கேள்வி யாகும்.

ஆதிகால, இடைக்கால வரலாற்றில் தற்கால வடஇலங்கை பாளியில் நாகதீபம் எனவும், தமிழில் நாகநாடு எனவும் அழைக்கப்பட்டு வந்தமைக்கு இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. இருப்பினும் கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் அநுராதபுரத்திற்குத் தெற்கே மிகத்தொலைவில் உள்ள மகாகமையுடன் அநுராதபுர மன்னர்கள் கொண்டிருந்த அரசியல் உறவுகளை விரிவாகக் கூறும் பாளி இலக்கியங்கள், அநுராதபுரத்திற்கு வடக்கே மிகக்கிட்டிய தூரத்தில் இருந்த நாகதீபத்துடன் கொண்டிருந்த அரசியல் உறவுகள் பற்றிக்குறைந்தளவுதானும் கூறவில்லை. இந்த வேறுபாடு இக்காலத்தில் அநுராதபுர நாகரிக வட்டத்திற்குள் வடஇலங்கை உட்பட்டிருக்கவில்லையா?-என்ற ஐயப்பாட்டை ஏற்படுத்துகிறது. ஆறாம் நூற்றாண்டிலிருந்து அநுராதபுர-நாகதீப அரசியல் உறவுகள் பற்றிச் சில குறிப்புகள் பாளி இலக்கியங்களிற் காணப்படுகின்றன. ஆனால் அந்த உறவுகளும் நாகதீபத்தில் இருந்து அநுராதபுர அரசிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புக்கள், கிளர்ச்சிகள் பற்றியதாகவே உள்ளன. இதற்கு அநுராதபுர அரசின் மேலாதிக்கத்தை ஏற்காத அரசு ஒன்று இருந்தமை அல்லது அநுராதபுர நிர்வாகக் கட்டமைப்புக்குட்படாத பிராந்தியமாக வட இலங்கை இருந்தமை காரணமாக இருக்கலாம். இதுபற்றிப் பேராசிரியர் இந்திர பாலா கூறும் கருத்துக்கள் நோக்கத்தக்கது (Indrapala 2005:204-5):

"ஏழாம் நூற்றாண்டிலிருந்து ரோகண (இலங்கையின் தென்பகுதி), மலைய (இலங்கையின் நடுவே உள்ள மலைப்பிரதேசம்) மற்றும் உத்தரதேசம் (வடஇலங்கை) என்பன இலங்கையின் வேறுபட்ட மூன்று முக்கிய நிர்வாகப் பிராந்தியங்களாக இருந்ததைப்பாளி இலக்கியங்கள் கூறுகின்றன. அவற்றுள் ரோஹண மற்றும் மலைய பிரதேசத்தை நிர்வகிக்க அநுராதபுர ஆட்சியாளர்கள் தமது குடும்ப வாரிசுகளை நியமித்தபோது உத்தரதேசத்தை (வடஇலங்கை) நிர்வகிப்பதற்கு ஒருவரை நியமித்ததற்கு உரிய ஆதாரங்கள் காணப்படவில்லை". இந்த வேறுபாடு வடஇலங்கை அநுராதபுர நிர்வாகத்திற்குள் அடங்கவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

ஆறாம் நூற்றாண்டிலிருந்து இந்த மாற்றங்கள் ஏற்பட்டமைக்கு தமிழகத்தில் தொண்டை மண்டலத்தில் உள்ள காஞ்சியைத்தலைகராகக் கொண்ட பல்லவ அரசு காலத்தில் தோன்றிய பத்தி இயக்கமும், வணிக கணங்களின் தோற்றமும், இலங்கைமீதான பல்லவ அரசின் அரசியல் மேலாதிக்கமும் காரணமாக இருந்திருக்கலாம். இதுபற்றிப் பேராசிரியர் கே.எம்.டீ.சில்வா குறிப்பிடுகையில் "பத்தி இயக்கத்தின் செல்வாக்கே இலங்கையில் இந்து, பௌத்த என்ற சமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடு தோன்றி, தமிழரும் சிங்கள வரும் தமது இனத் தனித்துவத்தைப் பேணிப்பாதுகாப்பதில் முனைப்புப் பெறக் காரணமாகியது. அதன் விளைவால் தமிழர் வாழ்ந்த பிராந்தியங் கள் தென்னிந் தியப் படையெடுப் பாளருக்கு ஆதரவு வழங்கும் தளமாக மாறியது". எனக் கூறுகிறார்.

தமிழகத்திற் பல்லவர் ஆட்சியி லிருந்தே அழியாப் பொருட்களைக் கொண்டு இந்து ஆலயங்கள் அமைக்கும் மரபு தோற்றம்பெற்றது. அவ்வாறு புதிதாகத்தோன்றிய ஆலயங்கள் அமையப் பெற்ற இடங்கள்சில நல்லூர் என்ற பெயரால் அழைக்கப்பட்டதற்கு நாயன் மார் பாடல்களில் சான்றுகள் காணப்படு கின்றன. தமிழகத்தை அடுத்து நாயன்மார் பாடல்களில் சிறப்பித்துக் கூறப்பட்ட ஆலயங்கள் அமையப்பெற்ற இடங்களாக கிழக்கிலங்கையில் உள்ள திருகோண மலையும், வடஇலங்கையில் உள்ள மாதோட்டமும் காணப்படுகிறது. இவ்விரு மாகாணங்களுமே இலங்கையின் ஏனைய இடங்களைக் காட்டிலும் பல்லவர் பண்பாட்டுச் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தது. இதனால், தமிழகத்தில் பல்லவரோடு தோன்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் எனும் இடப்பெயர் சமகாலத்தில் வடக்கு-கிழக்கு இலங்கை யிலும் ஏற்பட்டிருக்க இடமுண்டு. ஆயினும், அதற்கான ஆதாரங்கள் எவை யும் இதுவரை இலங்கையில் கிடைக்க வில்லை.

பல்லவத் தொடர்பால் இலங்கை யில், அதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் பரவிய தமிழ்ப்பண்பாடு உறுதியான நிலையை அடைவதற்கு இலங்கையில் ஏற்பட்ட சோழரின் நேரடி ஆட்சி முக்கிய காரணமாகக் கூறப்படு கிறது. கி.பி. 993இல் முதலாம் இராஜராஜ



பூநகரி மண்ணித்தலைச் சிவாலயம்
முதலாம் பராந்தகன் காலம்?

சோழன் அநுராதபுர அரசையும், கி.பி.1017 இல் முதலாம் இராஜேந்திரசோழன் முழு இலங்கையையும் வெற்றி கொண்டதன் மூலம் சோழரின் 77 ஆண்டுகால ஆட்சி ஏற்பட்டதை இலங்கை வரலாற்று ஆவணங்கள் கூறுகின்றன. ஆயினும் இப்படையெடுப்புக்களுக்கு முன்னரே முதலாம் பராந்தக சோழனது படை யெடுப்போடு சோழரின் அரசியல், பண்பாட்டு மேலாதிக்கம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. இலங்கை வரலாற்றோடான சூளவம்சம் கி.பி.10ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியாவிலிருந்து வல்லப என்ற மன்னன் நாகதீபத்தின்மீது படையெடுத்ததாக்கூறுகிறது. இப்படை யெடுப்பை மேற்கொண்ட மன்னனை வரலாற்றறிஞர்களில் ஒருசாரார் இராஷ்ர கூட மன்னன் எனவும், வேறு சிலர் இரண்டாம் பராந்தக சோழன் எனவும் கூறுகின்றனர். இவன் யாராக இருப்பினும் படையெடுப்பு நடந்த இடம் வட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையான நாகதீபம் என்பதை சூழவம்சம் தனிமைப்படுத்திக் கூறியிருப்பது முக்கிய ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகும். இப்படையெடுப்பு நாகதீபத்தை வெற்றிகொள்ள மேற்கொள்ளப்பட்டதா அல்லது நாகதீபத்தை வெற்றிகொண்டதன் பின்னர் அங்கிருந்து அநுராதபுர அரசின் மீது படையெடுக்க மேற்கொள்ளப்பட்டதா என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், ஏறத்தாழ இதேகாலப்பகுதியில் சோழ மன்னர்களாக இருந்த முதலாம், மற்றும் இரண்டாம் பராந்தக சோழன் இலங்கைமீது படையெடுத்தது பற்றிய செய்திகள் தமிழக வரலாற்று மூலங்களில் காணப்படுகின்றன. அதில் முதலாம் பராந்தக சோழன் இலங்கையில் சில அரசியல் வெற்றிகளை அடைந்ததாக அவன் வெளியிட்ட சாசனங்கள் கூறுகின்றன. இந்த வெற்றியின் மூலம் அவன் "மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி வருமன்" எனப் புகழ்ந்துரைக்கப்பட்டதை அவனது 38வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு கூறுகின்றது (SII. Vol I: 35). இச்செய்தியைக் கலிங்கத்துப்பரணி (இராசபாரம்பரியம் பாடல் : 23), குலோத்துங்கன் உலா (வரிகள்: 44 - 46), இராசராசசோழன் உலா (வரிகள்: 38 - 40) முதலான நூல்களும் உறுதிப்படுத்துகின்றன. இந்த வெற்றியைத் தொடர்ந்து முதலாம் பராந்தக சோழன் "ஈழக்காசு" "ஈழக்கருங்காசு" என்ற பெயர்களில் நாணயங்களை வெளியிட்டதாக அவன் ஆட்சிக்காலக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. ஈழக்காசு என்பது இலங்கைக்குரிய தனித்துவமான நாணய முறையாகும். தமிழகத்தில் இப்பெயர் கொண்ட நாணயங்கள் பத்தாம் நூற்றாண்டில் அதாவது பராந்தகன் ஆட்ச்சியில் இருந்தே முதன்முறையாகப் புழக்கத்திற்கு வரும்போது அது இலங்கையில் 8 - 9ஆம் நூற்றாண்டிலேயே புழக்கத்தில் இருந்ததை அநுராதபுரத்தில் கிடைத்த தமிழ்க் கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. இதனால் பராந்தகசோழன் இலங்கை மீதான படையெடுப்பைத் தொடர்ந்து ஈழக்காசு என்ற பெயரில் நாணயங்களை வெளியிட்டதற்கு அவன் வடஇலங்கையை வெற்றிகொண்டதே காரணம் எனக்கூறலாம். இருப்பினும் இவ் வெற்றியையிட்டு இலங்கை வரலாற்றேடுகளில் எந்தச் செய்திகளும் காணப்படவில்லை. இதற்கு வடஇலங்கை அநுராதபுர அரசின் மேலாதிக்கத்திற்குள் உட்படாது இருந்தமை காரணம் எனலாம். இது பற்றிப் பேராசிரியர் கா.இந்திரபாலா கூறும் பின்வரும் கருத்துக்களை நோக்குவது அவசியமாகும்.

"மேற்கூறிய இரு கட்டங்களிலும் நடைபெற்ற சோழப் படையெடுப்புக்களின் (முதலாம், இரண்டாம் பராந்தக சோழன்) விளைவாக வடபகுதி, வடகிழக்குப் பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு பிரதேசம் சோழர் ஆட்சிக்கு உட்பட்டது என்பதை ஏற்றுக்கொள்ள இடமுண்டு. ஏற்கனவே பல்லவர் தமிழ் நாட்டில் ஆதிக்கம் பெற்றிருந்தபோது, இப்பிரதேசத்தில் பல்லவர் அதிகாரம் பரவியிருக்ககூடும் எனக் கூறப்பட்டது. இத்தகைய சூழ்நிலையில் சோழர் படைகள் வடபகுதியில் வந்திறங்குவதைக் காணலாம். பராந்தக சோழன் காலத்தில் இப்பிரதேசத்தில் சோழர் ஓரளவு அதிகாரம் பெற்றிருப்பர் என்றே தோன்றுகிறது. முதலாம் பராந்தக சோழன் காலத்திலேயே சோழர் பொலநறுவையில் தங்கள் நிர்வாகத்தை நிறுவியிருந்தார்களா? என்று தெரியவில்லை. அவர்களது அதிகார மையம் பொலநறுவைக்கு வடக்கே அல்லது கிழக்கே பதவியா அல்லது கந்தளாய் போன்ற ஓர் இடத்தில் இருந்து பின்னர் பொலநறுவைக்கு மாற்றப்பட்டிருத்தல் கூடும்" (இந்திரபாலா 2006 : 262).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தில் பல்லவர் ஆட்சிக் காலத்தைக் காட்டிலும் சோழர் ஆட்சியில் தான் நல்லூர் எனும் இடப்பெயர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்களுக்குரிய பெயராக இருந்துள்ளது. அதில் முதலாம் பராந்தகன் கால இலக்கியங்களையும், கல்வெட்டுக் களையும் ஆராய்ந்தால் அவற்றில் பராந்தகன் கால நகரங்கள், ஆலயங்கள் அமையப்பட்ட இடங்கள் பல நல்லூர் என அழைக்கப்பட்டு வந்துள்ளதைக் காண லாம். இதனால் இவன் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் நல்லூர் என்னும் இடப்பெயர் தோன்றியிருக் கலாம் எனக்கருத இடமுண்டு. அவ்வாறு கருது வதற்கும் சில காரணங்கள் உண்டு. சில ஆண்டுகளுக்குமுன்னர் வட இலங்கையில் பூநகரியிலுள்ள மண்ணித்தலை என்ற இடத்தில் அழிவுண்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட ஆலயத்தின் தோற்ற மும், அதன் கலைமரபும் முதலாம் பராந்தகன் காலத்திற்குரியதென அடை யாளப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாலயம் அமையப்பெற்ற இடத்திற்கு தெற்கே சில மைல் தொலைவில் பூநகரியின் மையப் பகுதியில் நல்லூர் என்ற ஊர் காணப்படு கிறது. இது ஒரு பழமையான இடப்பெயர் என்பதற்கு ஐரோப்பியர்கால ஆவணங் களில் குறிப்புக்கள் உள்ளன. எமது ஆய்வின் போது இங்கு கிடைத்த சோழ நாணயங்கள் இதற்கு மேலும் சான்றாக அமைகிறது. சோழர்கால வரலாற்று ஆவணங்களில் அவர்களின் தலைநகராக இருந்த தஞ்சாவூரில் உள்ள மண்ணி யாற்றின் தென்கரையில் உள்ள நல்லூர் என்ற இடம் பராந்தக சோழனது முக்கிய நகராக குறிப்பிடப்படுகிறது. பராந்தக சோழனுக்கு இடப்பட்ட மறுபெயரான "குஞ்சரமல்லன்" என்பது இம்மண்ணி யாற்றின் சிறப்புப் பெயராக இலக்கியங் களில் குறிப்பிடப்பட்டுள்ளது. மண்ணி யாற்றைப்போல இவனது ஆட்சியில் சிறப்புப்பெற்ற இன்னனொரு ஆறாக தஞ்சாவூரில் உள்ள குடமுறுட்டி ஆறு குறிப்பிடப்படுகிறது. இவ்விரு ஆறுகளுக் கும் இடைப்பட்ட பகுதியிற்றான் பராந்தக சோழன்கால ஆலயங்களும், நல்லூார் என்னும் இடப்பெயர்களும் அமையப் பெற்றிருந்தன என்பதற்குப் பல ஆதாரங் கள் காணப்படுகின்றன. இங்கே கவனத்தில் எடுக்கவேண்டிய முக்கிய அம்சம் பூநகரி யில் நல்லூர் என்ற ஊர்ப்பெயர் குட முறுட்டி ஆற்றின் மேற்குக் கரையிலும், அதையடுத்துச் சற்று வடக்கே மண்ணி யாறும், அதைத் தொடர்ந்து "மண்ணித் தலை" என்ற ஊர்ப்பெயரும் காணப்படு கின்றன. தஞ்சாவூரில் குறிப்பிட்ட சிறிய வட்டாரத்திற்குள் பராந்தகன் ஆட்சியில் சிறப்பு பெற்றிருந்த மண்ணியாறு, குடமுறுட்டி ஆறு, நல்லூர் ஆகிய மூன்று இடப்பெயர்களும் பூநகரியில் மிகச் சிறிய வட்டாரத்திற்குள் புழக்கத்தில் இருந்து வருவதை நாம் தற்செயலாக ஏற்பட்ட வரலாற்று நிகழ்ச்சியாக எடுத்துக் கொள்ள முடியாது. பொதுவாக சோழர் தமது ஆட்சியின் போது தமது குடியிருப்புக்கள், நகரங்கள், நிர்வாக மையங்களுக்குத் தமது தாய்நாட்டுப்பெயர்கொண்டு அழைத்த தற்குப்பல ஆராரங்கள் உண்டு. இதற்கு இலங்கையில் பதவியா, திருகோணமலை, மாதோட்டம் ஆகிய இடங்களில் கிடைத்த கல்வெட்டுக்களில் வரும் இடப் பெயர்களை உதாரணமாகக் குறிப்பிட லாம். இதனால், பூநரியில் உள்ள நல்லூர் என்ற இடப்பெயரின் தோற்றத்தை முதலாம் பராந்தகன் காலத்தோடு தொடர்புடையதென எடுத்துக்கொள்ள இடமுண்டு. அதேபோல் இதன் சமகாலத்திலேயே யாழ்ப்பாணத்தில் உள்ள நல்லூர் என்ற இடப்பெயரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றியிருக்கவேண்டும் எனக்கருத இடமுண்டு. ஏனெனில், யாழ்ப்பாணக் கோட்டையிற் கண்டுபிடிக்கப்பட்ட 11 ஆம் நூற்றாண்டுக்குரிய முதலாம் இராஜேந்திர சோழனது கல்வெட்டு இங்குள்ள நல்லூரில் அமையப் பெற்றிருந்த ஆலயமொன்றுக்குத் தானம் வழங்கிய செய்தியைக்கூறுகிறது. இக்கல் வெட்டிலிருந்து கி.பி.11 ஆம் நூற்றாண் டுக்கு முன்னரே யாழ்ப்பாணத்தில் நல்லூர் என்ற இடப்பெயர் புழக்கத்தில் இருந் துள்ளதென்பதும், அக்காலத்திலேயே நல்லூரில் ஆலயம் ஒன்று இருந்துள்ள தென்ற உண்மையும் தெரியவருகிறது. இதற்குச்சார்பாக மேலும் சில ஆதாரங் களைத் தமிழ் இலக்கியங்களில் இருந்தும் எடுத்துக்காட்டலாம்.

யாழ்ப்பாண அரசு தொடர் பாகத்தோன்றிய தமிழ் இலக்கியங்கள் சோழர் வருகையுடன் கி.பி. 8ஆம் நூற்றாண்டளவில் கதிரமலையை (கந்த ரோடை? ) தலைநகராகக் கொண்ட தமிழ் அரசின் தலைநகர் சிங்கை நகருக்கும், பின்னர் நல்லூருக்கும் இடம்மாறியதைச் சூசகமாகத் தெரிவிக்கின்றன (யாழ்ப்பாண வைபவமாலை 1953, கைலாயமாலை 1939). இவ்விலக்கியங்கள் தோன்றிய 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளில் சோழரின் ஆட்சி தமிழகத்திலோ அல்லது இலங்கையிலோ இருக்கவில்லை. அக்காலத்தில் சோழரின் வரலாறும், அவர் களின் சாதனைகளும் வெளிச்சத்திற்கு வரும் அளவிற்கு நம்பகத்தன்மையுடைய ஆய்வுகளும் நடைபெறவில்லை. அப்படி யிருந்தும் எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் மறைந்த சோழரின் வரலாறு தமிழ் இலக்கியங்களில் யாழ்ப்பாண அரச உருவாக்கம் பற்றிய கதையுடன் இணைத் துக் கூறப்பட்டிருப்பது யாழ்ப்பாண அரச உருவாக்கம் பற்றிய ஆய்வில் சோழரின் வகிபாகத்தை புறக்கணித்துவிட முடியா தென்பதையே அது காட்டுவதாக உள்ளது. வரலாற்றறிஞர்களில் ஒரு சாரார் தமிழ் இலக்கியங்கள் கூறும் சிங்கையும் நல்லூரும், நல்லூர் என்ற தலைநகரையே குறிப்பதாகக் கருதுகின்றனர். இன்னொரு சாரார் இரண்டையும் இரு வேறுபட்ட தலைகரங்களாகப் பார்க்கின்றனர். அதில் உண்மை எதுவானாலும் தமிழகத்தில் சிங்கையும், நல்லூரும் முதலாம் பராந்தகன் ஆட்சியில் முக்கிய தலைநகரங்களாக இருந்ததற்கு அவன்காலக் கல்வெட்டுக் களில் ஆதாரங்கள் காணப்படுகின்றன.

இவ்வாதாரங்கள் இலங்கையில் தோன்றிய முதலாவது தமிழ் இராச தானியையும், அதன் தலைநகராக இருந்த நல்லூர் என்ற இடப்பெயரின் தோற்றத் தையும் ஆரியச்சக்கரவர்த்திகளின் வருகை யோடு தொடங்குவது பொருத்தமில்லை என்பதையே காட்டுகிறது. இலங்கையில் சங்ககாலத்திற்குச் சமமான காலத்தி லிருந்து அரசமரபு தோன்றி வளர்ந்ததற் கான தொல்லியல் ஆதாரங்கள் கிடைத் துள்ளன. கி.பி. ஆறாம் நூற்றாண்டுவரை இனக்குழு அரசாக, குறுநில அரசாக தோன்றி வளர்ந்த தமிழ் அரச மரபு கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பின்னர் வட இலங்கையில் மேலாதிக்கம் செலுத்தும் அளவிற்குப் பலமான அரசாக வளர்ந்த தைக் காணமுடிகிறது. இதற்கு தமிழகத் தில் எழுச்சி பெற்ற பல்லவ, சோழர் ஆட்சியின் செல்வாக்கும், மேலாதிக்கமும் உந்து சக்தியாக இருந்ததெனக் கூறலாம்.

இதுதொடர்பாகப் பேராசிரியர் இந்திரபாலா முன்வைத்துள்ள கருத்துக் களை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும் (இந்திரபாலா 2006: 230



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


- 31) "உத்தரதேஸத்தை (வடஇலங்கை) பற்றிய குறிப்புக்களை ஆய்வு செய்தால் அப்பிரதேசம் ஏனைய பிரதேசங்களைவிட வேறுபட்டதாக இருந்தது என்பதை அறியலாம். அநுராதபுரத்து மன்னர்கள் கட்டுப்பாட்டுக்குள் அடங்காத ஒரு பிரதேசமாகப் பலமுறை அதனைக் காணலாம். அநுராதபுர ஆட்சியை எதிர்த்தோர் அங்கு ஆதரவு பெற்றதையும் காணலாம். முற்பட்ட நூற்றாண்டு களைப்போல் அல்லாது, ஆறாம் நூற்றாண்டின் பின் தென்னிந்தியா விலிருந்து வந்த படைகள் வடபகுதியில் வந்து இறங்குவதையும் அவதானிக்க முடிகிறது. அப்படிவந்த படைகள் வடக்கில் தங்கள் அதிகாரத்தை உறுதிப் படுத்தியபின், அநுராதபுரத்தை நோக்கி முன்னேறின. இவற்றை நோக்குமிடத்து அநுராதபுரத்து ஆட்சியாளருக்குச் சாதகமான சூழ்நிலை வடபகுதியில் நிலவ வில்லை என்பது தெளிவு"

இப்பின்புலன்கள்தான், அதிலும் குறிப்பாக, முதலாம் பராந்தகன் காலம் தொட்டு வடஇலங்கையில் தமிழருக்குச் சாதகமாக அமைந்த வரலாற்று நிகழ்ச் சிகள்தான் கலிங்கமாகன் ஆட்சியோடு பொலநறுவையில் இருந்த சிங்கள இராசதானி தெற்கு நோக்கி நகர்ந்தபோது, வடஇலங்கையில் கலிங்கமாகன், சாவகன், அவன் மைந்தன் ஆகியோரின் தலைமையில் ஒரு மன்னன் ஆளுகைக்கு உட்பட்ட அரசு ஒன்று தோன்றுவதற்குச்சாதகமாக இருந்ததெனக்கூறலாம். இம்மன்னர்களை பாளி, சிங்கள இலக்கியங்கள் பௌத்த மதத்திற்கும், சிங்கள மக்களுக்கும் எதிரான தமிழ் மன்னர்கள் என வருணிப்பதும், சாவக மன்னன் தெற்கு நோக்கி நகர்ந்த தம்பதேனிய அரசுமீது அடிக்கடிபடை யெடுத்ததாக பாளி, சிங்கள இலக்கியங்கள் கூறுவதும், அப்படையெடுப்பைத் தடுப்பதற்குச் சிங்கள அமைச்சன் ஒருவன் பாண்டிய மன்னனிடம் அடிபணிந்து உதவி கேட்டதாக **1262**ஆம் ஆண்டுக் குரிய பாண்டியரது குடுமியாமலைக் கல்வெட்டுக் கூறுவதும், வட இலங்கை யில் சாவகன் அரசு பலமான நிலையில் இருந்ததைக்காட்டுகிறது. இதையுறுதிப் படுத்தும் வகையில் அவனது பெயருடன் நந்தியை அரச சின்னமாகக்கொண்ட அவனது நாணயங்கள் பல யாழ்ப்பாணத் திலும், வன்னிப் பெருநிலப்பரப்பிலும் கிடைத்துள்ளன. யாழ்ப்பாணக் கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட **11**ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டில் வரும் நல்லூர் என்ற பெயரும், சோழர் ஆட்சியில் முக்கிய இராணுவ, நிர்வாக மையமாக இருந்த திருகோணமலையிலும், பூநகரியிலும் புழக்கத்தில் இருந்துவரும் நல்லூர் என்ற இடப்பெயரும், சோழர் காலத்தில், அதிலும் குறிப்பாக முதலாம் பராந்தகன் காலத்தில் வடஇலங்கையின் முக்கிய இடங்களுக்குரிய பெயராக பயன்படுத்தி இருந்திருக்கலாம் என்பதைக் காட்டுகிறது. இதனால், யாழ்ப்பாணத்தில் உள்ள நல்லூர் என்ற இடப்பெயரின் தோற்றத்தைச் சோழர் காலத்துடன் தொடர்புபடுத்திப்பார்ப்பதே பொருத்த மாகத்தெரிகிறது. சாவகன் ஆட்சியில் அவனது ஆதிக்கத்திற்குள் யாழ்ப்பாண மும் உள்ளடங்கி இருந்ததால் அக்காலத்தி லேயே இந்நல்லூர் அவனது அரச தலை நகராக அல்லது முக்கிய தலைநகரங்களில் ஒன்றாக இருந்திருக்கலாம். இதனால் இந்நல்லூரையே பின்னர் ஆரியச் சக்கரவர்த்திகளும் தமது தலைநகராகக் கொண்டு சிறிது காலம் வடஇலங்கையில் ஆட்சிசெய்தனர் எனக்கருத இடமுண்டு. இந்த ஆதாரங்கள்அனைத்தும் இலங்கைத் தமிழரிடம் ஒரு மன்னன் ஆளுகைக் குட்பட்ட முதலாவது தமிழ் அரசின் தோற்றத்தையும், அதன் தலைநகரான நல்லூரையும் ஆரியச்சக்கரவர்த்திகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரியதாகப்பார்ப்பதற்குச் சாதகமாக அமையவில்லை. அதற்கு, மாறாக வடஇலங்கையில் நீண்டகாலமாக இருந்து வந்த தமிழ் அரச மரபினதும், அதன் தலைநகர் நல்லூர் என்ற பெயரால் அழைக்கப்பட்ட வரலாற்றினதும் ஒரு காலகட்ட வரலாற்று நிகழ்ச்சியாகவே இவர்களின் மேலாதிக்கத்தையும், ஆட்சியையும் பார்ப்பது பொருத்தமாகத் தெரிகிறது.



ஆனைக்கோட்டை முத்திரை



வல்லிபுரம் பொற்றகடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நல்லூர் பிரதேச செயலகக் கொடி



மந்திரிமனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர்க் கந்தசுவாமி கோவில்



பரிசுத்த யாக்கோபு தேவாலயம் - நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்ப் பிரதேசத்தில் இந்துப்பண்பாடு

**கலாநிதி மா. வேதநாதன்,**
M.A., Ph.D.,
தலைவர், இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**அறிமுகம்**

இலங்கையிலுள்ள இந்துப் பண்பாட்டு மையங்களுள் யாழ்ப்பாணத் திலுள்ள நல்லூர்ப்பிரதேசம் தனித்துவம் மிக்க பண்பாட்டுச் சிறப்புக்களைக் கொண்டதாக விளங்குகின்றது. யாழ்ப் பாண மாவட்டத்திலுள்ள பதினைந்து பிரதேச செயலகப் பிரிவுகளுள் ஒன்றாக விளங்கும் நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவு தன்னகத்தே நாற்பது (J/89-J/128) கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்டு விளங்குகின்றது. இச்செயலகப் பிரிவில் காணப்படும் இந்துப்பண்பாட்டுக் கோலங்கள் பற்றிக் குறிப்பிடுவதாக இக் கட்டுரை அமைகின்றது. இப்பிரதேசத்தில் அமைந்து விளங்கும் இந்து ஆலயங்கள், இந்துசமய, சமூகநிறுவனங்கள் மட்டு மன்றித் திருநெல்வேலி ஞானப்பிரகாசர், நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் முதலிய சமயச்சான்றோர்கள் மற்றும் கலைஞர்கள், சித்தர்கள் என்போரும் இந்துப்பண் பாட்டை நன்கு பரிமளிக்கச் செய்துள்ள னர். நல்லூர்ப் பிரதேச செயலக இந்துப்பண்பாடு பற்றி அறிவதற்குத் தொல்பொருட்கள், கல்வெட்டுக்கள், மற்றும் இலக்கியங்கள் என்பன பெரிதும் துணைபுரிகின்றன.

**பண்பாடு - ஒரு விளக்கம்**

"பண்பாடு" என்றால் என்ன? என்பது பற்றிப் பலரும் பலவிதமாகக் குறிப்பிடுவர். பண்பாடு அல்லது நாகரிகம் என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம், முதலான வையும், மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதியென்று மானிட வியலறிஞர் எட்வர்ட் டைலர் குறிப்பிடு வது பொருத்தமாகவுள்ளது.

**கோயிற்பண்பாடு**

நல்லூர், இராசதானியாக விளங்கியகாலம் முதல் இப்பிரதேசத்தில் பல இந்துக்கோயில்கள் இந்துப்பண் பாட்டை வளம்படுத்தின. சிங்கைப் பரராசசேகரன் (கி.பி. 1478) என்னும் அரசன், நல்லூர் இராசதானிக்கு வடபாலில் சட்டநாதர் கோயிலையும், குணபாலில் வெயிலுகந்த பிள்ளையார் கோயிலையும், தென்பாலில் கைலாய நாதர் ஆலயத்தையும், குடதிசையில் வீரமா காளியம்மன் ஆலயத்தையும் அமைத்து, தனது தலைநகரை முன்னையிலும் அணிபெற விளங்க வைத்தான் என்ற குறிப்பானது; பதினைந்தாம் நூற்றாண்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசர்கள் வாழ்ந்த பண்பாடாக நல்லூர்க் கோயிற் பண்பாடு விளங்கியமையைப் பறைசாற்றுவதாயுள்ளது. இந்த நாற்புற எல்லைக்கோயில்களின் மையக்கோயிலாக நல்லூரிர் கந்தசுவாமி கோயில் விளங்கியது. இக்கோயில்கள் போர்த்துக்கீசர் மற்றும் ஒல்லாந்தர் என்போரால் இடிக்கப் பட்டபோதும் இன்றும் இக்கோயில்கள் நல்லூர்ப் பிரதேசத்திற் கம்பீரமாகக் காட்சிதருகின்றது.

இக்கோயில்களுள் நல்லூர்க் கந்தன் ஆலயம், யாழ்ப்பாண இராச்சியத்தில் பெரியவேற்கோயிலாக விளங்கியது. இவ்வாலயம் எப்போது? யாரால் கட்டப் பட்டதென்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. நல்லூர்க்கந்தனின் பழைய ஆலயம் நல்லூர் முத்திரைச் சந்தைப் பகுதியில் யமுனாஏரிக்கு அருகில் அமைந்திருந்தது. தமிழகத்தில் அரச ஆதரவுடன் தஞ்சைப் பெருங்கோயில் விளங்கியது போல; யாழ்ப்பாணத்து நல்லூரில் நல்லைக்கந்தன் வேற்கோட்டமும் அரச ஆதரவுடன் சிறப்புற்று விளங்கியது. பதினைந்தாம் நூற்றாண்டில் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட இளவரசனான "ஸப்புமால்குமாரயா" என்னும் செண்பகப் பெருமாள் என்பவரே இக்கோயிலை மீண்டும் புதுப்பொலிவுடன் கட்டியதாகவும் கூறப்படுகின்றது. கோயிற் கட்டியமும் இதனை உறுதிப்படுத்துகின்றது. இன்று இரகுநாதமாப்பாண முதலியார் பரம்பரையினர் இக்கோயிலை நன்கு பராமரித்து வருகின்றனர். இலங்கையில் மூன்று கோபுரங்களுடன் வள்ளி தெய்வயானை சமேத வேற்கடவுளை மூலவராகக்கொண்டு விளங்கும் மிகப் பெரியவேற்கோட்டமாக இக் கோயில் திகழ்கின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

"கோயில்மாநகர்" என்று கூறக் கூடிய அளவுக்கு நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவில், சிறியதும் பெரியதுமாக சுமார் ஐந்நூறு இந்துக்கோயில்கள் காணப்படுகின்றன. ஆகமம் சார்ந்த வழிபாட்டிடங்கள் மட்டுமன்றி, ஆகமம் சாராத வழிபாட்டிடங்களும், நாட்டுப்புற நம்பிக்கைகளும் இப்பிரதேசத்தின் பண்பாட்டுச் சிறப்பை விளக்கி நிற்கின்றன.

நல்லூர்க் கந்தன் ஆலயத்தை மையமாகக்கொண்ட சுற்றாடற் பகுதியானது, நல்லூர்ப் பிரதேச செயலகத்தின் சிறந்த பண்பாட்டுக் கருவூலங்களாகக் காட்சி தருகின்றன. தற்போதைய நல்லூர்க் கந்தன் ஆலயச் சுற்றுச்சூழலிற் காணப்படுகின்ற நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வீற்றிருக்கும் நாவலர்மணிமண்டபம், நல்லை திருஞானசம்பந்த ஆதீன குருமூர்த்தி ஆலயம், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம், நல்லூர் சிவன் கோயில், ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம், கம்பன் கோட்டம், மகேஸ்வரன் மணிமண்டபம், ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் ம்ருத்திகா, அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடம், சித்தர் செல்லப்பா சுவாமிகள் சமாதி மடம், அகில இலங்கை இந்து மாமன்றம், யாழ். மத்தி பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவாநிலையம் ஆகியவற்றின் பணிகள் நல்லூர்ப் பிரதேச இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் குறிப்பிடத் தக்கவையாகும். மேலும், பழைய நல்லூர்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தன் ஆலயச்சூழலில் விளங்கிய மந்திரி மனை, சங்கிலியன் தோப்பு, கற்றோரண வாசல், யமுனாஏரி, பண்டாரக் குளம், இராசாவின் தோட்டம் என்பனவும் யாழ்ப்பாணத்து மன்னர்கால நல்லூர்ப் பண்பாட்டைச் சுட்டி நிற்கின்றன. எனவே, இப்பண்பாட்டுக் கருவூலங்களைப் பாதுகாத்துப் பேணுவது மிகவும் அவசிய மானதாகும்.

**கல்வி நிறுவனங்களில் இந்துப்பண்பாடு**

கல்விநிறுவனங்கள் ஊடாக இந்துப்பண்பாட்டை நல்லூர்ப் பிரதேசத் தில் வளர்த்தெடுக்கும் நோக்க மாக பல இந்து மற்றும் சைவக்கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சேர்.பொன் இராமநாதன், சட்டத்தரணி இந்துபோர்ட் சு. இராசரத் தினம் என்போர் இப்பிரதேச இந்து மற்றும் சைவக்கல்வி மேம்பாட்டிற்கு அரும்பணி யாற்றியுள்ளனர். வேதாகம பள்ளிக்கூடம், சைவப்பிரகாச வித்தியாசலை, சைவ, ஆங்கில வித்தியாசாலை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி ஆகியவை இந்துக்கல்விப் பண்பாட்டு மேம்பாட்டுக்குப் பணி யாற்றும் சிறப்புமிகு கல்வி நிறுவனங்களாக விளங்குகின்றன. மேலும் சைவப் பண்பாட்டுக் கல்வியை வளர்க்கவல்ல நல்லாசிரியர்களை உருவாக்கும் எண்ணத் துடன் 1928 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதே திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கல்லூரி என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது. அக்காலச் சைவப்பண்பாட்டை வளர்த்த பெருமைக்குரியதாக சைவாசிரிய பயிற்சிக் கலாசாலை விளங்கியது.

**இந்துநாகரிகத்துறையும் இந்துப் பண்பாடும்**

இந்துப்பண்பாட்டை இலங்கை யில் வளர்த்தெடுத்துவரும் நிறுவனங்களுள் நல்லூர்ப்பிரதேசத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணப்பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையின் பணிகள் குறிப்பிடத் தக்கவை. உலகில் யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்திலேயே இந்துநாகரிகத் துறை என்னும் பெயரில் ஒருபண்பாட்டுத் துறை அமைந்துள்ளது. இத்துறையில் கலைமாணி, முதுதத்துவமாணி, கலாநிதி ஆகிய பட்டங்களைப் பெறுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு. நல்லூரைப்பிறப்பிட மாகக்கொண்ட அமரர் வாழ்நாட் பேராசிரியர், கலாநிதி, பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறையின் முதலாவது பேராசிரியராக விளங்கிய காலம்முதல் அத்துறை பல நிலைகளிலும் இந்துப்பண்பாட்டை மேன்மேலும் வளர்த்தெடுத்துவருகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் மூலமாகச் சைவசித்தாந்தத்தில் முதுகலை மாணிக்கற்கைநெறி, 2008இல் ஆரம் பிக்கப்பட்டு, முதல் அணியினர் பட்டம் பெற்றுள்ளனர். அதன் இரண்டாவது அணியினர் தற்போது சித்தாந்த சைவப் பண்பாட்டைப் பயின்று வருகின்றனர்.

**ஆதீனத்தில் சைவசமயப் பண்பாடு**

தமிழகத்திற் சைவப்பண்பாட்டை வளர்த்தெடுக்கம் சமய, சமூக நிறுவனங் களுள் திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், மதுரை ஆதீனம் என்பவை குறிப்பிடத்தக்கவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய ஆதீனங்கள் இங்கு இல்லா திருப்பினும் இவ்வகையில் வரணி ஆதீனம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் என்பவை குறிப்பிடத்தக்கவை. வரணி ஆதீனம் இன்று முற்றாகச் செயலிழந்து விட்டது. நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் மட்டுமே இன்று இலங்கையில் சைவசமயப்பண்பாட்டை வளர்க்கும் ஆதீனமாகக் காணப்படுகின்றது. நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தை மதுரை ஆதீனத்து குருமகாசன்னிதானமாக விளக்கிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளிடம் குருவுபதேசம்பெற்ற யாழ்ப்பாணத்து ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் (1918-1981) நிறுவினார். தற்போது இவ்வாதீன இரண்டாவது குருமகாசந்நிதானமாக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் சைவப்பண்பாட்டை வளர்த்தெடுத்து வருகின்றார். சைவச்சான்றோர்கள் இவ்வாதீனப்பணிகள் மேன்மேலும் சிறக்க வேண்டிய உதவிகளைச் செய்வது மிகவும் அவசியமாகவுள்ளது. இலங்கையில் ஒரே ஒரு ஆதீனம் நல்லூரில் இருப்பது, நல்லூர்ப் பிரதேசத்திற்குப் பெருமை தருவதாக வுள்ளது.

**கலைப்பண்பாடு**

நல்லூர்ப்பிரதேச செயலகப் பிரிவில் இந்துக்கலைகள் சிறந்து விளங்கு கின்றன. இப்பிரதேசத்தில் காணப்படும் இந்துக்கோயில்கள் கட்டிட, சிற்ப, ஓவியக்கலைகளை வளர்த்துவருகின்றன. நல்லூர்ப்பிரதேசத்தின் தனித்துவம்மிக்க கலையாகச் தேர்ச்சிற்பக்கலை விளங்கு கின்றது. திருநெல்வேலியில் அமைந்துள்ள, "ஆறுமுகம் சிற்பாலயம்" தேர்ச்சிற்பக் கலையை வளர்ப்பதில் ஈடு இணையற்று விளங்குகின்றது. திருநெல்வேலி அமரர் ஆ.சீவரெத்தினம் 100இற்கும் மேற்பட்ட சித்திரத்தேர்களை உருவாக்கிய சிற்பரத விற்பன்னராக விளங்கினார். திருநெல் வேலி கலாபூஷணம் சு. இராசரெத்தினம் "விநாயகர் சிற்பாலயம்" அமைத்துக் கோயில் வாகனங்கள், சப்பை இரதங்கள், மஞ்சங்கள், சித்திரத்தேர் என்பவற்றை உருவாக்கிவந்தார். நல்லூர்ப் பிரதேச செயலகப்பிரிவுகள் சிற்பம், ஓவியம், நடனம், நாடகம், இசை, கவிதை, தவில், மிருதங்கம், நாதஸ்வரம், வயலின் ஆகிய கலைகளை வளர்த்த கலைஞர்களின் விபரத்திரட்டினை நல்லூர்ப் பிரதேச கலாசாரப்பேரவை கலைஞானம் என்னும் பெயரில் 2009ஆம் ஆண்டு வெளியிட்டி ருப்பது பாராட்டுதற்குரியது.

**செங்குந்தர் சமயப் பண்பாடு**

நல்லூர்ப் பிரதேச இந்துப் பண்பாட்டை வளர்த்தெடுத்தவர்களுள் செங்குந்தர் குலமக்கள் குறிப்பிடத் தக்கவர் களாவர். இராசதானியாக விளங்கிய நல்லூர், திருநெல்வேலி கிழக்குப் பிரதேசத் திற் சுமார் 450 செங்குந்தர்குலக் குடும்பங் கள் இன்றும் வாழ்ந்து வருகின்றன. தென்னிந்தியாவிலுள்ள திருநெல்வேலிப் பகுதியிலிருந்துவந்த இக்குலத்தினர் நல்லூர், திருநெல்வேலி கிழக்குப் பிரதேசத் தில் இந்துப்பண்பாட்டைப் பேணி வந்தனர். நெசவுத் தொழிலைப் பிரதான மாகக் கொண்ட இவர்கள் இன்றும் நல்லூர்க் கந்தனின் கொடியேற்றத்திற்கான கொடிச் சேலையைச் சட்டநாதர் ஆலயத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து சிறுதேரில் கொண்டு சென்று நல்லூர் கந்தன் ஆலயத்திற்கு வழங்கும் பாரம்பரியம் மிக்கவர்களாக விளங்கு கின்றனர்.

கந்தசஷ்டி விழாவில்வரும் சூரன்போர் தினத்தில் இச்செங்குந்தர் குலமரபினரே நவவீரர்களாகவந்து முருகனுக்குப் பாதுகாப்பளிப்பதைக் காணலாம். திருநெல்வேலியில் உள்ள வாலையம்மன் கோயில், வெள்ளைப் பிள்ளையார் கோவில் போன்ற இந்துக் கோயில்களின் பரிபாலனம் இன்னும் இவர்களிடமே காணப்படுகின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் "வாழ்ந்த சடையம்மா" என்று அழைக்கப் பெறும் பெண்ஞானி செங்குந்தர் குலத்தில் தோன்றியவராவர். இவர் நல்லூரில் நாயன்மார் பண்பாட்டை நிலைநிறுத்தும் நோக்கில் நல்லூர் தேரடிக்கு வடக்குப் பக்கமாக ஒரு காணிவாங்கி அதில் அறு பத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தை அமைத்தார். இன்று இம்மடம் வளர்ச்சிகுன்றியநிலையிற் காணப்படுவது வேதனைக்குரியது.

**சித்தர்பண்பாடு**

நல்லூர்க் கந்தன் ஆலயத் தேரடி, ஒருகாலத்தில் சித்தர்களின் வாழ்விடமாக விளங்கியது. கடையிற்சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் என்போர் நல்லூர்க் கந்தனின் திருவருள் பெற்ற நல்லூர் ஞானிகளாக விளங்கினர். கடையிற் சுவாமிகளின் சமாதி நீராவியடி யிலும், குடையிற் சுவாமிகளின் சமாதி கோண்டாவிலிலும் இருப்பது குறிப்பிடத் தக்கது.

**சமய நிறுவனங்கள்**

நல்லூர் பிரதேசத்தில் சைவப் பண்பாட்டை வளர்த்தெடுப்பத்தில், சைவபரிபாலன சபை, ஆறுமுகநாவலர் சபை, அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம், சிவதொண்டன் நிலையம் என்பவை குறிப்பிடத்தக்கவை.

**வேதாந்த மடம்**

வேதாந்தமடமானது வேதாந்த தத்துவ ஞானத்தைப்பரப்புரை செய்யும் நோக்கில் மகாதேவ சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்டது. இது தற்போது கந்தர் மடம் குமாரசுவாமி வீதியில் அமைந் துள்ளது. இலங்கையில் ஒரேஒரு வேதாந்த மடம் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் வேறெங்கும் காணமுடியாத ஸ்ரீமத் கனகரத்தினம் சுவாமிகள், ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள், ஸ்ரீமத் சாஜன் சுவாமிகள், ஸ்ரீமத் சோமஸ்கந்தவேள் சுவாமிகள், ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள், ஸ்ரீமத் நமசிவாய சுவாமிகள் என்போரின் சமாதிக் கோயில்களை ஒருங்கே இங்கு காணக் கூடியதாகவுள்ளது. தற்போது இம்மடத் தினை ஸ்ரீமத் வேதவித்தியாசாகர சுவா மிகள் பரிபாலித்து வருகின்றார். இவ்வே தாந்த மடத்தினை ஸ்ரீ சிவகுருநாத குரு பீடம் என்றும், ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள் ஆச்சிரமம் என்றும் வழங்கிவருகின்றனர். இம்மடவளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் பலரும் உதவுவது பயனுடையதாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சமூக நூலகங்கள்

இந்துக்களின் சமூகமேம்பாட்டிற்கு இப்பிரதேசத்தில் சிலநிறுவனங்கள் தோற்றம்பெற்றன. அவற்றில் திருநெல்வேலியில் சைவச்சிறுவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதாக அமைந்து விளங்கும் சைவ வித்தியா விருத்திச் சங்கம் குறிப்பிடத்தக்க பணிகளைப் புரிந்துவருகின்றது.

### நிறைவுரை


ஒட்டுமொத்தமாக நோக்கும் போது, யாழ்ப்பாண மாவட்டத்து நல்லூர் பிரதேசச் செயலகப்பிரிவில் விளங்கும் இந்துக்கோயில்கள், இந்து சமய சமூக நிறுவனங்கள், நாவலர் மணிமண்டபம், நல்லை ஆதீனம், சித்தர் சமாதிகள் மற்றும் யாழ்ப்பாண அரசர்காலத்துப் பண்பாட்டுச் சின்னங்கள் என்பவை இப்பிரதேசத்தின் இந்துப்பண்பாட்டுக் கோலங்களை நன்கு வெளிப்படுத்துவனவாகவுள்ளன எனலாம். இப்பிரதேசத்தில் விளங்கும் அரியபண்பாட்டுச் சின்னங்களையும், இந்துசமயப் பண்பாட்டு நிறுவனங்களையும் பாதுகாத்து மேன்மேலும் வளர்த்தெடுப்பதன்மூலம் நல்லூர் பிரதேச செயலகம் இலங்கையில் தனித்துவம்மிக்க இந்துப் பண்பாட்டுப் பிரதேசமாகவும், இந்துக்களின் சமயச் சுற்றுலா மையங்களுள் ஒன்றாகவும் மிளிருமெனக் கூறலாம்.



ஆறுமுகநாவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரண்மனை வாயில்



சங்கிலியன் சிலை



யமுனா ஏரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துத் தமிழ் இலக்கியமும் நல்லூர்ப் பிரதேசமும்

**(பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில் தோற்றம்பெற்ற ஈழத்து இலக்கியங்களை மையமாகக் கொண்ட ஓர் ஆய்வு)**

**ஈ. குமரன்**
முதுநிலை விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி குறித்துப் பேசுகின்ற எவரும் நல்லூர்ப் பிரதேசத்தின் முக்கியத்துவத்தினை மறந்து விட முடியாது. அந்தளவிற்கு அப்பிர தேசம் வளமான கல்விப் பாரம்பரியமும், இலக்கியப் பாரம்பரியமும் கொண்ட தாகப் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வந்துள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டுக் கால எல்லைவரையில் ஈழத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்களை மையமாகக் கொண்டு இப் பிரதேசத்தின் இலக்கிய, கல்விப் பாரம்பரியம் குறித்த அறிமுகத்தினைத் தரும் வகையில் இவ் வாய்வுக் கட்டுரை ஒழுங்கமைக்கப்பட்டு ள்ளது.

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் வரலாற்றினைச் சங்கப் புலவருள் ஒருவரா கக் குறிப்பிடப்படும் பூதந்தேவனார் முதற்கொண்டு தொடங்குவது வழமை. எனினும் கி.பி. 14ஆம் நூற்றாண்டி லிருந்தே ஈழத்துக்கேயுரியவை எனத் தெளி வான வரையறைகளுடன் இலக்கியங்கள் கிடைக்கத் தொடங்குகின்றன. கி.பி. 13ஆம் நூற்றாண்டில் பொலநறுவை இராச்சியம் சந்தித்த சரிவும் அதைத் தொடர்ந்து தமிழர் நெருக்கமாக வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற வடக்கு, கிழக்கு, மேற்குக் கடற்கரையோரப் பிரதேசங்களில் நிகழ்ந்த தமிழ் அரசு, வன்னிமைகளின் தோற்றமும் இப்பிர தேசங்களில் தமிழ் இலக்கியங்கள் தோன்றுவதற்கான பேணிப்பாதுகாக்கப் படுவதற்கான சூழ்நிலையைத் தோற்று வித்தன.

குறிப்பாக, யாழ்ப்பாணக் குடா நாட்டை மையமாகக்கொண்டு உரு வாக்கப்பட்ட தமிழ் இராச்சியம் தமிழர் களின் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு வரலாற்றிற் சுட்டிக்காட்டத் தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இவ்விராச்சியம் கி.பி. 1621ஆம் ஆண்டு போர்த்துக்கேயர்கள் யாழ்ப்பாண அரசினைக் கைப்பற்றும்வரை நீடித்து நிலைத்தது. ஆரியச்சக்கரவர்த்திகள் என்போர் பரராசசேகரன், செகராசசேகரன் என்னும் சிம்மாசனப் பெயர்களை மாறிமாறிப் பெற்று இவ்விராச்சியத்தினை மூன்று நூற்றாண்டுகளுக்கு அதிகமாக ஆண்டு வந்துள்ளனர். ஆரம்பத்திற் சிங்கை யும் பின்னர் நல்லூரும் இவ்விராச்சியத்தின் தலைநகர்களாக ஆக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாண இராச்சியத்தின் தலை நகர்களுள் ஒன்றாகக் குறிப்பிடப்படும் சிங்கை எது என்பது இதுவரை சரிவர அறியப்படவில்லை. ஆய்வாளர்கள் யாழ்ப் பாணத்தின் வெவ்வேறு இடங்களைச் சிங்கையென மயங்குகின்றனர். அவர் களுள் சிலர் நல்லூரே ஆரம்பத்திற் சிங்கையென வழங்கப்பட்டிருக்கலாம் என அபிப்பிராயப்படுகின்றனர். எவ்வாறெனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் ஒரு காலகட்டத்தில் யாழ். குடாநாடு, அதனையண்டியுள்ள தீவுகள், மன்னார், பூநகரி எனும் பிரதேசங்களை உள்ளடக்கியதாக யாழ்ப்பாண இராச்சியம் பரந்திருந்தது. இதனைவிட அடங்காப்பற்று எனும் வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்த வன்னிமைகள் யாழ்ப்பாண அரசர்களின் மேலாதிக்கத்தினை ஏற்றிருந்தனர். இங்ஙனம் ஒருகாலத்தில் வலிமையும் செல்வாக்கும் பெற்றிருந்த யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக இருந்த சிறப்பு நல்லூருக்குரியது. நல்லூரைத் தலைநகராகக்கொண்ட யாழ்ப்பாண மன்னர்காலப் பகுதியில் பல தமிழ் இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. பரராசசேகரம், செராசசேகரம், செகராச சேகரமாலை, வையாபாடல், கைலாய மாலை, இரகுவம்சம், தட்சிணகைலாச புராணம், கதிரைமலைப் பள்ளு, பரராசசேகரன் உலா, இராசமுறை, வியாக்கிரபாதபுராணம் என்பன இப்பிரதேசத்திலேயே தோற்றம் பெற்றிருக்கவேண்டும் என உறுதியாக நம்பப்படுகின்றது. இவற்றுட் பின்னைய மூன்றும் இன்று கைகளுக்குக் கிட்டவில்லை. யாழ்ப்பாண மன்னர்களின் வரலாற்றினையும் அக்காலச் சிற்றிலக்கியப் போக்கினையும் அறிவதற்கு உதவியாக இருக்கக்கூடிய பரராசசேகரன் உலா, இராசமுறை என்பன கிடைக்காமல் அழிந்தொழிந்தமை வேதனைக்குரிய தொன்றே.

மேற்கூறப்பட்டவை நல்லூரைத் தளமாகக்கொண்டு நிகழ்ந்த இலக்கிய முயற்சிகளாகக் கொள்ளப்படத்தக்கவை. இவ்விலக்கிய முயற்சிகள் வைத்தியம், சோதிடம், வரலாறு, சமயம் முதலான பலதுறை சார்ந்தனவாகவும் அமைந்தமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். தமிழகத்துச் சமகால இலக்கியப் போக்குடன் இதனை ஒப்பிட்டுப் பார்க்கும் போது ஈழத்துத் தமிழ் இலக்கியங்களின் செழிப்பும், தரமும் புலனாகின்றன. நாயக்கர்காலத் தமிழகத்தில் இலக்கியம் ஒரு தடத்திலேயே - அதுவும் சமயத் தடத்திலேயே - சுற்றிச் சுழன்று கொண்டிருந்த காலப்பகுதியில் ஈழத்திற், பலதுறை சார்ந்தும் படைப்புக்கள் தோற்றம் பெற்றமை கவனிக்கப்படவேண்டிய தொன்றாகும்.

செகராசசேகரம், பரராசசேகரம் என்னும் இரு படைப்புக்களும் வைத்தியம் சார்ந்தவையாகும். இவை முறையே செகராசசேகரன் என அழைக்கப்பட்ட வரோதயசிங்கையாரிய மன்னன் காலத்திலும், நல்லூர் பரராசசேகர மன்னன் காலத்திலும் எழுதப்பட்டன என அறியப்படுகின்றது. இந்நூல்களை எழுதியோர் பெயர் அறியுமாறில்லை. ஆய்வாளர்களின் கருத்துப்படி இந்நூல்கள் வைத்திய அறிஞர்கள் பலரின் கூட்டுமுயற்சியால் உருவாகியிருக்கவேண்டும் என நம்பப்படுகின்றது. தமது ஆட்சிப்பரப்பில் ஆங்காங்கே சிதறிக்கிடந்த பல்வேறுபட்ட வைத்திய முறைகளை மேற்படி மன்னர்கள் வைத்தியர்களின் உதவியுடன் தொகுப்பித்திருக்கலாம் என நம்பப்படுகின்றது. பரராசசேகரம்: நல்லூர் பரராசசேகர மன்னனின் காலத்தில் தமிழ்நாட்டிலிருந்து ஈழத்துக்குவந்து குடியேறிய பன்னிரு வைத்தியர்களின் உதவியுடனே தொகுப்பிக்கப்பட்டதாகப் பேராசிரியர் ஆ. சதாசிவம் குறிப்பிடுவதும் இத் தொடர்பில் நோக்கத்தக்க தொன்றாகும். பன்னிரெண்டாயிரம் செய்யுட்களைக் கொண்டு விளங்கும் பரராசசேகர வைத்தியம் போல் பாரியநூல் எதுவும் ஈழத்தில் அதற்கு முன்னமோ பின்னமோ தோன்றவில்லை என்பது கவனிக்கத்தக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொரு விடயமாகும். வடமொழி வைத்திய வாகடங்களைத் தழுவியே மேற்படி இலக்கியங்கள் செய்யப்பட்ட தாக அவற்றின் சிறப்புப் பாயிரங்கள் குறிப்பிடு கின்றன.

செகராசசேகரமாலை என்னும் சோதிடநூல் சோமசன்மா என்பவரால் செய்யப்பட்டதாக அதன் பாயிரச் செய்யுள் வாயிலாக அறியமுடிகின்றது. வடமொழி சோதிட சாஸ்திரக் கருத்துக் களைத் தழுவிச் செய்யப்பட்ட இந்நூலின் பாயிரம் யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் களின் பரம்பரை, பூர்வீகம் பற்றிய ஆய்விற் பல முக்கியமான தகவல்களை நல்கு கின்றது. ஈழத் தமிழர் மத்தியில் ஏலவே நிலைத்திருந்த சோதிடம் சார்ந்த நம்பிக்கைகளையும் வடமொழிப் பண் பாட்டின் தாக்கத்தினால் செல்வாக்குப் பெற்ற புதிய சோதிட நம்பிக்கைளையும் இந்நூல் விபரிப்பதைக் காணலாம். யாழ்ப்பாணத் தமிழ் மன்னர்களினதும், அவர்களின் மேலாதிக்கத்துக்குட்பட்ட வன்னிமைகளினதும் வரலாற்றை இலக்கி யப் புனைவுகளுடன் எடுத்துரைக்கும் நூல்களாக வையாபாடல், கைலாயமாலை என்பன அமைந்துள்ளன. இவை முறையே வையாபுரி ஐயர், முத்துராச கவிராயர் என்போராற் செய்யப்பட்டன. வையா பாடல் யாழ்ப்பாண அரசின் தோற்றம், அதன் வளர்ச்சி என்பன பற்றியும், தமிழ்நாட்டிலிருந்து இக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திலும் அடங்காப்பற்று என அழைக்கப்படும் வன்னிப் பெருநிலப் பரப்பிலும் அதிகளவில் நிகழ்ந்த குடி யேற்றங்கள் பற்றியும், அடங்காப் பற்றில் உள்ள வன்னிமைகளை யாழ்ப்பாண மன்னன் அடக்கியாண்ட வகைமை குறித்தும் பல விடயங்களைக் கூறுகின்றது. கைலாய மாலையும் யாழ்ப்பாண அரசின் தோற்றம் பற்றியும், ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்களுள் முதல்வனான சிங்கை யாரியச் சக்கரவர்த்தி நல்லூரில் தலை நகரம் ஒன்றினை அமைப்பித்துத் தனது முடிசூட்டு விழாவினை அங்கு நடாத்தி யமை குறித்தும், அரசகுடும்பத்தினரின் வழிபாட்டுக்கென நல்லூரில் கைலாய நாதர் கோவிலினைக் கட்டுவித்து, குட முழுக்குச் செய்த மாண்பினையும் விபரிக் கின்றது.

மேற்படி நூல்களில் தரப்படும் தகவல்கள் யாவும் உண்மையானவை எனக் கூறுதற்கில்லை. ஐதீகக் கதைகளையும், கர்ணபரம்பரைச் செய்திகளையுங்கூட இந்நூல்கள் வரலாற்றுச் செய்திகளாகக் கருதி மயங்கியுள்ளன. வரலாற்று இடைவெளி வருகின்ற இடங்களில் இட்டுநிரப்புதற் பொருட்டு புனைந்துரை களைக் கூறிச்செல்லும் போக்கினையும் இந்நூல்களில் காணலாம். இவற்றால் மேற்படி இலக்கியங்களின் வரலாற்றுப் பெறுமானம் என்பது கேள்விக்குரிய தாகவுள்ளது. ஆதலால் இவ்விலக்கியங் களை "வரலாற்றிலக்கியங்கள்" எனக் குறிப்பதிலும் பார்க்க "வரலாறுசார்" படைப்புக்கள் எனக் கூறுவதே பொருத்த மாக அமையும். நல்லூர் பிரதேச அரசியல், சமூக, பண்பாட்டு வளர்ச்சி குறித்த பல தகவல்களைத் தரும் கருவூலங்களாக இந் நூல்கள் அமைந்துள்ளன.

யாழ்ப்பாணமன்னர் காலத்தில் எழுந்த சிறந்த காவியம் இரகுவம்சமாகும். இதனை இயற்றியவர் யாழ்பாண மன்னர்களின் பரம்பரையில் வந்த அரசகேசரி என்பவராவார். யாழ்ப்பாண வைபவமாலை இவரைக் கனகசூரிய சிங்கையாரியனின் மருமகன் எனக் குறிப் பிடுகின்றது. வடமொழியிற் காளிதாச மகாகவியினாற் செய்யப்பட்ட "ரகுவம் சம்" எனும் காவியத்தினை மொழி

பெயர்த்து இந்நூல் செய்யப்பட்டுள்ளதைக் காணலாம். நல்லூருக்குக் கிழக்குப் பகுதியிலேயிருந்த நாயன்மார்கட்டு என்னுமிடத்திலுள்ள தாமரைக் குளத்தினருகில் அரசகேசரி தனக்கொரு மாளிகை கட்டி அங்கிருந்தே இரகுவம்சத்தினைப் பாடினார் என்றும் அதற்குச் சான்றாக நாட்டுப்படலத்தில் முதலில் குளங்களின் வர்ணனையே தரப்பட்டுள்ளன என்றும் வித்துவ சிரோமணி கணேசையர் எடுத்துரைப்பார். அக்காலப் பகுதியில் நல்லூரினை மையமாகக் கொண்டு வளர்ந்த தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தின் திறனையும் வீச்சினையும் விளங்கிக் கொள்வதற்கு இரகுவம்சம் மிகச் சிறந்ததொரு எடுத்துக்காட்டு. இரகுவம்சத்தின் செந்தமிழ் நடையும், வித்துவத் தன்மையான காவியப்பாங்கும், அணிகளின் சிறப்பான பயன்பாடும் அதனைக் கலைக் காவியமாக உயர்த்தியுள்ளன. சமகாலத்தில் தமிழகத்திலே காவியங்கள் எதுவும் எழுந்திராத சூழலில் இரகுவம்சம் நல்லூரினைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசிலே தோன்றியிருப்பது கவனிக்கத்தக்கதொன்றாகும். கண்ணகி வழக்குரை, கோவலனார்கதை, சிலம்பு கூறல் என்ற பெயர்களுடன் - வேறுபட்ட பாடங்களாக வழங்கிவரும் காவியத்தின் மூலப்பிரதியும் யாழ்பாணமன்னர் காலத்திலேயே தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் எனப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் கருதுகின்றார்கள். சிலப்பதிகாரக் கதையினைத் தழுவி கண்ணகியின் வரலாற்றினையும், அவள் தெய்வமாகிய சிறப்பினையும் விரித்துரைக்கும் இந்நூல்களின் கட்டமைப்பிலும், பாடல்களிலும், காதைகளின் பகுப்புமுறைகளிலும், கண்ணகி கதையினை ஈழத்துடன் இணைக்கும் பாங்கிலும் இழையோடும் ஒற்றுமைத் தன்மை இப்பிரதிகள் குறிப்பிட்டதொரு மூலப்பிரதியில் நின்றும் கிளைத்தெழுந்தவையே என்பதை மேலும் வலியுறுத்துகின்றன.

யாழ்ப்பாண மன்னனான வரோதய சிங்கையாரியனாற் செய்யப்பட்டதாகக் கருதப்படும் தலபுராணமே தட்சிணகைலாச புராணமாகும். அரசகேசரியினால் இந்நூலுக்கு வழங்கப் பட்ட சிறப்புப்பாயிரத்தில் வரோதய சிங்கையாரியனின் புலமையும், அவன் தன் குருவான சைவராசபண்டிதரின் வேண்டுகோட்படி இந்நூலை எழுதியமையும் விரிவாகத் தரப்பட்டுள்ளன. இந்நூலுக்குக் கவிவீரராகவர் என்பவரால் செய்யப்பட்ட மற்றொரு சிறப்புப் பாயிரத்தினை சிலர் ஆதாரங்காட்டி வரோதய சிங்கையாரியனின் குருவான சைவராசபண்டிதரால் இந்நூல் செய்யப்பட்டதாகக் குறிப்பிடுவர். ஆனால், மேற்படி இரண்டு பாயிரங்களையும் ஒப்பிட்டாராய்ந்த பேராசிரியர் சி. பத்மநாதன் அவற்றுள் அரசகேசரியின் சிறப்புப்பாயிரமே நம்பிக்கையானதும், காலத்தால் முற்பட்டதுமாகும் எனக் குறிப்பிடுவார். அதனால் வரோதய சிங்கையாரியனாலேயே இந்நூல் செய்யப்பட்டது என்பது தெளிவாகும். யாழ்ப்பாண மன்னன் ஒருவன் திருகோணமலை வன்னிமைகளின் மேற்பார்வையின் கீழிருந்த ஆலயம் ஒன்றின்மேல் புராணம் பாடியுள்ளமையை நோக்குகின்றபோது திருக்கோணேஸ்வரர் ஆலயம் சமகாலத்தில் பெற்றிருந்த முதன்மையும், யாழ்ப்பாண மன்னர்களுக்கும் திருகோணமலை வன்னியர்களுக்குமிடையேயிருந்த நெருங்கிய தொடர்பும் இதனால் புலனாகின்றன. திருக்கோணேஸ்வரர் ஆலயத்தினை மையப்படுத்தி இதே காலப்பகுதியில் தோன்றிய கோணேசர் கல்வெட்டெனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலிலும் யாழ்ப்பாண மன்னர்களுக்கும் திருகோணமலை வன்னியர்களுக்குமிருந்த உறவுபற்றிக் கூறப்பட்டுள்ளது. கோணே சர் கல்வெட்டின் உரைநடைப்பகுதி பரராசசேகரன், செகராசசேகரன் என்போர் கோணேஸ்வரர் ஆலயத்துக்கு வந்து செய்த வழிபாடுகள் பற்றியும் அளித்த தானங்கள் பற்றியும் விரிவாகக் குறிப் பிடுகின்றது. எனினும் இந்நூல் யாழ்ப் பாண மன்னர்களின் சிம்மாசனப் பெயர்களை மட்டுமே குறிப்பிடுவதால் திருக்கோணேஸ்வரத்திற்கு வந்த பரராச சேகரன், செகராசசேகரன் என்போர் யாவர் என்பது அறியுமாறில்லை.

யாழ்ப்பாண மன்னர் காலப் பகுதியில் தோற்றம் பெற்றதாகக் கிடைக் கும் சிற்றிலக்கியம் கதிரைமலைப்பள்ளு ஆகும். வேளாண்மைப் பண்பாட்டின் பின்னணியில் எழுந்த இவ்விலக்கியத் தினைச் செய்தவர் பெயர் அறியப்பட வில்லை. ஈழத்தில் தோற்றம்பெற்ற ஏனைய பள்ளு இலக்கியங்களுடனும் தமிழ் நாட்டுப் பள்ளுப் பாடல்களுடனும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது கதிரை மலைப்பள்ளு செயற்கைத் தன்மை கலவாத வகையிற் பாடப்பட்டுள்ளதைக் காணலாம். அதாவது பள்ளுப் பாடல் களிலே அதனை எழுதிய ஆசிரியரின் வித்துவத் தன்மையைக் காட்டுவதற்காக இடையிடையே சேர்க்கப்படும் அகப் பொருட்டுறைகளடங்கிய பாடல்களை கதிரைமலைப்பள்ளிற் காணமுடிய வில்லை. இதனாற் கதிரைமலைப் பள்ளினை இன்றுகிடைக்கக் கூடிய பள்ளுப்பாடல்கள் யாவற்றுக்கும் மூத்த தாகக் கொள்வது ஒருவகையிற் பொருத்த மானதாகவேயுள்ளது.

நல்லூரினை மையமாகக் கொண்ட யாழ்ப்பாண அரசில் நிகழ்ந்த மேற்படி இலக்கிய முயற்சிகளை உற்று நோக்குகின்றபோது இவ்விலக்கிய வளர்ச்சிக்களுக்கு எல்லாம் பலமான அடித் தளம் அதற்கு முன்னதாகவே இடப் பட்டிருக்கவேண்டும் என்பது புலனா கின்றது. காலங்காலமாக ஈழத்தமிழர் மத்தியில் இருந்துவந்த கல்விப் பாரம்பரியத்தின் விகசிப்பே யாழ்ப்பாணத் தமிழ் மன்னர்கால இலக்கியச் செழிப்பு எனக் கூறுவதிலும் தவறில்லை. தமிழ் வளர்ச்சிக்குத் தம்மை அர்ப்பணித்த வர்களாக யாழ்ப்பாணத் தமிழ் அரசர்கள் பலர் காணப்பட்டனர். அவர்களுட் பலர் தாங்களே சிறந்த புலமையாளர்களாக விளங்கினர். வரோதயசிங்கையாரியன், எட்டாம் பரராஜசேகரன் அல்லது நல்லூர் பரராஜசேகரன், யாழ்ப்பாண மன்னர் பரம்பரையில் வந்த அரசகேசரி போன் றோர் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவர்கள். தாம் புலமையாளர்களாக இருந்ததோடு அமையாது இவர்கள் தமிழ் புலவர்களை ஆதரித்தும், அவர்களைக் கொண்டு நூல்களை ஆக்குவித்தும் வந்துள்ளனர்.

தமிழை வளர்ப்பதோடு மட்டும் அமையாது அதனை அரண்செய்ய யாழ்ப்பாண மன்னர்கள் கையாண்ட இரண்டு அணுகுமுறைகள் இவ்வாய்விற் சுட்டிக்காட்டத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தவை.

i. தமிழ்ப் புலமையோரது படைப்புக் களைச் சீர்தூக்கிப் பார்ப்பதற்கும், தமிழ்ப் புலவர்களையும் அவர்களது படைப்புக்களையும் ஆதரிப்பதற்கும் ஏற்றவகையில் "செந்தமிழ் சங்கம்" ஒன்றை யாழ்ப்பாண மன்னர்கள் நல்லூரில் உருவாக்கியிருந்தனர் என யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடு கின்றது. இச் செந்தமிழ்ச் சங்கத்தின் பராமரிப்புக்கென யாழ்ப்பாணத் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னர்களால் வழங்கப்பட்ட இறையிலி நிலமே சங்குவேலி என வழங்கப்படுவதாக ஆ.முத்துத்தம் பிப்பிள்ளை கருதுவார்.

ii. தமிழ் இலக்கியங்களைத் தேடியும் தொகுத்தும் பேணும் முயற்சிகளில் யாழ்ப்பாண மன்னர்கள் ஆர்வங் காட்டினர். யாழ்ப்பாண மன்னர் காலத்திற்கு முன்னதாக ஈழத்தில் தமிழ் இலக்கியங்களைப் பேணும் முயற்சிகள் நடைபெற்றமைபற்றி அறிய ஆதாரங் களில்லை. பூதந்தேவனாருக்குப் பின்னதாக ஈழத்திலக்கிய வரலாற்றுத் தொடர்ச்சியினை அறியமுடியாமற் போனமைக்கு இலக்கியப் பேண்முறை இல்லாமல் போனமையே முக்கியமான காரணியாக எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. இக்குறைபாடு தமிழர் பிரதேசங்களில் தமிழரசு, தமிழ் வன்னிமைகள் கிளைத்தெழுந்த காலத் துடன் இல்லாமற் போய்விட்டது. குறிப்பாக, யாழ்ப்பாணத் தமிழர்கள் இலக்கியங்களைத் தேடித் தொகுத்துப் பேணுவதில் அக்கறைகாட்டத் தொடங்கினர்.

யாழ்ப்பாணத்தமிழ் மன்னர்கள் சரஸ்வதிபண்டாரம் என்னும் ஒரு நூல் நிலையத்தை உருவாக்கினர் என அறிய முடிகின்றது. நல்லூர் சட்டநாதர் கோவிலின் வடக்குப்புறமாக ஸ்தாபிக்கப் பட்டிருந்ததாகக் கருதப்படும் அந்நூல் நிலையத்தில் ஈழத்துத்தமிழ் நூல்களே யன்றி, தமிழகத்தில் இருந்து தருவிக்கப் பட்ட நூல்களும் பேணிப்பாதுகாக்கப் பட்டதாக அறியமுடிகின்றது. எட்டாம் பரராஜசேகர மன்னன், சேதுக் கரையி லிருந்து பல நூல்களை எழுத்தாளர்களைக் கொண்டு பிரதிபண்ணுவித்துக் கொணர ந்து சரஸ்வதி பண்டாரத்தை நிறைத்தான் என யாழ்ப்பாண வைபவ மாலை குறிப்பிடுவது நோக்கத்தக்கதாகும்.

ஈழத்தில் சிதறுண்டு கிடந்த வைத்திய, சோதிட முறைகளைத் தேடித் தொகுக்க முற்பட்டமை அடுத்துச் சுட்டிக்காட்டப்படவேண்டிய முக்கியத்து வம் வாய்ந்த முயற்சியாகும். முன்னர் குறிப்பிட்டமைபோன்று வரோதய சிங்கையாரியன் செகராசசேகரத்தி னையும், பரராசசேகரமன்னன் பரராச சேகர வைத்தியத்தினையும் தமது ஆதரவின்கீழ் பல வைத்தியர்களையும் கொண்டு தொகுப்பித்ததுடன், அதனைத் தமது பெயரிலேயே அரச முத்திரை யிட்டுத் தமிழ் மக்களின் வைத்திய நூலாக வெளியிட்டுள்ளனர். இதேபோலவே செகராசசேகரமாலையும் பரவிக்கிடந்த சோதிட முறைகளைத் தொகுத்துக் கூறுகின்றது.

இவற்றைப் பார்க்கும்போது மொழி வளர்ச்சி, இலக்கியப் பேணுகை என்ற ரீதியில் நல்லூரினை மையமாகக் கொண்டு நிகழ்ந்த முயற்சிகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது புலனாகின்றது. இதுவே யாழ்ப்பாண மன்னர்கள் காலத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சி ஓர் உன்னத இடத்தினை அடையக் காரணமாயிற்று.

யாழ்ப்பாண மன்னர் காலத்தி னைத் தொடர்ந்து வந்த போர்த்துக்கேயர் காலத்தில் ஈழத்திலே இலக்கிய முயற்சிகள் மிக அருந்தலாகவே நிகழ்ந்தன. போர்த்துக் கேயர்களின் ஆட்சி மக்களின் மனதினைக் கவர்வதாக இருக்கவில்லை. அவர்கள் சுதேசமதங்களுக்கு எதிராக ஏற்படுத்திய தடையும், மக்கள் மீது விதித்த வரிகளும், கொணர்ந்து புகுத்திய விதேச பண்பாட் டுக் கலப்பும் மக்களின் வாழ்க்கையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றுமுழுதாகவே குழப்பி விட்டன. இந்நிலையில் கத்தோலிக்க மதம் சார்ந்த ஓரிரு இலக்கியங்களே தோன்றிய தாக அறியமுடிகின்றது. ஒரு வேளை இக்காலப்பகுதியில் தோன்றிய வேறும்பல இலக்கியங்கள் அரவணைப்பின்மையால் அழிந்திருக்கவுங்கூடும். எனினும் நல்லூர்ப் பிரதேசத்தில் இக்காலப் பகுதியில் இலைமறைகாயாகத் தொடர்ந்த தமிழ்க் கல்விப்பாரம்பரியத்தின் தொடர்ச்சியினை யும் விகசிப்பினையும் நல்லூர் ஞானப் பிரகாசருக்கூடாகக் கண்டுகொள்ளக் கூடியதாகவுள்ளது. போர்த்துக்கேயரின் பசுக்கொலைக்கு அஞ்சி இந்தியாவுக்குச் சென்ற ஞானப்பிரகாசர் வடமொழியிலும் தமிழிலும் புலமைமிக்கவராய் இருந்த துடன் அம்மொழிகளில் ஆக்கிய இலக்கியப் படைப்புக்கள் நுணுகி நோக்கத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தவை யாகும்.

ஒல்லாந்தர்காலப் பகுதியில் ஈழத்தின் பல பாகங்களில் இருந்தும் இலக்கிய முயற்சிகள் பல எழத்தொடங்கு கின்றன. குறிப்பாக, இக்காலப் பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பாகங்களிலும் வாழ்ந்த தமிழறிஞர்கள் சிறந்த இலக்கியங்கள் பலவற்றை யாக்கத் தொடங்கினர். ஒல்லாந்தர் காலத்தில் மீண்டும் கிடைத்த சமயச்சுதந்திரமும், பொருளாதார முன்னேற்றமும், பாடசாலைக் கல்வியும், நீதிநிறைந்த ஆட்சிச் சூழலும் மக்கள் வாழ்க்கையில் ஏற்படுத்திய செழிப்பின் விழைவே, இவ்விலக்கிய வளர்ச்சி எனலாம். நல்லூர்ப் பிரதேசத்தை மையமாகக் கொண்டும் இக்காலப் பகுதியிற் குறிப்பிடத்தக்க இலக்கிய முயற்சிகள் நடைபெற்றுள்ளன. அவைபற்றிய முழுமையான தகவல்களை ஒருங்குதிரட்ட முடியாவிடினும் வில்ல வராய முதலியார், அவரின் மகன் நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் முதலானோரின் கவித்துவம், புலமை என்பன குறித்து அறியவரும் தகவல்கள் மிக முக்கியத் துவம் வாய்ந்தனவாகும். யாழ்ப்பாண மன்னர் பரம்பரையில் வந்த வில்லவராய முதலியார் அக்காலத்தில் ஒல்லாந்தர்கள் நடாத்திய பாடசாலையிலே பயின்றவர் களுள் ஒருவர். தேசவழமை என்னும் யாழ்ப்பாண நியாயப் பிரமாண நூலைப் பரிசோதிக்கும்படி ஒல்லாந்த தேசாதி பதியால் நியமிக்கப்பட்ட அறிஞர்களுள் இவரும் ஒருவர். ஒல்லாந்தர்களின் நிர்வாக அதிகாரிகளுள் ஒருவராகப் பணியாற்றிய வர். இவர் தமிழ்ப் புலமை பெற்றவர் என்பது கல்வளையந்தாதியினை அவர் பாட முற்பட்டதிலிருந்தும் (இவ்வந்தாதி பின்னர் அவரது மகன் சின்னத்தம்பிப் புலவராற் பாடிமுடிக்கப்பட்டது) தமிழகத்திலிருந்தும், தமிழ்ப் புலமை யாளர்கள் அவரைச் சந்திக்க வந்ததிலிருந் தும் அறியலாம். நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் ஒல்லாந்தர்காலத்தில் வாழ்ந்த கவிஞர்களுட் குறிப்பிடத்தக்கவர். மறைசையந்தாதி, கல்வளையந்தாதி, பறாளை விநாயகர் பள்ளு, கரவைவேலன் கோவை எனும் பல நூல்களை இயற்றியவர். சமகாலத்தில் வாழ்ந்த புலவர்களாலும் பிரபுக்களாலும் போற்றப் பட்ட சிறப்பிற்குரியவர். இக்காலப் பகுதியில் தமிழகத்தின் காஞ்சிபுரத் திலிருந்து ஈழத்துக்கு வந்து நல்லூரில் குடியேறிய கூழங்கைத் தம்பிரான் மிக முக்கியமான இலக்கியப் பங்களிப்பினை ஆற்றியுள்ளார். சிறந்த மரபுவழித் தமிழ்ப்புலமையாளராக விளங்கிய தம்பிரானவர்கள் ஈழத்து மரபுவழிக் கல்விக்குப் புதுமெருகூட்டிய வராகக் கருதப்படுகின்றார். அவரிடம் படித்தவர் களும், அவரிடம் படித்தவர் களிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்தவர்களும் எனப் பெரியதொரு மரபுவழிக் கல்விப் பாரம்பரியத்தினைப் பத்தொன்பதாம் நூற்றாண்டிற் காண முடிகின்றது. கூழங்கைத் தம்பிரான் யோசேப்புப் புராணம், நல்லைக் கலி வெண்பா, கூழங்கையர் வண்ணம், சித்திவிநாயகர் திருவிரட்டை மணிமாலை முதலான பல இலக்கியங்களை இயற்றினார் என அறியப்பட்ட போதும் அந்நூல்களின் ஒருசில செய்யுட்களைத் தவிர ஏனையவை மறைந் தொழிந்தன.

ஆங்கிலேயர் காலம் என வழங்கப் படும் பத்தொன்பதாம் நூற்றாண்டு காலப்பகுதியில் நல்லூர் மீண்டும் ஈழத்துத் தமிழ் இலக்கிய முயற்சிகளின் களமாக மாற்றம் கண்டது. குறிப்பாக ஆறுமுக நாவலரைத் தலைமையாகக் கொண்டு ஈழத்தில் சைவத்தமிழ் எழுச்சி ஏற்பட்ட காலங்களிலே நல்லூரின் முக்கியத்துவம் பலமடங்கு மேலோங்கியதைக் காண முடியும். நல்லூரில் பிறந்த ஆறுமுக நாவலர் மிஷனரிமார்களின் மதம்பரப் பலையும் செயற்பாடுகளையும் கடுமை யாக எதிர்த்ததுடன் சைவத்தினையும் தமிழினையும் வளரவைக்க அரும் பாடுப ட்டார். சைவத் தமிழ்ப் பாடசாலைகளை அமைத்தல், நூல்களை எழுதுதல், நூல்களைப் பதிப்பதித்தல், கண்டனப் பிரசுரங்களை வெளியிடல் முதலான அவரின் தமிழ்ப் பணிகள் ஈழத்து இலக்கியத்துக்குப் புத்துயிர்ப்பைத் தந்தன (அவை குறித்து ஆராய்வது விரிந்ததொரு தனி ஆய்வாக மலரும்). தமிழகத்தவர் களால்கூட மதிக்கக் கூடிய அளவிற்கு ஈழத்திலக்கியங்களின் கனதியை உயர்த்திய வர்களில் ஆறுமுக நாவலர் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவராக விளங்கினார். அவரின் பல இலக்கிய முயற்சிகள் ஈழத்தில் முதன்முயற்சிகளாக அமைந்த அதே வேளை பிற்காலத்தவருக்கு மிகச் சிறந்த முன்மாதிரிகளையும் வழங்கி யுள்ளன. நாவலரால் முன்னெடுக்கப்பட்ட சைவத்தமிழ் எழுச்சி சார்ந்த நடவடிக்கை கள் பின்னர் அரசியல், சமூக ரீதியாக முக்கியத்துவம் பெற்றபோது நல்லூரின் முக்கியத்தும் மேலும் பிரகாசமடைந்தது. ஆறுமுகநாவலரின் மறைவுக்குப் பின்னால் கூட, சைவத் தமிழ் எழுச்சியினை முன்னெடுத்த நாவலரது பரம்பரையி னரின் செயற்பாட்டுகளின் தளமாகவும் நல்லூரே விளங்கியுள்ளமை கவனிக்க வேண்டியதொன்றாகும்.

ஆறுமுகநாவலரின் ஆளுமை யைப் புடம்போட்ட அவரின் ஆசிரியர் களான சேனாதிராச முதலியாரும், சரவண முத்துப் புலவரும் நல்லூரிலும் அதனை யண்டிய பிரதேத்திலும் வாழ்ந்தவர்க ளேயாவர். சேனாதிராச முதலியார் இருபாலையிற் பிறந்தவர். மாதகல் சிற்றம்பலப் புலவரிடத்தும், கூழங்கைத் தம்பிரானிடத்தும் நேரடியாகப் பயின்றவர். ஆங்கிலேய அரசாங்கத்தில் உத்தியோகம் பார்த்தவர். இவர் இயற்றியனவாக நல்லை வெண்பா, நல்லையந்தாதி, நல்லைக் குறவஞ்சி, நீராவிக் கலிவெண்பா முதலான நூல்கள் அறியப்படுகின்றன. நல்லூரிலுள்ள முருகன் ஆலயத்தின்மீது முதலியாருக் கிருந்த பற்றினையும் பக்தியினையும் மேற்படி நூல்கள் வாயிலாக அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. நாவலரின் மற்றோர் ஆசிரியரான சரவணமுத்துப் புலவர் நெல்லை வேலவருலா என்ற பிரபந்தத்தையும், வேறும் சில தனிப் பாடல்களையும் பாடியவராக அறியப்படு கின்றார். திருக்கோணேசர் மலைக் குறவஞ்சி எனும் இலக்கியத்தினை இவர் பாடத்தொடங்கினார் எனினும், அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையாகப் பாடிமுடிப்பதற்கு முன்னால் 1845ஆம் ஆண்டில் அவர் காலமாகிவிட்டார் எனப் பேராசிரியர் ஆ. சதாசிவம் குறிப்பிடுகின்றார்.

ஆறுமுகநாவலர் அவர்களின் தந்தையாரான நல்லூர் கந்தப்பிள்ளையும் மிகச்சிறந்த தமிழ்ப் புலமையாளராக விளங்கியுள்ளார். கூழங்கைத் தம்பிரானிடம் பயின்ற இவர் இருபத்தொரு நாடகங்களை இயற்றியதாக அறியவருகின்றது. சந்திரகாச நாடகம், இராம விலாசம், கண்டிநாடகம், ஏரோதுநாடகம், இரத்தின வல்லி விலாசம் முதலானவற்றை வகைமாதிரியாக எடுத்துக்காட்டலாம். நல்லூர் முருகன்மேல் நல்லைநகர்க் குறவஞ்சி எனும் பிரபந்தத்தினையும் இவர் இயற்றினார் என்பர். ஆறுமுகநாவலரின் தமையனாரான பரமானந்தர் என்பவரும் தமிழ்ப் புலமையாளராக விளங்கினார். பிரசித்திபெற்ற நொத்தாரிசாக விளங்கிய இவர் நல்லைக் கந்தரகவல், நல்லைக்கந்தர் கீர்த்தனம் முதலான நூல்களை இயற்றியதாக அறியப்படுகின்றது. ஆறுமுகநாவலரின் மருகரான (சகோதரியின் மகன்) வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்களும் நல்லூரில் வாழ்ந்த மிகச் சிறந்த கல்விமானாவார். நல்லூர்க் காத்திகேய உபாத்தியாரிடமும், மாமனாராகிய ஆறுமுகநாவலரிடமும் கல்விகற்ற இவர் இரசனை நயம் சொட்டச்சொட்ட இலக்கியங்களுக்கு நயம் கூறுவதிலும், சொற்பொழிவாற்றுவதிலும் வல்லவர் என்று கூறப்படுகின்றது. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள், தனது கட்டுரைகள் பலவற்றில் பொன்னம்பலப் பிள்ளை அவர்கள் இலக்கிய நயம் விரித்துரைக்கும் ஆற்றலினைப் புகழ்ந்து செல்கின்றார். இவர் இயற்றியனவாகத் தனிப்பாடல்கள் சிலவே கிடைக்கப் பெற்றுள்ளன. எனினும் ம. க வேற்பிள்ளை, ச. பொன்னம்பலப்பிள்ளை, த.கைலாச பிள்ளை, சுவாமிநாத பண்டிதர், புலோலி வ. குமாரசாமிப்புலவர் முதலானோரின் ஆசிரியராக விளங்கிய சிறப்புடையவர்.

நல்லூரில் வாழ்ந்த நாராயணப் பட்டர் என்பவரின் மகனான சந்திரசேகர பண்டிதர் அவர்களும் மிகச் சிறந்த தமிழறிஞராகக் கருதப்படுகின்றார். இவர் நல்லூர்க் கந்தன்மேற் கொண்ட பக்தியினால் அவர்மேல் ஒரு கிள்ளைவிடு தூது பாடியுள்ளார். இந்நூல் 1785இல் இயற்றப்பட்டதாக அதன் சிறப்புப் பாயிரங் கூறுகின்றது. இவர்களை விட திருஞானசம்பந்தம்பிள்ளை, சிற். கைலாச பிள்ளை முதலானோரும் நல்லூரில் வாழ்ந்த தமிழறிஞர்களுட் குறிப்பிடத் தக்கவர்களாவர். இவர்களும் சில பிரபந் தங்களை இயற்றியுள்ளனர். நல்லூரிற் செல்வாக்குற்றிருந்த சைவத்தமிழ் கல்விப் பாரம்பரியத்தின் வீச்சு இருபதாம் நூற்றாண்டிலும் தொடர்ந்தது என்றே குறிப்பிடவேண்டும். இதனால் மிகச் சிறந்த தமிழ்ப் புலமையாளர்கள் பலர் இருபதாம் நூற்றாண்டிலும் நல்லூரிற் பிறந்தோ அல்லது தங்கியிருந்தோ தமிழ்ப் பணி யாற்றி வந்துள்ளனர். அவர்களின் பணிகள் யாவும் தனித்ததொரு ஆய்வாக மேற் கொள்ளப்படல் வேண்டும்.

ஆக, மேற்கூறியவற்றால் நல்லூர் பிரதேசம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே வலுவான தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தினால் வளம்பெற்று வந்திருப்பதனைக் காணமுடிகின்றது. சிறந்த தமிழ் இலக்கியங்களும், தமிழ்ப் புலமையாளர்களும் இம் மண்ணிற் றோன்றி இதற்குச் சிறப்பும் பெருமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடித் தந்துள்ளனர். நல்லூர் பிரதேசத்தில் மரபுவழியில் ஆழமாகக் காலூன்றிய தமிழ் இலக்கியக் கல்விப் பாரம்பரியம், பின்னர் நிறுவன ரீதியான கல்விமரபு வளர்ச்சி பெற்ற காலங்களில் மேலும் புதிய வேகத்துடனும், மலர்ச்சியுடனும் வளர்ந்து வருவதனைக் காணலாம். இதன் செழிப்பே இன்றும் இம்மண்ணில் நின்றும் சிறந்த இலக்கியப்படைப்புக்கள் வெளிவரக் காரணமாக அமைந்துள்ளது.

**உசாத்துணை நூல்கள்:**


1. சதாசிவம், ஆ., ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், சாகித்திய மண்டல வெளியீடு, கொழும்பு, 1966.
2. சிவலிங்கராசா, எஸ்., ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி, தனலக்குமி புத்தகசாலை, யாழ்ப்பாணம், 2001.
3. பத்மநாதன், சி., ஈழத்து இலக்கியமும் வரலாறும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2004.
4. முத்துத்தம்பிப்பிள்ளை, ஆ., யாழ்ப்பாணச் சரித்திரம், கமலம் வெளியீடு, யாழ்ப்பாணம். 2001.
5. வேலுப்பிள்ளை, க., யாழ்ப்பாண வைபவ கௌமுதி, Asian Education Service, டெல்கி, 2004
6. Cumaran, E., The Culture of Sri Lankan Tamil as Portrayed in Tamil Literature, M.Phil thesis submitted to the Department of Tamil, University of Jaffna, (Unpublished) 2008.
7. Vellupillai, A., A comparison of some of the Tamil Version of the Anklet story in Sri Lanka, Journal of the Institute of Asian Studies, 1989




வடமாகாண இலக்கிய விழா – 2009
நல்லூர் பிரதேச செயலகத்தால் வடிவமைக்கப்பட்ட ஊர்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேழிச்செல்வம் சிறக்க வேண்டும்

ச. சிவநேசன்
உதவி விவசாயப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

வளங்கள் பலவற்றையும், புகழ் பூத்த தலங்களையும் தன்னகத்தே கொண்ட நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவானது விவசாய உற்பத்திக்காக 765.7 ஏக்கர் நெற்காணிகளையும் 637.25 ஏக்கர் மேட்டுக்காணிகளையும் கொண்டுள்ளது. இக்காணிகளில் 1466 குடும்பங்கள் ஜீவனோபாயத்துக்காகப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

முன்னர் விவசாயக்கிராமங்களாகக் காணப்பட்ட எமது பிரதேசம் தற்போது குடியிருப்புக்களாக மாறி வருகின்றது. விவசாய நிலங்கள் எல்லாம் கடைத் தொகுதிகளாகவும், கட்டிடத் தொகுதிகளாகவும் மாறி வருகின்றன. இதனால் அயலிலுள்ள காணிகளிலும் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு உற்பத்தி குறைவடைந்து செல்கின்றது. இந்த நிலை தொடருமாயின் எமது அன்றாட மரக்கறித்தேவைகள்கூடத் தென்பகுதி உற்பத்தியில் தங்கியிருக்க வேண்டியநிலை ஏற்படும். இது ஓர் ஆரோக்கியமான நிலைமையல்ல. எனவே, விவசாயக்காணிகளில் கட்டிடங்கள் கட்டுவது தடுக்கப்பட்டு விவசாயச் செய்கை அதிகரிக்கப்பட வேண்டும்.

மேட்டுநிலப் பயிர்ச்செய்கை விஸ்தீரணம் குறைவடைந்து செல்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இதற்கு விவசாய நிலங்கள் கட்டிடங்களாக மாறுவது மட்டும் காரணமல்ல. இளைய சமுதாயத்தினரின் நாட்டம் குறைந்து செல்வதும் ஒரு காரணமாகும். ஆகையால் இளைஞர்களை விவசாயத்தில் நாட்டம் கொள்ளச் செய்யவேண்டும். இதன்மூலம் விவசாயத்திற்குப் புத்துயிர் அளிக்க முடியும். இதற்காக இளைஞர்களைக் கவரக்கூடிய வகையில் புதிய தொழில் நுட்பங்கள் உட்புகுத்தப்பட்டுள்ளன. தற்போது நவீன இயந்திர நுட்பமுறைகளைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர். இதன்மூலம் வேலைகளை இலகுபடுத்தலாம். இயந்திரங்களைக் கையாளக்கூடிய வகையில் அவர்களின் துறைசார் கல்வித் தரத்தை மேம்படுத்தி அபிவிருத்தி செய்யப்படவேண்டியுள்ளது.

விவசாயம் சார்ந்த அமைப்புக்களை வழிநடத்தக்கூடியவாறு விவசாயிகள் வலுப்படுத்தப்பட்டு, பலம் வாய்ந்தவர்களாகத் திகழ்ந்தால், பொது நிகழ்வுகளில் அவர்களுக்கும் உரியஇடம், கௌரவம் அளிக்கப்படும். அதற்கேற்றதாகத் திட்டங்கள் தீட்டப்பட்டு அமுல்படுத்தப்படவேண்டும்.

''எண்ணித்துணிக கருமம்'' என்றார் வள்ளுவர். அவர் வாக்கை மனதில் இருத்தி மேற்கொள்ளவேண்டிய மாற்றங்களை அலசி ஆராய்ந்து திட்டமிடுவதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்தது. சந்தை வாய்ப்புக்கள், சாதக, பாதகமான காலநிலைகள், அச்சுறுத்தல்கள், அரசின் கொள்கைகள் என்பவற்றை முக்கியமாகக் கவனத்திற்கொள்ள வேண்டும்.

தற்போதைய திறந்த பொருளாதாரக்கொள்கையும், A9 பாதை திறந்துள்ளதால் ஏற்பட்டுள்ள போட்டிச் சந்தை, அதிகரித்துள்ள உற்பத்திச்செலவு மற்றும் வாழ்க்கைச்செலவு காரணமாக இவர்களின் வருமானத்தை அதிகரிக்கச் செய்யவேண்டியுள்ளது. இதற்காகத் தற்போதைய பயிர்ச்செய்கை முறைகளில், சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளில் மாற்றங்களை உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளது காலத்தின் தேவையாக உள்ளது.

சந்தைவாய்ப்பைப் பொறுத்த வரையில் தற்போது இலங்கையின் பிரதான மொத்த விற்பனைச் சந்தையாக விளங்கும் தம்புள்ள சந்தையின் கடந்த பத்து வருடகாலத்தில் ஏற்பட்ட விலைத் தளம்பல்கள், விற்பனை அளவுகள் என்பவற்றை ஆராய்ந்து பார்த்தால் சில உற்பத்திப்பொருட்களுக்கு என்றுமே அதிகரித்த விலையும், அதிக கேள்வியும் காணப்படுகின்றது.

வெங்காயம், பச்சைமிளகாய், பீற்ரூட் ஆகிய மரக்கறிகளுக்கும், வாழை, பப்பாசி, மா, முந்திரிகை ஆகிய பழங்களுக்கும் என்றுமே அதிக விலை கிடைப்பதனால் நாம் இவற்றின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். ஏனையவற்றை எமது தேவைக்கு ஏற்றவகையிற் பயிரிட்டாற் போதுமானது.

தற்போது யாழ்ப்பாண விவசாய உற்பத்திகளைச் சில தனியார் நிறுவனங்களும், முகவர்களும் கொள்வனவு செய்கின்றனர். இவர்கள் விவசாயிகளுடன் தனிப்பட்ட முறையில் தொடர்புகொண்டு கொள்வனவு செய்கின்றனர். இம்முறையில் விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படக் கூடிய தன்மை காணப்படுவதால் விவசாயிகள் ஒன்றுசேர்ந்து ஒரு அமைப்பு மூலமாக இவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பந்தங்களைச் செய்வதன்மூலமும், தமது உற்பத்திகளுக்கு விற்பனை உத்தரவாதத்தையும், உறுதியான விலையையும் ஏற்படுத்திக் கொள்வதன் மூலமும் பாதிப்புக்கள் ஏதுமின்றி விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும்.

நெற்செய்கையைப் பொறுத்த வரையில் மானாவாரிச்செய்கையாக ஒரு போகம் மட்டுமே பயிர் செய்யப்படுகிறது. இப்பிரதேசத்தின் சராசரி விளைச்சல் கெக்ரயருக்கு 2 முதல் 3 மெற்றிக் தொன்னாக உள்ளது. இவ் உற்பத்தியை 4 முதல் 5 மெற்றிக்தொன்னாக அதிகரிக்க முடியும். அதற்காகப் பின்வரும் விடயங்களிற் கவனம் செலுத்தவேண்டும்.

1. உயர் விளைவுதரும் புதிய, திருத்திய நெல்லினங்களைப் பயிரிடுதல்.
2. உவர்த்தன்மையான பகுதிகளில் உவர்ச் சகிப்பு இனங்களைப் பயிரிடுதல்.
3. உவர்ப்பிரதேசங்களைப் பண்படுத்தல் முறையில் திருத்தி அமைத்தல்.
4. கடல் நீர் உட்புகாதவாறு தடுப்பணைகளைப் புதுப்பித்தல்.
5. கழிவு நீர் வெளியேறும் வாய்க்கால் தடுப்புக்களை விவசாயிகள் பராமரித்து, மழைநீரைத் தடுத்துச் சேமிப்பதோடு கடல்நீர் உட்புகாதவாறும் தடுக்கப்படல் வேண்டும்.

இப்பிரதேசத்தில் உள்ள கட்டாக் காலிகள் பயிர்ச்செய்கைக்கு அச்சுறுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுப்பதுடன், வயல் ஈரத்துடன் செய்யக் கூடிய சிறு தானியப்பயிர்ச்செய்கையைத் தடைசெய்துள்ளன. எனவே, கால்நடைகளைக் கட்டுப்பாடாக வளர்த்து சிறுதானியப்பயிர்ச்செய்கை ஊக்குவிக்கப் பட்டால் உற்பத்தி, வருமானம் என்பன அதிகரிக்கும்.

நந்தாவில் வயற் பிரதேசத்தில் நெல் அறுவடையின் பின்பு சிறிய அளவில் மாற்றுப்பயிர்களும் நீர்வசதி உள்ள இடங்களில் மரக்கறிப்பயிர்களும் செய்கை பண்ணப்படுகிறது. இப்பிரதேசத்தில் விளைவிக்கப்படும் மரவள்ளிக்கிழங்கானது தனித்துவமான சுவையுடையது. நீர் வசதியற்ற இடங்களுக்குக் கிணறுகளை அமைத்துக்கொடுப்பதன்மூலம் அப்பிரதேசத்தின் உற்பத்தியை அதிகரிப்பதோடு அப்பிரதேச விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்த முடியும்.

பயிர்களைப் பயிரிடுவதற்குச் சாதகமான காலநிலைகள், வளங்கள் காணப்பட்டாலும், அச்சுறுத்தல்களும், பாதகத்தன்மைகளும் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றை முறியடிப்போமாயின் பயிர்ச்செய்கையை, உற்பத்தியை, வருமானத்தை அதிகரிக்க முடியும்.

'நோய்நாடி நோய்முதல்நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச்செயல்' என்று வள்ளுவர் கூறியுள்ளபடி பயிர்ச் செய்கைக்கான தடைகளையும், தடைகளை நீக்குவதற்கான வழிமுறைகளையும் அறிந்து செயற்படுவோமாயின் நிச்சய மாக உற்பத்தியை அதிகரிக்க முடியும். உதாரணமாக: எமது விவசாயத்திற்கான நீர்மூலம்; நிலத்தடி நீர் ஆகும். இதன் அளவு தற்போது குறைவடைந்து செல்கின்றது. பயிர்செய்யும் நிலங்களுக்கே தற்போது நீர் போதாதுள்ளநிலையில் எப்படி பயிர்ச் செய்கை விஸ்தீரணத்தைக் கூட்ட முடியும்? பயிர்ச்செய்கை விஸ்தீரணத்தைக் கூட்டி இலகுவாக மீளவும் நிரப்ப முடியாத நீர் வளத்தை நாம் சூறையாடினால் எதிர்காலச்சந்ததியின் நிலை என்னாவது? "இயற்கையை நீ பகைத்தால் இயற்கையால் நீ அழிவாய்" என்கிறார்களே; அப்படியாயின் என்ன செய்யலாம்? கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவான் ஏன்? தற்போது அறிமுகப்படுத்தப் பட்டிருக்கும் நுண் நீர்ப்பாசன முறைகளான தூவல் நீர்ப்பாசனம், சொட்டு நீர்ப்பாசனம் என்பன இதற்குச் சிறந்த தீர்வாகும். இம்முறையைப் பயன் படுத்துவதன்மூலம் தற்போது பாவிக்கும் நீரைக்கொண்டே மூன்று மடங்கு அதிகமான விஸ்தீரணத்திற் பயிர்செய்ய முடியும். அதுமட்டுமல்ல; விவசாயிகளே நிலத்தடி நீரில் நைதரசன் அளவைக் கூட்டி நீரை மாசடைய வைத்திருப்பவர்கள் என்ற அவப்பெயரிலிருந்தும் விடுபட முடியும். இந்த நீர்ப்பான முறையானது எழுத்தில் விபரிக்கமுடியாத பல நன்மைகளைக் கொண்டுள்ளது. வறண்ட பிரதேசங்களிலும், பாலைவனங்களிலும் சோலை வனங்களை உருவாக்கியுள்ளது. எனவே சகலரும் இத் தொழில்நுட்பத்தைக் கடைப்பிடித்து முன்னேறுவதோடு சூழலையும் குறிப்பாக நீர்வளத்தையும் பாதுகாக்க முடியும்.

இதேபோன்று ஒவ்வொரு பிரச்சனைக்கும் அந்தந்தத் துறையைச் சார்ந்தவர்களின் ஆலோசனைகளைப் பெற்றுச் சரிவரக் கடைப்பிடித்தாற் பயிர் செழிக்கும். பயிர் செழித்தால் நாம் செழிப்போம், நாம் செழித்தால் நாடு செழிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளங்கள் நிறைந்த நல்லூர்

த. இரத்தினேஸ்வரன்
கிராம உத்தியோகத்தர்,
கொக்குவில் தென்மேற்கு. J/127

இந்து சமுத்திரத்தின் முத்தாக விளங்கும் இலங்கைத் திருநாட்டின் வடபாகத்தில் அமைந்துள்ள யாழ். மாவட்டத்தின் வலிகாமம் பகுதியில் நகரையும், நகர் சார்ந்த பகுதியையும் உள்ளடக்கியதே நல்லூர் பிரதேச செயலகப் பிரிவாகும்.

மக்கள் செறிவாக வாழும் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவானது வலிகாமத்தில் வடக்கே சண்டிலிப்பாய், உடுவில், கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுகளையும், கிழக்கே சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவையும், தெற்கே யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவையும், மேற்கே சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இங்கு அரியாலை, நல்லூர், வண்ணார்பண்ணை, கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி ஆகிய ஊர்கள் ஆறு பகுதிகளான நிலப்பரப்பினைக் கொண்டது குறிப்பிடத்தக்கது ஆகும்.

இப்பிரதேச செலயகப் பிரிவில் பிரசித்திபெற்ற நல்லூர்க் கந்தன் ஆலயமும், பல இந்து ஆலயங்களும், கிறிஸ்தவ ஆலயங்களும் அமைந்துள்ளன. யாழ். பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி, திருநெல்வேலி சந்தைப்பகுதி, கல்வியங்காடு சந்தை, பலதரப்பட்ட வங்கிக்கிளைகள், பிரபல கல்லூரிகள், பாடசாலைகள், வணிகமையங்கள், விவசாய நிலங்கள், கடற்றொழில், கலைத் தொழில், கைத்தொழில் மையங்கள் பலவும் அமைந்துள்ளன. கலைஞர்கள், சான்றோர்கள் எனப் பலதரப்பட்ட மக்கள் வாழ்ந்து இப்பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர். நல்லூர்ப் பிரதேச செயலகம் பலாலி வீதி, திருநெல்வேலியில் இயங்கி வந்த போதிலும் போதிய இடவசதி இல்லாமையால் பல அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

மேற்படி குறைபாடுகளை அறிந்த அதிகாரிகள் இச்செயலகப் பிரிவிற்குச் சகல வசதிகளுடன் கூடிய கட்டிடம் அமைக்க வேண்டும் எனத் தீர்மானித்தனர். இதன் பயனாக அரசாங்க அதிபராக இருந்த கணேஷ் அவர்களும், பிரதேச செயலராகப் பணிபுரிந்த திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் அவர்களும் எடுத்த விடாமுயற்சியினால் தமிழ்க் கடவுளாம் முருகப்பெருமான் வீற்றிருக்கும் கந்த கோட்டம் என அழைக்கப்படும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் சுற்றாடலில், கோயிலுக்கு உரித்தான காணியினைக் குத்தகை அடிப்படையில் பெற்று கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு நல்லூர்ப் பிரதேசமும் யாழ். பிரதேசமும் சேர்ந்து பிரிவு காரியதிகாரி (D.R.O) பிரிவாக கச்சேரிப்பகுதியில் செயற்பட்டு வந்தது யாவரும் அறிந்ததே. மக்களின் தேவைகளை இலகுவாகப் பூர்த்திசெய்யும் நோக்கத்துடனும் 1975ஆம் ஆண்டு அன்றைய அரசாங்க அதிபர் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவை உருவாக்கினார். ஆரம்பத்தில் இக்காரியாலயம் திருநெல்வேலிப் பகுதியில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையாகச் செயற்பட்டு வந்தது. அக்காலகட்டத்தில் திரு. பெனடிக் என்பவர் உதவி அரசாங்க அதிபராகப் பணிபுரிந்தார். அவரைத் தொடர்ந்து திரு. சபாபதிப் பிள்ளை அவர்களும் திரு. சிவகுருநாதன் அவர்களும் பணியாற்றினார்கள். தவிர்க்க முடியாத காரணங்களினால் 1987, 1990 ஆகிய ஆண்டுகளில் முறையே ஆடிய பாதம் வீதி திருநெல்வேலிப் பகுதியிலும் ஆடியபாதம் வீதி கல்வியங்காட்டிலும் செயற்பட்டு வந்தது. இக்காலப்பகுதியில் திரு.K.சண்முகநாதன் அவர்கள் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றினார்.

இக்காரியாலயத்தில் இடநெருக்கடியும், பௌதிகவளப் பற்றாக்குறையும் இருந்துவந்த காரணத்தினால் உதவி அரசாங்க அதிபர் சண்முகநாதனின் முயற்சியால் பலாலி வீதியில் விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்கு அருகில் புதிய கட்டிடம் அமைக்கப்பட்டு செயலக நடவடிக்கைகள் நடைபெற்று வந்தன. இப் பணிமனையில் திரு.K.சண்முகநாதனைத் தொடர்ந்து திரு. M.மகாலிங்கம் அவர்கள் உதவி அரசாங்க அதிபராகப் பணி புரிந்தார். இவருடைய காலத்தில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு; பிரதேச செயலகப் பிரிவாக தரமுயர்த்தப்பட்டது. முதல் பிரதேச செயலராக திருமதி கமலா சிவசிதம்பரம் அவர்களும், அதன்பின்னர் திரு.K.குணராஜா, திரு.K.கனகரட்ணம், திரு.T.வைத்திலிங்கம், திரு.N.வேத நாயகன், திரு.S.முருகையா, திருமதி S.தெய்வேந்திரம் ஆகியோர் பிரதேச செயலர்களாகப் பணியாற்றினார் கள். தற்போது திரு.P.செந்தில்நந்தனன் அவர்கள் பிரதேச செயலராகப் பணி புரிந்து வருகின்றார்.

ஆரம்பத்தில் 10 கிராமசேவையாளர் பிரிவுகளைக் கொண்டிருந்த இப்பிரதேசம் 1985ஆம் ஆண்டளவில் 15 கிராமசேவையாளர் பிரிவுகளாக மாற்றமடைந்து, தொடர்ந்து 1989இல் 40 கிராம சேவையாளர் பிரிவுகளாக விரிவடைந்தது. இதுபோன்ற கூடிய பிரிவுகளையும், அதிகளவான மக்களையும் கொண்ட இப்பணிமனைக்கு இப்புதிய கட்டிடம் கிடைக்கப் பெற்றமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

எமது பிரதேச செயலக மக்களுக்கு திறமையான முறையில் சேவைகளைச் செய்யக்கூடிய வசதிகளுடன், இக் கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. நல்லூர் பிரதேச செயலகச் செயற்பாடுகள் மேலும் வளர்ச்சியடைந்து, உத்தியோகத்தர்கள் பொது மக்களுக்குச் சிறந்த சேவைகளைப் புரிய எல்லாம்வல்ல நல்லூர்க் கந்தனைப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அரச காணிகளும் அவை பிரித்து வழங்கப்பட்ட முறைகளும்

**செ. ஸ்ரீரங்கநாதன்**
காணி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், நல்லூர்.

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட காணிகள் தொடர்பாக நாம் ஆராயும்போது இப்பிரதேசம் 3361.86 கெக்ரெயர் பரப்பளவினைக் கொண்டதாகும். இதில் 67 கெக்ரெயர் அரசகாணிகளாகும். இது இப்பிரதேசத்தின் மொத்த நிலப்பரப்பில் 2சதவீதமாகும். 98சதவீதமான காணிகள் தனியார் காணிகளாகக் காணப்படுகின்றன.

1972ஆம் ஆண்டு காணி உச்சவரம்புச் சட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டபோது அரியாலை கிழக்குப் பகுதியிலுள்ள சில காணிகள் அச்சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு சுவீகரிக்கப்பட்டன. அக்காணியில் அரசாங்கத்தின் சில சட்டமுறைகளுக்கு அமைய பகிர்ந்து வழங்கப்பட்டன. அதன் கீழ் மணியந்தோட்டம் (பெரிய தோட்டம்) என்னும் காணி J/89 கிராம அலுவலர் பிரிவின்கீழும், சிப்பியோடை (பூம்புகார்) என்னும் காணி J/90 கிராம அலுவலரின் பிரிவின்கீழும் அடங்குகின்றன. இதனைவிடத் திருநெல்வெலிப் பண்ணையுடன் இணைந்த குடியேற்றக் காணி; காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின்கீழ் பிரித்து வழங்கப்பட்டது.

எனவே, நீண்டகாலமாகத் தனியார் காணிகளில் பழக்கப்பட்ட மக்களுக்கு அரச காணிகள் தொடர்பான கட்டுக் கோப்புக்கள், நிபந்தனைகள் என்பன புதியனவாகவே உள்ளன. எனவே, இக்கட்டுரையின் நோக்கம் மக்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஒரு தெளிவினை உருவாக்குவதேயாகும்.

அரசகாணிகள் பிரித்து வழங்கலில் பின்வரும் சட்டங்களுக்கு அமையவே நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

1. காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் (Land Development Ordinance)
2. அரச காணிச்சட்டம் (State Land Ordinance)
3. காணி அளிப்பு விசேட ஏற்பாட்டுச் சட்டம் (Land Grant (Special Provision) Act)

இதனைவிடத் தனியார் காணிகளைஅரச தேவைக்குப் பயன்படுத்த வேண்டிய தேவைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் காணி சுவீகரிப்பு சட்டமும் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

**காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டம்**

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் பின்வருவோருக்கு காணி பிரித்து வழங்கப்படும்

1. உழவர் வகுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. படித்த வாலிபர் / யுவதிகள் திட்டம்
3. குறைந்த வருமானமுள்ளோருக்கான திட்டம் (கீழ் மத்திய வகுப்பினர்)
4. கூடிய வருமானமுள்ளோருக்கான திட்டம் (மேல் மத்திய வகுப்பினர்)
5. கிராம விஸ்தரிப்புத் திட்டம்

இச்சட்ட விதிகளுக்கமைய 1இலிருந்து 4 வரையான பிரிவுகள் விவசாயத்தை நோக்கமாகக் கொண்டு மக்களுக்குப் பிரித்து வழங்கப்பட்டதாகும். 5ஆவது பிரிவு குடியிருப்பு நோக்கத்திற்காக மட்டும் மக்களுக்கு வழங்கப்படும் முறையாகும். இதன் கீழேயே திருநெல்வேலி பாற்பண்ணைத் திட்டம் அடங்குகின்றது. இத்திட்டத்திற்காக 10.7 கெக்ரெயர் பரப்பளவுள்ள காணியில் 172 துண்டங்கள் பிரிக்கப் பட்டு பொதுத்தேவை, கோயில் என்பவற்றிற்கு 2 துண்டங்களும், பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் உற்பத்தித் தேவைகளுக்கு 1 துண்டும் வழங்கப்பட்டு மிகுதி 169 துண்டுகள் மக்களுக்கு பிரித்து வழங்கப் பட்டுள்ளன. அண்ணளவாக இவர்களுக்கு 0.050 கெக்ரேயர் (2பரப்பு) வீதம் வழங்கப் பட்டுள்ளது. இவற்றுள் அரச காணிச் சட்டத்தின்கீழ் 50 காணித்துண்டுகள் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு (NHDA) பாராதீனப் படுத்தப்பட்டுள்ளது. மிகுதி 119 துண்டுகள் காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தின் சட்ட திட்டங்களுக்கு அமையவே உள்ளது.

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட காணிகள் யாவும் அரசு தனது கட்டுப்பாட்டின் கீழேயே தொடர்ந்தும் வைத்திருந்து வந்துள்ளது. எனவே இக்காணிகளுக்கு வழங்கப் படும் அனுமதிப்பத்திரங்கள், அளிப்புக்கள் (உறுதிகள்) என்பவற்றிற்குச் சில நிபந்தனைகளை விதித்துள்ளது. அவை அனுமதிப் பத்திரங்களாயின் கா.ஆ. 144ஆம் இலக்கப் படிவத்தின் பின்புறத்திலும் அளிப்புக் களாயின் கா.ஆ.156ஆம் இலக்கப் படிவத்தின் 3ஆம் பக்கத்திலும் குறிப்பிடப் பட்டுள்ளன.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின்கீழ் காணிவழங்கும் எச்சந்தர்ப் பத்திலும் அப்பிரதேசவாழ் மக்களுக்கும் காணியற்றோருக்கும் முன்னுரிமைப் படுத்திக் காணிக்கச்சேரிமூலம் பிரித்து வழங்கப்படுகின்றன. அதன்படி இவர் களுக்குக் காணி வழங்கப்பட்டவுடன் இக் காணிக்கு உரிய ஆவணமாக அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. இவ் வனுமதிப்பத்திரங்கள் இரண்டு பிரதிகள் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி காணிக் குடியிருப்பாளருக்கு வழங்கப்படுவதோடு, இணைப்பிரதி பிரதேச செயலகத்திலும் வைத்துப் பாதுகாக்கப்படும். அத்துடன் அலுவலகத்தில் அனுமதிப்பத்திர இலக்கம் கொண்ட காணிப்பேரேடுகளும் பேணப் படும். காணிக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு மேட்டுக்காணியாயின் ஒரு வருடத்திலும், வயற்காணியாயின் இரண்டு வருடத்திலும், காணி அபிவிருத்தியைப் பிரதானமாகக் கொண்டு அளிப்புக்கள் தயாரிக்கப்படும். இவ்வளிப்புக்கள் கா.ஆ. 156ஆம் இலக்கப் படிவத்தில் மூன்று பிரதிகள் தயாரிக்கப்பட்டும் இவ்வளிப்புக் கள் நிலஅளவைத்திணைக்களத்தில் பெற்ற அளிப்பு வரைபடத்தையும் பிரதேச செயலரால் வழங்கப்பட்ட அனுமதிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரத்தையும் அடிப்படையாகக் கொண்டு மூன்று பிரதிகள் தயாரிக்கப் பட்டு ஜனாதிபதியின் அங்கீகாரம் பெறப் படும். அதன்பின் இவ்வளிப்பிற்கு உரிய சேவைக்கட்டணமாக 100/- பெறப்பட்டு காணிக்குப் பின்னுரித்தாளராக எவரை யாவது நியமிக்கவிரும்பின் 3ஆம் அட்ட வணைக்கு உட்பட்ட ஒருவரை பின்னுரித் தாக மா.கா. 155ஆம் இலக்கப் படிவத்தில் பதிந்து காணிப்பதிவகத்திற்கு அனுப்பப் படும். காணிப்பதிவகத்தில் பதியப்பட்ட பின் அங்கு ஒரு பிரதி பத்திரப்படுத்தப் பட்டபின் மூலப்பிரதியும் இணைப்பிரதி யும் காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கப் படும். இம்மூலப்பிரதி உரியவருக்கு வழங்கப்படுவதுடன் இணைப்பிரதி செயலகத்தில் பாதுகாப்பாக பேணப் படும்.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் முக்கிய நோக்கம் காணி உரிமையாளர் அல்லது அவரது வாழ்க் கைத்துணை மற்றும் அவர்களது இரத்த உறவினர்கள் இக்காணியில் உரிமை இல்லாது நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப் படக்கூடாது என்பதாகும். இதன்படியே காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தில் 3ஆம் அட்டவணை அறிவிக்கப்பட்டுள் ளது. அது பின்வருவோரை உரிமைப் படுத்தும்.

1. மகன்
2. மகள்
3. பேரன்
4. பேர்த்தி
5. தந்தை
6. தாய்
7. சகோதரன்
8. சகோதரி
9. மாமன்
10. மாமி
11. மருமகன்
12. மருமகள்

இவ்வுறவுகளுள் மாமா, மாமி, மருமகன், மருமகள் ஆகியவை இரத்த உறவுகளையே குறிக்கும். அதாவது திருமணத்தின்மூலம் ஏற்படும் உறவைக் குறிக்காது. காணி உரிமையாளர் ஆணாக இருந்தால் அவரது வாழ்க்கைத் துணையின் (மனைவி) தாய், தகப்பன், சகோதர சகோதரிகளின் உறவுமுறைகள் அடங்க மாட்டாது.

இக்காணியில் வேறு ஒருவர் பின்னுரித்தாக நியமிக்கப்பட்டாலோ அல்லது நியமிக்கப்படாது இருந்தாலோ வாழ்க்கைத்துணை அக்காணியை ஆண்டு அனுபவிக்கும் உரிமை உள்ளவராவார். ஆனால், எச்சந்தர்ப்பத்திலும் இக் காணியை ஒருவருக்கு வழங்கவோ, பின் னுரிமையை நியமிக்கவோ உரித்துடைய வராக மாட்டார்.

காணி உரிமையாளர் இறக்கும் சந்தர்ப்பத்தில் பின்னுரித்தாளி இக் காணிக்கு உரிமையுடையவராக்கப் படுவார். அவ்வுரிமைக்கான தகைமை யைப் பெறுவதற்கு இவர் அசிரத்தை காட்டும் சந்தர்ப்பத்திலும், பின்னுரிமை நியமிக்கப்படாத சந்தர்ப்பத்திலும் 3ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டியலின் ஒழுங்கு முறைப்படி உரிமை வழங்கப்படும். ஆண்மகன் எனக்குறிப் பிடப்படுவது அக்குடும்பத்தில் 3 ஆண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் இருப்பின் மூப்பு அடிப்படையில் உரிமை வழங்கப்படும்.

அளிப்பு வழங்கப்பட்ட பின்பு அவ்வளிப்பின் 3ஆம் பக்கத்தில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகட்கு உரித்துடையவர் கட்டுப்படவேண்டும். அதன்படி இந்நிபந்தனைகளின் 7ஆம் நிபந்தனையில் சொல்லப்பட்டவாறு காணி முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ கையுதிர்க்கப்படும் சந்தர்ப்பத்தில் எழுத்துமூலம் பிரதேச செயலரின் முன்னனுமதி பெறப்பட்டிருத்தல் வேண்டும். முன் அனுமதி பெறப்படாத எவ்வித ஆவணங்களும் செல்லுபடி அற்றதாகும். அத்துடன் அவ்வளிப்பில் 1ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கமைய அளிப்பில் கூறப்பட்டுள்ள பரப்பிலும் பார்க்கக் குறைந்தளவிலான பகுதியை கையுதிர்ப்புச் செய்யமுடியாது. அவ்வாறு கையுதிர்ப்பு செய்வதற்கு உரிய அனுமதியை பிரதேச செயலரும் வழங்கமுடியாது.

பிரசித்த நொத்தாரிசு உரிமை மாற்றம் செய்யப்படும் அளிப்பினை எழுதும்போது அதன் இரண்டாம் பந்தியில் பிரதேச செயலரால் வழங்கப்பட்ட அனுமதிக்கடிதத்தின் இலக்கமும் திகதியும் இடப்படவேண்டும். இவ்வுரிமை மாற்றங்கள் தொடர்பாக தேசவழமைச்சட்டத்தின்கீழ் வழங்கப்படும் சீவிய உரித்து என்னும் பதம் காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தில் வழங்கப்படமாட்டாது. ஆனால், பின்னுரிமையாளரை நியமிக்கமுடியும். காணி உரிமையாளர் தான்விரும்பும் பட்சத்திலும் பின்னுரிமையாளரை நீக்கவோ அல்லது புதிய ஒருவரை நியமிக்கவோ முடியும். இதற்கு கா.ஆ.155ஆம் இலக்கப் படிவத்தை பயன்படுத்த வேண்டும். அப்படிவத்தில் குறிக்கப்படாத எந்தவிதப் பின்னுரித்தும் செல்லுபடியற்றதாகக் கணிக்கப்படும்.

ஆனால், தேசவழமைச் சட்டத்தின் கீழ் மேற்கூறப்பட்ட நிபந்தனைகள் யாவும் பொருத்தமற்றதாகும். எனவே, 98% தனியார் காணிகளுள்ள நல்லூர் பிரதேச செயலக பிரிவில் மேற்கூறப்பட்ட நிபந்தனைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் அரச காணிகளைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

**அரச காணிச்சட்டம்**

அரச காணிச்சட்டத்தின்கீழ் அரச காணிகளைப் பின்வரும் முறையில் கையுதிர்வு செய்யமுடியும்.

1. குறுகிய காலக் குத்தகை
2. நீண்டகாலக் குத்தகை
3. பாராதீனப்படுத்தல்
4. கையளித்தல்

**குறுகிய காலக் குத்தகை**

குறுகியகால குத்தகை என்பது 1-5 வருட காலத்திற்கு வழங்கப்படும். இது விளைச்சலைப் பெற்றுக்கொள்ள, கரைவலை மீன்பிடியை மேற்கொள்ளல் போன்ற தேவைகளுக்காகவே வழங்கப்படும். எமது பிரதேசத்தில் இக்குத்தகை வழங்கப்படவில்லை.

**நீண்டகாலக் குத்தகை**

நீண்டகாலக் குத்தகை 30 வருடங்கள் அல்லது 99 வருடங்களுக்கு வழங்கப்படும். நல்லூர் கந்தசுவாமி கோயிலின் ஒரு பகுதி, முத்திரைச் சந்திக்கருகேயுள்ள காணி, செங்குந்தா பாடசாலை, வண்ணை சிவன் ஆதீனத்தின் பொறுப்பிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணி, சைவபரிபாலன சபைக் கட்டிடம் அமைந்துள்ள காணி என்பன 30 வருட குத்தகையில் வழங்கப்பட்டுள்ள காணி களாகும்.

**பாராதீனப்படுத்தல்**

பாராதீனப்படுத்தல் என்பது அரச காணியை உள்ளூராட்சி மன்றங்கள், அதிகாரசபை, கூட்டுறவு ஸ்தாபனங்கள், சபைகள், முப்படைகள் ஆகியவற்றிற்குக் காணி வழங்கல்; பாராதீனப்படுத்தல் எனப்படும். பாராதீனப்படுத்தப்பட்ட காணிக்கு எக்காரணம் கொண்டும் அரச அனுமதிப்பத்திரங்களோ, அளிப்புப் பத்திரங்களோ வழங்கப்படமாட்டாது. அவர்களுக்குப் பாராதீனக்கட்டளை (Vesting order) மாத்திரம் வழங்கப்படும்.

எமது பிரதேச செயலகப்பிரிவிற் குட்பட்ட திருநெல்வேலி கிராம விஸ்தரிப் புத் திட்டத்தில் 50 காணித்துண்டங்கள் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குப் பாராதீனப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் தமது செலவில் பயனாளிகளுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுத்து, பகுதி பகுதியாகவோ; அல்லது முழுமையாகவோ அப்பணத்தை மீளளிப்புச் செய்தவர்களுக்கு உறுதிப்பத் திரங்களை வழங்கியுள்ளார்கள். அவர்களு க்கு முன்னர் அரச ஆவணங்கள் வழங்கப் பட்டிருப்பின் அவை செல்லுபடியற்றவை யாகும்.

**கையளித்தல்**

கையளித்தல் என்பது, அரச காணிகளைத் திணைக்களத் தேவைகளுக் காக பெற விரும்பின் அவர்களுக்குக் காணி ஆணையாளரது அனுமதியுடன் கையளிப்பு பத்திரங்கள் வழங்கப்படும். இதன் படி திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையம், வானிலை ஆராய்ச்சி நிலையம், வளிமண்டலத் திணைக்களம், பிரதி விவசாயப்பணிப்பாளர் அலுவலகம், பாட சாலைகள், பெருந்தெருக்கள் திணைக் களம் ஆகியவற்றிற்கு இதன்படி காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

இக்காணிகளுக்காக எவ்வித பெறு வனவுகளும் அறவிடப்பட மாட்டாது. ஆனால், வழங்கப்பட்ட குறித்த நோக்கத் திற்காக மட்டும் பயன்படுத்தமுடியும். இக்காணிகளைத் தாம் பயன்படுத்தாத சந்தர்ப்பத்தில் அரசிற்கு மீளக் கையளிக்க முடியுமே தவிர, வேறுதிணைக்களங் களிற்கோ, வேறு ஸ்தாபனத்திற்கோ வழங்கமுடியாது.

**காணி அளிப்பு விசேட ஏற்பாட்டுச்சட்டம்**

காணி அளிப்பு விசேட ஏற் பாட்டுச் சட்டமானது 1972ஆம் ஆண்டு காணி உச்சவரம்பு சட்டத்தின்கீழ் அரசால் சுவீகரிக்கப்பட்ட காணிகளை மக்களுக்கு பிரித்து வழங்குவதற்காக உருவாக்கப் பட்டதாகும். இதன்படி பூம்புகார், மணியந்தோட்டம் பகுதிகளிலுள்ள தென்னந்தோட்டங்கள் காணி உச்ச வரம்புச் சட்டத்தால் சுவீகரிக்கப்பட்டன. அவை பின்னர் காணியற்றோருக்கு பிரித்து வழங்கப்பட்டன. 1979ஆம் ஆண்டில் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமையவே காணி வழங்கப்பட்டது.

- காணியற்றோருக்கு மாத்திரம் காணி வழங்கப்படல்.
- குடியிருப்பு நோக்கத்திற்காக மாத் திரம் காணி வழங்கப்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காணிகளில் அம்மாவட்டத்தில் குடியிருக்கும் காணியற்றோரைத் தெரிந்து அவர்களுக்கு காணிக்கச்சேரி மூலம் காணி வழங்கப்படும். ஆனால், எச்சந்தர்ப்பத்திலும் அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் காணியை உறுதிப்படுத்தி ஒரு கடிதம் வழங்கப்படலாம். இக்கடிதம் அளிப்பு வழங்கப்படும்வரை செல்லுபடியானதாகும். காணி பகிர்ந்தளிக்கப்பட்ட பின்பு அளிப்பு வரைபடம் (Grant Diagram) பெறப்பட்டதும் அவர்களுக்குக் காணி அபிவிருத்தித் தன்மையைப் பொறுத்து அளிப்புக்கள் தயாரிக்கப்படும்.

இவ்வளிப்புக்கள் நான்கு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு ஜனாதிபதியின் கையொப்பத்திற்கு அனுப்பி வைக்கப்படும். சேவைக்கட்டணமாக 100/- பெறப்பட்டபின் நான்கு பிரதிகளும் காணிப் பதிவகத்திற்கு அனுப்பப்பட்டு மூன்று பிரதிகள் திரும்பப் பெறப்படும். இதில் மூலப்பிரதி காணி உரிமையாளருக்கும், இரண்டாம் பிரதி காரியாலயத்திலும், மூன்றாம் பிரதி காணி ஆணையாளர் அலுவலகத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுப் பேணப்படும்.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தில் கூறப்பட்டது போன்றே பிரதேச செயலரின் அனுமதிக்கடிதமின்றி எவ்விதக் கையுதிர்வு நடவடிக்கைகளையும் நொத்தாரிசுமூலம் செய்யமுடியாது. அளிப்புப் பிரதியின் நான்காம் பக்கத்தில் குறிப்பிடப்பட்ட இரண்டாம் அட்டவணையின் முதலாம் பந்தியின்படி, பிரதேச செயலரின் முன்அனுமதியின்றி எழுதப்படும் எவ்வித ஆவணமும் செல்லுபடியற்றதாகும். காணி உரிமையாளர் இறக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது உயிருடன் இருக்கும் காலத்திலேயே உறவினருக்குக் கையுதிர்வு செய்யப்படின் காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையில் குறித்தவாறு மரபு உரிமையாளருக்கு மாத்திரமே இக்காணியை வழங்கமுடியும். அத்துடன் அவர்களது வருமானத்தையும் காணி அற்றவர்கள் என்பதையும், முக்கியமாக ஆவணத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

J/89 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மணியந்தோட்ட பகுதியில் 343 காணித் துண்டுகளும், J/90 கிராம சேவகர் பகுதிக்குட்பட்ட பூம்புகார் பகுதியில் 158 காணிகளும் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.

**காணி சுவீகரிப்புச் சட்டம்**

அரச தேவைக்குக் காணிகள் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப்படாத தனியார் காணிகளையும், சில முக்கிய தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் காணிகளையும் இச்சட்டத்தின்கீழ் சுவீகரிக்கமுடியும். இதன்போது பின்வரும் விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

- காணி உரிமையாளர் அனாதரவான நிலைக்குத் தள்ளப்படக் கூடாது.
- குறிப்பிட்ட தேவைக்கு இது தவிர்ந்த வேறு காணி இல்லாது இருத்தல்.
- எந்நோக்கத்திற்காகக் காணி சுவீகரிக்கப்படுகின்றதோ, அத்திணைக்களம் அவர்களுக்கு நட்டஈடு வழங்கியதற்குரிய பணத்தைத் திறைசேரியிலிருந்து பெற்றிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ காணி எந்நோக்கத்திற்காக சுவீகரிக்கப் படுகின்றதோ அந்நோக்கம் நிறை வேற்றப்பட வேண்டும்.

இதன்படி எமது செயலக பிரிவில் பல்கலைக்கழக விரிவுபடுத்தலுக்காகவும், மருத்துவபீடவளாகத்தில் இருந்த பொது மக்களுக்கு மாற்றீடாக வழங்கவும் (கோணாவளைக் காணி), சிதம்பரக் கோயிற் காணி குடியிருப்பு நோக்கத்திற் காகவும், யா/இந்துக்கல்லூரி பாடசாலை விளையாட்டு மைதானத்தை விரிவுபடுத் தவும், திருநெல்வேலிச் சந்தை விஸ்தரிப் பிற்காகவும் காணிகள் சுவீகரிக்கப்பட்டு ள்ளன.

எனவே, மேற்படி அரச காணிகள் தொடர்பான சட்டதிட்டங்களை அனை வரும் அறிந்துகொள்வதன்மூலம், காணிப் பங்கீடுகளை இலகுபடுத்தவும், பங்கீடு செய்யப்பட்ட காணிகளில் மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைச் செவ்வனே நிவர்த்தி செய்யவும் முடியும் என்பதுடன் பிரதேச நிர்வாக அமைப்பையும் சிறப்பாக மேற்கொள்ள முடியும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள்



கலை இலக்கியப்பெருவிழா - 2008 இல் கலைஞானச்சுடர் விருதுபெற்ற கலைஞர்களுடன் கலாசாரப்பேரவை உறுப்பினர்கள்





உலக விஞ்ஞான தினம் - 2008 போட்டிகளிற் சான்றிதழ் பெற்றவர்களும், விருந்தினர்களும்



கலை இலக்கியப் பெருவிழா - 2008



சர்வதேச சிறுவர் தினம் - 2008



சர்வதேச சிறுவர், முதியோர் தினம் - 2009



நிலைபேண்தகு வலு அதிகாரசபையின் சக்தி சேமிப்பு அடுப்பு வழங்கும் வைபவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விளையாட்டு விழா - 2010


சமுர்த்தி 'சிப்தொற' புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் - 2010


உளவளத்துணைக் கருத்தரங்கு - 2010


டெங்கு விழிப்புணர்வுச் செயற்பாடு - 2010


உலக புவிதினம் - 2010 விழிப்புணர்வுக் கண்காட்சி


கல்வியங்காடு சமுர்த்தி வங்கிச் சங்கம் பொங்கல் விழா - 2010


மகளிர்தின விழா - 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச அபிவிருத்தியில் கைத்தொழில் துறையின் முக்கியத்துவம்.

செல்வி த. கௌரி,
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (தொழிற்துறை),
பிரதேச செயலகம், நல்லூர்.

**அறிமுகம்**

ஒரு நாட்டினது பொருளாதாரத்தை நிர்ணயிப்பதில் கைத்தொழில் முக்கியத்துவம் வாய்ந்த துறையாக கருதப்படுகின்றது. ஒரு துறைசார்ந்த கைத்தொழிலின் வளர்ச்சிக்கு அப்பிரதேசத்தின் இடஅமைவு என்பது முக்கியம் வாய்ந்ததாகும். அந்தவகையில் நல்லூர் பிரதேசத்தில் மணல் மண், செம்மண், நரை மண் முதலான மண்வகைகள் காணப்படுகின்றன. இவற்றை குடியிருப்பு நிலங்கள், மேட்டு நிலங்கள், தரிசு நிலயங்கள் எனவகைப்படுத்தி நோக்கலாம். இப்பிரதேசத்தின் பெரும் பகுதி செறிவான குடியிருப்புக்களையும் உயர் கல்வி நிறுவனங்களையும் கொண்டமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.


அபிவிருத்தி என்று குறிப்பிடும் போது ஒரு நாடு சமூக, பொருளாதார, அரசியல், கலாசாரம் ஆகிய சகல துறைகளிலும் விருத்திநிலையை அடைதலைக் குறிக்கும். பிரதேச அபிவிருத்தி என்பது ஒரு நாடோ அல்லது நாட்டின் குறிப்பிட்ட சில பகுதிகளோ மேற்குறிப்பிடப்பட்ட துறைகளில் ஒன்றிலோ பலவற்றிலோ விருத்தியடைவதைக் குறிக்கும். ஒரு பிரதேசத்தின் அபிவிருத்திக்கு நிர்வாகக் கட்டமைப்பு என்பதும் இன்றியமையாததொன்றாகக் கருதப்படுகிறது.

பொருளாதார அபிவிருத்தி என்பது ஒரு நாட்டின் பொருளாதாரம் சார்ந்த மொத்தத்தேசிய உற்பத்தி, மொத்தத் தேசிய வருமானம் என்பவற்றில் ஏற்பட்ட வளர்ச்சியேயாகும். பொருளாதார அபிவிருத்தியை நிர்ணயிப்பதில் கைத்தொழில் துறையின் பங்களிப்பு மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. கைத்தொழில் என்பது ஒரு பிரதேசத்தில் காணப்படுகின்ற வளங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற ஒரு தொழில் முயற்சியாகும். கைத்தொழில்களை உற்பத்திக்கைத்தொழில்கள், சேவைக்கைத்தொழில்கள், உற்பத்தி - சேவைகள் இணைந்த கைத்தொழில்கள் என வகைப்படுத்தி, அதன் தொழிற்படு தன்மைகளை மையமாகக்கொண்டு பாரிய, நடுத்தர, சிறிய கைத்தொழில்கள் என பாகுபடுத்தப்படுகின்றன. நல்லூர் பிரதேச பிரிவில் நடுத்தர, கிராமிய, அல்லது சிறுகைத்தொழில் பிரிவுகளே காணப்படுகின்றன. பிரதேச கைத்தொழில்களை நிர்ணயிக்கின்ற காரணிகளில் மூலதனம், மூலப்பொருள் கிடைப்பனவு, சந்தை வாய்ப்பு, போக்குவரத்து, மனிதவலு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலநிலை, நன்னீர், மின்சாரம் என்பன முக்கியம் பெறுகின்றன. நல்லூர் பிரதேசத்தில் காணப்படுகின்ற கைத் தொழில்களையும், அதில் ஈடுபடுகின்ற தொழிலாளர்களின் பரம்பலையும், பின்வரும் வரைபடத்தில் காணலாம்.




இவ்வாறாக பல்வகைக் கைத் தொழில்கள் காணப்படுகின்றபோதும் எமது பிரதேசத்தில் வசிப்பவர்கள் கூடுதலாகத் தொழில்நுட்பம் சார்ந்த கைத் தொழில்களில் அதிக அக்கறை காட்டி வருவதை அவதானிக்கமுடிகிறது. எமது பிரதேசத்தில் வசிப்பவர்களின் வாழ்க்கைச் செலவு ஏனைய பகுதிகளில் வசிப்பவர்களைவிட அதிகமாக உள்ளது. இன்று, யாழ். மாவட்டத்தின் தலா வருமானம் 1400அமெரிக்க டொலர் என கணிப்பிடப்பட்டுள்ளது. இது தற்கால வாழ்க்கைச் செலவை ஈடுசெய்வதற்கு போதுமானதல்ல. இதனால் அரசாங்கத்தொழிலில் ஈடுபடுபவர்களில் பெரும்பாலானோர் தமது ஒய்வு நேரங்களைப் பயனுள்ள தாக்கிக்கொள்ள தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களை தேர்ந்தெடுப்பதைக் காண்கின்றோம்.


**பாற்பண்ணைக் கைத்தொழில்**

நல்லூர் பிரதேச கைத்தொழில்களில் முதன்மையானதும் நடுத்தர கைத்தொழிலாகவும் விளங்குவது திருநெல்வேலி பாற்பண்ணைக்கைத் தொழிலாகும். இக் கைத்தொழிலானது இப்பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி நேரடியாகவும் மறைமுகமாகவும் முயற்சியாளர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கி வருகின்றது. 1981ற்கு முற்பட்ட காலப் பகுதியில் இருந்து கூட்டுறவு அமைப்பாக தொழிற்பட்டு வந்தாலும், 1981ல் இதற்காக தனியான ஒரு கட்டடத்தொகுதி அமைக்கப்பட்டு பால் விநியோகம் நேரடியாக இடம்பெற்றதுடன் பாலிலிருந்து பெறப்படுகின்ற நெய், தயிர் முதலான பொருட்களையும் உற்பத்தி செய்து விநியோகித்து வருகின்றது. இன்று இந் நிறுவனமானது மேலும் விஸ்தரிக்கப்பட்டு பால், பால் சார்ந்த இதர உற்பத்திப் பொருட்களையும் உற்பத்தி செய்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. இந் நிறுவனமானது இன்று தனது முகவர் நிலையங்களை நல்லூர் பிரதேசத்தில் மட்டுமல்லாது, நல்லூருக்கு வெளியேயும் அமைத்து பால் கொள்வனவு, மற்றும் விற்பனைகளில் ஈடுபட்டு வருவதைக் காணலாம். நல்லூர் பிரதேசமானது சனத்தொகைச்செறிவு மிகுந்த பகுதியாக அமைந்திருக்கின்றமை இந் நிறுவனத்தின் சந்தைப்படுத்தலுக்கு கிடைத்த வரப்பிரசாதம் என்றே சொல்லவேண்டும். நல்லூர் பிரதேசத்தில் திருநெல்வேலி, அரியாலை, கொக்குவில், கைலாசப் பிள்ளையார் கோவிலடி, கல்வியங்காடு ஆகிய இடங்களில் முகவர் நிலையங்களை அமைத்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையங்களில் எஞ்சுகின்ற பாலைப் பயன்படுத்தி, பால்சார் உற்பத்திப் பொருட்கள் தயாரிக்கப்பட்டுவருகின்றன. கடந்த ஐந்து வருடகாலப் பகுதியில் பாற்பண்ணையால் கொள்வனவு, விற்பனை செய்யப்பட்ட பாலின் அளவினையும் பாலிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களையும் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.




மூலம்: பாற்பண்ணை நிலைய வருடாந்த அறிக்கைகள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நொதேண் இன்டஸ்ரீஸ்**

கொக்குவிலில் அமைந்துள்ள நொதேண் இன்டஸ்ரீஸ் எனப்படும் ரயர்மீள உற்பத்தி செய்தல் நிறுவனமானது 1963ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு ரயர் மீள் புதுப்பித்தல் உற்பத்தி, வாகன மின் குமிழ் உற்பத்தி ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு 60 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கிவந்தது. இங்கு சைக்கிள் ரயர், மற்றும் சிறிய பெரிய வாகனங் களுக்கான ரயர்களை மீள் புதுப்பித்தல் உற்பத்திகள் மேற்கொள்ளப் பட்டன. மீள் நிரப்புதல் (REFill) வேலைகளுக்கான ரயர்களும் இரசாயனப் பொருட்களும் கொழும்பில் இருந்தும் மெருகேற்றுதல் (Re Cub) வேலைகளுக் கான மூலப் பொருட்கள் இந்தியாவில் இருந்தும் இறக்குமதி செய்யப்பட்டு வந்தன. இங்கு உற்பத்திசெய்யப்பட்டு வந்த ரயர்கள் வவுனியா, மட்டக்களப்பு, திருகோண மலை, கிளிநொச்சி, குருநாகல், அனுராதபுரம் ஆகிய இடங்களில் சந்தை வாய்ப்பை பெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும். 1983ஆம் ஆண்டளவில் ஏற்பட்ட யுத்த நிலைமை காரணமாக இத்தொழிற் சாலைக்கான இறக்குமதிகள் குறைவடைய உற்பத்திகள் பாதிக்கப் பட்டன. 1983இலிருந்து 1995வரையான காலப் பகுதியில் 37தொழிலாளர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றிருந்தார்கள். 1995ற்குப் பின்னர் இறக்குமதிகள் முற்றாக தடைப் பட்ட நிலையில் உற்பத்திகள் படிப் படியாகக் குறைவடைந்து நிறுவனத்தை மூடவேண்டிய நிலைக்குத் தள்ளப்படவே அதில் தொழில் வாய்ப்பைப் பெற்றவர்கள் தமது தொழிலை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. 2009இல் இத்தொழிற்சாலை மீளவும் ஆரம்பிக்கப்பட்டு 12 தொழி லாளர்களுடன் இயங்கிவருவது குறிப் பிடத்தக்கதாகும். தற்பொழுது மீள் நிரப்பு தல் (Re-Fill), மெருகேற்றுதல் (Re cub) வேலைகள் மட்டுமே நடைபெற்று வரு கின்றன.

**மில்க்வைற்**

வண்ணார்பண்ணையில் அமைந் துள்ள மில்க்வைற் சோப் உற்பத்தி நிறுவன மானது 1952ல் ஆரம்பிக்கப்பட்டு 143 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கியதுடன், இவர்களுக்கான ஊழியர் சேமலாப நிதியம், (EPF), ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) முதலான திட்டங் கள் உருவாக்கப்பட்டன. நிறுவனத்தின் வருவாயில் ஒருபகுதியினை மரம் நடுகைத் திட்டம், சிறுவர்களுக்கான கையேடுகள் அச்சிடல் முதலான சமூகப்பணிக்காகவும் செலவு செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது. 1983இல் இனப்பிரச்சனை காரணமாகத் தென்பகுதியில் இருந்து கொண்டு வரப் பட்ட கோஸ்டிக் சோடாவிற்கான தட்டுப் பாடு ஏற்பட; இறக்குமதி மற்றும் உற்பத்திச் செலவினங்கள் அதிகரிக்கவே சந்தைப் படுத்துவதிலும் சிரமங்கள் எதிர் நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டதும் அந்நிறு வனத்தினர் தொழிலை இடை நிறுத்தி விட்டார்கள். தற்போது அத்தொழிற்சாலை மீள ஆரம்பிக்கப்பட்ட போதும் புழக்கத்தில் உள்ள ஏனைய சவர்க்கார உற்பத்திகளுடன் போட்டி போட வேண்டியுள்ளமையால் சந்தைப் படுத்தல் பிரச்சனைகள் எதிர்நோக்கி யுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இருந்த போதிலும் தற்போது 'அமிர்தம்' என்னும் பெயருடன் 'நெல்லிக்கிறஷ்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நெல்லிகோடியல்' போன்ற உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி வருகின்றனர்.

**தச்சுத்தொழில்**

திருநெல்வேலிப் பகுதியில் பரம்பரை பரம்பரையாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. இங்கு தளபாட உற்பத்திகளுடன் மரச்சிற்பங்களும் கூடுத லாக வடிவமைக்கப்பட்டு வருவதைக் காணலாம். இங்கு கலைத்திறனும், கலை நுட்பமும் வாய்ந்த சிற்பாச்சாரியர்கள் இத்தொழிலில் பிரசித்திபெற்றுள்ளனர். இவர்களால் செய்யப்படுகின்ற சிற்பங்க ளுக்கு யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி தென்னிலங்கையிலும் நிறைந்த கேள்வி உள்ளதை அவதானிக்கமுடிகிறது. இவர் களால் வடிவமைக்கப்படும் சிற்பங்கள் தேசிய ரீதியில் போட்டியிடக்கூடிய தரம் வாய்ந்த உற்பத்திகளாகவும் காணப்படு கின்றன.

**ஏனைய கைத்தொழில்கள்**

வண்ணார்பண்ணைப் பிரதேசத் தில் பாக்கு சீவுதல் தொழிலும், ஆபரணக் கைத்தொழிலும் மேம்பட்டுக் காணப்படு கின்றமையும், கல்வியங்காட்டு பகுதியில் பரம்பரை பரம்பரையாக மட்பாண்டத் தொழிலும் செய்யப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். இத்தொழில்கள் யாவும் வீடுகளில் வைத்துக் குடிசைக் கைத்தொழிலாகச் செய்து வருவதை அவ தானிக்கமுடிகிறது.

**தொழிற்பயிற்சி நிலையங்கள்**

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் கைத்தொழில் துறையை ஊக்கு விப்பதற்காகத் தொழில்நுட்பக் கல்லூரி, தொழிற்பயிற்சி அதிகாரசபை, விதாதா வள நிலையம், தொழிற்பயிற்சி நிலையம், கிராம அபிவிருத்தி நிலையம் என்பன அமைக்கப்பட்டுத் தொழிற்பயிற்சிகளை வழங்கிவருகின்றன. அந்தவகையில் தொழில்நுட்பக்கல்லூரி, தொழிற்பயிற்சி அதிகார சபையில் பயிற்சியை முடித்து வெளியேறியவர்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உயரிய வேலை வாய்ப்பைப் பெற்றுவருவதும் குறிப்பிடத் தக்கதாகும். இந்நிலையங்களில் வழங்கப் படுகின்ற பயிற்சி நெறிகளில் பயிற்சி பெற்று வெளியேறியவர்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.


**மூலம் : விதாதா வள நிலைய அறிக்கைகள்**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்பயிற்சி அதிகார சபையாற் கடந்த 4 வருடகாலத்தில் வழங்கப்பட்ட பயிற்சி நெறிகளும், பயிற்சிபெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையும்.




மூலம் : தொழிற்பயிற்சி அதிகாரசபை அறிக்கைகள்.

தொழில்நுட்பக் கல்லூரியில் வழங்கப்படுகின்ற பயிற்சிகளை மூன்று பெரும் பிரிவினுள்வைத்து நோக்கமுடியும். அவையாவன: பொறியியல் சார்ந்த பயிற்சிகள், (Engineering) வர்த்தகம் சார்ந்த பயிற்சிகள்,(Commerce) வியாபாரத்துடன் (Trade) தொடர் பான பயிற்சி நெறிகள் என்பனவாகும். அப்பிரிவுகளையும் அதில் பயிற்சிபெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையையும் பின்வரும் வரைபடம் காட்டுகிறது.




மூலம் : தொழில்நுட்பக் கல்லூரி அறிக்கைகள்.

மூன்று, ஆறுமாத காலப் பயிற்சிகளை வழங்குகின்ற நிறுவனங்கள் பயிற்சிபெறுகின்றவர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் ஊக்குவிப்புத் தொகைகளையும் வழங்கி வருகின்றன. இவ்வாறாகப் பல கைத்தொழில்கள் நல்லூர் பிரதேசப் பகுதியில் காணப்படுகின்றபோதும் அவற்றை முன்னேற்றம் அடையச் செய்வதில் தொழில் நிலையங்களும், கைத்தொழி லாளர்களும் பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவால்களை எதிர் நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்க தாகும்.

**பிரதேச கைத்தொழில் அபிவிருத்தியில் எதிர்கொள்ளும் சவால்கள்**

**1. மூலப்பொருள்களைப் பெறுவதிலுள்ள சிக்கல்கள்**

நல்லூர் பகுதியில் காணப்படுகின்ற உற்பத்திக்கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்ற கைத்தொழில் நிலையங்களில் பெரும்பாலானவை உள்ளூரில் கிடைக்கின்ற மூலவளத்துடன் இறக்குமதிசெய்யப்பட்ட மூலப்பொருட்களையும் எதிர்பார்த்தே தமது தொழிலை செய்துவருகின்றன. பெரும்பாலான மூலப்பொருட்கள் யாழ். மாவட்டத்திற்கு வெளியில் இருந்தே பெறப்படுகின்றன. உதாரணமாக: தச்சுத் தொழில், பீடி, சுருட்டு, மட்பாண்டம், அப்பளம் முதலான கைத்தொழில்களைக் குறிப்பிடலாம். இவற்றுக்கான மூலப்பொருள் நியாயமான முறையில் கிடைப்பதில்லை. இங்கு தச்சுத்தொழிலை நோக்கின் தொழிலுக்கான மரத்தினை வாங்கும் பொழுது அங்கே இடைத்தரகர்கள் காணப்படுவது மற்றும் வெளி இடங்களில் இருந்து இறக்குமதிசெய்யும்போது செலவு அதிகரிக்கின்றமை முதலான காரணங்களால் கூடுதலான செலவினை எதிர் கொள்ளவேண்டி உள்ளது. அதுமட்டுமல்லாமல் மூலப்பொருள்களை தொடர்ச்சியான முறையில் பெறமுடியாத தன்மையும் காணப்படுகின்றது. எனவே, இங்கு மூலப்பொருள் கிடைப்பனவுடன் முதலீடு அதிகரிப்பும் பிரச்சனையாகவே உள்ளன.

**2. தென்னிலங்கைக் கைப்பொருட்களால் சந்தை வாய்ப்பிழத்தல்.**

மூலப்பொருட்களை இறக்குமதி செய்து முடிவுப்பொருளாக மாற்றும் போது ஏற்படும் உற்பத்திச்செலவு அதிகரிப்பதோடு முடிவுப்பொருட்களைச் சந்தைப்படுத்துவதிலும் பிரச்சனைகள் உள்ளன. அதாவது தென்னிலங்கையில் இருந்து கொண்டுவரப்படும் முடிவுப் பொருட்களை, இங்குள்ள மக்கள் பொருளின் தரத்தினைக் கருத்திற்கொள்ளாது கொள்வனவு செய்வதன்மூலம் தென்னிலங்கைப் பொருட்களுக்கான கேள்வியினை அதிகரித்துச் செல்கின்றனர். அதனால் உள்ளூர் உற்பத்தியின் அளவும் கொள்வனவுச் சக்தியும் குறைவடைந்து போகின்ற தன்மையினை காணலாம். இதற்கான காரணம் மக்களுக்குப் பொருளின் தரம் பற்றிய சரியான விழிப்புணர்வின்மையாகும்.

**3. துறைசார் வல்லுனர்கள் பிரதேசத்தை விட்டு வெளியேறுதல்.**

ஒரு கைத்தொழிற்றுறையை உருவாக்குவதற்கோ அல்லது நிலை நிறுத்திக் கொள்வதற்கோ உழைக்கும் வர்க்கத்தின் மனிதவலு என்பது இன்றியமையாததொன்று எனலாம். இன்றைய காலகட்டத்தில் நாட்டுச் சூழ்நிலையையும், தலா வருமானப் பற்றாக்குறையையும் காரணம்காட்டி எமது பிரதேசத்தில் பயிற்சியை முடித்துக்கொண்ட பயிற்சியாளர்கள், மூளைசாலிகள் மற்றும் அனுபவமும், சிறப்புத்தேர்ச்சியும் கொண்ட தொழிலாளர்கள் போன்றோர் தமது வருமானத்தை அதிகரித்து வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக வெளிநாடு செல்கின்றனர். இதனால் தரமான பொருட்களை உற்பத்தி செய்வதில் தாமதங்களும், சிரமங்களும் காணப்படுகின்றன. இதனால் இப்பிரதேசத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் ரீதியிலும், வருமான ரீதியிலும் தாழ்வுநிலை இருப்பதை அவதானிக்கலாம். நல்லூர் பிரதேசத்தில் வறுமைநிலை, வேலையின்மை, எதிர்பார்க்கின்ற வேலை கிடைக்காமை, கிராமிய வேதனங்களின் மெதுவான வளர்ச்சி, வளமுள்ள பல நிலங்கள் பாதுகாப்பு பிரதேசமாக ஒதுக்கப் பட்டமை, வளமான நிலத்திற்கான தட்டுப் பாடு, சமூக ஒழுங்கமைப்பில் ஏற்பட்டிருக் கும் சீர்குலைவு போன்ற காரணங் களாலும் உழைக்கும் வர்க்கம் என்று சொல்லப்படு கின்ற 18-59வயதிற்கிடைப் பட்டவர்கள் தொழில்தேடி வெளியூர் செல்கின்றனர்.

**4. தொழில் நுட்பம் வளர்ச்சியடையாமை**

தென்பகுதியுடன் ஒப்பிடும் போது தொழில்நுட்பக் கல்வி விருத்திய டையாமை, தொழில்நுட்ப சாதனங் களைப் பெற்றுக்கொள்ளமுடியாமை, கிடைக்கப்பெற்ற தொழில்நுட்ப சாதனங் களை கையாள்வது பற்றிய நுட்பமான அறிவின்மை என்பவற்றோடு உட்கட்ட மைப்பு பற்றிய வசதிகளின்மை, தொழிலா ளர்களுக்கு தொழில்ரீதியாக லாப நட்டங்களைக் கணிப்பது தொடர்பான தெளிவின்மை என்பனவும் கைத்தொழில் ரீதியில் எதிர்நோக்கிய பிரச்சனைகளாகும்.

**5. அரசியல் செல்வாக்கு**

யாழ்ப்பாணத்தில் சுமூக நிலை ஏற்பட்டதன் பின்னர் சீன, இந்திய நிறுவனங்களினதும், ஏனைய அபிவிருத் திப் பணிகளை முன்னெடுத்துச் செல்லு கின்ற நிறுவனங்களினதும் செயற்பாடுகள் அரசியல் நோக்கம் கருதித் தென்னிலங்கை நோக்கி நகர்த்தப்படுகின்றன. இவை யனைத்தும் எமது பிரதேசத்தின் தொழில் முயற்சிக்கு ஏற்பட்டுள்ள பிரச்சனை களாகவே உள்ளன.

இவ்வாறாக, பிரதேச கைத் தொழில் துறையை முன்னேற்றுவதில் பல சவால்களையும் பிரச்சனைகளையும் எதிர் நோக்குகின்றபோதிலும் அதனைத் தீர்த் துக் கொள்வதற்கு அல்லது குறைத்துக் கொள்வதற்குப் பின்வரும் வழிவகை களைக் கையாளலாம்.

முதலிடம் அளிக்கப்பட வேண்டிய கைத்தொழில்களை இனம் கண்டு அவற்றினை முன்னேற்றுவதற்கு வழிவகைகளைச் செய்துகொடுப்பதோடு ஏற்றுமதிக்கான பொருட்களை உற்பத்தி செய்யும் கைத்தொழில்களுக்கு வெளி நாட்டு உதவிகளைப் பெற்றுக்கொடுத்து ஊக்குவிப்பதன்மூலம் பல இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்க முடியும்.

தொழில்சார் பயிற்சித்திட்டங் களையும், ஊக்குவிப்பு தொகைகளையும் அதிகரித்தல், தொழிற் பயிற்சிகளை வழங்குவதற்கு முன்னர் பொருத்தமான பயனாளிகள் தெரிவுசெய்யப்படுவதுடன் பால்நிலை வேறுபாடின்றி ஆண், பெண் இருபாலருக்கும் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். உதாரணமாக: தென்னிலங் கையில் பயிற்சிபெற்ற பெண்கள், தாம் சுயமாகத் தொழிற்செயற்பாடுகளில் ஈடு பட்டிருப்பதைக் காணலாம். இந்த வகையில் நோக்கின் நல்லூர் பிரதேசச் செயலகப் பிரிவிலும் ஆண்களைவிடப் பெண்களே கூடுதலாக இருப்பதால் இவர்களும் ஓய்வு நேரங்களைப் பயனுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் மாற்றுவதற்கு ஏற்றவகையில் பொருத்தமான தொழிற்பயிற்சிகளை இனங்கண்டு பயிற்சிபெற்றுச் சுயதொழிலாளராகமாற முன்வரவேண்டும்.

வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளாதாரமானது கைத்தொழிற்றுறையை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளாதார விருத்திக்கு உந்துசக்தியாக அமைகிறது. கைத்தொழில் துறையின் வளர்ச்சி வேளாண்மைத் துறையின் அதிகரித்த கேள்விக்குக் காரணமாக அமைகிறது. எடுத்துக்காட்டாக கோண்டாவில் பிரதே சத்தில் சுருட்டு, பீடி கைத்தொழில்கள் பிரசித்திபெற்றனவாக காணப்படுகின்றன. இப்பிரதேசவாசிகள் தம் உற் பத்திக் கைத்தொழிலுக்கு தேவையான மூலப்பொருளான புகையிலையை தமது பிரதேசத்திலேயே உற்பத்திசெய்து வருகின்றனர். இன்றைய நிலையில் இக் கைத்தொழில் முன்னர் சிறப்புற்றிருந்தது போன்று வளர்ச்சியடையவில்லை. ஏனெனில், தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவந்த உற்பத்திப் பொருட்கள் கடந்தகால யுத்த நிலைமை காரணமாக பின்னடைவை எதிர்நோக்கியிருந்தன. அவற்றை நாம் மீளவும் வளம் பெறச் செய்வதன்மூலம், அப்பிரதேச விவசாயக் கைத்தொழிலுடன் உற்பத்திக் கைத்தொழிலையும் ஊக்குவிக்கமுடியும். இதனால் அக்கிராம மக்களின் உற்பத்தித் திறன் உயர்மட்டத்திற்குச் செல்வதுடன் அதிகளவு வருமானம், அதிகளவு நுகர்வு, அதிகளவு சேமிப்பு, அதிகளவு முதலீடு என்பன இடம்பெற்று வேலைவாய்ப்பும் அதிகரித்துத் தங்கிவாழ்வோர் எண்ணிக்கையும் குறைவடைந்து, மக்களின் வாழ்க்கைத்தரத்திலும் உயர்வினை எட்ட முடியும்.

கைத்தொழில் துறையை ஊக்குவித்துப் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்த, முதலீடுகள் அதிகரிக்க, அரசியலில் ஸ்திரத்தன்மையும், பாதுகாப்பான முதலீட்டுச் சூழலும் காணப்படுவது அவசியமாகும். எமது பிரதேசத்தில் கைத்தொழிலின் உட்கட்டுமான வசதிகளது நிலைமைகள் மிகவும் பின்னடைந்த நிலைமையிலேயே காணப்படுவதை அவதானிக்கலாம். உதாரணமாக: கொக்குவில் பகுதியில் அமைவுபெற்றுள்ள நொதேண் இன்டஸ்ரீஸ் (Nothern Indutries) ரயர் மீள் புதுப்பித்தல் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இனப்பிரச்சனை உச்சக்கட்டத்தை அடைவதற்கு முன்னர் கணிசமான அளவு ஆண் தொழிலாளர்கள் தொழில் வாய்ப்பைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இக் கைத்தொழிலினது உட்கட்டுமான வசதிகள் தற்பொழுது நலிவடைந்த நிலையில் உள்ளன. தொழிற்சாலையை மீள இயக்குவதன் மூலம் பல நூற்றுக்கணக்கானவர்கள் தொழில்பெற வாய்ப்பாக இருக்கும். இன்று உழைக்கும் வர்க்கத்தினர் பலர் வேலைவாய்ப்பின்றி தங்கி வாழும் நிலைமை காணப்படுகின்றது. இந்த தொழிற்சாலையை நவீன முறையில் புனரமைப்பதன்மூலம் பலர் வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளமுடியும். அதுமட்டுமல்லாது எமது பிரதேச கைத்தொழில்களை ஊக்குவிக்க நவீன தொழில் நுட்ப பயிற்சி, முகாமைத்துவ பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றை வழங்கி அவர்களிடம் மனித மூலவள விருத்தியை மேம் படுத்தவேண்டும்.

**திறன் அபிவிருத்திக் கைத்தொழில் சீராக்கல் நிகழ்ச்சித் திட்டங்களைப் பிரதேச அரச, தனியார் கைத்தொழில்களில் ஏற்படுத்துதல்.**

தொழில் திறன் தேர்ச்சி என்பது ஒரு உடனடித்தேவையாக இருந்து வருகின்றது. போட்டிச் சூழலின் சவால் களை எதிர்கொள்ளும் பொருட்டு கைத் தொழில் துறைகளை சீராக்கம்செய்து கொள்ளும் நிலையில் ஊழியர்களுக்கு வேலையிலேயே பயிற்சியளிப்பதும், மூன்றாம் நிலைக்கல்வியமைப்புக்களில் இருந்து வெளியேறும் இளைஞர்களைத் தொழிலில் அமர்த்தப்படக்கூடிய தன்மைகளை மேம்படுத்துவதும் எமது பிரதேசத்திற்கு அவசியமான தொன்றாக காணப்படு கின்றது. உதாரணமாக மத்திய கைத்தொழில் அமைச்சானது நெசவுக் கைத்தொழிலை ஊக்குவிப்பதற்காக எமது பகுதியின் நல்லூர் வடக்கு நெசவு நிலையத்தை தேர்ந்தெடுத்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அது மட்டு மல்லாது அரசானது தொழிற்றுறைத் திணைக்களம்மூலம் இரண்டு கைத் தொழில் கிராமங்களை அமைப்பதற்கு முன்வந்துள்ளது.

**கைத்தொழிலாளர்களுக்கு நவீன தொழில் நுட்ப சாதனங்களைக் குறைந்தவிலையில் பெற்றுக்கொடுத்தல்.**

இன்று எமது பிரதேசத்தில் விதாதா சங்கம், கைத்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கம், கிராமிய அபிவிருத்திச் சங்கம், விவசாய சம்மேளனம் போன்றன அமைவு பெற்றிருந்தபோதும், மக்களது தொழில் விருத்திக்குத் தேவையான வசதிகள் இன்றும் போதுமான அளவில் செய்து கொடுக்கப்படவில்லை என்றே சொல்ல வேண்டும். அவற்றைச் செய்து கொடுக்கும் பட்சத்தில் தொழில் மேலும் முன்னேற்ற மடையும் வாய்ப்புள்ளது.

**சுய தொழில் ஓய்வூதியத்திட்டம்**

அரச காப்புறுதிச்சபையின்கீழ் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. சிறு கைத்தொழிலாளரை மையமாகக் கொண்ட ஓய்வூதிய சமூக பாதுகாப்பு நலன்புரித்திட்டச் சட்டத்தின்மூலம் வழங்கப்படுகின்றது. இத்திட்டமானது 18-59 வயதிற்குட்பட்ட சுயதொழில்களை மேற்கொண்டு பதிவில் இருப்பவர் களுக்கும் ரூபா 2000.00 ற்கும் குறையாத வருமானம் கொண்டவர்களுக்கும், வாழ்வாதாரத் தொழிலைப் பிரதானமாக கொண்டவர்களுக்கும், தனியார் தொழில் முயற்சிக்கும் ஊக்கமளித்து ஏனைய கைத்தொழில் அபிவிருத்திக்கும் இவ் ஓய்வூ தியத்திட்டம் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

**ஊக்குவிப்பு நடவடிக்கைகள்**

உள்ளூர் மூலவளங்களை சரியான முறையில் பயன்படுத்த கற்றுக்கொடுத்தல். பருவகால வேலையல்லாது தொடர்ச் சியான வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க உதவுதல், மூலப்பொருட்களை நியாயமான முறையில் பெற்றுக் கொடுப்பதுடன் முடிவுப் பொருட்களுக் கான சந்தைவாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தல், இதற்கான கூட்டுறவு மையங்களை உருவாக்குதல், தென்னில ங்கை உற்பத்தியாளர்களுடன் போட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிடும் பொருட்களை வெளிப்பிரதேசங்களில் சந்தைவாய்ப்புக்களை இனங்கண்டு அது தொடர்பான கைத்தொழில்களை ஊக்குவிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

இவை தவிர, கைத்தொழிலை ஊக்குவிப்பதற்காக நல்லூர் பிரதேச செயலர் பிரிவின் அரியாலைப் பகுதியில் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் உதவியுடன் உள்ளூர் உற்பத்திகளைப் பயன்படுத்துதல், கிராம மக்களின் தொழில் வாய்ப்பினை மேம்படுத்துதல் என்பவற்றை நோக்கமாகக்கொண்டு அரிசி ஆலை ஒன்று அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ளது. இந்த நிலையத்தின் இடவமைவானது உற்பத்திக்கைத் தொழிலுடன் சேவைக்கைத்தொழிலையும் ஊக்குவிப்பதாக உள்ளது.

சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சிகளின் துறையை மேம்படுத்தும் விதத்தில் நிதியியல் உதவிகளை வழங்குவதற்காக நிறுவப்பட்ட அரசிற்குச் சொந்தமான "லங்கா புத்திர அபிவிருத்தி வங்கி" வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் " லக்கம் கடன் திட்டம்" என்ற குறைந்த வட்டியிலான கடனை ஏற்கனவே சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு வழங்குவதற்காகக் கைத்தொழில் அபிவிருத்தி சபையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை செய்துள்ளது. இது எமது பிரதேச மக்களுக்கும் வரப்பிரசாதமாக அமையும் எனக்கருதலாம்.

அத்துடன் அரசாங்கம் வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் புதிதாக விடுவிக்கப்பட்ட பகுதிகளில் பொருளாதாரம் மற்றும் கைத்தொழில்கள் ஊக்குவிக்க காத்திரமான சந்தைப்படுத்தல் பொறிமுறைகளையும் வதிப்படுத்தும் விதத்தில் "சுழற்சி பெறுகின்ற வடக்கு" என்ற தலைப்பில் சிறப்பு அபிவிருத்தித் திட்டம், கடன் திட்டம் என்பவற்றை வழங்குவதும் கைத்தொழில் நடவடிக்கையில் கணிசமான மாற்றத்தை உண்டு பண்ணுவதாக அமையும்.

**முடிவுரை**

நல்லூர் பிரதேச கைத்தொழில் போக்கினை பார்க்கும்போது இங்கு முன்னேறுவதற்கு கைத்தொழில் செயற்பாடுகளை விரிவாக்க வேண்டியது இன்றியமையாததொன்றாக உள்ளது. ஏனெனில், இன்று யாழ்ப்பாணத்தில் ஏறத்தாழ 1500ற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் தமது பட்டப்படிப்பை முடித்து வேலை தேடிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் ஏற்கனவே, இருந்த தொழிற்சாலைகளை புனரமைப்பதன்மூலமும் புதிய தொழில் முயற்சிகளை அதிகரிப்பதன் மூலமும் மூளைசாலிகள் வெளியேற்றத்தைத் தடுத்து எமது பிரதேசத்தைக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரதேசமாக மாற்றமுடியும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலகங்களில் சமூக பராமரிப்பு நிலைய செயற்றிட்டமும் அதன் பயன்களும்

**வி. சண்முகநாதன்**
சமூக சேவை உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம் நல்லூர்.

**அறிமுகம்**

இலங்கையில் சுனாமிக்குப் பின்னராக தோற்றுவிக்கப்பட்ட சமூக பராமரிப்பு நிலையச் செயற்திட்டம் தற்போது யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பெரும்பாலான பிரதேச செயலகங்களில் அமைக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலகத்தின் ஒரு செயற்பாட்டுப் பிரிவாக இப்பராமரிப்பு நிலையம் இருக்கும் அதேநேரம், தனியான கட்டடத்தில் இந்நிலையம் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் பிரதேச செயலகத்தில் பயன்பெற நாடிவரும் பயனாளி ஒருவரின் குறித்த தேவை பூர்த்திசெய்யப்படுவதோடு அவரது பல்வேறுபட்ட தேவைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொடுக்கும் நோக்கினை அடிப்படையாகக்கொண்டு புதிய எண்ணக்கருவில் இந்நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அதாவது பயன்படுத்துவோருக்குச் சாதகமான சூழலில் ஒன்றிணைக்கப்பட்டதும், அகல்விரிவானதுமான நலன்புரி சேவைத்தொகுதியொன்றை சமுதாயத்தின் நலிவடைந்த நிலையிலுள்ள மக்களுக்கு வழங்குவதைக் குறிக்கோளாகக் கொண்ட சமூகசேவைகள் சமூக நலன்புரி அமைச்சினதும் சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டல் அமைச்சினதும் புதிய முன்னெடுப்பே இச் சமூக பராமரிப்பு நிலையச் செயற்பாடாகும்.

இவ்வாறான மையங்களை அமைப்பதற்காகவும், அதற்கான தளபாடங்கள் மற்றும் சாதனங்களை பெறுவதற்காகவும் நிதி உதவியினை யுனிசெவ் (UNICEF) நிறுவனம் வழங்கி வருகின்றது. இதன் பராமரிப்பு சேவைகள் தொடர்பான பொறுப்பை சமூக நலன்புரி அமைச்சு மேற்கொள்ளும் அதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள எல்லாப் பிரதேச செயலக மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் இம்மையச் செயற்பாட்டு நிலையத்திற்கான கட்டடங்கள் அமைக்கப்பட்டு அவற்றின் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. நல்லூர் பிரதேசசெயலகப் பிரிவிலும், பிரதேச செயலக வளாகத்தில் இந்நிலையம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சமுதாய அடிப்படையிலமைந்த சமூகப் பராமரிப்பை விருத்திசெய்வதற்கு ஒரு தனித்துவமான சந்தர்ப்பம் ஒன்றை இத்திட்டம் அறிமுகம் செய்துள்ளதெனலாம். பிள்ளைகளுக்கும், முதியோருக்கும், பெண்களுக்கும், ஊனமுற்ற நபர்களுக்கும், நோயாளிகளுக்கும் சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டிருக்கும் அலுவலர்கள் உட்பட சகல சமூக சேவைத் தொழில் வாண்மையாளர்களினதும் ஆற்றல்களையும், சேவைகளையும் ஒருங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணைப்பதையும், அவ் உத்தியோகத்தர் களின் செயலூக்கத்தையும், ஈடுபாட்டை யும் மேம்படுத்துவதுடன் பராமரிப்பு மற்றும் உதவிகள் தேவைப்படும் பிரதேச குடிமக்களுக்கு தனித்தனியாக பதிலளிப் பதையும் சமூக பராமரிப்பு நிலையங்கள் தமது நோக்கமாகக் கொண்டுள்ளன. இச் சமூக பராமரிப்பு நிலையத்தினூடாக பின்வரும் இலக்குகளை அடையமுடியு மென எதிர்பார்க்கப்படுகின்றது.

1. பிரதேசத்தில் உள்ள முறைசார் மற்றும் முறைசாரா வளங்களை பயன்படுத்தி குடும்ப அலகில் சவால்களைச் சமாளித்து முன்னேறும் திறனை பலப்படுத்தல்.
2. இந்நிலையத்தினூடாக சேவைகளைப் பெறுபவர்களின் தேவைகளும் உரிமைகளும் நிறைவேற்றப்படல்.
3. சமூக நலன்புரிச்சேவைகளில் அரச, அரசசார்பற்ற, தனியார் துறைகளுக் கிடையிலான இணைப்புக்களை விருத்தி செய்வதனூடாக சமுதாயப் பராமரிப்பை அபிவிருத்தி செய்தல்.

சமூகப் பராமரிப்பு என்பது இலங்கைக் கலாசாரத்தில் ஒரு முக்கிய மான அம்சமாக இருந்து வந்திருப்பதை அவதானிக்கமுடியும். இதன்மூலம் கலாசாரப் பண்புகள் மேலும் வலுவடைய வும், இந்த பிரதேசத்தின் ஒவ்வொரு பிரஜைகளினதும் உரிமைகளுக்கு உத்தர வாதமளிப்பதுடன், உதவி தேவைப்படும் நபர்கள்மீது கூடிய கவனம் செலுத்தப் பட்டு உதவி வழங்குதல் தொடர்பாக அரசினால் மேற்கொள்ளப்படும் நடவடிக் கைகளுக்கு மேலதிக பெறுமானத்தை வழங்குகின்றது.

இந்நிலையமானது தனது இலக் குக் குழுக்களான பாதுகாப்புத் தேவைப் படும் பிள்ளைகள், உதவி நாடிநிற்கும் மற்றும் சட்ட விதிகளை மீறி நடக்கும் பிள்ளைகள், பால்நிலை வன்முறைக்கு உட்பட்டு பாதிக்கப்பட்டிருக்கும் பெண்கள், பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள், அங்கவீன முற்றோர், அநாதரவாக உதவியின்றி அல்லலுறும் முதியோர்கள், போதைப் பொருளிற்கு அடிமையான வர்கள். மன அதிர்ச்சிக்குட்பட்டு மேலதிக ஆதரவை யும், உதவியையும் எதிர்பார்ப்பவர்கள் மீது விசேட கவனம் செலுத்திச் செயற்பட இந்நிலையம் பொறுப்பாக விருக்கும்.

இச்செயற்திட்டத்தினூடாக செயற்படவுள்ள உத்தியோகத்தர்கள் மத்தியில் அணி மனப்பான்மையையும், தொழிற்பாட்டையும் (Team work) விருத்தி செய்து, செயலார்வம் மிக்க ஈடுபாட்டை தோற்றுவித்து, நல்ல முகாமைத்துவத் தராதரங்களை பற்றிய நியதிகளை கருத்தி லெடுத்து மேம்பட்ட ஒரு செயற்சூழலை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வோர் அலுவலரின் பணிகள் தொடர்பான வளங்களும், அப்பிரதேசத்திலுள்ள நிர் வாக அலகுடனும் தொழில் வாண்மை அணியினதும் செயற்பாட்டு இணைப்பை மீளாய்வு செய்வதன்மூலம் உயர்த்த முடியும்.

இந்நிலையத்தில் பின்வரும் உத்தியோகத்தர்கள் அடங்கியிருப்பர்.

- சமூக சேவை அலுவலர்
- சமூக அபிவிருத்தி உதவியாளர்
- ஆரம்ப சிறுபராய அபிவிருத்தி உதவியாளர்
- சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர்
- சிறுவர் நன்னடத்தை அலுவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உளவள ஆலோசகர்
- முதியோர் அபிவிருத்தி அலுவலர்
- பெண்கள் அபிவிருத்தி அலுவலர்

சமூக பராமரிப்பு நிலையச் செயற்பாட்டு செயற்திட்ட முன்மொழிவானது இந்நாட்டில் சமூக சேவைகள், மற்றும் சமூக நலன்புரி அமைச்சு மற்றும் யுனிசெவ் (UNICEF) நிறுவனம் என்பவற்றினால் கூட்டாக விருத்திசெய்யப்பட்டுள்ளது. 21ஆம் நூற்றாண்டிற்கு ஏற்றவகையில் சமூக சேவைகளை மீளமைத்துக் கொள்வதற்கான இலங்கையின் உபாயத்தை (Strategic) இது அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

சுனாமித் தாக்கத்தின் பின்னர் இலங்கையில் சமூகப் புனரமைப்பிற்குப் பங்களித்தலும், ஆற்றல்களை விருத்தி செய்வதனூடாக வாழ்க்கைப் பண்பை மேம்படுத்துவதும் இச் செயற்றிட்டத்தின் இலக்காகும். ஒளிவுமறைவற்ற தன்மை, எளிதில் அணுகும் தன்மை, சமூகத்தின் சொத்து என்பவற்றை வலியுறுத்தும் விதத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட சமூக அபிவிருத்தியையும், சேவைகளையும் விருத்தி செய்வதற்காகச் சமூக பராமரிப்பு நிலையங்களைக்கொண்ட ஒரு வலயமைப்பின்கீழ் சிறந்த ஆளுகை உபாயங்களை நிறுவுவதன்மூலம் இந்த இலக்கு எட்டப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பின்வரும் எண்ணிக்கையுடைய பிரதான இலக்குக்குழுக்களை மையமாகக்கொண்டே இதன் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

| | |
|---|---|
| பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள் | 3659 |
| ஊனமுற்ற நபர்கள் | 712 |
| உதவி பெறும் நோயாளிகள் | 82 |
| முதியவர்கள் | 10825 |
| சிறுவர்கள் | 18254 |

மேற்குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையுடைய குடிமக்களின் தேவைகளினைப் பூர்த்திசெய்ய வேண்டிய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு இந்நிலையம் அடிகோலுவதாக உள்ளது.

இந்த சமூக பராமரிப்பு நிலையத்தின் நோக்கங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்

1. எய்தக்கூடிய பல்துறைசார் சமூக அபிவிருத்தி அலுவலர்களின் திறன் அபிவிருத்தியையும், சமுதாயத்தில் பங்குபற்றிச் செயற்படும் பங்களிப்பையும் அதிகரித்தல்.
2. சேவைகளை வழங்குவதற்கு சிறந்த ஆளுமை தந்திரோபாயங்களையும், கொள்கைச் சட்டத்தையும் விருத்தி செய்வதனூடாக சமூக சேவைகள் அமைச்சிற்கு ஆதரவு வழங்குதல்.
3. பொது நிர்வாகம், சமூக நிர்வாகம் என்பவற்றின் உயர்தரமான கல்வி நிகழ்ச்சித்திட்டமொன்றை அலுவலர்களுக்கு வழங்கி, சேவைத்தரத்தை உயர்த்துதல்.
4. இந்நிலையத்தினூடாக சமூகத்தின் வறியமக்களாகவுள்ள இலக்குக் குழுவினருக்கு சமூக சேவைகள் அமைச்சு, சிறுவர் அபிவிருத்தி பெண்கள் வலுவூட்டல் அமைச்சு என்பவற்றிற் கூடாகக் கிடைக்கப்பெறும் உச்சக் கட்ட உதவிகளை ஒருங்கிணைந்த அலுவலர்களின் மூலம் வழங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நிலையத்தின் செயற்பாடுகள் மேலும் உயர்ந்ததரத்திற்கு மேம்படுத் தப்படும் போது சமூக பராமரிப்பு நிலையம் (Social Care Centre) என்பதன் உண்மையான அர்த்தத்திற்கு முழுவடி வம் கொடுப்பதாக அமையும்.

**முடிவுரை:**

சமூகப் பாதுகாப்பு நிலையங்களின் உருவாக்கம் அதன் கட்டமைப்பு என்பன பிரதேசத்திலுள்ள வறிய, சேவைகள் தேவைப்படும் மக்களின் சமூக, பொருளா தாரத்தரத்தை உயர்த்தும் நோக்கத்தை அடைவதற்குப் பணியாற்றும் அலுவலர் குழுவின் ஒருங்கிணைந்த சேவை மனப்பாங்கு முக்கியமானது. இந்நிலையத் திலிருந்து சேவைகள் வழங்கும் அலுவலர் களுக்கிடையேயான ஒருங்கிணைப்பு, காலத்திற்குக்காலம் பரிசீலிக்கப்பட்டு மேம்படுத்தப்படும்போது அதன் உண்மை யான அர்த்தமுள்ள சேவைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நிலையமாக மாற்றமடையும் என்பதில் ஐயமில்லை. எனவே, இவ்வாறான சேவை நிலையங் களின் வெற்றி, உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பு, சேவையின் முக்கியத்துவம் என்பன உணரப்பட்ட கூட்டுப்பொறுப்பி லும் சிறந்த மேற்பார்வையிலும் தங்கியுள் ளமை குறிப்பிடப்பட வேண்டியதாகும்.



நல்லூர்பிரதேச செயலக சமூகப் பராமரிப்பு நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச செயலகப்பிரிவில் வெள்ளப்பாதிப்பும் அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேவையும்

**செல்வி ப. சசிகலா**
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (பொது அபிவிருத்தி),
பிரதேச செயலகம், நல்லூர்.


**அனர்த்தம் என்றால் என்ன?**

அனர்த்தம் என்பது புவித்தொகுதியில் உள்ள நில மண்டலம், நீர் மண்டலம், உயிர் மண்டலம், வளி மண்டலம் என்பவற்றில் திடீரென ஏற்படும் அழிவாகும். அழிவுகள்மூலம் பாரிய இழப்புக்கள் ஏற்படுகின்றன. அதாவது இறப்பு, காயம், பொருட்சேதம், கட்டிடப்பாதிப்பு, தொலைத்தொடர்பு பாதிப்பு, விவசாய நிலப்பாதிப்பு, காடுகள், இயற்கை சூழல் பாதிப்பு முதலானவற்றுள் எதுவாகவும் இருக்கலாம் என UNDP யின் 2005ஆம் ஆண்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வனர்த்தங்கள் சூழல் சார்ந்ததாகவும், தொழில் நுட்பம் சார்ந்ததாகவும், இயற்கையானதாகவும் இருப்பதோடு; இயற்கையாகவும் மனிதனாலும் ஏற்படுத்தப்படுவனவாகவும் காணப்படுகின்றன என கொட்டர் (Kotter) கூறுகின்றார்.

அனர்த்தங்கள் ஏற்படும்போது எந்த அளவுகளில் ஏற்படும் என்றோ அல்லது அதற்கென ஒரு பிரதேச வரையறை எல்லைகள் இருக்குமென்றோ கருதமுடியாது. அத்துடன் இவை ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டனவாகவும் காணப்படுவதனால்; ஒரு வகையில் ஏற்படும் அனர்த்தம் ஏனைய அனர்த்தங்களையும் ஏற்படுத்தவல்லதாக காணப்படுகின்றது. உதாரணமாக: இயற்கையாக ஏற்படும் அனர்த்தம், தொழில் நுட்பம் மற்றும் சூழல் சார்ந்த அனர்த்தங்களையும் ஏற்படுத்திவிடலாம். இதனைப் பின்வரும் விளக்கப்படம் 1 இன் மூலம் விளங்கிக்கொள்ள முடியும்.

**விளக்கப்படம் 1**

**அனர்த்தம், அனர்த்த பாதிப்புக்களின் உள்ளார்ந்த தொடர்பு**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு முன்னெச்சரிக்கையாக இருந்தாலும் மேற்குறிப்பிட்ட அனர்த்தங்களைத் தவிர்க்கமுடியாது. ஆனால்; போதுமான விழிப்புணர்வு, தயார் நிலை, முகாமைத்துவம் என்பவற்றின்மூலம் இவ்வகை அனர்த்தப் பாதிப்புக்களை குறைத்துக்கொள்ளமுடியும். எனவே, எந்த ஒரு நாடும் அல்லது ஒரு பிரதேசமும் இவ்வனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புக்களை குறைத்துக்கொள்ள தயார் நிலையில் இருத்தல்வேண்டும்.

**வெள்ள அனர்த்தம்**

இந்தியாவின் High Powered Committee (HPC) அனர்த்தங்களை 30 வகையாக பாகுபாடு செய்துள்ளது. அவை பின்வரும் 5 பிரிவிற்குள் அடங்குகின்றன.

- நீர்காலநிலைசார் அனர்த்தம்
- புவிச்சரிதவியல்சார் அனர்த்தம்
- இரசாயன கைத்தொழில் சார் அனர்த்தம்
- விபத்துசார் அனர்த்தம்
- உயிரியல்சார் அனர்த்தம்

நீர்காலநிலைசார் அனர்த்தம் என்பதனுள் வெள்ள அனர்த்தம் அடக்கப்படுகின்றது. இது மழை, புயல், நீர்த்தேக்கங்கள் உடைப்பெடுத்தல், சரியான வடிநிலப் பரப்பு, நிலப்பயன்பாடின்மை போன்ற காரணங்களால் ஏற்படுகின்றது. இவ் வெள்ளப்பாதிப்புமூலம் இறப்பு, காயமுறல், சொத்திழப்பு, விவசாய நிலங்கள் பாதிக்கப்படுதல், கட்டிடங்கள் பாதிப்பு என்பன ஏற்படுகின்றன.


**நல்லூர் பிரதேசத்தில் வெள்ள அனர்த்தம்**

நல்லூர் பிரதேச செயலகப்பிரிவினை நோக்கின் இதன் தரைத்தோற்றமும் தரையியல் அமைப்பும் பாரிய அனர்த்தங்கள் ஏற்பட வாய்ப்பற்ற பிரதேசமாக காணப்படுகின்றது. எனினும், மனிதனது நடவடிக்கைகள் இயற்கையில் ஏற்படும் நிகழ்வுகளை அனர்த்தமாக மாற்றுவனவாக அமைந்துள்ளன. அதாவது, நல்லூர் பிரதேசத்தில் அதிகரித்த சனத்தொகை, நிலப்பயன்பாடு சார்ந்த அறிவின்மை, சிறந்த வடிநிலப்பராமரிப்பின்மை என்பன காரணமாக வருடாந்தப் பருவமழை காலங்களிலும் சூறாவளி, தாழமுக்கம் ஏற்படும் காலங்களிலும் வெள்ளப்பாதிப்பு ஏற்படுகின்றது.

இப்பிரதேசத்தில் வெள்ளம் அதிகம் ஏற்படும் பிரதேசங்களாக நந்தாவில் குளம், பூதவராயர் குளம், பண்டாரக்குளம், பரவைக்குளம், பிராமணக்கட்டுக் குளம், நரியன்குண்டுக்குளம், வண்ணான்குளம் ஆகிய குளப்பகுதிகளை அண்டிய பிரதேசங்கள்; மற்றும் அக்குளங்களிலிருந்து வெளிச்செல்லும் கழுவுநீர் வாய்க்கால்களை (Run-off channel) உள்ளடக்கிய பகுதிகள் என்பன காணப்படுகின்றன. (படம்-1) 2008ஆம் ஆண்டு ஏற்பட்ட "நிஷா" புயலும் 2010ஆம் ஆண்டு ஏற்பட்ட "லைலா" புயலும் இப்பிரதேசத்தில் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வெள்ளப்பாதிப்பு ஏற்படும் பிரதேசம்

படம் 1

இவை பாரிய அழிவை ஏற்படுத்தவல்ல கடுமையான புயல்களல்ல. இதன்மூலம் குறுகிய காலத்தில் ஏற்பட்ட அதிகளவிலான மழை வீழ்ச்சி, அதிகரித்த கழுவு நீரோட்டம் (Run-off), கழுவு நீரோட்டம் தடைப்பட்டமை என்பன காரணமாகவே இங்கு பாதிப்பு மிக அதிகமாக ஏற்பட்டது. இதிலிருந்து இப்பிரதேசத்தில் மழை வீழ்ச்சி அதிகம் பெறப்படுவதனால் இவ்வெள்ளப்பெருக்கு ஏற்படவில்லை என்பதனையும், தவறான நிலப்பயன்பாட்டுச் செயற்பாட்டினாலேயே வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது என்பதனையும் அறிந்துகொள்ள முடிகின்றது.


இப்பிரதேசங்களில் தொடர்ச்சியாக ஏற்படும் வெள்ளப்பாதிப்புக்களினால் மக்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படல், சொத்துக்கள் இழப்பு, பயிர்செய்நிலங்கள் பாதிப்பு என்பன ஏற்படுகின்றன.

மக்களின் வாழ்வாதாரத்தை எடுத்துக்கொண்டால், 2007ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ள பாதிப்பின்மூலம் 43 குடும்பங்களும், 2008இல் ஏற்பட்ட 'நிஷா' புயலின் மூலம் 1207 குடும்பங்களும் (படம் 2), 2010இல் ஏற்பட்ட 'லைலா' புயலின் மூலம் 16 குடும்பங்களும் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ளன. சொத்திழப்பு என நோக்கின் நிஷா புயலினால் ஏறத்தாழ 8.5 கோடி பெறுமதியான வீடுகள், கால் நடைகள், பயிரழிவுகள் என்பன ஏற்பட்டுள்ளன. பயிர்நிலப்பாதிப்பை நோக்கின் இங்கு தொடர்ச்சியாக ஏறத்தாழ 203




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெக்ரெயர் பரப்பளவு வெள்ளப்பாதிப் பிற்குள்ளாகி இருக்கின்றது. இது இப்பிரதேசத்தின் மொத்தப் பரப்பளவில் 6% மாகும். அத்துடன் *23.876* கெக்ரெயர் பரப்பள வான பயிர்ச்செய்கை நிலப்பரப்பு பாதிப் பிற்குள்ளாகின்றது. இது இப்பிரதே சத்தின் மொத்தப் பயிர்செய்யக்கூடிய பரப் பளவில் 4% மாகும் (படம் *3*)




படம் 2




படம் 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பயிர்ச்செய்கை நிலப்பரப்பு, சொத்துக்கள், மக்களின் வாழ்வாதாரம் என்பன தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருவதனால் இப்பிரதேசத்தின் விவசாய செய்கை மட்டுமன்றி மக்களின் அன்றாட வாழ்க்கையும் பாதிப்படைகின்றது. இன்றைய நிலையில் இது பாரிய இழப்பாகும். எனவே, இப்பாதிப்புக்களை குறைப்பதற்கான சரியான ஒரு முகாமைத்துவம் அவசியமானதும், அத்தியாவசியமானதாகவும் உள்ளது.

**அனர்த்த முகாமைத்துவம்**

அனர்த்த முகாமைத்துவம் என்பது திடீரென ஏற்படவிருக்கும் அழிவினை அல்லது அதன்மூலம் ஏற்படும் பாதிப்புக்களை குறைப்பதற்காக முன்கூட்டியே ஆயத்தமாக இருத்தல் என்று கொள்ளலாம். இங்கு திட்டமிடல், பாதிப்புக்களை குறைத்தல், அனர்த்தங்களை எதிர்கொள்ளத்தயார்நிலையில் இருத்தல் போன்ற செயற்பாடுகளின் மூலம் அழிவுகளைக்குறைக்க முடியும். அனர்த்த முகாமைத்துவத்தினை நடைமுறைப் படுத்துவதற்கு முன்னர் அப்பிரதேசத்தின் சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்களை நன்கு அறிந்திருத்தல் வேண்டும். ஒரு சிறந்த அனர்த்த முகாமைத்துவத் திட்டமிடல் பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கும் என ஷிர்லே மற்றிங்லி (Shirely Mattingly) என்ற நகர அனர்த்த முகாமைத்துவ ஆலோசகர் குறிப்பிடுகின்றார். அதாவது அந்நிகழ்வுத்திட்டம்

- அப்பிரதேசத்தின் சமூகம், பொருளாதாரம், அரசியல் என்பவற்றைப் பிரதிபலிப்பதாக இருத்தல்வேண்டும்.
- தெளிவாக விளங்கிக்கொள்ளக் கூடியதாகவும் நடைமுறைப்படுத்த இலகுவானதாகவும் இருத்தல்வேண்டும்.
- அரசிடம் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான தெளிவான கொள்கைகள், நோக்கங்கள், முன்னுரிமை நடவடிக்கைகள் என்பன இருத்தல் வேண்டும்.
- பல்துறைசார் நிறுவன அமைப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- தீர்மானம் எடுப்போருக்கும் பொது மக்களுக்கும் சரியான தரவுகளை விரைவாக வழங்கக்கூடியதாக இருக்க வேண்டும்.
- அரச சார்பற்ற நிறுவனங்களையும், ஏனைய அமைப்புக்களையும் இணைத்துச் செயற்படுத்தவேண்டும்.
- இத்திட்டம் எல்லா மக்களாலும், நிறுவனங்களாலும் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கவேண்டும்.

எமது நல்லூர் பிரதேசத்திலும், அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளை மேற்படி அம்சங்களுடன் உருவாக்கி நடைமுறைப் படுத்துவதன்மூலம் சிறந்த முகாமைத்துவத்தை பேணமுடியும். அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளாக மீள் எழுச்சி நடவடிக்கைகளும், நிவாரண நடவடிக்கைகளும் காணப்படுகின்றன. இதற்கு பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம் என ஹிர்லே மற்றிங்லி குறிப்பிடுகின்றார்.

- மீள்பாதுகாப்பு நடவடிக்கைகள் - தேவையான நிறுவனங்களை இணைத்தல், வைத்தியசாலை போன்ற அத்தியாவசிய தேவைகளை ஒழுங்கு படுத்தல், அழிவுகளைச் சீர்செய்வதற்கு தயார்நிலையில் இருத்தல். உட்கட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைப்பு வசதிகளை சீர்செய்தல் போன்றன.

- அரச, தனியார் சொத்துக்களை பாதுகாத்தல் - பாதிப்புக்களை துரித மாகச் சரிசெய்யக்கூடிய பயிற்சிகளை வழங்கல், அவற்றிற்கான நட்ட ஈட்டினை வழங்கல் என்பன.
- பாதுகாப்பற்ற கட்டிடங்களை ஆய்வு செய்தல் - பாதுகாப்பற்ற கட்டிடங் களைத் திறமையான பொறியியலாளர் களைக் கொண்டு அவற்றை சீர் செய்தல்.
- கழிவுகளை உடனடியாக அகற்று தலும் அழித்தலும்.
- குறுங்கால மீளெழுச்சித் திட்டங்களை வகுத்தல்.
- தற்காலிக புகலிடங்களை அமைத்தல்.
- நீண்டகால திட்டங்களை அமைத்தல்.

இவை சமூகத்திலும், பொருளாதாரத் திலும் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைக்க அனர்த்தம் ஏற்பட்டதன் பின்னர் செய்வதற்காக, முன்கூட்டியே தயார் நிலையில் இருக்கவேண்டிய நிகழ்ச்சித் திட்டங்களாகும்.

நல்லூர் பிரதேசத்தில் இதுவரை ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புக்காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உணவு வழங்கல். உலர் உணவு வழங்கல், நட்டஈடு வழங்குதல் போன்ற செயற் பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளன. இவற்றுடன் மீள் எழுச்சி நடவடிக்கைகளாகக் கழுவு நீரோட்ட வாய்க்கால்களை புனரமைத்தல், குளங் களை தூர்வாருதல். மழை நீர் சேமிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், வெள்ளப்பாதிப்பு பகுதிகளிலுள்ள வீடுகளை அதற்கேற்ற வகையில் பாதுகாத் தல், மக்களுக்கு விழிப்புணர்வூட்டல் போன்ற செயற்பாடுகளை முனைப்புடன் செயற்படுத்துவதன்மூலம் நல்லூர் பிரதே சத்தின் வெள்ளப் பாதிப்பினை குறைத்துக் கொள்ள முடியும்.

**முடிவுரை**

நல்லூர் பிரதேசத்தில் ஏற்படும் வெள்ள அனர்த்தமானது அதிகளவில் தவறான நிலப்பயன்பாடு, அதிகரித்த சனத்தொகை என்பவற்றின் காரணமாக ஏற்படுகின்றன. இவ்வெள்ள அனர்த்தத் தினை சிறந்த அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள்மூலம் சீர்செய்துகொள்ள முடியும் என்பதும், அதற்கான சிறந்த முகாமைத்துவச் செயற்பாட்டுத் திட்ட மிடல் அவசியம் என்பதும் இவற்றின் மூலம் புலனாகின்றது.



பெட்டகக் கைபிடி



கதவுக் கைபிடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலக நிதிசார்ந்த செயற்பாடுகள்

**இ. பத்மநாதன்**
கணக்காளர்,
பிரதேச செயலகம், நல்லூர்.

மாவட்டச் செயலகங்களால் வழங்கப்பட்டுவந்த பொதுமக்கள் சேவைகளை உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் செவ்வனே ஆற்றிவந்தன. அரசினால் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்தப்பட்டு, அதற்கான அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு, மாவட்டச் செயலகங்களிலிருந்து பிரதேச செயலகங்களுக்கு அதிகாரங்கள் கையளிக்கப்பட்டன. எந்தவொரு பொதுமகனும் மிகவும் இலகுவாக சேவையைப் பெறும் பொருட்டு பிரதேச செயலகங்களினூடாக மிகவும் பயனுறுதிவாய்ந்த வகையில் மக்களுக்கான சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒரு பிரதேசத்தின் மக்களுக்கான சேவைகளை வழங்குவதில் பிரதேச செயலகங்கள் அளப்பரிய பங்கினை ஆற்றிவருகின்றன. அவ்வகையில் பிரதேச செயலகங்கள் பலவிதமான செயற்பாடுகள், திட்டங்களை வகுத்து முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றில் பிரதேச செயலகங்களின் நிதிசார் தொழிற்பாடுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

நல்லூர் பிரதேச செயலகத்தைப் பொறுத்தவரையில் ஒய்வூதியக் கொடுப்பனவுகள், மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சேவைகள், வியாபாரப்பதிவு, பரீட்சைக் கட்டணங்களை அறவிடல், கடவுச்சீட்டுக் கட்டணங்களைப் பெற்றுக் கொள்ளல் போன்ற நிதிசார்ந்த நடவடிக்கைகள் மிகவும் செவ்வையான முறையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும். போதிய இடவசதியின்மை, ஆவணங்களைப் பராமரிப்பதில் தளபாடப்பற்றாக்குறை முதலிய வளப்பற்றாக்குறைகளுக்கு மத்தியிலும் நிதிக்கிளை அலுவலர்களது செம்மையான செயற்பாடுகளால் பணிகள் செவ்வனே இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக, ஒய்வூதியக் கொடுப்பனவுகள், மோட்டார் வாகனப்போக்குவரத்துச்சேவைகள், வியாபாரப் பதிவு போன்ற செயற்பாடுகள் உரிய சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும், காலத்திற்குக் காலம் திணைக்களங்களால் வெளியிடப்படும் சுற்றுநிருபங்களுக்கு அமையவும் மிகவும் துரிதமான முறையில் பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் மிகவும் வினைத்திறனுடன் செயற்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஓய்வூதியக் கொடுப்பனவு**

அரச சேவைக்குத் தம்மை அர்ப்பணித்த உத்தியோகத்தர்களின் பணியினை சான்றுறுதிப்படுத்துவதன்மூலம், அவர்களது ஓய்வுக்கால வாழ்க்கையைக் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான தொடர் உதவியைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் இலங்கையில் அரச உத்தியோகத்தர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஓய்வூதியச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்குடன் 1970க்கு முன் திறைசேரியின்கீழ் இயங்கிய ஓய்வூதியப் பகுதியும், விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய உபதிட்டமும் அரச சேவை ஊழியர் சேமலாப நிதியமும் ஒருங்கிணைக்கப்பட்டு ஓய்வூதியத் திட்டம் உருவாக்கப்பட்டது. ஆரம்ப காலங்களில் ஓய்வூதியச் செயற்பாடுகள் அனைத்தும் இத்திணைக்களத்தாலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தது. 1990 ஆம் ஆண்டில் இச்செயற்பாடுகள் மாவட்ட செயலகங்களுக்குப் பரவலாக்கப்பட்டது. 1995.10.01 முதல் பிரதேச செயலகங்களுக்கு மாற்றப்பட்டமையால் ஓய்வூதியர்கள் பெரும் நன்மையைக் கொண்டுள்ளார்கள். எனினும், அன்றைய சூழ்நிலைகளைக் கருத்தில்கொண்டு யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தொடர்ந்து மாவட்டச் செயலகங்களாலேயே ஓய்வூதியச் செயற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுந்தன. 1996ஆம் ஆண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மாவட்டச் செயலகங்களின் ஓய்வூதியச் செயற்பாடுகள் பிரதேச செயலகங்களுக்கு பரவலாக்கப்பட்டது. இப்புதிய நடை முறையின்படி சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்ற அரச அலுவலர்களின் ஓய்வூதியங்கள் அவ்வத் திணைக்களத் தலைவர்களால் ஓய்வூதியப் பணிப் பாளரிடமிருந்து ஓய்வூதிய இலக்கம் பெற்று ஓய்வூதியக் கணிப்புச் செய்யப்பட்டுமாற்றிய பணிக்கொடை கொடுப்பனவு செய்யப்பட்ட பின்னர், மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவிற்காக சம்பந்தப் பட்ட பிரதேச செயலகங்களுக்கு உரிய ஓய்வூதிய மூலக்கோவை அனுப்பி வைக்கப்படுகின்றது.

120 மாதங்களுக்குக் குறையாத மொத்த சேவையை உடைய ஓய்வூதியத்திற்குரிய நிரந்தரப் பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட நியமன அதிகாரியால் ஓய்வு பெறுவதற்கான அனுமதி பெறப்பட்ட அரச அலுவலர் ஒருவர் ஓய்வூதியம் பெறுவதற்கு தகைமையுடையவராவார். எனினும் விதிவிலக்காக பொது நிர்வாகச் சுற்றுநிருபம் 44/90இன் படி 120மாதங்களுக்குக் குறையாத தேறிய சேவைக் காலம் கருத்தில் கொள்ளப்படுகின்றது.

இத்தகைய தகைமையுடைய ஒருவருக்குப் பின்வரும் காரணங்களின் அடிப்படையிலும் பின்வரும் ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழும் இளைப்பாறுகை அனுமதியளிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வு பெறுவதற்கான காரணங்களும், அவற்றிற்கு ஏற்புடைய ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புக்களின் பிரிவுகளும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | 55ஆம், 60ஆம் வயதுகளில் ஓய்வு பெறல் | 2-17 |
| 2. | 55 வயதிற்கும் 60 வயதிற்கும் இடையில் ஓய்வு பெறல் | 2-17 (26IX) |
| 3. | பொ.நி. சுற்றுநிருபம் 44/90 இற்கு அமைய ஓய்வு பெறல் | |
| | அ. 120 மாதங்களுக்கும் 240 மாதங்களுக்கும் இடைப்பட்ட சேவைக்காலம் | 2-1 (அ) |
| | ஆ. 240 மாதங்களுக்கு 360 மாதங்களுக்கும் இடைப்பட்ட சேவைக்காலம் | 2-1 (ஆ) |
| | இ. 360 மாதங்களுக்கும் மேற்பட்ட சேவைக்காலம் | 2-1 (இ) |
| 4. | பதவியை இல்லாதொழித்தல், திணைக்களத்தை மூடுதல் | 2-7 |
| 5. | 1980ஆம் ஆண்டின் வேலைநிறுத்தம் | 2-10 அ (2) |
| 6. | ஒழுக்காற்று நடவடிக்கை | 2-12 |
| 7. | அ. மருத்துவக் காரணங்கள் | |
| | ஆ. கல்வித்திணைக்களத்தின் பெண் ஆசிரியைகள், சுகாதார திணைக்களத்தின்பெண் தாதிய அலுவலர்கள், மருத்துவமாதர்கள், தொலைத் தொடர்புத் திணைக்களத்தின் தொலைபேசி சேவையாளர்கள் ஆகியோரில் 20 வருட சேவை பூர்த்தி அல்லது 50 வயது பூர்த்தி இவற்றில் எது முதல் நிகழ்கின்றதோ அதன் அடிப்படையில் ஓய்வு பெறல் | 2-14 |
| 8. | பொதுத் திறமையின்மை | 2-15 |
| 9. | நீதித்துறை அலுவலர்கள் ஓய்வு பெறல் | 2-25 |
| 10. | இழப்பீட்டு ஓய்வூதியங்களும், விசேட இழப்பீடுகளும் | 2-31 (1) |
| 11. | ஓய்வு பெற்றிருந்தும் ஓய்வூதியம் பெறமுன்னர் இறந்த அலுவலர் தொடர்பிலான பின்னுரித்தாளர், அண்டிவாழ்வோர்க்கான கொடுப்பனவு | 2-39 (3) |
| 12. | அரச கரும மொழித் தேர்ச்சியின்மை | 2-48 |
| 13. | ஓய்வூதியத்தை உறைவுறுத்தி கூட்டுத்தாபனம் அல்லது சட்ட ரீதியான சபை ஒன்றிலிருந்து ஓய்வுபெறல் | 2-48 (அ) |

மேற்படி பிரமாணங்களுக்கு அமைவாக வழங்கப்படும் ஓய்வூதியம் குடிசார் ஓய்வூதியம் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விதவைகள், அநாதைகள் ஓய்வூதியம்**

விதவை அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்துகொண்ட அரச அலுவலர் ஒருவர் இறந்தபின், அவரில் தங்கிவாழ்ந்த கணவன் அல்லது மனைவி, பராயமடையாத பிள்ளைகள், ஊனமுற்ற பிள்ளைகள் ஆகியோருக்கு விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திருத்தச்சட்டத் தின்படி மேற்படி ஓய்வூதியம் வழங்கப் படுகின்றது. அவையாவன: -

(அ) விதவைகள், விதுரர்கள் ஓய்வூதியம்
(ஆ) பராயமடையாதோர் ஓய்வூதியம்
(இ) வலது குறைந்தோர் ஓய்வூதியம்

இவற்றுட் பின்வரும் ஓய்வூதியங்கள் பிரதேச செயலகங்களுக்குப் பன்முகப் படுத்தப்பட்டுள்ளது.

(1) விதவை அல்லது விதுரர் ஓய்வூதியம்
(2) 18 வயதிற்கு மேற்பட்ட பாதுகாவலர் நியமனம் தேவையற்ற பிள்ளைகளுக் கான பராயமடையாதோர் ஓய்வூதியம்.

**அ. விதவைகள் அல்லது விதுரர்கள் ஓய்வூதியம்:-**

விதவைகள், அனாதைகள் ஓய்வூதி யத்திட்ட உதவுனர்களின் சட்ட ரீதியான கணவன் அல்லது மனைவி உதவுனர் இறந்த பின்னும் உயிரோடு இருப்பின் விதவை அல்லது விதுரர் ஓய்வூதியத்தைப்பெற முடியும். எனினும், பின்வரும் சந்தர்ப்பங் களில் விதவை அல்லது விதுரர் ஓய்வூதியம் அனுமதிக்க முடியாது.

a. உதவுனரின் மரணத்தின்பின் விதவை அல்லது விதுரர் மறுமணம் செய்திருப் பின், உதவுனரின் சட்ட ரீதியான கணவனாக அல்லது மனைவியாக அவரது இறப்பின் பின்னும் வாழ்ந்த காலப்பகுதிக்கு மட்டும் விதவை அல்லது விதுரர் ஓய்வூதியத்தைப் பெற முடியும்.

b. உதவுனரை விதவை அல்லது விதுரர் மணவிலக்குச் செய்திருப்பின்

c. உதவுனரின் இளைப்பாறுகைக்குப் பின்னரான திருமணங்களின் விதவை கள் அல்லது விதுரர்கள். உதவுனர் ஒருவர் திருமணம் முடித்த ஒரு வருட காலப்பகுதிக்குள் இறப்பின் குறித்த் திருமணம் ஓய்வூதியம் பெறும் நோக்குடன் செய்யப்படவில்லை என்பதை உறுதிப்படுத்திச் சம்பந்தப் பட்ட பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட சிபார்சு, இறப்பின் முன்னரான 2 ஆண்டுகளில் குறித்த அலுவலரால் எடுத்துக்கொள்ளப் பட்ட மருத்துவ விடுமுறைகள், மருத்துவ அறிக்கை, விதவை அல்லது விதுரரின் சத்தியக்கூற்று, உதவுனரின் மரண அத்தாட்சிப்பத்திரம் என்ப வற்றை அடிப்படையாகக் கொண்டு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் இறுதி முடிவுக்கமைய ஓய்வூதியப் பணிப்பா ளரினால் விதவைகள் அல்லது விதுரர் கள் ஓய்வூதியம் அனுமதியளிக்கப்படு கின்றது.

d. 1981.07.02க்குப்பின் நியமனம்பெற்ற அரச அலுவலர் விதவைகள், அனாதை கள் ஓய்வூதியத்திட்டத்தில் இணைந் திருப்பினும் அவரது இராஜினாமா, வேலை நீக்கம், பதவி வெறிதாக்கல் போன்ற காரணங்களினால் தனது குடி சார் ஓய்வூதியத்தைப் பெறமுடியாது போனால், அத்தகையோரது விதவை கள் அல்லது விதுரர்களும் மேற்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வூதியத்திற்கு உரித்தற்றவர்கள் ஆவர்.

**ஆ. பராயமடையாதோர் ஓய்வூதியம்**

விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் உதவுனர் ஒருவரின் மரணத்தின் பின்னர், விதவை அல்லது விதுரர் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்களிலும் சரி, விதவை அல்லது விதுரர் ஓய்வூதியம் வழங்கப்பட முடியாத சந்தர்ப்பங்களிலும் சரி, உதவுனரின் சட்ட ரீதியான மனைவி அல்லது கணவன்மூலம் பிறந்த பிள்ளைகள் அல்லது நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றின்மூலம் தத்தெடுத்த பிள்ளைகள் 26 வயதிற்கு உட்பட்டவர்களாகவும், வருவாய்த் தொழிலற்றவர்களாகவும், பெண் பிள்ளையாயின் திருமணம் ஆகாதவர்களாகவும் இருப்பின் பராயமடையாதோர் ஓய்வூதியம்பெற உரித்துடையோர் ஆவார்.

**இ. வலது குறைந்தோர் ஓய்வூதியம்**

பகுதி "ஆ" இல் குறிப்பிடப்பட்டுள்ள பராயமடையாத பிள்ளைகளில் தன்னுடைய ஜீவனோபாயத்துக்கு உழைக்க முடியாமல் உடல், உள ரீதியாக ஊன முற்றிருப்பின் அப்பிள்ளையின் வயதைக் கருத்திற்கொள்ளாமல் அப்பிள்ளையின் ஆயுட்காலம் முழுமைக்கும் ஊன முற்றோர் ஓய்வூதியம் வழங்கப்படும்.

(குறிப்பு):

மேற்படி வி.அ.ஓய்வூதியம், பராயமடையாதோர் ஓய்வூதியம், வலது குறைந்தோர் ஓய்வூதியம் போன்றவை பெறுவதற்கான அறிவுறுத்தல்களை பிரதேச செயலக ஓய்வூதியப்பிரிவில் பெற்று உரிய ஆவணங்களைப் பூர்த்திசெய்து பிரதேச செயலகம் மூலம் ஓய்வூதியத்திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். ஓய்வூதியத் திணைக்களத்திடமிருந்து உரிய கோவைகள் பிரதேச செயலகத்திற்குக் கிடைத்தபின்பே மேற்படி ஓய்வூதியங்கள் வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**உள்ளூராட்சி ஓய்வூதியங்கள்**


2006ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு ஓய்வூதியத் திணைக்களத்தின் உள்ளூராட்சி ஓய்வூதிய அலகால் வழங்கப்பட்டுவந்த மேற்படி உள்ளூராட்சி ஓய்வூதியங்கள் யாழ். மவாட்டத்தில் 2007 சித்திரை மாதம் முதல் பிரதேச செயலகங்கள் ஊடாக ஓய்வூதியக் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதும் தொடர்ந்தும் ஓய்வூதியத் திணைக்களத்தின் உள்ளூராட்சி ஓய்வூதிய அலகினாலேயே மேற்படி உள்ளூராட்சி ஓய்வூதியக் கோவைகள் பேணப்பட்டு வருவதுடன், மாதாந்த உள்ளூராட்சி ஓய்வூதிய மாற்றங் களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எமது செயலகம்மூலம் மேற்கூறப்பட்ட வகை ஓய்வூதியங்களைப் பெறும் ஓய்வூதியர்களின் விபரம்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வருடம் | ஓய்வூதியர் விபரம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | குடிசார் | தனிப்பட்ட பாடசாலை ஆசிரியர் | படையினர் | விதவை / விதுரர் | தனிப்பட்ட பாடசாலை ஆசிரிய விதவை | உள்ளூராட்சி | மொத்தம் |
| 2005 | 1430 | 3 | 7 | 683 | 8 | 0 | 2131 |
| 2006 | 1398 | 3 | 7 | 676 | 8 | 0 | 2092 |
| 2007 | 1364 | 3 | 8 | 649 | 8 | 49 | 2081 |
| 2008 | 1431 | 3 | 8 | 655 | 7 | 46 | 2150 |
| 2009 | 1520 | 3 | 8 | 675 | 7 | 107 | 2320 |
| 2010 ஆகஸ்ட் வரை | 1556 | 4 | 9 | 712 | 6 | 145 | 2432 |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1. மோட்டார் வாகனப் போக்குவரத்துப்பணி**

மோட்டார் வாகனம் சம்பந்தமான நடவடிக்கைகள் ஆரம்ப காலத்தில் கச்சேரியிலே மேற்கொள்ளப்பட்டு வந்தது. 1997ஆம் ஆண்டளவில் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பு, பிரதேச செயலகங்களுக்கு கையளிக்கப்பட்டது. அத்துடன் வாகன ஒட்டுனர் அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல், பிரதி வழங்கல் அதிகாரமும் பிரதேச செயலகங்களுக்கு கையளிக்கப்பட்டு மீண்டும் அந்த நடவடிக்கை 2009ஆம் ஆண்டு கச்சேரியால் பொறுப்பேற்கப் பட்டது. மோட்டார் வாகன நடவடிக் கைகளை இலகுவாக்கும் நோக்கில் வைகாசி 2005ஆம் ஆண்டு "Memoris" என்னும் Package அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது மோட்டார் வாகன நடவடிக்கைகள் பிரதேச செயலங்களில் கணினிமயப்படுத்தப்பட்டுள்ளது. எமது பிரதேச செயலகத்தின் எல்லைக்குட்பட்ட வாகன விபரங்களின் தொகுப்பு பதிவேடுகளின் படி வருமாறு.

| வாகன வகை | ஆண்டு | |
|---|---|---|
| | 1997,1998 | 2010 |
| மோட்டர் சைக்கிள் | 967 | 7436 |
| மோட்டார் கார் | 133 | 395 |
| ஆட்டோ | 14 | 591 |
| விவசாய வாகனம் | 102 | 326 |
| மோட்டார் கோச் | 02 | 88 |
| மினிபஸ் | 10 | 132 |
| லொறி | 40 | 218 |
| இருவித பாவனை வாகனம் | 01 | 215 |
| அம்புலன்ஸ் | - | 02 |
| அரசாங்க வாகனம் | - | 37 |
| மொத்தம் | 1269 | 9440 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை ஜனநாயக சோசலிசக்குடியரசின் அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமைவாக, மோட்டார் வாகனங்கள் சம்பந்தமாக செயலகத்தில் நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகள் வருமாறு:

1. வாகன வரி அனுமதிப்பத்திரம் வழங்கல்
2. உபயோகிக்காது விடப்படும் வாகனங்களுக்குரிய வருடாந்த கட்டணம் அறவிடுதல்.
3. தொலைந்த வாகன அனுமதிப் பத்திரத்திற்கான பிரதி வழங்கல்.
4. வாகன உடைமை மாற்றம், முகவரி மாற்றம், அதிகார மாற்றங்களுக்கான விண்ணப்பங்களைப்பெற்று, மோட்டார் போக்குவரத்துத்திணைக்களத்திற்கு அனுப்புதல்.

### 3. வியாபாரப்பதிவு

புதிய வியாபார நிலையம் ஒன்றினைப் பதிவு செய்கின்றவர்கள் பிரதேச செயலகத்திற்கு தற்போதைய நடைமுறையின் கீழ் பின்வருவனவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

1. ரூபா ஆயிரம் பெறுமதியான முத்திரை
2. வியாபாரம் நடைபெறும் இடம் வியாபார உரிமையாளருடையதாக இருப்பின் அதன் உறுதி, வாடகை அல்லது குத்தகையாயின் அதன் ஒப்பந்தப்பத்திரம்
3. பிரதேச சபைக்கு உட்பட்டிருப்பின் பிரதேச சபையினால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரம் அல்லது மாநகர சபைக்கு உட்பட்டிருப்பின் மாநகர சபையினால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரம்
4 வியாபார உரிமையாளரின் அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி
5. குறித்த வியாபார நிலையத்தினது தபால் தலைப்பு, பற்றுச்சீட்டு.


குறித்த வியாபார நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு பதின்நான்கு நாட்களுக்குள் எமது பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்படுதல் வேண்டும். பதின்நான்கு நாட்களுக்குள் பதிவுசெய்யத்தவறும் பட்சத்தில், தாமதமாகும் ஒவ்வொரு மாதத்திற்கும் இருபத்தைந்து ரூபா விகிதம் தண்டப்பணமாக அறவிடப்படும்.

பதிவு செய்யப்பட்ட வியாபாரத்தில் ஏதாவது மாற்றங்கள் செய்வதாயின் பதினான்கு நாட்களுக்குள் அறிவித்தல் வேண்டும். பதினான்கு நாட்களுக்குள் அறிவிக்காதுவிடின் ஒரு நாளைக்கு ரூபா நூறு என்ற வகையில் தண்டப்பணம் அறவிடப்படும். குறித்த வியாபார நிலையத்தில் உரிமை மாற்றம் ஏற்படுமாயின் முன்னைய வியாபாரம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுப் புதிதாக வியாபாரம் பதிவு செய்யப்படல் வேண்டும்.

1997ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டு ஆவணி மாதம் வரையான காலப்பகுதியில் எமது பிரதேச செயலகத்தினால் பதிவு செய்யப்பட்ட வியாபார நிலையங்களின் எண்ணிக்கையை வரைபடம் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Series2
300
250
200
150
100
50
0
1997
1998
1999
2000
2001
2002
2003
2004
2005
2006
2007
2008
2009
2010
(31.08.2010 வரை)
68
72
272
67
63
38
34
50
66
43
10
37
85
62

### 4. கடவுச்சீட்டு விண்ணப்பம்

குடிவரவு, குடியகல்வுத் திணைக் களத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய உரிய கட்டணங்கள் அறவிடப்படுகின்றன. சகல நாடுகளுக்கான கடவுச்சீட்டுப் பெறுவதற் கான 2500/-வும், மத்திய கிழக்கு நாடுகளுக்கான கடவுச்சீட்டுக்காக 1000/-வும், கடவுச்சீட்டுக்களில் மாற்றங்கள் எதுவும் ஏற்படின் அவற்றுக்காக 500/-வும் அறவிடப்படுகின்றன.

### 5. பரீட்சைக் கட்டணங்கள்

இலங்கைப் பரீட்சைத் திணைக் களத்தால் காலத்திற்குக்காலம் வெளி யிடப்படும் வர்த்தமானியின் அறிவுறுத் தல்களுக்கமைவாக பரீட்சைக் கட்டணங் கள் அறவிடப்பட்டு உரிய தலைப்புக் களுக்கு வரவு வைக்கப்படுகின்றன.

### 6. ஏனைய அறவீடுகள்

மரத்தளபாடங்களைக்கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரக் கட்டணம், பங்கீட்டு அட்டை மீளப் பெறல் தொடர்பான அறவீடுகள் போன்ற அறவீடுகள் மேற்கொள்ளப்படு கின்றன.

### முடிவுரை:

இலங்கை அரசாங்க நடை முறைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப் பட்டுவரும் மேற்படி நிதிநடவடிக்கை களை பொதுமக்களின் நலன்கருதி செவ்வனே நெறிப்படுத்தி பொறுப் புணர்ச்சியுடன் சேவையாற்றுவது அனை த்து உத்தியோகத்தர்களதும் தார்மீகப் பொறுப்பாகும்.





பாக்கு உரல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் நிர்வாக அமைப்பு ஓர் மீள்பார்வை

**தி. திருச்செந்தூரன்**
அபிவிருத்தி உதவியாளர்,
பிரதேச செயலகம், நல்லூர்.

மனித இனம் காடுகளில் வாழ்ந்த காலத்திலிருந்தே நிர்வாகமுறையும் தோன்றியது. மனிதன் தனித்தனியாக வாழ்ந்த காலம் மாறி குழுமங்களாக தலைவன் (வேடுவத் தலைவன்)ஒருவனின் கீழ் வாழத்தலைப்பட்டனர். கால ஓட்டத்தில் காடுகளை விட்டு வெளியேறிய மக்கள் புதிய சூழலை உருவாக்கினர். பின்னர் பல குழுமங்கள் சேர்ந்து சமுதாய அமைப்பு தோற்றமுற்றது பல சமுதாய அமைப்புக்களில் அதிக வளமுள்ள அதிக சொத்துக்களை உடைமையாக கொண்டவர்கள் பிரபுக்கள் என அழைக்கப்பட்டனர். அப்பிரபுக்களினால் சமுதாயத்தில் உள்ள ஏனையோர் நிர்வகிக்கப்பட்டனர். காலப்போக்கில் பிரபுக்களுக்கு எதிராக கிளர்ச்சிகள் ஏற்பட்டதன் காரணமாக பிரபுக்களின் நிர்வாக முறைமை நீக்கப்பட்டு மன்னர் ஆட்சி முறைமை தோன்றியது. இந்நிர்வாக முறைமையின் கீழ் ஒவ்வொரு இராச்சியமும் அரசனால் நிர்வாகிக்கப்பட்டது. குடும்பம், கிராமம் என்ற கூட்டு வாழ்க்கை ஏற்பட்ட போதே இவற்றை நிலைப்படுத்தி வளம் சேர்க்க நிர்வாக முறைமை தோன்றியிருக்கலாம். சமுதாய வாழ்க்கை பல விதத்திலும் பரந்துபட்ட நிலையில் பல நியதிகள் சட்டங்கள் என்பவற்றால் வழிநடத்தப்பட்டன. கலாசார நெறிமுறைகளும் சமயப்பண்பாடுகளும் வளர்ச்சியுற்றன. இவற்றின் ஒவ்வொரு கூறுகளிலும் நிர்வாகம் என்ற பொதுப்பண்பு ஊடுருவி நின்றது. மனிதனின் கூட்டுச்சமுதாய வாழ்க்கையில் நிர்வாகம் முக்கியமான ஒரு அங்கமாக வளர்ந்து வந்தது. இலங்கையின் நிர்வாக அமைப்புமுறையினை 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்திற்கு முன், பின் என நோக்குவது சாலச்சிறந்தது.

### சுதந்திரத்திற்கு முன் இலங்கையின் நிர்வாக அமைப்பு முறை

இலங்கையை 1505ஆம் ஆண்டில் போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றி இருந்தாலும் மதத்தைப் பரப்புதல் மற்றும் வர்த்தக நோக்குடன் செயற்பட்டார்களே தவிர அவர்கள் ஒரு நிர்வாக முறையை ஏற்படுத்த முனையவில்லை. அதேபோல் 1658 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த ஒல்லாந்தரும் வேறு ஒரு முறையில் மதத்தைப் பரப்பி வர்த்தக நோக்குடன் செயற்பட்டனர். ஆனாலும் சில நிர்வாக முறைகளை செயற்படுத்த அவர்கள் முனைந்தனர். அது பெருமளவில் வெற்றியளிக்கவில்லை. எனவே உண்மையான ஒரு நிர்வாக அமைப்பு முறை என்பது ஆங்கிலேயருடைய ஆட்சிக்காலத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேயே ஆரம்பமானது. ஏனைய இந்த நிர்வாக அமைப்பு முறையில் 1796 இல் இறைவரி அறவிடுபவர்கள் "Collectors" என்னும் பெயரில் கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், மன்னார், திருகோண மலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்கு நியமிக்கப்பட்டனர். 1798 இல் இவர்களது உத்தியோகபூர்வ பெயரை மாற்றி அதற்கு பதிலாக இறைவரி முகவர் (Agent of Revenue) என்னும் பதவி உருவாக்கப் பட்டது. இவர்கள் வட மாகாணம், கிழக்கு மாகாணம், தென் மாகாணம், மேற்கு மாகாணம், மத்திய மாகாணம் ஆகிய 5 மாகாணங்களில் நியமிக்கப்பட்டனர்.

**கோல்புரூக் கெமரனது நிர்வாக அமைப்பின் சீர்திருத்தங்கள்**

இலங்கையில் இருந்து கிடைத்த வருமானத்தை விட நிர்வாக செலவு அதிகரித்தமைக்கான காரணங்களை ஆராய கோல்புரூக் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அவர்களின் பரிந்துரை யின் பிரகாரம் 1833 இல் கோல்புரூக் கெமரனது புனரமைப்பு இறைவரி முகவர் என்னும் பெயர் அரசாங்க அதிபர் (Government Agent) என்பதாக மாற்றப்பட்டது. இவர்களுடைய முக்கிய கடமையாக வரி அறவிடுதலும் அதற்கு மேலதிகமாக மாகாண நிர்வாகம், விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி, சுகா தாரம், காணி தொடர்பான கடமைகள், வனப் பாதுகாப்பு, தொல்பொருட்களைப் பாதுகாத்தல், கலாசார அலுவல்கள், வீதிப்பராமரிப்பு, புள்ளிவிபரங்கள் திரட்டு தல், தேர்தல் அலுவலர் கடமை, பிறப்பு இறப்பு விவாகம் என்பவற்றைப் பதிவு செய்தல் போன்ற கடமைகளும் விதிக்கப்பட்டன. இதன் பிரகாரம் அரசாங்க அதிபரின் அலுவலகமானது மாகாணத்தின் அனைத்து அலுவல்களும் இணைப்புச் செய்யப்பட்ட மத்திய மையமாக விளங்கியது. இக்கால கட்டங்களில் மாவட்டத்தின் நிர்வாக அலுவலர்களைக் கவனிப்பதற்கு உப அரசாங்க அதிபர்கள் நியமிக்கப்பட்டிருந் தனர். அவர்களுக்குக் கீழ் பிரதேச பிரிவு உத்தியோகத்தர்கள் பதவிவகித்தனர். இவர்கள் "முதலாளி மார்கள்" "கோரளேக்கள்" "ரடேமஹத் துருக்கள்" எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப் பட்டனர். இப்பிரதேசப் பிரிவுகள் "பத்து" "பலாத்த" "கோரளே" எனவும் அழைக்கப்பட்டன. கிராமங்களின் நிர்வாகத்திற்கு பொறுப்பாக "கம்முலா தேனி" (விதானை) எனப்படுவோர்கள் காணப்பட்டனர்.

**டொனமூர் ஆணைக்குழுவின் நிர்வாக அமைப்பின் சீர்திருத்தங்கள்**

1931 இல் டொனமூர் ஆணைக் குழுவின் சீர்திருத்தத்தின் பிரகாரம் அரசாங்க அதிபர் பதவியின் செயற்பாடு களுக்கு மேலதிகமாக மக்கள் பிரதிநிதி களுக்கும் வகை சொல்ல வேண்டி யேற்பட்டது. அத்துடன் வேகமாக ஏற்பட்ட சமூக பொருளாதார அபிவிருத் தியுடன் சம்பந்தமான அலுவலர்களுடன் பல திணைக்களங்களும் தோற்றம் பெற்று அரசாங்க அதிபருக்கும் மேலாக மாவட்டத்துறைகளின் அலுவல்களுக்காக 1947 இல் நேரடியாக கொழும்பில் இருந்து உத்தி யோகத்தர்கள் நியமிக்கப்பட்டனர். அரசாங்க அதிபர் மற்றும் மாவட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகம் என்பன உள்நாட்டு அலுவலர் களின் பணிப்பாளர் கமிட்டியின் கீழ் வந்தன. 1947 இல் அதற்காக 19 மாவட்டங் கள் உருவாக்கப்பட்டு (யாழ். மாவட்டம் உட்பட) இவை நடைமுறைப்படுத்தப் பட்டன. மாவட்ட உப அரசாங்க அதிபர் பணிமனையான கச்சேரியிலேயே மக்களின் அனைத்து எழுத்து மூலமான கடமைகளும் மேற்கொள்ளப்பட்டன. 1939ஆம் ஆண்டு அனைத்து விடயங் களுக்கும் கச்சேரிக்குச் செல்லும் சிரமங்கள் அதிகரித்ததுடன் அங்கு ஏற்பட்ட ஊழல் கள் குற்ற நடவடிக்கைகள் என்பவற்றைக் குறைப்பதற்காக பிரதேசங்களில் பிரதேச இறைவரி அலுவலர் (Divisional Revenue Collector - DRO) காரியாலயங்கள் உருவாக்கப்பட்டு அங்கு பிரதேச இறைவரி அலுவலர்களை நியமித்து அக்காரி யாலயங்களில் இறைவரி சேர்த்தல், நீதியை யும் அமைதியையும் நிலை நாட்டுதல், உணவுக்கட்டுப்பாடு அலுவலர்கள், பொது மக்களுக்கான உதவி அலுவலர்கள், அரசாங்கக்காணிகள் பற்றிய பணிகள் முதலானவை ஆற்றப்பட்டு வந்தன. இதனால் மாகாண முறையில் இருந்த பொது நிர்வாகம் மற்றும் துறைசார் நிர்வாகங்கள் மாவட்டம் மற்றும் பிர தேசங்களுக்கு பரவற்படுத்தப்பட்டமை யானது பிரதேச அபிவிருத்திக்கான ஒரு அத்திவாரமாகக் காணப்பட்டது. இவ் வாறு துறைசார் அலுவல்கள் அமைக் கப்பட்டாலும் அனைத்து விடயங்களும் அரசாங்க அதிபரின் மேற்பார்வையின் கீழேயே மேற்கொள்ளப்பட்டன. (Annon, 1998)

## சுதந்திரத்திற்கு பின் இலங்கையின் நிர்வாக அமைப்பு முறை

### சோல்பரி ஆணைக்குழுவின் நிர்வாக அமைப்பின் சீர்திருத்தங்கள்

1948 இல் சோல்பரி ஆணைக் குழுவின் நிர்வாகப்புனரமைப்பு செயற் பாடுகள் தோற்றம் பெற்றன. 1948 பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கை ஒரு சுதந்திரமான இராச்சியமாக மாறியதுடன் மக்கள் பிரதிநிதிகளால் உருவான பாராளுமன்றமும் அமைச்சரவையும் ஏற்படுத்தப்பட்டன. பிரித்தானிய அரசின் ஒரு பிரதிநிதியாக ஆளுநர்நாயகம் நியமிக்கப்பட்டார். 1955 இல் அதுவரை இருந்த மாகாண அரசாங்க அதிபர் முறை ஒழிக்கப்பட்டு மாவட்ட அரசாங்க அதிபர் முறை அமுல்ப்படுத்தப்பட்டது. மேலும் 1948 இன் பின் தனியாக உருவாக்கப்பட்ட துறைசார் திணைக்களங்கள் அரசாங்க அதிபரின் கட்டுப்பாட்டிலிருந்து நீங்கி மாவட்ட மட்ட உத்தியோகத்தர்கள் மூலம் நேரடியாக கொழும்பில் இருந்து இயக்கப்பட்டன. அரசாங்க அதிபர் மாவட்டத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக இருந்ததுடன் எல்லா அலுவல்களும் அவரின் மேற்பார்வையுட னேயே நடைபெற்றது. கிராமிய மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு 1963 இல் "கம்முலா தேனி" என்னும் பெயர் மாற்றப்பட்டு "கிராம சேவகர்" முறை கொண்டுவரப்பட்டது.

### 1987 இல் மாகாணசபை சட்டத்தினால் கொண்டுவரப்பட்ட நிர்வாக பரவலாக்கல் மாற்றங்கள்

1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாகாணசபை சட்டத்தினால் ஆரம்பித்துவைக்கப்பட்ட அதிகாரப்பர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலாக்கல் முறையினுள் உட்பட்டன. அரசாங்க அதிபர் அலுவல்கள் மாகாண சபையின் நிர்வாகத்திற்கு உட்பட்டன. அரசாங்க அலுவல்களுக்காக பிரதேச உதவி அரசாங்க அதிபர்களாகவும், மாகாண சபை அலுவல்களுக்காக பிரதேச செயலாளர்களாகவும் மாகாண சபையின் நியமனமொன்றைப் பெற்ற உத்தி யோகத்தர்களாகவும் விளங்கினர். மாகாண சபையின் கீழ் செயற்படுதலின் நிதி சம்பந்தமான அதிகாரங்கள் பிரதேச செயலாளர்களுக்கு கிடைத்தவுடன் கணக் காளர் ஒருவரின் சேவையும் உதவிப் பிரதேச செயலாளர் ஒருவரின் சேவையும் கிடைத்தமையினால் நிறுவனத்தின் சக்தியும் அதிகரிக்கலாயிற்று. இவ்வாறு மாகாண சபை ஆரம்பித்த தோடு உதவி அரசாங்க அதிபர்கள் இரட்டை வேட மேற்க வேண்டி இருந்ததோடு தலைமைச் செயலாளர்களுக்கும் மாவட்ட செய லாளர்களுக்கும் பதில் சொல்ல வேண்டிய கடமையும் இருந்தது.

1992 ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க அதிகாரமளித்தல் சட்டத்தின் மூலம் பிரதேச செயலாளர்களுக்கு சட்டப்படி அதிகாரங்கள் வழங்கப் பட்டன. அதன்படி இதுவரைகாலமும் மாவட்டத்தின் அரசாங்க அதிபரிடம் பிரமாணக் குறிப்பின் மூலம் ஒப்படைக்கப் பட்டிருந்த அனைத்து அதிகாரங்களும் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப் பட்டன. இந்நடைமுறை 1993.01.01 ஆம் திகதி முதல் உத்தியோக பூர்வமாக நடைமுறைக்கு வந்தது. அதன்படி அனைத்து அரசாங்க செயற்பாடுகள் சம்பந்தமாக பிரதேச மட்டத்தில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தராக பிரதேச செயலாளரே காணப்பட்டார். இவ்வாறு பிரதேச செயலகம் பிரதேச மட்டத்தின் அபிவிருத்தி நிலையமாகவும் சேவைகளை வழங்கும் நிலையமாகவும் மாறியது.

"மக்களுக்காக அல்லது பொது நலனுக்காக செயற்படுவதனை பொது நிர்வாகம் எனக்கொள்கின்றோம்". பொது மக்களுக்காக அந்த நிர்வாக இயந்திரம் வெவ்வேறு நிலைகளில் பலராலும் வழிநடத்தப்பட்டுவருகின்றது. பொது நிர்வாகம் ஒரு நிறுவன ரீதியான கட்ட மைப்பைக் கொண்டுள்ளது. சமுதாய வாழ்க்கையின் பல தேவைகளை நிறைவு செய்யும் வகையில் திட்டமிடல், நடைமுறைப்படுத்துதல் போன்ற பணி களில் பொது நிர்வாகம் ஈடுபட்டுள்ளது. இன்றைய அரசினை ஒரு நிர்வாக அரசு என்று கூறும் அளவிற்கு அது தனது எல்லா அலுவல்களையும் நிர்வாகமயப்படுத்தி யுள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் அரசை இயக்கும் பெரும் இயந்திரமாக பொது நிர்வாகம் உருவெடுத்துள்ளது. அது ஒரு ஆக்க சக்தியாகவும் மனித நலன்களை ஊக்குவித்து மேம்படுத்தும் கருவியாகவும் வளர்ந்துள்ளது.

**யாழ். மாவட்டத்தின் நிர்வாக வரலாற்றி லிருந்து சிலதுளிகள்**

1956ஆம் ஆண்டு 10 பிரதேச இறைவரிக் காரியாதிகாரி பிரிவுகளைக் (DRO) கொண்டு யாழ். மாவட்டம் தனி மாவட்டமாக உருவாக்கப்பட்டு மாவட்ட அரசாங்க அதிபர் ஒருவரும் நியமிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டார். அப்போது காணப்பட்ட 10 பிரதேச இறைவரி காரியாதிகாரி பிரிவுகள் பின்வருமாறு.

1. நெடுந்தீவுப்பிரிவு
2. தீவகப்பிரிவு
3. யாழ்ப்பாணப் பிரிவு
4. வலிகாமம் மேற்குப் பிரிவு
5. வலிகாமம் வடக்குப் பிரிவு
6. வலிகாமம் கிழக்குப் பிரிவு
7. தென்மராட்சிப் பிரிவு
8. வடமராட்சிப் பிரிவு
9. பச்சிலைப்பள்ளி - கரைச்சிப்பிரிவு
10. பூநகரி - துணுக்காய்ப்பிரிவு

1960களில் பிரதேச இறைவரிக் காரியாதிகாரி பிரிவுகள் 12 ஆக அதிகரித்தன. அதன்படி பச்சிலைப்பள்ளி, பூநகரி, துணுக்காய், கரைச்சி ஆகிய பிரிவுகள் தனித்தனிப் பிரிவுகளாக உருவாக்கப்பட்டமையே காரணமாகும். இது 1973 இல் இவ்வெண்ணிக்கை 15 ஆக அதிகரிக்கப்பட்டது. அதன்பிரகாரம் வலிகாமம் தென்மேற்குப் பிரிவு, வலி தெற்குப் பிரிவு என்ற புதிய பிரிவுகளும் உருவாக்கப்பட்டதுடன் வடமராட்சிப் பிரிவு, வடமராட்சி வடகிழக்குப் பிரிவு, வடமராட்சி தென்மேற்குப்பிரிவு என இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டன. 1970 களில் சனத்தொகை விருத்தியடைந்தமையாலும் மக்களுடைய பிரச்சினைகள் தீவிரமடைந் ததாலும் மாற்றுப்பிரதேச முறையொன்றின் தேவைப்பாடு மேலும் அதிகரித்தது. இதன் காரணமாக 1972 இல் பிரதேச இறைவரி அலுவலர் முறை நீக்கப்பட்டு பிரதேச உதவி அரசாங்க அதிபர் முறை (Asst Government Agent - Divitional Level - AGA) கொண்டுவரப்பட்டது. இக்காரியாலயங் கள் உதவி அரசாங்க அதிபர் காரியாலயங் களாக மாற்றப்பட்டு மாவட்டத்தில் காணப்பட்ட காணி அலுவல்கள் யாவும் ஒப்படைக்கப்பட்டதுடன் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் திட்டமிடல், கலா சார நடவடிக்கைகளிலும் உதவி அரசாங்க அதிபருக்கு மேலும் அதிகமான பொறுப் புக்கள் ஒப்படைக்கப்பட்டன. மேலும் இக்காலப் பகுதியில் மாவட்ட அரசாங்க அதிபர் பிரதான கணக்களிக்கும் உத்தி யோகத்தராகவும் மாவட்ட விவசாய குழுவின் தலைவராகவும் பொறுப்பு வகித்தார்.

1987 இல் அரசாங்க அதிபர் மாவட்ட திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் குழுவின் செயலா ளராகவும் செயற்பட்டார். 1979ஆம் ஆண்டு வன்னி மாவட்டத்தில் இருந்தும் ஒரு பகுதியான துணுக்காய்ப்பகுதி முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. இதனால் யாழ் மாவட்டத்தில் இருந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் 14 ஆகக் குறைவடைந் தது. மேலும் 1984 இல் பச்சிலைப்பள்ளி, பூநகரி, கரைச்சி ஆகிய 3 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் இணைக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்டம் புதிதாக உருவாக் கப்பட்டது. இதனால் யாழ் மாவட்டத்தின் எல்லைகள் சுருக்கப்பட்டு எழுதுமட்டு வாள் வரை இதன் பரப்பு குறைவடைந்த துடன் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் எண்ணிக்கை 11 ஆகக் குறைவடைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1975 இல் தீவகப் பிரிவானது தீவகம் வடக்கு, தீவகம் தெற்கு என இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டதோடு வட மராட்சி கிழக்கு என்ற புதிய பிரிவும் நல்லூர் என்ற புதிய பிரிவும் உருவாக்கப் பட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் எண்ணிக்கை 14ஆக உயர்ந்தது.

1977க்கு முன்னர் 149 கிராம அலுவலர் பிரிவுகள் காணப்பட்டன. 1985 இல் யாழ். மாவட்டத்தில் 227 கிராம அலுவலர் பிரிவுகள் காணப்பட்டன. 1987 இல் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள், விவசாயப் பரம்பல் உத்தியோகத்தர்கள், உதவி சமூக சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கிராம அலுவலர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டதினால் யாழ் மாவட்டத் தில் கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை 435ஆக அதிகரித்தது. ஏனைய மாவட்டங்களில் காலத்துக்குக் காலம் இப்பிரிவுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு வருகின்றபோதும் இம் மாவட்டத்தில் கடந்த 20 ஆண்டுகளாக மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையில் எவ்வித மாற்றமுமின்றிக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

2003 இல் தீவகம் தெற்கு (ஊர்காவற்துறை) உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு, புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவாக உருவாக்கப் பட்டது. இதன் காரணமாக தற்போது யாழ்மாவட்டத்தில் 12 பிரதேச செலாளர் பிரிவுகளும் 3 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் காணப்படுகின்றன. கடந்த 7 வருடங்களாக இந்நிர்வாகப் பிரிவுகளில் எதுவிதமாற்றமுமின்றி காணப்படு கின்றமை குறிப்பிடத்தக்க தாகும்.

**உசாத்துணை நூல்கள்:**

1. வீரபத்திரபிள்ளை.ம, சாவகச்சேரி பிரதேச மலர், 2006 நிர்வாகப்பிரிவுகளும் அதன் பெயர்மாற்றங்களும்
2. அரைநூற்றாண்டு செயற்பாடுகள், பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு Annon, 1988
3. யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருடைய தொகுக்கப்பட்ட தினக்குறிப் பேட்டுப் பிரதி, 1950 - 1959



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம நிர்வாக முறைமையும் கிராம உத்தியோகத்தர் பதவியும் - ஓர் மீள் பார்வை

**சோ.சிவலிங்கம்**
கிராம உத்தியோகத்தர் – நிர்வாகம்,
பிரதேச செயலகம், நல்லூர்

நிர்வாகக் கட்டமைப்பில் கிராம உத்தியோகத்தர் பதவி மிகவும் சக்தி வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. எமது நாட்டின் அதிஉச்ச அதிகாரம் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களின் கைகளில் இருக்கின்ற போதிலும் அதனைப் பொதுமக்கள் மத்தியில் அமுல்படுத்து கின்ற அரசின் பிரதிநிதியாக கிராம மட்டத்தில் கிராம உத்தியோகத்தர்கள் செயற்படுகின்றனர். இந்தவகையில் அரசிற்கும் பொதுமக்களிற்கும் இடையில் இணைப்புப்பாலமாக கிராமஉத்தியோ கத்தர் விளங்குகின்றார். கிராம மட்டத் தலைமைத்துவப் பதவி பண்டைய காலத்தி லிருந்து நடைமுறையில் இருந்துவருகிற நிலையில் அப்பதவி தொடர்பான வரலாற்றை மீட்டுப் பார்ப்பது சாலவும் பொருத்தமானதாகும்.

**வரலாறும் கடமையும்**

பண்டைய அரசர்களின் ஆட்சிக் காலத்திலேயே கிராமிய மட்டத்திலான நிர்வாக முறைமை நடைமுறையில் இருந்ததாக வரலாற்று நூல்கள் மூலம் அறிய முடிகிறது. இக்கிராமிய நிர்வாகத் திற்கு கிராமிய மட்டத் தலைவர்கள் பொறுப்பாக இருந்துள்ளனர். இத் தலை வர்கள் காலத்திற்குக் காலம் வெவ்வேறு பதவிப்பெயர்களால் அழைக்கப்பட்டு வந்துள்ளார்கள். ஆரம்பத்தில் "உடையார்" என அழைக்கப்பட்ட இவர்கள் பிரித் தானியர் ஆட்சிக் காலத்திலிருந்து "கிராமத்தலைமைக்காரர்" (Village Head man) என அழைக்கப்பட்டனர்.

ஏறத்தாழ 1910 ஆம் ஆண்டளவில் "மணியகாரன்" பிரதேச நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருந்துள்ளார். இம் மணிய காரருக்குக் கீழ் கிராமத்தலைமைக் காரர்கள் கடமையாற்றி நிர்வாகம் சிறந்த முறையில் இயங்குவதற்கு உதவியுள்ளனர். மணியகாரரின் முக்கிய கடமைகளாக.

1. பிரதேச நிர்வாகத்திற்குத் தலைமை தாங்குதல்
2. அரசகாணிகளின் வருமானத்தை மதிப்பிடலும், அவற்றை அறவீடு செய்தலும் அவற்றைப் பாது காத்தலும்.
3. தலைவரிப்பணம் அறவிடுதல், ஆயவரி (சுங்கவரி) அறவிடுதல். இது போன்ற ஏனைய வரிகளை அற விடுதல்.
4. முறைப்பாடுகளை விசாரித்தல், நீதி வழங்கல், குற்றச் செயல்களைத் தடுத்தல், அமைதியை நிலை நாட்டல், குற்றவாளிகளைக் கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணித்தல், பொலிஸ் விதானையாகச் செயற்படல், சட்டத்தை மீறுபவர்களைத் தண்டித்தல்.

5. உட்கட்டுமானங்களை ஏற்படுத்தல் (வீதி, பாலம் போன்றவை)
6. உணவு விநியோகம் மற்றும் இயற்கை அழிவுகளின் போது நிவாரண வேலைகளை மேற்பார்வை செய்தல்

போன்ற கடமைகள் மணியகாரனால் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இப்பணிகளில் மணியகாரனுக்கு உதவியாக கிராமத்தலைமைக்காரன் கடமைகளை ஆற்றிவந்ததோடு தன் கிராமத்தை சிறந்த முறையில் வழிப்படுத்திக் கண்காணித்து வந்தார். கிராமத்தின் சட்ட ஒழுங்கை நடைமுறைப்படுத்தும் பொருட்டு

1. குற்றவாளிகளைக் கைதுசெய்தல்
2. அவர்களைத் தமது பாதுகாப்பில் வைத்திருத்தல்
3. சிறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல்
4. பொலிஸ் அதிகாரிகளின் கடமைக்கு ஒத்துழைப்பு வழங்குதல்

போன்ற கடமைகளும் கிராமத் தலைமைக்காரனுக்கு வழங்கப்பட்டிருந்தது.

பரம்பரை பரம்பரையாக இருந்து வந்த இப் பதவியானது கிராமத்தில் நிலபுலம் உள்ள செல்வாக்கான பரம்பரைக்கே பெரும்பாலும் வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் சம்பளமற்ற அந்தஸ்துக்குரிய பதவியாக விளங்கிய போதிலும் 1938 ஆம் ஆண்டில் இவர்களுக்கு 10 ரூபா சம்பளமாக வழங்கப்பட்டது.

ஏறத்தாழ 1945 ஆம் ஆண்டளவில் "மணியகாரன்" என்றமுறை இல்லாதொழிக்கப்பட்டு "பிரிவுக்காரியாதிகாரி" என்ற புதிய நிர்வாகமுறை நடைமுறைப் படுத்தப்பட்டது. இதன் பின்னர் "கிராமத் தலைமைக்காரன்" என்ற பதவிப்பெயரும் "விதானையார்" என்ற பதத்தால் வழங்கப்பட்டது. இப்பதவிக்குரியவர்களும் பரம்பரை பரம்பரையாகவே தெரிவு செய்யும் முறைமை காணப்பட்டது. 1960 ஆம் ஆண்டுவரை இந் நடைமுறையே வழக்கிலிருந்து வந்தது.

1960 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிராமத்தலைமைக்காரன் தேர்வு செய்யப்படும் முறை கொண்டுவரப்பட்டது. இம்முறையில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கும் பரம்பரை பரம்பரையாக இப்பதவியை வகித்தவர்களுக்குமிடையில் வேறுபாடுகள் உணரப்பட்டதினால் 1963 ஆம் ஆண்டில் இம்முறையிலும் மாற்றம் செய்யப்பட்டது. அதற்கமைய கிராமத் தலைமைக்காரன் பதவிக்கு "கிராம சேவகர்" எனப் பெயரிடப்பட்டு பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை கொண்டுவரப்பட்டது. இம்முறையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்கள் இடமாற்றம் செய்யப்படும் போது நாட்டின் எப்பிரிவிலும் கடமையாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. 1963 ஆம் ஆண்டிற்கு முன்னர் இடமாற்ற நடை முறை வழக்கத்தில் இருக்கவில்லை.

கிராமஅலுவலர்களுக்கு நடைமுறையிலுள்ள கட்டளைச் சட்டங்களினூடாக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை உரியமுறையில் நடைமுறைப் படுத்துவது அவர்களின் கடமையாகின்றது. ஆகவே கிராமஅலுவலர்கள்அநியாயங்களைத் தடுத்தல். அவற்றை இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், சமாதானத்தைப் பேணல் போன்ற நடவடிக்கைககளை "சமாதான அலுவலர்" என்ற ரீதியிலும் கிராமத்தில் நடைபெறுகின்ற அரசின் அனைத்துக் கடமைகள். விடயங்களில் நிர்வாக அலுவலர் என்ற ரீதியிலும் செயற்பட வேண்டியவராகின்றனர்.

**பதவியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றங்கள்**

1. கிராமசேவகர் என்ற பதவிப்பெயர் 1977 ஆம் ஆண்டு 5ஆம் இலக்க பதவிப் பெயரைத் திருத்தும் சட்ட மூலத்திற்கமைய கிராமசேவை அலுவலர் என மாற்றம் செய்யப் பட்டது.
2. 1982.01.01 இல் கிராம சேவை அலுவலகர் சேவையில் தரம் I, தரம் II என இரண்டு தரங்கள் உருவாக்கப் பட்டது.
3. 1987 இல் விசேட சேவை அலு வலர்கள் கிராமசேவை அலுவர்களாக உள்ளீர்க் கப்பட்டனர்.
4. 1989 ஆம் ஆண்டில் பயிர்ச்செய்கை அலுவலர்கள் கிராம சேவை அலுவலர் களாக நியமிக்கப் பட்டார்கள்.
5. 1990.01.01 இல் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின்கீழ் மத்திய அரசின் கீழிருந்த கிராமசேவை அலுவலர்கள் மாகாணசபைகளின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டனர்.
6. கிராமசேவை அலுவலர் எனும் பதவி கிராமஅலுவலர் என மாற்றம் செய்யப் பட்டபோது சமாதான அலுவலர்களுக் கான அதிகாரங்களும் இரத்துச் செய்யப்பட்டன.
7. 1995.01.01 இலிருந்து மாகாண அரசின் கட்டுப்பாட்டிலிருந்த கிராம அலு வலர் நிர்வாகம் மீண்டும் மத்திய அரசின் கீழ் கொண்டுவரப்பட்டது. அப்போது மீண்டும் சமாதான அலு வலர்களுக்கான அதிகாரங்களும் வழங் கப்பட்டன.
8. 1996.02.02 இல் கிராம அலுவலர் சேவையில் அதிசிறப்புத்தரம் ஏற்படுத் தப்பட்டது.

**கிராம உத்தியோகத்தர் பதவியிலுள்ள சில விசேட அம்சங்கள்.**

1. தாம் கடமையாற்றும் பிரிவை வசிப் பிடமாகக் கொண்டிருக்க வேண்டும்.
2. 24 மணிநேரமும் கடமையாற்ற கடப்பாட்டினைக் கொண்டிருத்தல்
3. தனது வாக்குரிமையை செலுத்து வதைத்தவிர வேறு எந்த அரசியல் உரிமையையும் அனுபவிக்க முடியாது.
4. முக்கியமாக அரசாங்கத்தின் சார்பாக ஒருவருக்கு கிராமஉத்தியோகத்தரால் மட்டுமே நற்சான்றிதழ் வழங்க முடியும்.
5. தான் கடமையாற்றும் பிரிவில் மரணச் சடங்கு உட்பட சகலநிகழ்வுகளிலும் அரசாங்கத்தின் பிரதிநிதியாகக் கலந்துகொள்ளும் உரிமை (அழைப்பு விடுக்கப்படாத போதிலும்)

**தற்காலத்தில் கிராம உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்**

1. கிராமஉத்தியோகத்தர் பதவியில் வெற்றிடங்கள் நிரப்பப்படாததால் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராம உத்தியோகத்தர்கள் கடமை யாற்ற வேண்டியுள்ளனர்.

2. ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங் களைக்கொண்ட கிராம உத்தி யோகத்தர் பிரிவுகள் இருப்பதால் கிராம உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழுவும் மக்களை இனங் காண்பதில் பிரச்சினையும் வேலையில் தாமதமும் ஏற்படுகிறது.
3. கடமைப்பட்டியலில் குறிப்பிட்ட வாறு வேலை இல்லாமையும் பல்வேறு திணைக்களங்களும் கிராம உத்தி யோகத்தர்களைச் சார்ந்திருத்தலும்.
4. நவீன தொழில்நுட்பக் கருவிகள் வழங்கப்படாமையும் பொருத்தமான அலுவலக அமைவிடங்கள் ஒதுக்கப் படாமையும்.

**வினைத்திறனுடன் கடமையாற்றுவதற்கு கிராம உத்தியோகத்தர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டிய பண்புகள்**

1. பதவிக்கு வருவதற்கு முன்னரே கிராம உத்தியோகத்தர் பதவியிலுள்ள சாதக பாதக நிலைமைகளை ஆராய்ந்து முழுமனதுடனும் தெளிவுடனும் பதவிக்கு வரவேண்டும்.
2. தகவல்கள், தரவுகள் என்பவற்றைப் பெறுவதற்கு சகல திணைக்களங்களும் கிராம உத்தியோகத்தரைச் சார்ந்திருப்ப தால் சகல கிராம உத்தியோகத்தர்களும் கணனி மற்றும் தகவல் தொடர்பாடற் சாதனங்களைக் கையாள்வதில் நிபுணத்துவம் பெற்றிருக்க வேண்டும்.
3. அர்ப்பணிப்புடனும் சேவை மனப் பான்மையுடனும் கடமையாற்றுவ தற்குக் கிடைத்த கிராம உத்தியோகத் தர் பதவியை சந்தர்ப்பமாகக் கருதாமல் ஒரு பாக்கியமாகக் கருத வேண்டும்.

மேற்கூறிய விடயங்களைக் கருத்திற் கொண்டு அர்ப்பணிப்புடனும், நீதி யாகவும், நேர்மையாகவும் கிராம மட்டத் தில் அரசாங்கத்தின் பிரதிநிதியாக கிராம உத்தியோகத்தர்கள் கடமையை மேற் கொள்ளும் போது நல்லாட்சி என்பது எமது மண்ணில் தானாகவே மலரும்.



மரப்பெட்டகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமைத் தணிப்பு நடவடிக்கைகளில் சமுர்த்தி திட்டத்தின் பங்கு

டி. தயாகரன்
சமுர்த்தி முகாமையாளர்,
பிரதேச செயலகம், நல்லூர்.

ஒரு நாட்டின் அல்லது பிரதேசத்தின் அல்லது கிராமத்தின் அபிவிருத்தியானது அங்கு காணப்படுகின்ற வளம், மக்களின் வாழ்க்கை நிலைமை என்பவற்றில் தங்கியுள்ளது. இங்கு வறுமையானது தொடர்ச்சியாகக் காணப்படுமாயின் அபிவிருத்தியிற் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். "ஒருவர் ஒழுங்கானதும் செம்மையானதும், நெறியானதும், ஆரோக்கியமானதுமான வாழ்க்கையை கொண்டு நடாத்த முடியாது போனால் அந்நிலை வறுமை என அழைக்கப்படும்.

ஒருவர் உயிர்வாழ்வதற்குத் தேவையான வருமானத்தைக் கொண்டிருக்காத நிலை முழுவறுமை எனவும், உயிர் வாழ்வதற்குத் தேவையான வருமானத்தைக் கொண்டிருந்தும் சமூகத்திலுள்ள ஏனையவர்களைப்போல் வாழ்வதற்கு ஏற்ற வசதி வாய்ப்புக்களை கொண்டிருக்காத நிலைமை சார்பு வறுமை எனவும் அழைக்கப்படுகின்றது.

நீண்டகாலமாக அந்நியரின் ஆட்சியின்கீழ் இலங்கை அடிமைப் படுத்தப்பட்டிருந்தமையால் சுதேசமக்களின் வறுமை தொடர்பாகவோ அல்லது நாட்டின் அபிவிருத்தி தொடர்பாகவோ அன்றைய ஆட்சியாளர்கள் அதிகம் அக்கறை காட்டவில்லை.

வறுமை ஏற்படுவதற்கான காரணிகள்

1. வளப்பற்றாக்குறை
2. உற்பத்தித்திறன் வேறுபாடு
3. வருமானப் பங்கீட்டில் ஏற்றத்தாழ்வு
4. சொத்துக்கள், வளங்கள் சரியான முறையிற் பங்கிடப்படாமை
5. அதிகரித்த போதைப்பொருட் பாவனை
6. சூதாட்டம், களியாட்டம், அத்தியாவசியமற்ற பொருள் மீதான செலவு
7. குடும்பத்தவர்களிடையே ஒன்றிணைந்த முயற்சியின்மை
8. பாரம்பரிய சொத்துக்களுக்கு உரிமையாகாமை
9. வறுமையிலிருந்து மீள வேண்டுமென்ற எண்ணம் இல்லாமையும், மீள்வதற்கு எவரும் உதவி புரியாமையும்
10. போலி நம்பிக்கையும், தேவையற்ற வெட்கமும்
11. இயற்கை அழிவு, யுத்தம் போன்ற வற்றாற் சொத்துக்கள் அழிந்தமை

இவ் வறுமையைப் போக்குவதற்குச் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலப் பகுதியில் ஆட்சிக்குவந்த ஆட்சியாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களால் பல்வேறு செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அவை யாவன:

1. காணிச் சீர்திருத்தச் சட்டம்
2. உணவு முத்திரைத் திட்டம்
3. விவசாய ஊக்குவிப்புத் திட்டம்
4. நிலப்பங்கீட்டுத் திட்டம், விவசாயச் சீர்திருத்தச் சட்டம்
5. விலைக்கட்டுப்பாட்டுத் திட்டம்
6. பொதுசன மாதாந்த உதவிப்பணத் திட்டம்
7. ஜனசக்தி
8. சமுர்த்தி

**சமுர்த்தித்திட்டம்**

இச் சமுர்த்தித் திட்டமானது "வறியோர் குறைந்த சுபீட்சமிகு இலங்கை" என்ற பதத்தை நோக்காகக் கொண்டு 1995ஆம் ஆண்டு 30ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் வறுமைத் தணிப்பினை மேற்கொள்வதற்காக இலங்கை சமுர்த்தி அதிகாரசபையும், சமுர்த்தி ஆணையாளர் திணைக்களம் என இரு அரச நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. வறுமை என்பது தானாக உருவாகின்ற ஒன்று அல்ல. மக்களாலே உருவாக்கப் படுகின்ற ஒன்றாகும். இவ் வறுமையை குறைக்கலாமே தவிர வறுமையை ஒழிக்க முடியாது. இவ் வறுமையைத் தணிப்பதற்கான சமுர்த்தித் திட்டமானது பல்வேறு நோக்கங்களை (குறிக்கோள்களை) அடிப்படையாகக் கொண்டு 1996ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை செயற்பட்டு வருகின்றது.

**நோக்கங்கள்**

1. வறியவர்களை ஒரு அமைப்பின்கீழ் கொண்டுவருதல் அதாவது குழுக்களாக ஒன்றுதிரட்டி பலம்வாய்ந்த அமைப்பாக மக்களை மாற்றல்
2. மக்களிடையே தீர்மானம் எடுக்கும் திறன்களை விருத்தி செய்தல்
3. சேமிப்புப் பழக்கத்தை மக்களிடையே விருத்தி செய்தல்
4. மக்களிற்குத் தேவையான மூலதனத்தை வழங்குதல்
5. பொருளாதார, சமூக மேம்பாடுகளை மக்களிடையே பரவ விடுதல்

மேற்குறித்த இலக்குகளை அடைவதற்காக சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பின்வரும் செயற்பாடுகள் அமைகின்றன.

1. சேமிப்பினை ஊக்குவித்து மூலதனத்தை வழங்குதல்
2. பொருளாதார மேம்பாடுசார் அபிவிருத்திக்கருத்திட்டங்களைச் செயற்படுத்தல்
3. நலனுதவிக் கொடுப்பனவு சார்ந்த திட்டம்

மக்களிடையே சேமிப்பினை ஊக்குவித்து மூலதனத்தை வழங்கும் செயற்றிட்டத்திற்கு இலங்கை முழுவதும் 1040 சமுர்த்தி வங்கிகள் தமது சேவைகளைச் செய்து வருகின்றன. 5 பேர் கொண்ட சிறு குழுக்கள் உருவாக்கப் பட்டுச் சிறுகுழுக்கள் ஊடாகச் சேமிப்பினைத் திரட்டுகின்றன. மேலும் மகளிருக்கென உருவாக்கப்பட்ட " திரிய மாதர்'' கணக்கு, சிறுவர்களுக்கென உருவாக்கப்பட்ட அரும்புகள், சிசுரக்க கணக்கு, அங்கத்தவர் அல்லாத கணக்கு போன்ற கணக்கு போன்ற கணக்குகள் ஊடாகவும் சேமிப்பினைத் திரட்டுகின்றன. இவ்வாறான கணக்குகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமித்த தொகை மீதிகளிற்கு வட்டி வழங்கப்படுகின்றது. மேலும் 500/= பெறுமதியான பங்குகள் கொள்வனவு செய்து சமுர்த்தி வங்கியின் உரிமைதாரர் களாக மக்கள் மாறுகின்றனர். மக்கள் தாமாக சேமிக்கும் பழக்கம் இல்லை என்ற காரணத்தினால் மக்களின் வீடுகளிற்கு நேடியாகச் சென்று இத்தகைய சேமிப்புக் களை திரட்டுகின்ற அற்புத பணியைச் சமுர்த்தி வங்கி செய்து வருகின்றது. இந்தச் செயற்பாடு எந்த வங்கிகளிலும் காண முடியாத ஒன்றாகும். இவ்வாறு திரட்டப்பட்ட சேமிப்புகளை ஏற்படுத்தி வறிய மக்களின் வாழ்க்கையை மேம்படுத்து வதற்கு மீன்பிடி மற்றும் மிருக வளர்ப்பு , விவசாயம், சிறுகைத்தொழில், வியாபாரம் போன்ற சுயதொழில் முயற்சி களிற்கு கடன் வழங்கி வருமானத்தை பெறும் வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக் கின்றன. தொழில் முயற்சிக்கு மூலதனம் அற்றிருக்கும் வறியவர்களிற்கு மூலதன ஏற்பாடுகளை வழங்குவதற்கு சமுர்த்தி வங்கி தயார் நிலையிலுள்ளது. தற்போது நுண்நிதி செயற்பாடுகளில் சமுர்த்தி வங்கி முக்கிய பங்கு வகிக்கின்றது.

**கடன்திட்டம்**

கடன் வழங்குவதற்கான நிபந்தனைகளாக:

1. சிறுகுழு, சமுர்த்தி சங்கத்தினது அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்
2. கடன் பெறும் தொகையின் 10 % பங்கு கணக்கிற்கு பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்
3. கடன் தொகையின் 25% குழுக்கணக்கு மீதியாக இருத்தல் வேண்டும்
4. கடன் பெறும் நோக்கம் நிறைவேற்றி இருக்க வேண்டும்

ஏனைய வங்கியை போல் அல்லாது இதற்கு 4 பேர் கொண்ட பிணை போதுமானதாகும். சொத்துக்கள் பிணையாக கொடுக்க வேண்டிய அவசிய மில்லை. கடனுக்கான வட்டி வீதம் வருடாந்தம் 12% ஆகவும் குறைந்து செல்லும் மீதிக்கு அறவிடப்படுகின்றது. கடன் பெறும் நோக்கத்தைப் பொறுத்து தற்போது 5000/= தொடக்கம் 100000/= வரை கடன் வழங்கப் படுகின்றது.

**வறுமையில் வாடும் மக்களை "மக்கள் நேயத்துடன்" அரவணைக்கும் வங்கியாக சமுர்த்தி வங்கி காணப்படுகின்றது**

பொருளாதார அபிவிருத்திசார் கருத்திட்டங்களைச் செயற்படுத்தும் நோக்கமாக தற்போது 3060 கிராமங்கள் இலங்கை பூராகவும் அதாவது ஒரு வங்கிக்கு 03 கிராமங்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு அந்தக் கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக கிராமத்தில் காணப்படும் குறைந்த வருமானம் பெறுவோரை வலுவூட்டி அவர்களை உயர்ந்த பொருளாதார மற்றும் சமூக ரீதியாக மேம்பாடுடைய வாழ்க் கைத் தரத்திற்குக் கொண்டுவரும் செயற் பாட்டை முன்னெடுத்து வருகின்றது.

1. சிறுகுளங்கள், நீர்ப்பாசனக் கால்வாய் கள், அணைக்கட்டு, விவசாயக்கிணறு அமைத்தலும், புனரமைத்தலை மேற்கொண்டு கிராமத்தின் உட்கட்ட மைப்பு வசதிகளை மேம்படுத்தலும்
2. வீட்டுக்கைத்தொழிலிற்குரிய நிலையங் கள், பல்பணி நிலையங்கள், மிருக இனப்பெருக்க நிலையங்கள் முதலிய வற்றினை தீர்மானித்தல்.
3. குடிநீர் வசதி, சிறிய நீர் மின்நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யங்கள், சேதனப்பசளை உற்பத்திக் கருத்திட்டம், கழிவுப்பொருள் மீள் சுழற்சிக் கருத்திட்டம், கணனி தொழில் நுட்ப அபிவிருத்திக் கருத்திட்டம், சுற்றாடல் பாதுகாப்புக் கருத்திட்டம் போன்றவற்றை மேற்கொள்ளல்.

4. சிறிய பாலங்கள், படிக்கட்டுகள், கிராமிய சிறுபாதைகள் அமைத்தல்

மேற்படி உட்கட்டமைப்பு வசதிகளை 500 000/= செலவில் மேற்கொண்டு வருகின்றது.

**ஆ) வாழ்வாதாரக் கருத்திட்டம்**

மேற்படி கிராமங்களில் 230 000/= பெறுமதியான கருத்திட்டமும் இதனை விட ஏனைய கிராமங்களிற்கு 70000/= பெறுமதியான கருத்திட்டமும் என்ற வகையில் வறிய மக்கள் சார்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**நோக்கங்கள்**

1. வறிய மக்களின் வாழ்வாதார வளர்ச்சிக்கு உறுதுணை புரிதல்
2. பிரதேச ரீதியாகப் பரந்துள்ள வளங்களையும் திறன்களையும் ஒன்றிணைத்த தேசிய உற்பத்திக்குப் பயனுள்ளதாக மாற்றுதல்
3. புதிய தொழில்நுட்பம், முகாமைத்துவம் மற்றும் சந்தைகள் பற்றிய அறிவினை விருத்தி செய்து வருமானத்தை உயர்த்துதல்.
4. வறியவர்களின் போசணை மட்டத்தை உயர்த்துதல்

இவ் வாழ்வாதார கருத்திட்டமானது

1. விவசாய அபிவிருத்தி
2. கால்நடை அபிவிருத்தி மற்றும் மீன்பிடி அபிவிருத்தி
3. கைத்தொழில் அபிவிருத்தி
4. சந்தைப்படுத்தல் மற்றும் சேவைகள் அபிவிருத்திஎன்பவற்றைக் கொண்டுள்ளது.

மேற்படி நடவடிக்கைகளை மேம்படுத்தப் பணமாகவன்றி மூலதனப் பொருட்களாக வழங்கி அவர்களைத் தொழில் முயற்சியில் ஈடுபடுத்தி வருமானத்தை உயர்த்துகின்றது.

**நலனுதவி சார்ந்த கருத்திட்டம்**

வறியவர்களின் நலனில் அக்கறை செலுத்தி அவர்களிற்கான பல நலனுதவித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

**1. முத்திரை நிகழ்ச்சித் திட்டம்**

இலங்கையில் மொத்த சனத் தொகையில் 53%மானவர்கள் சமுர்த்தி முத்திரை நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது. இம் முத்திரைகள் 1500/=, 1015= 900/=, 615/=, 575/=,375/=, 350/=,250/= முதலான பெறுமதிகளை உடையனவாகும். இப்பெறுமதியானது மாதாந்த புள்ளி அடிப்படையில் பொருட்களாகவும், பணமாகவும், கட்டாய சேமிப்பாகவும், சமூகப் பாதுகாப்பு நிதிய சந்தாவாகவும், வீட்டு லொத்தர் என்ற முறையிற் செயற்படுத்தி வருகின்றது. இம் முத்திரை பெறுமதியில் 1500/=, 1015/=, 900/=,615/= பெறுமதிகளிற்கே கட்டாய சேமிப்பு, சமூக பாதுகாப்பு கொடுப்பனவுகளின் நன்மைகள் கிடைக்கின்றன. இதனை விட அனைத்து வகை முத்திரைகளிற்கும் வீட்டு லொத்தர் நிதியம் மாதாந்தம் 10/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடை முறைப்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் அதிஸ்டம் கிடைப்பவர்களுக்கு 150000/= காணி கொள்வனவு செய்ய அல்லது வீடு கட்ட நிதி வழங்குகின்றது. கட்டாய சேமிப்பானது 300/=, 200/=, 150/=,100/= என மாதாந்தம் அவர்களின் பெயரில் சேமிக்கப்பட்டு வருகின்றது. மேலும் பொருட்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் சங்கம் உத்தரவு பெற்ற நிறுவனங்களூடாக வழங்கப்பட்டு வரு கின்றது. பணமாக 545/=,360/=, 315/=, 210/= என சமுர்த்தி வங்கியூடாக வழங்கப் படுகின்றது. இதனைவிட சமூக பாதுகாப்பு நிதியிலிருந்து குழந்தை பிறக்கின்ற சந்தர்ப்பத்தில் முதலாவது குழந்தைக்கு 5000/=வும் இரண்டாவது குழந்தைக்கு 2500/=வும் என வழங்கப்படுகின்றது. நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்ற சந்தர்ப்பத்தில் ஒரு நாளைக்கு 100/= வீதம் ஆகக்கூடியது 3000/= வழங்கப் படுகின்றது. திருமணம் நடைபெறுகின்ற சந்தர்ப்பத்தில் உறுப்பினர்களுக்கு 3000/=வும் அங்கத்தவர்களுக்கு 1000/= வும் வழங்கப்படுகின்றது. மரணம் நிகழ்ந் தால் 10 000/= வழங்கப்படுகிறது.

**ii) போசணை முத்திரை**

குழந்தை பெற்றுக் கொண்ட தாய்மார்களிற்கு ஒரு வருடம் வரை (12மாதங்கள்) மாதம் ஒன்றிற்கு 200/= வீதம் போசணைப் பொருட்கள் வழங்க நட வடிக்கை எடுக்கப்படுகின்றது. இதனால் தாய்க்கும் சேய்க்கும் போசணை மட்டம் அதிகரிக்க வழியேற்படும்.

**iii) குழந்தைகளுக்கான பால் முத்திரை**

2-5 வயதுக்கிடைப்பட்டவர்களின் உடல், உள ஆரோக்கியத்தை மேம் படுத்த மாதம் ஒன்றிற்கு 200/= பெறுமதி யான தூய பசும்பால் வழங்கும் திட்டம் 36 மாதங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

**iv) சிப்தொர இரண்டாம் நிலைக் கல்வி புலமைப்பரிசில் கொடுப்பனவு**

க.பொ.த.சாதாரணத்திற் சித்தி யெய்தி க.பொ.த. உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை ஊக்குவிக்க மாதம் ஒன்றிற்கு 500/= வீதம் உயர்தர கல்வி கற்கும் வரை வழங்கப் படுகின்றது.

**v) திரிய பியச வீட்டுத்திட்டம்**

குடியிருக்க வீடு அற்றிருக்கும் வறிய குடும்பங்களின் வீட்டு வசதியினை பூர்த்தி செய்யும் முகமாக அத்திரிய பியச வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படு கின்றது.

**vi) மண்ணெண்ணெய் மானிய முத்திரைத் திட்டம்**

மின்சார வசதிகளற்ற வறிய குடும்பங்களுக்கு மாதாந்தம் 100/= பெறு மதியான மண்ணெண்ணெய் முத்திரை வழங்கப்பட்டுள்ளது.

**vii) முச்சக்கரவண்டிகளிற்கான பெற்றோல் மானியம்**

பொதுப்போக்குவரத்தில் வாடகை நோக்கத்தில் ஈடுபடுத்தும் முச்சக்கர வண்டி உரிமையாளர்களிற்கு பொது மக்களிடம் குறைந்த கட்டணத்தில் வாடகை அறவிடப்படுவதற்கு வசதியாக மாதம் ஒன்றிற்கு 20/= வீதம் 75L பெற்றோலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்த விலையில் மானியமாக 1500/= விற்குப் பெற்றுக்கொள்ள இச் செயற் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

மேற்படி மூன்று செயற்திட்டங் களையும் வறுமைத் தணிப்பிற்காகச் சமுர்த்தித் திட்டம் என்ற மையக்கருவின் அடிப்படையில் வைத்து செயற்படுத்தி வந்துள்ளன. இதற்கு முன்னைய திட்டங்கள் எல்லாம் ஒரு செயற்றிட்டம் சார்ந்ததாகக் காணப்பட்டது. ஆனால் வறுமைத் தணிப்பிற்காகச் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் பல்முகத் தேவைகளை பூர்த்தி செய்து வறிய மக்களை அபிவிருத் திப் பாதையை நோக்கி முன்நகர்த்தி மிளிரச் செய்கின்ற திட்டமாக காணப்படு கின்றது. சமுர்த்தித்திட்டம் ஆரம்பிக்கப் பட்ட காலப்பகுதியில் 48% மானவர்கள் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தில் இணைந் திருந்தனர். தற்போது வழிப்படுத்தலின் பின்னர் 38% மானவர்கள் சமுர்த்தித் திட்டத்தின் நன்மைகளை அனுபவித்து வருகின்றனர். இச் சமுர்த்தித்திட்டத்தை வறிய மக்களின் சார்பாகசேவை செய்வதற் கென இலங்கை பூராக 2 400 சமுர்த்தி முகாமையாளர்களும் 22 000 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டு சேவையாற்றியதன் வகையில் 10% வறியமக்கள் வலுப் படுத்தப்பட்டுள்ளனர்.

இலங்கை மத்திய வங்கிப் புள்ளிவி பரத்திணைக்களத் தரவுகளின் படி தற்போது 15.2% மாக நாட்டின் வறுமை குறைவதற்கான காரணம் சிறப்பாக நடை முறைப்படுத்திவரும் சமுர்த்தித்திட்டம் என்பதில் ஐயமில்லை. மேலும் இனிவரும் ஆண்டுகளில் 11.5%ஆக வறுமை தணிக்கும் செயற்திட்டத்திற்கு சமுர்த்தித் திட்டம் முக்கிய பங்கு வகிக்கும் என்பதில் உறுதியாக இருந்து வறியமக்களின் எதிர்காலம் சுபீட்சம் அடையமுடியும் என்ற நம்பிக்கை கட்டியெழுப்பப்படும்.




கலைஞர் கௌரவிப்பு கையேடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞான நல்லூர்

கவிஞர் த. ஜெயசீலன்

ஞான நதி இயல்பாய்ச் சுரக்கும் மடி ... பாணன்
யாழ்மீட்டிப் பெற்ற நகரின்
தலைமைஊர்.
யாழ்ப்பாணத்தின் தமிழின், சைவத்தின்,
பண்பாட்டின்,
ஆழ்ந்த கலைகளின், அரசியலின், அடையாளம்
எத்தனை இடர்வரினும்;
எத்தனை இடிவிழினும்;
செத்திடா எம் குணச் சிறப்பினது ஊற்றுக்கண்.
"பஞ்சம்பழி வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும்"
அஞ்சாது அழகு
அழியா தெழும்பு(ம்) இடம்.
'எப்படி இருந்ததெம் இனத்தின் செழிப்' பென்று
இப்போதும் 'யமுனாரி' ஏரியூடும்,
'சங்கிலியன்
தோப்பூடும்', 'மந்திரி மனையூடும்'.... தொடர்கதைகள்
சொல்லிச் சிலிர்க்கும் சுவர்க்கபுரி .
சங்கிலியன்
கடைசியாய் ஆண்டிருந்த களம் .
அட்ட திக்கினிலும்
படைவீடாய்க் கோவில்கள்
பரிபாலனஞ் செய்ய
தமிழே அரசாண்டு தலைநிமிர்ந்த இராஜதானி .
சுற்றிவரக் குளங்கள்
சூழ்ந்துகாவல் அரண்களாகி
நிற்கக், குளுமை நிழலில் உயிர்பெருக,
அற்புத நிலத்து
அடிநீர் உடல்வளர்க்க,
பச்சைப் பசேலாய்ப் பரவிக் கிடக்கு(ம்) வயல் .
அச்சமற்ற பனைகள்
ஆகாயம் தடவு(ம்) அயல் .
அமிழ்தாய்த் தமிழை
அன்றிருந்து கடைந்தெடுத்தோர்
சமயநெறி - உயிராய் மதித்துத் தழைத்தபதி .
பண்பட்ட மாந்தர்,
பிரதிபலன் பாராதோர்,
விண்ணர், குபேரர்கள், விளைந்து மலிந்ததலம்.
கற்றுச் சிறந்தோர் கடலாக ஆர்ப்பரிக்க
விற்பனரும் நிபுணரும் வென்று நிமிர்ந்தமுற்றம்.
ஆயிரம் கவிஞர்கள்
அவதரித்த வயிறு..... பல்
ஆயிரம் கலைஞரை
அன்றிருந்து இன்றுவரை
தோன்றவைக்கும் அமுத சுரபி.
பொழுதெல்லாம்
நாத சுரமும், தவிலும், நறுங்குழலும்,
வேதமும், தேவாரம், மந்திரமும், பண்ணிசையும்,
காண்டா மணியொலியும்,
நாட்டுப் புறஇசையும்,
பேச்சும், நடிப்பும், பிரசங்கம், கூத்துகளும்,
ஆச்சர்யக் கவியும், அபிநயமும்,
விளையாட்டும்,
மூச்சில் கலந்து தலைமுறை தலைமுறையாய்
காய்த்துக் குலுங்கும் கவின்நல்லை!
நாவலரின்
தாய்பூமி;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழுக்காய்த் தம்மை விதைத்தவர்க்கு
பாயாய்க் கிடந்த தரை .
பாய்ந்து தொடர்ந்தழித்த
பேய் யுத்தத் தாலும் பெரிதாய்க் குலையாமல்
மீள்எழுச்சி பெற்று
விதி செய்த மேன்மைநிலம் .
பிறர்க்கு வழிகாட்டும் பெருங்கல்விக் கோபுரங்கள்
நிறைந்த வெளி. வந்த
பிசிகெல்லாம் நீறவைக்கும்
அறமும் தவமும் அருளும் அகிம்சையதும்
பெருக.... அந் நியத்தைப்
பரப்பநின்றோர் தோற்றதிடல் .
பிறரும் விரும்பிவந்து பெருமைபெற் றுயர்ந்தநிழல்.
புதுமைகளை உள்வாங்கி
பழமைகளின் உயிர்ச்சாரம்
சிதையாமல் இயற்கையாகச் சிறப்புப் பெறும்பூமி
ஞான நதி இயல்பாய்ப் பாயும் மடி... நூறு
ஞானியரும் சித்தர்களும் திரிந்து
சமாதியாகி
ஆன்மீக அதிர்வை அள்ளிச் சுரந்திருக்க,
வானோரும் மண்ணோரும் வணங்கவரும்
நல்லூரான்
கோவில்கொண் டமர்ந்து குறைதீர்க்கும் குடிலிந்த
நல்லூர்!
இலங்கையின் சென்னி யாழ்ப் பாணமென்றால்....,
நல்லூர் ... அந் நெற்றியிலே
ஞானநெற்றிக் கண்ணேதான்!



துவிச்சக்கரவண்டி முகப்பு விளக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாண்டு வாழி பழுத்து

**செ. சுதாகரன்**
முகாமைத்துவ உதவியாளர்,
பிரதேச செயலகம், நல்லூர்.

தொன்மைமிகு நல்லூரிற் தூயபணி யாற்றிநிதம்
மன்னுபுகழ் பிரதேச மாண்புயர்த்தி - இன்றிந்த
புத்தெழில் நிலையத்தில் புகுந்திடும் வேளை
இத்தரை மகிழும் இனி

செந்தில் குமரன் சீர்நல்லை நாதனை
வந்தமர்ந் தென்றும் வணங்கி - எந்நாளும்
நல்லபணி யாற்றி நலமோ டோங்கிப்
பல்லாண்டு வாழி பழுத்து

பணியாற்றும் அலுவலரின் பாங்கான சேவையினால்
அணிபெறும் இந்த அலுவலகம் - துணிவோடு
பல்லாண்டு பணியாற்றிப் பரிசுகள் பலபெற்றுப்
பல்லாண்டு வாழி பழுத்து

மக்கள் சேவையினை மகேசன் சேவையாக்கி
அக்கண் நிறைவேற்றும் அலுவலர்கள் - பக்குவமாய்
இங்குள மக்களின் இடர்களை யகற்றிப்
பங்கமில் பணியாற்றுவர் பார்

சொற்றமிழ் வளர்த்த நாவலர் தோன்றிய
நற்றமிழ் ஊராம் நல்லையிலே - பற்றுடன்
இங்கெழும் பிரதேச செயலகமும் இனிதே
இங்கிதமாய் பணிசெயும் இனி

கல்விச் சாலைகளும் கவினார் சோலைகளும்
பல்கிப் பெருகிய பூமியிது - நல்லூரென
நாமமொடு இங்கெழும் நற்பிரதேச செயலகம்
சேமமுடன் உயரச் செப்பு

கற்றவர் நிறைந்திலங்கு கவினுறு பூமியிது
மற்றவர் அறியா மாண்பொடு - இற்றரையில்
என்றும் உயர்வாய் இருக்கவே நல்லைக்
குன்றக் குமரனையே கூப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வாழ்வு வாழியவே

**வை. சுரேஸ்**
கிராம உத்தியோகத்தர்,
ஐயனார்கோவிலடி J/97

நீராடும் கடல் சூழ்ந்திடு நித்திலத் தீவின்
நிமிர்ந்திடு சிகரமென விளங்கிடும்
பேராரும் பெரு மன்னர் தம் தலைநகராம்
பெருமைகள் பல கொண்டே தான் விளங்கும்
சீராரும் நல்லூரில் செயலகம் தனக்கென்று
சிறந்திடும் அலுவலகம் செம்மையாய் ஆக்கிட
கூராடும் வேல்கொண்ட குமரனவனைக்
கும்பிட்டே தொழுதிடுவோம்.


நாடியே வருகின்ற நம்மக்கள் அனைவருக்கும்
தேடியே சேவைகள் பல செய்யவென்றே
கூடிய கூட்டமாய் அலுவலகத்தில்
செந்தில் வேலவன் பெயர் கொண்ட
செயல் வீரன் சேனைகளாய் சேர்ந்தே பணிசெய்து,
நல்லதோர் அலுவலக மெனவே நல்லோர் போற்றிட
அல்லல்படும் மக்களிற்கு ஆதவன்போல்
அரும்பணியாற்றி அகத்தினில் மகிழ்வுறுவோம்.

நல்லைக்கந்தன் தன் அழகுறு ஆலயமும் அரசாண்ட
சங்கிலி மன்னவன் அரண்மனையும் அணிந்தே
அமைந்திடு அமைச்சனவன் மந்திரிமனையும்
புனல் நீரூற்றும் யமுனா ஏரியுடனருகே சட்ட
நாதனவனுக்கு கட்டிய கோயிலும் சூழ்ந்திருக்க
பல்கலைகழக மொடு பல கலாசாலைகளும்
கல்விச் சாலைகளும் கவினுறு பூங்காக்களும்
திரு விளங்கும் தெருக்கள் சேர் அங்காடிகளும்
திருநெல்வேலிச் சந்தையும் தருக்கள் பலவும்
நெருக்கமாய் மக்கள் கூட்டம் கூடியே மகிழ்ந்திட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகரில்லா ஊரைத் தலையாகக் கொண்டமைந்தே
அரியாலையோடு எடுத்தே நல்லூரும் கவினுறு
கந்தர்மடமொடு வளங்கொழிக்கும் வண்ணார்
பண்ணையும், கொக்குவிலொடு கோண்டாவிலும்
திருநெல்வேலியும் சேர்ந்தே அமைந்திட்ட
சிறப்புறு பிரதேச மதற்கொன்றே வனப்புடன்
அமைந்திட்ட வானுயர் அரங்கமதில்
தங்குன்றாது தயவுடன் நாடும் தம்மக்கள்
தம் வேண்டுகைகள் தனைச் செய்தே
நீதியொடு நேர்மையாய் நிகரில்லாசேவையுடன்
நிர்வாக நெறியுடன் நிதி பரிபாலனமும்
செம்மையாய் செய்திட அமைந்திட்ட செயலகமும்
ஆர்வமுடன் பணி செய்யும் ஆள் அணியினரும்
என்றென்றும் நலம் பெற்று நல்வாழ்வு வாழியவே.



நல்லூர் சட்டநாதர் கோவில் பழைய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரப்புவோம் பைந்தமிழை

**செ. சுதாகரன்**
முகாமைத்துவ உதவியாளர்,
பிரதேச செயலகம், நல்லூர்.

அருந்தமிழ் மொழியும் அரசகரும மொழியெனப்
பொருந்தவே யொருசட்டம் புத்தகத்தில் உண்டாம்
பெருமையாய் அதனை நாம்பேசிடல் கூடுமோ
விருப்புடன் அதனையே வினையாக்க வேண்டாமோ.

நம்பணி தன்னைநாம் நந்தமிழ் தன்னிலே
மும்முரமாய் ஆற்றவே முயற்சியும் செய்யணும்
எம்முடன் உரையாட எம்தாய் மொழியிருக்க
நம்மொழி விட்டுமே நாடலாமோ வேற்றுமொழி

அரசகரும மனைத்தையும் அருந்தமிழ் தன்னிலே
கிரமமாய் நாமாற்றிக் கீர்த்தியும் பெறுவோம்
தரமான தமிழதனில் திறனுடனே பணியாற்றி
பரப்பிட வேண்டும் பாரினிற் பைந்தமிழை

இலக்கண சுத்தமாய் எம்தமிழைப் பேசியே
பலமுடை மொழியாய் பாரினில் வளர்ப்போம்
அலுவலக கடமைகளை அருந்தமிழில் ஆற்றி
நலமுடை மொழியாய் நந்தமிழ் வளர்ப்போம்

இங்குள படிவங்கள் எழுதும் கடிதங்கள்
பங்கமில் தமிழில் பரவிடச் செய்வோம்
எங்கள் தாய்மொழியை ஏற்றமுற வைத்தே
பங்கம் தவிர்த்துப் பாரினில் உயர்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதிக்குத் திரும்பிய பிரதேசங்களுக்குரிய மீள் அபிவிருத்தி: அனுபவங்களும் சிந்தனைகளும்

**பேராசிரியர் மா. சின்னத்தம்பி**
கல்வியியல் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**அறிமுகம்**

உலகின் பல்வேறு நாடுகளும் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி பற்றிய புதிய மாதிரிகளில் கவனம் செலுத்துகின்றன. வளங்களைப் பயன்படுத்தமுடியாத நிலைமைகள் நீடித்தமையும், மனிதவளம் போதியளவு வலுவூட்டப்படாமையும், தொழில்நுட்ப முன்னேற்றங்களை துரிதப்படுத்துவதற்கான நிதிவளம் இல்லாமையும், குறைவிருத்தி நிலைமைகளாக விளங்கின. இதுவே பெரும்பாலான நாடுகள் எதிர்கொண்ட பொருளாதார அபிவிருத்திப் பிரச்சினைகளாக முன்னுரிமைப்படுத்தப் பட்டன.

ஆனால் அண்மைக்காலங்களின் இயற்கையின் சவால்களையும், யுத்த நிலைமைகளையும் எதிர்கொள்ள முடியாத அபிவிருத்திமாதிரிகள் அதிகரிக்கின்றன. மனிதனது இயற்கை மீதான திட்டவட்டமற்ற வன்முறையும், சுரண்டலும், புதியனவும், கூர்மையானவையும் ஆழமான எதிர்விளைவுகளை உருவாக்குவனவுமாகிய பல பொருளாதார முரண் நிலைமைகளை அதிகரிக்கச் செய்துவிட்டன.

காலநிலை மாற்றங்கள், சுற்றுச் சூழல் அழிவுகள், இயற்கையின் சடுதியான வெளிப்பாடுகள், சமுதாய குழப்பங்கள், யுத்தம் போன்றன அபிவிருத்தி பற்றிய தேவைகளையும் கவனத்தையும் திசை திருப்பியுள்ளன. இதனால் மீள் அபிவிருத்தி (Redevelopment) பற்றிய திசை நோக்கி அபிவிருத்திச் சிந்தனைகளும் அவை சார்ந்த செயற்பாடுகளும் மாறிச்செல்கின்றன.

ஹெயிற்றி, ஆப்கானிஸ்தான், கிழக்கு கொங்கோ, இலங்கை போன்ற நாடுகளில் மீள் அபிவிருத்தி பற்றிய முனைப்பு அவசியமாகியுள்ளது.

இது பற்றிய சில சிந்தனைகளை முன்வைப்பதற்கு இக்கட்டுரை முயல்கின்றது.

**அபிவிருத்தி அதிர்வுகள்**

பல்வேறு நாடுகளில் மனிதனது உணர்வுகளும், தன் முனைப்பும், அரசியல் வலு தொடர்பான புரிந்துணர்வின் பலவீனங்கள் இயற்கையின் வளங்களையும் வலுவையும் மனித மகிழ்ச்சிக்கு எதிராக பயன்படுத்துவதற்கு வழிகாட்டின. இதேபோல் திட்டவட்டமற்ற இயற்கை மீதான சுரண்டலும், தொலை நோக்கற்ற பாரிய உட்கட்டமைப்பு உருவாக்கங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் புவியதிர்வு, வெள்ளப்பெருக்கு, கடும் வரட்சி, காட்டுத்தீ போன்ற அனர்த்தங்களை உருவாக்கி வருகின்றன.

இந்த எதிர்மறை வளவிரயங் களும், அதனால் ஏற்படும் தீமை தருகின்ற பரவல் விளைவுகளும் புதிய பொருளாதார அதிர்ச்சிகளை ஏற்படுத்தி வருகின்றன.

போட்டிமுறையில் யார் அதிக உற்பத்தி உச்சத்தைத்தொடுவது என சிந்தித்து செயலாற்றிய நாடுகள் பலவும் இப்போது மீள் அபிவிருத்தி பற்றி சிந்திக்கு மாறு வற்புறுத்துகின்றன.

உடனடியாக தடுக்க முடியாத வலுவுடன் இயற்கையின் எதிர்த்தாக் கங்கள் மூர்க்கத்தனமாக மனித முன்னேற் றங்களின் கட்டமைப்பை ஒரு நொடிப் பொழுதில் அழித்துவிடுகின்றன. மக்களது வாழ்வின் சமநிலையை குலைத்து விடுகிறது; இடம் பெயர்வோராகவும், அகதிகளாக வாழ்வோராகவும் நிலைத் திருக்கும் குடித்தொகையொன்று நிரந்தர மான அடையாளமாகிவிட்டது.

இதனால் நாடுகள் ஒன்றிணைந் தும், தனியாகவும் மீள் அபிவிருத்தி பற்றிய கொள்கைகளையும் உபாயங்களையும், முறைமைகளையும் நிகழ்ச்சித்திட்டங் களையும் தயாரிக்கத் தொடங்கி விட்டார் கள்.

இயற்கை அனர்த்தங்கள் மற்றும் யுத்தங்களினால் அடிப்படைத் தேவை களை நிறைவேற்ற முடியாதவர்களின் எண்ணிக்கை உலகில் பெருகிவிட்டது. நல்ல குடிதண்ணீர் பெறமுடியாது 96.8கோடி மக்கள் துன்புறுகின்றனர். 24 இலட்சம் பேர் அடிப்படை சுகாதார வசதி களுக்காக ஏங்குகின்றனர். சூழல் மாசடை வதால் வருடாந்தம் 20 இலட்சம் பேர் இறந்து போகின்றனர். எயிட்ஸ் நோயின் பாதிப்புக்குட்பட்டு 3.4கோடி மக்கள் துன்புறுகின்றனர். புதிய நெருக்கடி களுக்குள் தள்ளப்படுவோரின் எண்ணி க்கை பெருகி புதிய தேவைகள் கொண்ட உலக குடித்தொகையினராக அவர்கள் மாறி விட்டனர்.

வருமானக் குறைவும், வறுமையும் இத்தனை வருட உலக முன்னேற்றங் களுக்குப் பிறகும் குறையவேயில்லை. 1990 இல் 272கோடி மக்கள் இரண்டு டொலரிலும் குறைவான வருமானத் தையே பெற்றனர். உலக குடித்தொகையில் இவர்கள் தொகை 45% மாகும். 1998 இல் இவர்களது எண்ணிக்கை 280 கோடியாக உயர்ந்தது.

இதே போல் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அகதிகளாக அலையும் மக்கள் கொண்ட நாடுகளின் எண்ணிக்கை யும் தொடர்ந்து பெருகிச் செல்கிறது இலங்கையிலும் யுத்தத்தின் பின்பும் தமது சொந்த இடங்களில் பழைய வாழ்வு முறையை உருவாக்கி கொள்வதற்கு அவாவிநிற்கும் மக்கள்தொகை குறைய வில்லை. அபிப்பிராயங்களை உருவாக்கி விடுவதும் அறிக்கைகளை அகலப்படுத்து வதும் அதிகரிப்பதும் தேவைக்குரியவர் களிடம் மெய்விளைவுகளை உருவாக்கி விடுவதில்லை. தேவைப்படுவதெல்லாம் புதிய சவால்களை வெல்வதும் நெருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிக்குள் அகப்பட்டிருப்பவர்களுக்குரிய மீள் அபிவிருத்தியை உருவாக்குவதும் தான்.

**யுத்தத்தின் பின் மீள் அபிவிருத்தி**

உலக நாடுகளில் பொருளாதார ரீதியாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் வளர்ச்சி பெற்ற நாடுகள்; யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் யுத்தத்துக்கு பின்னுள்ள சேதங்கள் பற்றிக் கூட்டாக மதிப்பீடுகள் பலவற்றைச் செய்வதுண்டு. இதில் மீள் அபிவிருத்தியில் பங்குபற்றும் பொறுப்புத்தாரர்களும் பங்கேற்பர். பொருளாதார உதவுநர்கள் (Donors) முக்கிய பங்காற்றுவர்.

இழந்து போன உற்பத்திக் கட்டமைப்புக்கள் உற்பத்தி மூலங்கள், சக்தி உற்பத்தி மற்றும் விநியோக துறைகள் என்பவற்றை மீளுருவாக்கம் செய்வதில் அதிக கவனம் செலுத்தப்படும். பழைய மாதிரியை முன்பிருந்த அதே மாதிரியில் தான் மீண்டும் உருவாக்க வேண்டுமா? அல்லது புதிய வளர்ச்சித்திசை நோக்கி, மாற்றுவழிமுறைகளில் நிர்மாணிக்க முடியுமா என்று சிந்திப்பதும் சாத்தியமானது.

குறித்த பிரதேசத்தின் அல்லது நாட்டின் மீள் அபிவிருத்தி இரண்டு அணுகுமுறைகளைக் கொண்டது.

1. மக்களது உளவியல் பலம், நம்பிக்கை, முனைப்பு என்பவற்றைப் புத்துயிர் பெறச் செய்தலும் அதனூடாக சமூக வாழ்வை நிர்மாணித்தலும்.
2. பாதிக்கப்பட்ட புவியியல் பிரதேசத்தில் பௌதிக ரீதியிலான மீள்கட்டமைப்பை ஏற்படுத்துதல். பொருளாதார கட்டமைப்புக்களான மின்சாரம், நீர் விநியோகம், போக்குவரத்து, வங்கிகள், விநியோக முறைகள் போன்றவற்றை புதிய மாதிரியில் உருவாக்குதல்.

அழிவுநிலையை பயன்படுத்தி முன்பு செய்யமுடியாதிருந்த புதிய அபிவிருத்திக் கோலங்களை புதிய அபிவிருத்தி உபாயங்களூடாக உருவாக்குதல்.

மக்களது தனிப்பட்ட நெருக்கடிகள், உளப்பாதிப்புக்கள், பொருளாதார தேவைகள், சமூகவியல் அங்கீகாரங்கள் போன்றவற்றை கவனத்திற் கொண்டு சமூக கட்டமைப்பை விருத்தி செய்வது அவசியமாகின்றது.

இதே போல் கல்வி, குழந்தைகள் மற்றும் தாய்மாரின் ஊட்டம், சுகாதாரம், குடியிருப்பும் வாழிட வசதியும் போன்றன பற்றி அசாதாரண முறையில் திட்டமிடுதலும்; தாமதமன்றி நடை முறைப்படுத்தலும் அவசியமாகவுள்ளது.

ஹெயிற்றி நாட்டிலும் இதே போல் வன்முறைமற்றும் முரண்பாடுகள் ஏற்பட்டு பல துன்பங்கள் நிகழ்ந்தன. இந்த நாட்டின் அனுபவங்களை எமது நாட்டின் மீள் அபிவிருத்தி தொடர்பாக பயன் படுத்திக்கொள்வது சாத்தியமானதே. அபிவிருத்தி நிபுணர்கள் பின்வரும் அம்சங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றனர்.

- பிரச்சினை தீர்வுக்கு வந்தபின் அப்பிரதேச மக்கள் தமக்குரியதான முன்னேற்றங்கள் மிகவும் வேகமாக நிகழ வேண்டும் என்று எதிர்பார்ப்பதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புதிய முயற்சிகள் ஆரம்பமாவதற்கு உரித்தான பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கும், மீள் அபிவிருத்தி சார்ந்த முடிவுகளை மேற்கொள்வதில் தாமும் பங்கேற்பதற்கான விருப்பமும் கொண்டவர்களாக காணப்படுவர்.
- பாதிப்புற்ற மக்கள் புனரமைப்பு முயற்சிகளில் தாமும் பங்கேற்க வேண்டுமென விரும்புவதுண்டு. இதன் மூலம் தமக்குரிய தொழில்வாய்ப்புக் களையும் உருவாக்கி போதிய வரு மானம் பெறவேண்டும் என்றும் எதிர் பார்ப்பர்.

வன்னிப் பெருநிலத்தில் மீளவும் குடியமரும் மக்களிடமும் இத்தகைய எதிர்பார்க்கைகள் உள்ளன.

மக்கள் தமக்கிடையிலான நம் பிக்கை யைக் கட்டியெழுப்பி அமைதியும் நல்லிணக்கமும் கொண்ட சமூக உருவாக் கத்தை விரும்புகின்றனர். இதற்காக அதிகளவு வளங்களை உதவுநர்கள் தொடர்ந்து வழங்கி வருகின்றனர்.

எதிர்காலம் பற்றிய நிச்சயமின்மை உள்ள சமூகங்களில் தெளிவான அபி விருத்தி அடையாளங்கள் தோன்றாத நிலையில் பெற்றோர் தமது பிள்ளைகளின் சிறந்த எதிர்காலத்திற்கு சிறந்த கல்வி தேவையென்று வலுவாக உணர்வதுண்டு. பெற்றோர் தம்மைவிடவும் தமது தலை முறையினரின் பாதுகாப்பு, வசதி, முன் னேற்றம் பற்றிய எண்ணங்களுக்கும் செயல் களுக்கும் முன்னுரிமை வழங்குவர்.

பொருளாதார வாழ்வுத்தளம் நன்கு இடப்படாவிடில் அதிலிருந்தே மீண்டும் முரண்பாடுகள் முறை கொள்வ துண்டு. அவை படிப்படியாக அரசியல் முரண்முனைப்புகளுக்கு தூண்டுதல்களை உருவாக்கி விடவும் முடியும். இதனா லேயே அமைதிக்கு திரும்பிய புவியியற் பிரதேசங்களில் எல்லாம் துரிதமான பொருளாதார செழிப்பு நிலைமைகளை செறிவாக மேற்கொள்வதற்கு அரசாங்கங் கள் முயல்வதுண்டு. ஜேர்மனியின் அபிவிருத்திக்கான வங்கி (KFW Entwicklungs bank) இவ்வாறு முரண்பாடு கள் முடிவுற்ற பிரதேசங்களின் அபிவிருத்தி முயற்சிகளுக்கு பல்வேறு வழிகளில் உதவி வருகின்றது. இந்த உதவி முயற்சிகள் மீள் அபிவிருத்தி பற்றிய எண்ணக்கருவில் உள்ளடக்கக்கூடிய விடயங்களை வெளிப் படுத்துகின்றன.

- அடிப்படையான மற்றும் அத்தியா வசிய சேவைகளை மக்கள் வாழிடங் களில் முன்னேற்றுதல்
- பாதிக்கப்பட்டவர்களுக்கு போதி யளவு உதவி வழங்குதலும் அகதி களுக்கு புனர்வாழ்வு அளித்தலும்.
- முன்னைநாள் போராளிகளுக்கு சமூகத் துடன் ஒன்றிணைந்து வாழ்வதற்கான சூழலை விருத்தி செய்தல்
- மீள்கட்டுமானங்களை மேற்கொள் ளும் போது முரண்பாடுகளுக்குரிய பிரதிபலிப்புக்களை (எதிர்பார்ப்புக் கள், அதிருப்தி நிலைமைகள்) கவனத்திற் கொள்ளுதல்.
  பாதிப்புற்ற பிரதேசத்தில் பொரு ளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி முயற்சிகளில் ஒரு துரிதமான பாய்ச்சல் நிலைமையை உருவாக்குதல்.
- முரண்பாடுகளுக்கு இட்டுச் சென்ற சமனற்ற நிலைமைகளை அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றத் தாழ்வை வலிமைபெறச் செய்த காரணிகளைப் பலமற்றதாக்கல். மிகவும் தீமைகளுக்குட்பட்ட சமூகப் பிரிவினரை பலம் மிக்க வளங்களை நோக்கியும் பொருளாதார மையங் களை நோக்கியும் நகர்த்துவதற்கு உதவுதல்.

இயற்கை அழிவுகள்கூட சில சமயங்களில் முரண்பாடு கொண்ட பிரதேசங்களில் அமைதியும் சமாதானமும் மலர்வதற்கு உதவமுடியும். இந்தோனேஷியாவில் சுமாத்திராதீவில் உள்ள ஆச் மாகாணத்தின் (Acehprovluce) நிலைமைகளை இதற்கு உதாரணமாக குறிப்பிட முடியும். சுனாமி 2004 இல் அங்கு பாதிப்பு ஏற்படுத்திய போது அதைத் தொடர்ந்து உருவாக்கிய புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் முரண்பாடுகளினால் பாதிப்புற்ற மக்களுக்கும் நன்மையளித்திருந்தன.

ஆப்கானிஸ்தான், கிழக்கு கொங்கோ போன்ற பிரதேசங்களினதும் இதே மாதிரியிலான மீள் அபிவிருத்திக்கான சூழலும், தேவைகளும் உருவாகியிருந்தன. பிரச்சினைகளின் ஓய்வு நிலையில் ஆப்கானிஸ்தானில் ஒன்பது இலட்சம் மக்களுக்கு மின்சாரமும், சுத்தமான குடிநீரும் வழங்குவதற்கு ஜேர்மனி உதவி வழங்கியிருந்தது. இதே பகுதியில் ஒரு இலட்சம் ஆசிரியர்களும் மேலதிகமாக இங்கு கற்பிப்பதற்காக நியமிக்கப்பட்டனர். 60,000 நுண் நிதிக்கடன்களும் வழங்கப்பட்டன. 3000-300,000 வரையிலான டொலர்கள் சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டன. நுண்நிதி (Micro Finance) யை அமைதிக்கு திரும்பிய பிரதேசங்களின் மக்களுக்கு வழங்கும் போது அத்துடன் இணைந்த வகையில் அதனை வினைத்திறனுடனும் விளைதிறனுடனும், பயன்படுத்துவதற்கான ஆலோசனையும், கல்வியும், பயிற்சியும், வழிகாட்டலும் வழங்கப்பட்டன. அல்லது நுண் நிதி எதிர்பார்த்த விளைவுகளைத் தரமாட்டா என்று கருதப்பட்டது.

இலங்கையில் வடபகுதியிலும் யுத்தம் முடிவுற்ற பின்னர் பெருந்தொகையான நிதி அரச வங்கிகள் மூலம் புதிய தொழில் முயற்சி ஊக்குவிப்புக்காக வழங்கப்பட்டன. ஆனால் ஏனைய இணைச் சேவைகள் சிறப்பாக வழங்கப்படவில்லை. இது எதிர்பார்த்த விளைவுகளை மீள் அபிவிருத்தியுடன் தொடர்புடையதாக அதிகம் உருவாக்கவில்லை.

2009 இல் ஆப்கானிஸ்தானில் அமைதி திரும்பிய பகுதிகளில் 40 மில்லியன் டொலர்களை 1300 கொடு கடன்களுக்கு பகிர்ந்தளித்ததன் மூலம் 20,000 மக்கள் தொழில் வாய்ப்பும் பெற்றனர். இதில் உதவி வழங்கிய வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் எச்சரிக்கை மிகுந்த இணைந்த சேவைகளின் பங்களிப்பு பாராட்டத் தக்கது.

எமது வடபகுதியிலும் இது தொடர்பாக கூடிய கவனம் செலுத்த முடியும். இதற்கான தேவைகளும் வாய்ப்புக்களும் இன்னும் அதிகரித்து வருகின்றன.

கிழக்கு கொங்கொங் பகுதியிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக இழப்புக்களை உருவாக்கிய குடியியல் யுத்தத்தின்பின், மீள் அபிவிருத்தி முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டு வந்தன.

அங்கும் பிரதான வீதிகளின் அபிவிருத்தியுடன் மீள் அபிவிருத்தி தொடங்கியது. இலங்கையின் வடபகுதியின் மீள் அபிவிருத்தியும் 400 கிலோமீற்றர் நீளமான A9 பாதையின் அபிவிருத்தியுடன் தொடங்கியது. பயன்படுத்தக்கூடிய உற்பத்தி மையங்கள் நாட்டின் பிரதான நிர்வாக, நிதி மற்றும் சந்தைப்படுத்தல் மையங்களுடன் இணைக்கப்பட்டன. அதன் மூலம் உலக வளர்ச்சி மூலகங்களுடனும் இணைக்கப்பட்டது.

கிழக்கு கொங்கோவிலும் செழிப்பான விவசாய நிலங்களில் 1996 இலிருந்து உற்பத்தி மேற்கொள்ளப்படவில்லை. அவை பயன்பாடின்றிக் கிடந்தன. அமைதி திரும்பியபின் இப்பகுதி பயன்பாட்டுக் குட்பட்டதோடு இதன் உற்பத்திகள் நாடு முழுதும் சந்தைப் படுத்தப்பட்டன.

இலங்கையின் வடபகுதியின் விவசாய மற்றும் மீன் உற்பத்திமையங்களும் நீண்டகாலத்தின்பின் தற்போது பூரணபயன்பாட்டுக்குட்படுத்தப்பட்டதுடன், உள்ளூர் சுற்றுலாத்துறை வலையமைப்புக்குள்ளும் மிகவும் செறிவாக வந்துள்ளது. கொங்கோவிலும் மக்கள் தம் சொந்த வாழிடங்களுக்கு திரும்பினர். 2005 இல் அங்கு யுத்தம் முடிவுற்ற பின் இத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டன. அங்கு பாதைகள் திறக்கப்பட்டபின் 109 கிராமங்கள் தொடர்புகள் பெற்றன. 11 சந்தைகளும் 22 சுகாதார நிலையங்களும் 94 பாடசாலைகளும் பெருந்தெருக்களினால் இணைக்கப்பட்டன. 14,500 குடும்பங்களும் பண்ணைத் தொழில்களினால் நன்மையடைந்தன.

இந்த அனுபவங்கள் எமது இலங்கையின் வடபகுதி மீள் அபிவிருத்தியில் பொருத்தமான வகையில் கையாளக் கூடியன.

சமூகமட்டத்தில் துண்டுபட்டுக் கிடக்கும் பல்வேறு சமூகக் குழுக்களையும், குடும்பங்களையும் மீளவும் ஒருங்கிணைப்பது பற்றி ஆழமாக சிந்திக்க வேண்டும். இதில் கிராமிய மட்ட நிர்வாக மற்றும் குடியியல் நிறுவனங்கள் அதிக பங்களிப்புச் செய்ய வேண்டும்.

பெண்களே தலைமைதாங்கும் குடும்பங்கள் அதிகரித்துள்ளன. நல்லூர் பிரதேசத்தில் மாத்திரம் இத்தகைய குடும்பங்கள் 3659 காணப்படுகின்றன. கிராமிய அபிவிருத்திச் சங்கங்களும் மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்களும் இத்தகைய மகளிர் தலைமைத்துவ மேம்பாட்டுக்குதவும் வகையில் பல்வேறு நிறுவனங்களுடன் வலுவான ஒருங்கிணைப்பை உருவாக்க வேண்டும். நல்லூர் பிரதேசத்தில் 13 கிராமிய அபிவிருத்திச் சங்கங்களும் 26 மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்களும் செயற்படு கின்றன. 66487 பேர் வசிக்கும் நல்லூர் பிரதேசம் இத்தகைய கிராமிய மட்ட நிறுவனங்களிடையிலான ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்படுத்தி சமூக ஒருங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணைப்பை ஊக்குவிக்க வேண்டும். சமூக ஒருங்கிணைப்பு வலுப்பெறாவிடில் அமைதிக்கு திரும்பியபின் அவசரமாக மேற் கொள்ளப்படும் பொருளாதார அபி விருத்தியின் பயன்கள் பரவலாகவோ, ஒன்றிணைந்த வகையிலோ ஏற்படமுடியாது.

புனர்வாழ்வு பெற்ற போராளிகள் 619 பேர் கிழக்கு கொங்கோவில் தொழில் வாய்ப்பு பெற்று 2-4 டொலர் வரை நாளாந்தம் உழைத்து வந்ததாக குறிப்பேடுகள் காட்டுகின்றன. சிறுவர்களாகவும், போராளிகளாகவும் இருந்த 4500 பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஜேர்மனி அபிவிருத்தி வங்கி 14.4 மில்லியன் யூரோ நாணயத்தை வழங்கியிருந்தது.


இதே மாதிரியில் புதிய தொழில் வாய்ப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும் வடிவமைப்பதில் மீள்அபிவிருத்தி கவனம் செலுத்த வேண்டும்.

நிதி நிறுவனங்கள், சுற்றுச்சூழல், நீர்மற்றும் மின்சார விநியோகம் என்பவற்றுடன் இப்புதிய புனர்வாழ்வுப் பிரிவினரின் தொழில்வாய்ப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். சிறுவர்கள் கல்வியைத் தொடர்வதற்கான மாற்று ஏற்பாடுகளுக்குரிய திட்டங்களும் வடிவமைக்கப்படுதல் அவசியமாகியுள்ளது.

**முடிவுரை**

இடம் பெயர்ந்தோர், பெண்கள், வறியவர், உடல் உள பாதிப்புக்குட் பட்டோர், முன்னைநாள் போராளிகள் போன்ற பல தேவைமிக்க மக்கள் குழுவினருக்கு தனித் தனியாக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். இவற்றை ஒருங்கிணைக்கும் வகையிலான நீண்ட காலத்திட்டங் களையும் வடிவமைக்க வேண்டும்.

இதற்கான நிதி தொழில்நுட்ப, மதியுரை உதவிகளை தேவையான அளவுக்கு புலம் பெயர் தமிழர்களிடமிருந்தும் பெறமுயல்வதும் சாத்தியமானதே. அரசும் இவர்களும் இணைந்து பொருத்தமான மீள் அபிவிருத்தி உபாயங் களை வடிவமைத்து செயல்படுத்தும்போது சாதகமான விளைவுகள் நிச்சயம் கிடைக் கும்.



பித்தளை மேசை விளக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார அபிவிருத்தியில் GSP+ சலுகைகொண்டிருக்கும் பங்கு

**பேராசிரியர் க. தேவராசா**
பீடாதிபதி,
முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

**அறிமுகம்**

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டதாகவும், அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக மாறியிருப்பதுமான ஒரு விடயமே GSP+ என்பதாகும். இலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடியில் அழுத்தத்தைப் பிரயோகிக்க ஐரோப்பிய ஒன்றியம் பயன்படுத்தும் ஒரு ஆயுதமாக GSP+ காணப்படுகின்றது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு பொருட்களை அனுப்பும் பொழுது வளர்முக நாடுகளுக்கு வழங்கப்படும் ஒரு சலுகையே GSP+ ஆகும். வளர்முக நாடுகளின் பண்டங்கள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளை அடையும் பொழுது அவற்றுக்கான தீர்வைச் சலுகைகள் வழங்கப்படுவதான நடவடிக்கையாகவே GSP+ அமைந்துள்ளது. இச்சலுகையைப் பெறுவதற்கு இலங்கை உட்பட 16 நாடுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இச் சலுகையை வழங்குவதற்கு 2005-2008 ஆண்டுகளுக்கிடையில் வழங்கப்பட்ட அனுமதி மீண்டும் புதுப்பிக்கப்படும்நிலை ஏற்பட்ட பொழுது இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தமும் அரசின் மனித உரிமை மீறல்களும் இவ் ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பதில் தளம்பல் நிலையை ஏற்படுத்திவிட்டன. ஐரோப்பிய ஒன்றிய மானது மனித உரிமை மீறல்கள் விசாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப் படாதிருந்தால் GSP+ சலுகையை இலங்கை இழக்கவேண்டிவரும் என்ற கோட்பாட்டை வலியுறுத்தி வருகின்றது. இதற்கு இலங்கை அரசு சம்மதிக்காவிடின் அது தனது GSP+ சலுகையை இழக்க வேண்டி வரும் என எச்சரித்த ஐரோப்பிய ஒன்றியம், தற்காலிகமாக இச்சலுகையை நிறுத்தும் முடிவை எடுத்துள்ளது. இது இலங்கையின் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதிக்கும் எனக் கருதுவதாலேயே இப்பிரச்சினைக்கு சுமூகமான தீர்வொன்றினைக் காணுமாறு பொருளாதார அறிஞர்கள் இடித்துரைக்கின்றனர். இச்சலுகையின் முக்கியத்துவத்தை இலங்கை உணரும் என்பதனால் மாற்று வழிகளைக் காண்பது அவசியமாகின்றது.

**GSP+ கொண்டிருக்கும் சலுகைகள்**

ஒரு வளர்முக நாடு என்ற வகையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP+ சலுகையைப் பயன்படுத்தும் வாய்ப்பு இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. பொதுவாக மனித உரிமைகள் நிலைத்திருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி, நல்லாட்சி ஆகிய மூன்றும் சம்பந்தமான ஒப்பந்தத்தில் கையொப்ப மிட்டதன் மூலம் GSP+ முறையின் கீழ் விசேட சலுகைபெறும் வாய்ப்பும் இலங் கைக்கு வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக பின்வரும் மூன்று விசேட ஊக்குவிப்பும் இலங்கைக்கு கிடைப்பதாக உள்ளது.

அ) ஆறாயிரத்துக்கு மேற்பட்ட பொருட்களுக்கான தீர்வைச் சலுகைபெறும் நடைமுறையைக் கொண்டுவருதல்.

ஆ) மேலதிகமான தீர்வைக் குறைப்பைக் கொண்டுவர நல்லாட்சிக்கும் நிலைத்திருக்கும் அபிவிருத்திக் குமான வாய்ப்பை ஏற்படுத்தல்.

இ) மிகவும் குறைந்த அபிவிருத்தி யடைந்த நாடுகளுக்கு சகல உற் பத்திப் பொருட்களுக்கும் தீர்வைச் சலுகையை வழங்குவதுடன் கட்டுப் பாடற்ற இறக்குமதியை கொண்ட தும் அனுமதிப்பத்திரமற்றதுமான நடைமுறையை அமுல்படுத்தல்.

என்ற வகையில் இலங்கை GSP+ மூலம் கிடைக்கும் முழுமையான நன்மை களை அனுபவித்து வருகின்றது. இச் சலுகையின் மூலம் இலங்கையின் ஏற்றுமதி அதிகரித்து அந்நியச் செலாவணி உழைப் பும் உயர்வடைந்துள்ளது. இதன் காரண மாகவே இலங்கை GSP+ சலுகையை இழக்கக்கூடாதெனப் பலர் வாதிடு கின்றனர். இலங்கையின் மொத்த ஏற்றுமதி யில் அதுவும் ஆடை ஏற்றுமதியில் பெரும் பங்கை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் கொண்டுள்ளன. இதனைப் பின்வரும் அட்வணை காட்டுகின்றது.

**ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஏற்றுமதி (100%)**

| **ஆண்டு** | **மொத்த ஏற்றுமதி சதவீதம்** |
|---|---|
| *2000* | *27%* |
| *2001* | *26%* |
| *2002* | *29%* |
| *2003* | *30%* |
| *2004* | *33%* |
| *2005* | *32%* |
| *2006* | *34%* |
| *2007* | *37%* |
| *2008* | *38%* |

மூலம் மத்திய வங்கி அறிக்கை மேற்காட்டிய அட்டவணையின் படி GSP+ ஆனது ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏற்றுமதி அளவு வருடா வருடம் உயர் வடைந்து வருவதனைக் காட்டுகின்றது. அதே நேரம் ஆடை ஏற்றுமதியில் ஐரோப் பிய ஒன்றிய நாடுகளே மொத்த ஏற்றுமதி யில் 50% வீதத்திற்கு மேற்பட்ட ஏற்றுமதி அளவைக் கொண்டுள்ளன.

**ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கையின் ஏற்றுமதியும்**

இலங்கை போன்ற இருபது மில்லியன் சனத்தொகையை மட்டுமே கொண்ட சிறியதொரு நாட்டுக்கு ஏற்று மதிக்கான சந்தர்ப்பம் என்பது அதன் பொருளாதாரத்தில் பெரியதொரு வாய்ப் பாகும். GSP+ திட்டத்தினூடான சலுகை யைப் பயன்படுத்தி மொத்த உற்பத்தியில் 37%வீதமான பொருட்களையும் சேவை களையும் ஏற்றுமதிசெய்யும் வாய்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் ஏற்பட்டுள்ளது. உலக ஏற்றுமதிச் சந்தையில் போட்டிச் சூழலை இலங்கை எதிர்கொள்ள வேண்டியிருப்பினும் GSP+ சலுகையானது தொடர்ந்தும் இலங்கையின் உற்பத்தியாளர்களுக்கு ஏற்றுமதி வாய்ப்பினை ஐரோப்பிய நாடுகளில் அதிகரிக்க வாய்ப்பளிக்கின்றது. 2004ஆம் ஆண்டில் 1.8 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கை ஏற்றுமதிகள் 2009ஆம் ஆண்டில் 2.9பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்தமையை நோக்கும் பொழுது இலங்கையின் ஏற்றுமதியில் ஐரோப்பிய ஒன்றியம் கொண்டிருக்கும் முக்கியத்துவத்தை உணர முடிகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கையில் ஏற்றுமதியில் 51% வீதத்துக்கும் கூடுதலானவை ஆடைகளேயாகும். இதுவரை காலமும் ஐக்கிய அமெரிக்காவே இலங்கையின் தைத்த ஆடைகளை இறக்குமதி செய்யும் பிரதான நாடாக இருந்து வந்தது. ஆனால் 2008ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்காவை விட பெருமளவு ஆடைகளைக் கொள்வனவு செய்யும் அமைப்பாக ஐரோப்பிய ஒன்றியம் மாறியுள்ளது. GSP+ சலுகையே இத்தகைய பிரதான ஏற்றுமதி அமைப்பாக ஐரோப்பிய ஒன்றியம் மாற்றம் பெற ஏதுவாயிற்று எனலாம். இலங்கை ஏற்றுமதியாளர்கள் பெற்றுக்கொள்ளும் GSP+ சலுகையானது போட்டியாளர்களுடன் இலகுவில் போட்டியிடவும் அவர்களது சந்தைகளை இலகுவில் கைப்பற்றவும் உதவும் என்பதனால் தைத்த ஆடைகளின் ஏற்றுமதியில் ஏனைய நாடுகளுடனும் இலங்கை முன்னிலை வகிப்பதாக மாறியுள்ளது எனலாம்.

**இலங்கைக்கு GSP+ சலுகைகளின் முக்கியத்துவம்**

இலங்கை ஒரு ஏற்றுமதிப் பொருளாதார நாடென்பதால் ஏற்றுமதியின் அதிகரிப்பே அதன் பொருளாதார அபிவிருத்தியின் திறவுகோல் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர். GSP+ ஆனது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கான சலுகை என்பதால் இலங்கையில் அதன் முக்கியத்துவம் எப்படிப்பட்டது என்பதை எல்லோரும் அறிவர். பின்வரும் காரணங்கள் GSP+ சலுகையின் முக்கியத்துவத்தை உணர்த்தும்.

**1. போட்டி விலை:**

இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களுக்கான ஆக்கச் செலவு ஏனைய நாடுகளைவிட உயர்வாக இருப்பதனால் சீனா, வியட்நாம், பங்களாதேஷ் போன்ற நாடுகளுடன் போட்டியிட்டு ஏற்றுமதியைச் செய்யமுடிவதில்லை. ஆனால் GSP+ சலுகையானது போட்டி நாடுகளுடன் விலையில் போட்டியிடவும் அதிகமான ஏற்றுமதிகளை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு மேற்கொள்ளவும் வாய்ப்பளிக்கின்றது. இலங்கை GSP+ சலுகையூடாக பூச்சியமான தீர்வையைக் கொண்டிருப்பதனால் சீனாவுடனான ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்வை ஒப்பந்தம் காலாவதியானதைத் தொடர்ந்து போட்டி அடிப்படையில் சீனாவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுமதி செய்வது சாத்தியமாகிவிட்டது. எனவேதான் போட்டிச் சந்தையை இலங்கை இலகுவில் எதிர்கொள்வதற்கும் வெற்றி பெறுவதற்கும் GSP+ அவசிய மாகின்றது.

**2. பன்முகப்படுத்தல்**

நீண்டகால அனுபவத்தில் ஓரிரு பொருட்களின் ஏற்றுமதியில் தங்கியிருப் பது இலங்கையின் ஏற்றுமதி வருமானத் தைப் பாதிக்கும் என்பது உணரப்பட்டு ள்ளது. இதன் காரணமாகவே முன்னரைப் போல் இலங்கை தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்களில் மட்டுமன்றி பல பாரம்பரியமற்ற பொருட்களின் ஏற்று மதியில் ஈடுபடத்தொடங்கியுள்ளது. இதற்கு GSP+ உதவியுள்ளது என்பது பாராட்டப்படக் கூடியதாகும். இத் திட்டத்தின் கீழ் தைத்த ஆடை, தகரத் திலடைக்கப்பட்ட பழம், உணவு, தோல் உற்பத்திகள், இரத்தினக் கற்கள், ஆபரணங் கள், கடல் உணவுகள் என்பன ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றன. வர்த்தகத் திணைக் களத்தின் கருத்துப்படி ஏற்றுமதி பன்முகப்படுத்தி யமை ஏற்றுமதி வருமானங்களை அதிகரித் தது மட்டுமன்றி துவிச்சக்கர வண்டி ஏற்று மதி போன்ற கைத்தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதிகளையும் அதிகரித்துள்ளது. இந்நிலைமை ஐரோப்பிய ஒன்றியநாடு களிடையே சந்தைவாய்ப்பை அதிகரித் திருப்பதுடன் ஏற்றுமதி வருமானத்தையும் உயர்த்தியுள்ளது.

**3. வேலைவாய்ப்பு**

இலங்கையில் வேலையில்லாப் பிரச்சினையும் கீழ் உழைப்பும் மனிதவளப் பாவனையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருவதுடன் பொருளாதாரத்திலும் பின்ன டைவைக் கொண்டிருக்க ஏதுவாயிருந் தன. இதன் ஒரு அங்கமாக வேலைவாய்ப்பினை வழங்கக்கூடிய பிரதான கைத்தொழிற்து றையாக தைத்த ஆடைகள் அறிமுகப் படுத்தப்பட்டது. இப்பொழுது மூன்று இலட்சம் பேருக்கு நேரடியான வேலை வாய்ப்பையும்; பத்து இலட்சம் பேருக்கு மறைமுகமான வேலைவாய்ப்பையும் வழங்குகின்ற கைத்தொழிற்துறையாக தைத்த ஆடைக் கைத்தொழில் விளங்குவது டன் ஏனைய பாரம்பரியமற்ற கைத் தொழில்களிலும் பலர் வேலைவாய்ப் பைப் பெற்றுள்ளனர். அதே நேரம் குறைந்த நிதிவசதிகளற்ற மீன்பிடியில் ஈடுபட்டவர் களுக்கும் விவசாயிகளுக்கும் GSP+ சலுகை உதவியுள்ளது என்பதும் ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயமாகும். எனவே கைத் தொழில், விவசாயம், மீன்பிடி ஆகிய வற்றில் பெரும்பாலானவர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள GSP+ சலுகை வழி வகுத்துள்ளது.

**4. வறுமைத் தணிப்பு**

இலங்கையில் பெண்களிடையே காணப்படும் வேலையின்மை ஆண்களி டையே காணப்படும் வேலையின்மையை விட இரட்டிப்பு மடங்கு அதிகமான தாகும். கிராமியப் பெண்கள் வறுமை யுடன் போராடுபவர்கள் என்பதனால் அவர்களுக்குக் கிடைக்கும் வேலை வாய்ப்பு ஒருவகையான வறுமைத் தணிப்பு நடவடிக்கையாகும். GSP+ சலுகையூடாக இலங்கை மேற்கொண்டு வரும் பல்வகை ஏற்றுமதிகள் உள்நாட்டில் அவற்றி னூடான வேலைவாய்ப்பை வழங்கி அதனூடான ஜீவனோபாய நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியைக் கொண்டு வந்து வறுமைத் தணிப்புக்கு வகைசெய்யும். இல்லையேல் அரசாங்கம் இந்நிலையைச் சீராக்க பல வறுமைத் தணிப்பு நடவடிக் கைகளில் ஈடுபட வேண்டியிருக்கும். இலங்கை மத்திய வங்கி அறிக்கைப்படி அரசாங்கத்தின் மீளச் செலுத்தப்படாத கடன்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 81% வீதமாக இருப்பதனால் அரசாங்கம் வறுமைத் தணிப்பு நடவடிக்கையில் ஈடுபட முடியாமல்போகும். அதனைச் சமாளிப்பதற்கு உதவும் பிரதான காரணி யாக GSP+ சலுகையூடான பெண்களுக்கு வழங்கப்படும் வேலை வாய்ப்பு அமையும். வேலை வாய்ப்பும் வருமான உழைப்பும் வறுமைத் தணிப்புக்கு வகை செய்து சமூக முன்னேற்றத்துக்கு வாய்ப்பளிக்கும் என் பதை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**5. அந்நியச் செலாவணி உழைப்பு**

இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைப்படி வர்த்தக நிலுவையானது 60% பற்றாக்குறையைக் காட்டுவதாக கூறப்பட்டுள்ளது. உலகப் பொருளாதார நெருக்கடி காரணமாக பல ஏற்றுமதி வாய்ப்புக்கள் இழக்கப்பட்டு வருகின்றன. இந்நிலைமை எமது கட்புலனாகும் ஏற்றுமதியிலும் கட்புலனாகா ஏற்றுமதியி லும் பாதிப்பைக் கொண்டு வந்து அந்நியச் செலாவணி உழைப்பிலும் பாதிப்பைக் கொண்டுவரும். இதன் காரணமாகவே கட்புலனாகும், கட்புலனாகா ஏற்றுமதி களின் அளவை நிலையாக வைத்திருக்க GSP+ சலுகை அவசியமாகின்றது. இதன் மூலமாகவே அந்நியச் செலாவணி உழைப் பில் உறுதித் தன்மையினைப் பேணும் வாய்ப்பு இலங்கை அரசுக்கு ஏற்படும்.

**முடிவுரை**

இலங்கைக்கு GSP+ சலுகை கிடைத்தமையினாலேயே விலைப் போட்டிகளை முறியடித்து உலக சந்தை யில் தனது பொருட்களுக்கான ஏற்று மதியை நிலைநிறுத்த முடிந்தது. இந்நிலை யில் நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலை காரணமாக ஐரோப்பிய ஒன்றியத்து க்கும் இலங்கை அரசுக்குமிடையில் தோன்றிய முறுகல் நிலையால், GSP+ சலுகையை இழக்கும் நிலையை இலங்கை கொண்டுள்ளது. இச்சலுகை இழக்கப்படு மாக இருந்தால் ஐரோப்பிய ஒன்றியத்துக் கான ஏற்றுமதிகள் பெருமளவு வீழ்ச்சி யடைய முடியும். குறிப்பாக இலங்கை விலைப் போட்டிகளை சமாளிக்க முடியாது. போட்டியில் தோல்வி பெறும் நிலையும் ஏற்றுமதி வீழ்ச்சியால் தொழிற் சாலைகள் பல மூடப்பட்டு வேலை யில்லாப் பிரச்சினை, வறுமை. அந்நியச் செலாவணி உழைப்பினால் வீழ்ச்சி போன்றபல பாதிப்புக்கள் ஏற்படும் நிலை யும் உருவாகும். இதன் காரணமாகவே GSP+ சலுகையைப் பெறுவதற்கான மனித உரிமைகள் மதிக்கப்படுதல், நிலைத் திருக்கும் அபிவிருத்தி, நல்லாட்சி ஆகிய மூன்றின் மீதும் இலங்கை அரசு அக்கறை செலுத்துதல் வேண்டும். இதன் மூலமாக ஏற்றுமதிப் பொருளாதார நாடான இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து ஏற்றுமதிக்கான ஒத்துழைப்பையும் ஏற்று மதி வருமான அதிகரிப்பையும் பெற்று வளர்முக நாடுகளில் சிறப்பான நிலை யிலுள்ள நாடாக மிளிர முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவம்
# Customer Relationship Management

**பேராசிரியர் ம. நடராஜசுந்தரம்**
முகாமைத்துவப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவம் என்பது ஒரு புதிய எண்ணக்கருவாகும். கடந்த முப்பது வருடங்களாக இந்த எண்ணக்கரு பெருமளவிற்கு நிறுவனங்களில் புதிய கவனத்தினைப் பெறவில்லை. அண்மைக்காலங்களில் எல்லாத் துறைகளிலும் குறிப்பாக நிர்வாகம், சேவைகள் துறைகளில் இதன் முக்கியத்துவம் பெருமளவு உணரப்பட்டு இன்று நிறுவனத்தின் விளைதிறனுக்கு ஒரு முக்கிய மாறியாக காணப்படுகின்றது. பல்வேறு வகையான ஆய்வுகள் ஒவ்வொரு துறையிலும் மேற்கொள்ளப்பட்டு அதனூடாக வாடிக்கையாளர் முகாமைத்துவம் எந்த அளவிற்கு பயன்பாட்டைக் கொண்டிருக்கிறது என நிரூபிக்கின்றனர். ஒவ்வொரு துறைகளிலும் இந்த எண்ணக் கருவினை நினைத்துப் பார்க்கும் பொழுது அந்தந்த நிறுவனங்களின் தேவைக்கு ஏற்றபடி இந்த எண்ணக்கரு ஆராயப்படுகின்றது. ஒரு வங்கித்துறையினை நாம் நோக்குவோமானால், அங்கு நிலவுகின்ற போட்டிச் சந்தையினால் வாடிக்கையாளர்களை கவர்வதற்கு பல்வேறுவகையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக நம்பிக்கை, பூரண திருப்தி (Satisfaction) போன்றவை வாடிக்கையாளர்களை அதிகளவுக்கு கவர்கின்றன. அங்கு இரண்டு முறைகளில் வாடிக்கையாளர்கள் கவரப்படுகின்றனர். (1) அவர்களை ஆட்கொள்ளுதல் (Acauisition) இதனை விளம்பரங்களின் மூலமும் நேரடியாக சந்திப்பதன் மூலமும் மற்றும் வாடிக்கையாளர்களை வயது, பால் போன்ற அடிப்படையில் பிரித்தும் ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்கள். (2) இவர்களை தொடர்ந்து தம்முடன் வைத்திருத்தல் (Retention). இதில் வாடிக்கையாளர் சேவைகள், பொருட்களின் தரம், நம்பிக்கையும் இரகசியத்தன்மையும், வாடிக்கையாளர் திருப்தியும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இதேபோல பொருட்களை உற்பத்தி செய்கின்ற நிறுவனங்களுக்கும் இவை பொருந்தும்.

பொதுநிர்வாக சேவையினை நாம் எடுத்து நோக்குவோமாயின் அங்கு வருகின்ற பொதுமக்கள் எவ்வாறு தமது சேவைகளை பெற்றுக்கொள்கின்றார்கள் என்ற அம்சம் இன்று ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கின்றது. பொது நிர்வாகம் ஒரு கால கட்டத்தில் சில சட்ட திட்டங்களுள் இயங்குகின்ற ஒரு அமைப்பை கொண்டிருக்கின்றது. அங்கு பொதுமக்களுக்கும் சேவை வழங்குபவர்களுக்கும் இடையில் அதிகாரத் தூரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Power distance) பெரிதாகக் காணப் பட்டது. பொது நிர்வாகம் காலப் போக்கில் ஒரு அபிவிருத்தி நிர்வாகமாக மாற்ற மடைய (Development Administration) பொதுமக்களுக்கும் நிர்வாகிகளுக்கும் இடையிலான இடைவெளி குறைவடையத் தொடங்கியது. இன்று இடைவெளி மேலும் குறைவடைந்து புதிய ஒரு பார்வையில் பொதுநிர்வாகத் துறை நகர்ந்து செல்கின்றது.

பொது நிர்வாகத்துறையின் இன்றைய புதிய தூரநோக்கு "தேசத்திற்கு தரமான பொது சேவையினை வழங்கல்" (An excellent public service for nation). இங்கு தரமான (excellence) சேவையை வழங்கல் என்றால் என்ன? என்ற கருத்தில் நிர்வாகம் ஒரு வியாபார நிறுவனமாக, அங்கு நடைபெறும் செயற்பாடுகள் யாவும் வியாபார செயற்பாடுகளுடன் அண்டியதா? அவ்வாறாயின் பொதுமக்கள் யாவரும் வாடிக்கையாளர் வரிசையில் கணிக்கப்படுகின்றார்களா? என்ற பல கேள்விகள் தோன்றியுள்ளன. இவை யாவற்றிற்கும் இன்று பதில் "ஆம்' (Yes). ஆகவே இத்தகைய பாரிய நிர்வாக இயந்திர அமைப்பை எவ்வாறு முன்னோக்கி கொண்டு செல்வது என்பது முக்கிய விடயமாகும். மொத்தமாக இலங்கையில் காணப்படும் உழைப்புப் படையில் 25% பொது நிர்வாகத்துறையில் காணப்படுகின்றது. இங்கு காணப்படுகின்ற ஊழியர்கள் பல துறைப்பட்டவர்களாக உள்ளனர். சாதாரண ஊழியரிடமிருந்து உயர் கல்விமான்கள் வரை இங்கு காணப்படுகின்றனர். பல்வேறு சவால்களை இன்று பொது நிர்வாகம் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது. நிர்வாக செயற்பாடுகளை முழுமையாக கணனிமயப்படுத்தல், சேவைகளை முழுமையாக வழங்குவதற்கு புதியன வற்றை புகுத்தல், புத்துருவாக்கம் (Innovation and creativity) வாடிக்கையாளர்களை மையப்படுத்தி (Customer Centricity) நவீன தொழில் நுட்ப வசதிகளை வழங்கல், ஆளணி முகாமைத்துவத்தை வலுப்படுத்தல், புதிய நுட்பமுறைகளை பயன்படுத்தி Balance Scorecard நிறுவனத்தில் செயற்பாடுகளை அளவிட வேண்டிய நிலை என்பன முக்கிய அம்சங்களாகக் கொள்ளப்படுகின்றன. இதில் Blance Scorecard யை பொறுத்தவரை 4 நிலைப்பாடுகள் காணப்படுகின்றன.

1. அறிவில் வளர்ச்சியடையும் நிலைப்பாடுகள்:- இங்கு தூர நோக்கை அடைவதற்கு, தக்கவைப்பதற்கு எவ்வாறு மாற்றங்களுக்கு ஏற்ப எம்முடைய திறனை வளர்த்துக்கொள்ளலாம்.
2. தொழில் செயல்முறை நிலைப்பாடுகள்:- எவ்வாறு எம்மிடம் சேவை பெறுபவர்களுக்கு உள்ளகரீதியாக உள்ள செயற்பாடுகள் உதவி புரிகின்றன.
3. வாடிக்கையாளர் நிலைப்பாடுகள்:- எமது தூர நோக்கை அடைவதற்கு, எவ்வாறு நாம் வாடிக்கையாளர்களை பொது மக்களை திருப்திப்படுத்தப் போகின்றோம்.
4. நிதிசார் நிலைப்பாடுகள்:- எந்தளவுக்கு நிதியை எப்பொழுதும் திருப்திப்படக் கூடிய நிலையில் செலவு செய்து கணக்கிடல். இந்த நான்கில் இன்று வாடிக்கையாளர் பொது மக்களின் நிலைப்பாடு மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது.

பொது மக்களுக்கும் நிர்வாகிகளுக்குமிடையே ஏற்படும் தொடர்பு எவ்வாறு அமையவேண்டும் என விரிவாக பின்பு விளக்குகின்றேன். முதலில் எல்லோருக்கும் பொது அம்சமாக இரு பிரதான குறிப்புக்கள் முக்கியம் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) நேரமுகாமைத்துவம்:- செய்யும் தொழிலே தெய்வம் என்ற சிந்தனைக்கு ஏற்ப ஒவ்வொரு ஊழியரும் கடமைக்கு நேரத்திற்கு செல்ல வேண்டும். நேரம் தான் பணம் என கூறுவார்கள். பலர் 30 நிமிடங்கள் 60 நிமிடங்கள் காலதாமதமாக வேலைத்தளத்திற்கு வருகை தருவார்கள். இதனால் பல விடயங்களில் தாமதம் ஏற்பட்டு நாளாந்த வேலைகள் பாதிக்கப்படும். சந்திப் பதற்காக வருகை தந்திருக்கும் பொது மக்களும் பல சஞ்சலங்களுக்கு உட்படுத்தப்படுவார்கள். இதனை சிறப்பாக பேணுமிடத்து சிறந்த ஊழியர்களாக வரக்கூடிய சந்தர்ப்பங்கள் உங்களைத் தேடிவரும்.

(ஆ) தொழில் பற்றிய அறிவும் அர்ப்பணிப்பும்:- இந்த இடத்தில் நீங்கள் செய்கின்ற தொழில் பற்றிய பூரண அறிவும் அதனை செய்வதற்கான அர்ப்பணிப்பும் காணப்படல் வேண்டும். தொழில் பற்றிய பூரண அறிவு இருக்கும் பொழுது, தொழில் செய்வதற்கான விருப்பம், ஆர்வம் காணப்படும். இல்லாதவிடத்து பிற்போடல் (Procrastination) கவலையீனம் என்ற பல நோய்கள் உருவாக இறுதியில் உச்சரீதியான அழுத்தம் (Stress) பொது மக்களுடன் வாக்கு வாதத்தில் முடிவடையும். ஆகவே பொது மக்களுடன் நல்ல வகையான தொடர்புகளை மேற்கொள்ள பின்வரும் அம்சங்கள் ஓரளவுக்கு உதவியாக அமையும்.

நிறுவனங்களில் கடமைபுரிகின்ற உத்தியோகத்தர்கள், உலக ரீதியாக ஏற்படுகின்ற சவால்களுக்கு ஏற்ப (Global Challenges) தம்முடைய நடைமுறைகளை மாற்றிக் கொள்ளுதல் வேண்டும். அவர்களிடம் முன்காரியாலய (front office) முகாமைத்துவ அம்சங்கள் காணப்படல் வேண்டும். பொதுவான புத்தி நுட்பம், சமுதாய புத்தி நுட்பம், மற்றும் உணர்ச்சி மிக்க தொழில்நுட்பம் (emmotional Intelleigence) பொதுவாக அவர்களிடம் காணப்படல் வேண்டும். பொது மக்கள் பொதுவாக இவர்களிடம் எதிர்பார்ப்பது சந்தோச (dellightful) த்துடனான கௌரவத்தை கொண்ட நடத்தையினை யாகும். இதற்கு ஊழியர்கள் தம்மை தயார்ப்படுத்தல் வேண்டும். மேலும் இவர்களிடம் மேலும் விளைதிறனும் (efficiency) வினைதிறமும் (effectiveness) காணப்படல் வேண்டும். இன்றைய காலகட்டத்தில் முன்போலல்லாது அதிசிறந்த பொது மக்கள் உறவு உருவாக வேண்டும். இன்றைய காலகட்டத்தில் பொதுவாக ஊழியர்களின் பெரும்பாலானோர் எதிர் தாக்குதலை விரும்புகின்றார்களே தவிர, புதிதாக புதுமைபுகுத்தி (innovation) ஏற்றுக் கொள்வதற்கு தயாராக இல்லை. இதனால் குறிப்பாக பல நிர்வாக நிறுவனங்கள் பாதிக்கப்படுகின்றன.

உமது நிறுவனத்தில் ஒவ்வொரு ஊழியரும் தனது ஆளுமையை (personality) விருத்தி செய்ய வேண்டும். உமது கடமையை தீவிர ஆர்வத்தை உருவாக்கல், தொலைபேசியில் உரையாடுவதற்கான பண்புகளை வளர்த்தல், உம்மை ஒரு உதாரணமாதிரியாக (Role model) காட்டடல், நேர்மனோபாவ சிந்தனையுடன் (Positive) மக்களை அணுகுதல், அர்ப்பணிப்பான சேவையினால் நிறுவனத்தின் பெயருக்கு நன்மதிப்பைப் பெறல், தொடர்பாடலை மேம்படுத்தி, வரும் பொதுமக்களுக்கு மகிழ்வித்தலை உருவாக்கல், பொதுமக்கள் எப்பொழுதும் சரியானவர்கள் (customer is always right) என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாந்தத்தை விளங்கிக் கொள்ளல், பண்பாகவும் அன்புடனும் சிரித்த முகத்துடனும் அவர்களுடன் நல்ல மொழியில் உரையாடல் போன்ற அம்சங்கள் முக்கியமானவையாகும். மேற்காட்டிய அம்சங்கள் ஊடாக தன்னுடைய ஆளுமையினை வளர்த்துக் கொள்ள முடியும்.

**முன்நிலை உத்தியோகத்தர்களின் பண்புகள்**

(அ) பரவச உபசரிப்பு, தோற்றம். சொற்பதங்கள் இருத்தல் வேண்டும். என்னால் உமக்கு என்ன சேவை செய்ய முடியும்? என்ற பதம் உபயோகிக்கப்படும்பொழுது; உமது சேவையின் அர்ப்பணிப்பும் அதே நேரம் உடனடியாக பொது மக்களின் அன்பையும் பெற முடியும். விளங்கிக்கொள்ளல் வெளிப்படையான அணுகுமுறை, விருப்பம் என்ற அம்சங்கள் உள்ளடங்குகின்றன.

(ஆ) இனிய புன்முறுவலுடன் வரவேற்றல்: நேர்மனோபாவ சிந்தனை மலர்ந்த முகம், கவரக்கூடிய புன்சிரிப்புடன் மக்களை அணுகும் பொழுது மனதில் பதியத்தக்க ஆளுமையுடைய ஒருவராக நீர் மிளிருவீர். ஒரு ஆரோக்கிய சூழ்நிலையை உருவாக்குவதன் மூலம், விளை திறன்மிக்க, ஆளுமையுடைய சேவையாளராக மதிக்கப்படுவீர். ஒரு 'புன்சிரிப்பு' என்று கூறும் பொழுது உம்மை நேசிக்கின்றேன், உம்மை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன், உமக்கு சேவை செய்ய விரும்புகின்றேன். உம்முடைய வரவு நல்வரவு என்ற பல விடயங்களை வெளிப்படுத்துபவராக அமையும்.

(இ) முதலாவது அபிப்பிராய எண்ணம் (First Impression):- உமது அலுவலகத் துக்கு ஒருவர் முதல் முறையாக வரும் பொழுது உம்முடைய முழுமையான தோற்றத்தைக் கொண்டு முதலில் மதிப்பீடு செய்வார். பேராசிரியர் "அல்பேட் மெகா ராமின்" உடைய ஆய்வு ஒன்றில் வெளிப்பாடான கருத்துக்களில் இதனை 'அமைதியான தகவல் (Silent message) என்று கூறப்படுகின்றது. இங்கு பார்க்கக் கூடிய விம்பங்கள் (Visual images) எனவும் அழைப்பர். அவருடைய கருத்தின்படி நாம் ஒருவரை சந்திக்கும் பொழுது தங்கியிருப்பது (அ) 55 வீதமானது எமது முழுமை யான தோற்றத்துள்ளும், (ஆ) 38 சதவீதம் எம்முடைய குரலிலும், (இ) 7வீதம் நாம் என்ன சொல்கின்றோம் என்பதிலும் தங்கியிருக்கும். நீங்கள் காரியாலயத்துக்கு அணிந்து வரும் உடுப்புகள் உங்களுடன் சுற்றியிருந்து வேலை செய்பவர்களுடைய ஆடைகள் முக்கியமானதாக அமையும். உம்மில் உத்தியோகம் சம்பந்தமான தன்மை(Professionalism) காணப்படுதல் நன்மை பயக்கும். மேலும் ஒருவருக்கு "கைகொடுப்பது" உங்களுடைய கண்பார்வை தோற்றம் யாவும் உயர்நிலைக்கு உங்களை இட்டுச் செல்லும்.

(ஈ) நாளந்தம் உபசரித்து உதவும் பண்புகளை பயன்படுத்தவும்:- ஒரு நிறுவனத்தில் உபசரித்து உதவும் பண்பை கொண்டிருக்கும் ஒருவர் எப்பொழுதுஏனையோரைவிட மேலாக கணிக்கப்படுவார். அவருக்காக திறக்காத கதவுகளும் திறந்து காணப்படும். ஒருவருடைய சிறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய உபசரிப்புத் தன்மைகள், புத்தியுள்ள திறமையுள்ள ஒருவருக்கு மேலான இடத்திற்கு கொண்டு செல்லும். அவருடைய பண்பான நடத்தையினை வெளிப்படுத்தும். ஆனால் இதற்கு எந்தவிதமான செலவும் ஏற்படமாட்டாது.

(உ) உபசரித்தல் ஒரு சொத்து: -

பொது மக்களுக்கு சேவை வழங்கும் பொழுது அவர்களை வெல்வதற்கு உபசரித்தல் ஒரு முக்கியமான இடத்தை பெறுகின்றது. சிறுஅளவு உபசரித்தல் மூலம் பெரும் அளவு வெற்றியை நீங்கள் அடையலாம். எல்லா மனிதர்களும் இதனை செய்து புகழ் பெறவிரும்பினாலும், அதனை செய்யமுடியாது. எதிர் நிலையிலும் காணப்படுவர். நல்ல பண்புகள் அல்லது உபசரித்தல் என்பது ஒருவருடைய பலவீனத்தை காட்டுவதல்ல, அது உம்முடைய உள்ளார்ந்த பலத் தையும் (Inner Strength) சுயநம்பிக் கையையும் வெளிக் காட்டுவதாக அமையும்.

(ஊ) பொதுமக்களின் நன்மதிப்பை பெறல் : -

சிறந்த நன்மதிப்பை பெறவேண்டுமானால் முதலில் அவர்களுடைய கருத்துக்களை பொறுமையாக கேட்க வேண்டும். அப்பொழுது தான் நீர் ஒரு சிறந்த உரையாடுபவராக (Convertionalist) கருதப்படுவீர். அவர்களை உங்களுடன் உரையாடவிடுங்கள். தனது தேவையை பிரச்சினைகளை விளக்கும் பொழுது கவனமாக அவதானிக்கவும். நீங்கள் கேட்கும் கேள்விகளில் அவர் ஆர்வமாக பதில் சொல்லவையுங்கள். அப்பொழுது அவர் அதிகளவுக்கு மகிழ்ச்சியுடையவராக காணப்படுவார். உங்களுடைய முழுமையான கரிசனையையும் செலுத்தி அவருடைய கருத்துக்களுக்கு செவிசாய்க்கவும். இங்கு குறிப்பாக உங்களுடைய 'கண் பார்வை' முக்கியமானது.

(எ) நகைச்சுவை மனநிலை: -

பொதுமக்களுடன் சேவையாற்றும் பொழுது நகைச்சுவையுடனான மனநிலை காணப்படல் வேண்டும். சரியான நேரத்தில் தரமான நகைச்சுவை வழங்கப்படும் பொழுது அவர்கள் சந்தோசப்படுவார்கள். அது அவருடைய விருப்பத்தை மேலும் அதிகரிக்கும். எந்த ஒரு சூழ்நிலையிலும் நகைச்சுவையானது பலமான மன எழுச்சிச் சூழலை உருவாக்கும். இதனூடாக வேலைத்தளங்களில் செல்வோரையும் வசப்படுத்தலாம்.

(ஏ) நேர்மைத்தன்மையையும், உண்மைத் தன்மையையும் பேணவும்: -

ஒரு நேர்மைத்தன்மையுடையவர், ஒழுங்கானவர் என்ற நற்பெயரை பெற்றுக் கொள்ளவேண்டும். நேர்மையற்ற நடத்தைகளுக்கு உம்மை எந்த வழியிலும் அர்ப்பணித்துக் கொள்ளக்கூடாது. நேர்மைத் தன்மையூடாக உம் மிடம் வெளிக்காட்டல், ஒழிவு மறைவின்றி செயற்படல், நம்பிக்கைத் தன்மை, உள்ளொன்று புறமொன்றில்லாத, கபடமற்ற தெளிவான செயற்பாடுகள் உருவாகும். இதனூடாக ஒருவரையொருவர் மதிக்கும் பண்பு உருவாகும். இந்தக் கருத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை நிறுவனத்திலுள்ள ஒவ்வொரு ஆளணி உத்தியோகத்தர்களும் தம்முடைய சிந்தனையில் இணைத்துக் கொள்ளல் வேண்டும்.

(ஐ) உமது தவறுகளை ஏற்றுக்கொள்ளவும் :-
நீங்கள் தவறு செய்யுமிடத்து அதனை பூரணமனத்துடன் ஏற்றுக் கொண்டு திருந்துவதற்கு முயற்சியை மேற்கொள்ள வேண்டும். பிழைகள் தவறுகள் உடனடியாக இனம் காணப்பட்டு அதனால் முறுகல் நிலைகள் ஏற்படுவதற்கு முன்பு விரைவாக தீர்க்கப்படல் வேண்டும். ஏனையோரிடமிருந்து வருகின்ற சுய விமர்சனங்களை (Self Criticism) அமைதியாகக் கேட்பது புத்திசாலித் தனமாக அமையும்.

(ஒ) நான் கவலைப்படுகின்றேன்:-
நான்கவலைப்படுகின்றேன் என்ற பதத்தை நன்கு பயன்படுத்த வேண்டும். அவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டால் உடனடியாக Sorry என்ற பதத்தைப் பாவிக்கவும். ஒரு நிலைமையில் ஏற்படுகின்ற ஒரு பிரச்சினையை இந்த பதத்தை பயன்படுத்துவதன் மூலம் வெற்றி கொள்ளலாம். இதனை தவிர்த்து பிழையாக செய்த தொன்மை சரியானது என நிரூபிக்க முயலுதல். நிலைமைகளை தவறாகக் கதைக்க முயலுதல். தனது தேவைக்கு ஏற்ற விவாதம் (argue) புரிய முனைதல் யாவற்றையும் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

(ஓ) வாக்குவாதங்கள்:- தவிர்த்துக் கொள்ளவும். வாக்கு வாதத்தை சமாளிக்க வேண்டுமாயின் (handle) அதனை தவிர்த்துக் கொள்ளல். அப்படியான ஒரு நிலை தோன்றுமாயின் பொதுமகனை முன்னிலைப் படுத்தி பாதுகாக்கவும், எக்காரணம் கொண்டும் அவரை புண்படுத்தக் கூடாது. வாக்குவாத நிலைமைகள் தோன்றினாலும் அதனை நீங்கள் கட்டுப்படுத்த வேண்டும். அவர்களுக்கு அவர்களின் பிழை களை மட்டும் எடுத்துக் கூறவும். வாக்கு வாதத்துக்கு போகும் பொழுது, அதிகளவுக்கு நீங்கள் கோபப்படக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். மேன்மையான சிநேகபூர்வமான விளங்கக் கூடிய அணுகுமுறையே சிறந்ததாக அமையும் என்பதனை தொழில் புரிபவர்கள் மறந்து விடக் கூடாது.



மாட்டின் கொம்புக்கு இடப்படும் பூண்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HOW TO PLAN YOUR PROJECT SUCCESSFULLY?

**Prof.A.V. Manivasagar**
*Head Dept. of Political Science,*
*University of Jaffna.*

**A. Locating the Concept of Project Plan**

As the administrator / Manager of an organization, you probably will be responsible for developing and implementing operational and project plans and occasionally contributing to strategic plans.




Strategic Plans define broad goals and their implementation over the long term. They normally come from the organization's top management. Operational Plans support strategic plans and outline actions to be performed by each functional area. Project Plans support both operational and strategic plans and may include action statements for specific events, such as new product development, organization productivity, expansion of facilities, installation of new office systems, or reorganization.

We understand that every project is unique and different. It is not like managing an ongoing operation. Whether it is designing a new product or delivering a new service, it demands for careful planning and re-planning.

Sometimes you may not write down a detailed plan for your projects on paper, but you will always have an idea about how the project will be managed, and what steps you will be taking in order to make it successful. It should be the most realistic plan at the time you come up with it. Your project plan needs to describe all the activities and processes involved in managing the project in order to achieve a successful outcome.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Success of this plan depends on availability of information, your experience, support which you are get from your organization, and 'project stakeholders.' Project stakeholders are the people who are interested in your project, including your customers and your project organization.

**B. Reasons for the Failure of Project plan**

Projects are never planned to fail. However, the increasing rate of project failures show that many projects have not been planned well. A recent KPMG study shows that 70% of projects ended in failure and bad planning was seen as a key failure factor. Experience shows that projects are inherently at risk through over running on time and cost and / or failing to deliver a successful outcome. Such failures may be caused by one or more of the following factors;

- Poor project definition by the government department / agency concerned in defining the scope, requirements and desired outcomes.
- Insufficient consultation with users, internal employees and other stakeholders.
- Inadequately skilled and experienced project personnel.
- Inadequate reporting arrangements and decision-making.
- Inconsistent understanding of required project activities, roles and responsibilities.
- Lack of adequate resources.
- Poor marketing strategy.
- Lack of ownership and accountability by senior management.
- Lack of leadership and motivational factors.
- Lack of risk-management and timely decision-making.
- Absence of clear and short lines of reporting.
- Absence of a team leader, who can manage the complexity of the project.

**C. Steps for the Successful Project plan**

There are many steps involved in the project planning stage. To ensure that planning is done properly, we will discuss some of the more important aspects of project planning. Remember these are the basic steps in planning a project that must be followed in any project if you want it to be a success.

**1. Define and verify the requirements**

You will find there are many different and competing requirements



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

for each project when you start developing your project plan. When developing your project plan at the initial stage, you need to define, re-define and verify all project requirements. Project planning always starts with defining requirements.

If you have no experience in projects, it is very important to understand how to define the requirements. This process starts with your customer or client specifying requirements when they initiate the project, or working together with you to confirm requirements. Make sure you are clear about these requirements and the requirements can be met. Agreeing into something you cannot deliver will damage your relationship with the customer.

It is not only the customer requirements you need to take into consideration, but also the requirements of all stakeholders in your project. If they have conflicting requirements, you need to negotiate and agree on something. When all the requirements are agreed upon, ensure it is documented and distributed. This can be attached to your project plan.

**2. Set goals and objectives**

When you are clear about your project requirements and the purpose of your project, the next step will be to come up with the strategies to manage your project. You need to set the goals and objectives of your project. Make sure, like in any other goal setting process, you come up with ' SMART' goals to achieve what you want to. 'SMART' means that your goals and objectives are Simple, Measurable, Achievable, Reliable and Timely. Meet these criteria and make sure you are clear about the goals and objectives you set for the project.

When you know what you want to achieve, start writing your project plan with a statement on project strategy and go into the details of your goals and objectives.

3. Plan time, budget and resources

Any small project requires planning time, budget and resources. All projects are limited by time. A good project manager needs to be able to estimate a feasible time frame for the project. Using techniques like WBS (Work Breakdown Structure) and Gantt chart, you can come up with a feasible time plan. This process involves breaking down the activities you will have in your project and allocating time for each activity. When you know how



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

much time each activity takes you can come up with a time plan for the project. You can observe some activities may run parallel and some activities may depend on others. Don't forget to adjust your time plan according to this.

When you have your time plan, it is easy to plan the cost and human resources. Plan your cost for each hour you spend on your project - what we call man-hours. By doing so you come up with the total cost of your project. You can follow the same process with planning the resources. Allocate individuals for each activity in your time. If you need to procure resources from outside the organization, you also need to plan it at the same time.

If possible try to use project management software like Microsoft Project to save time and to create accurate plans. MS Project is one of the best software available for planning and monitoring projects. It helps you to design your time, cost and resource plans, and also to monitor it.

Planning resources is not only technical process. It also involve strategies for acquiring your project team and managing it. As the project manager, it is your responsibility to plan for resources early and release them when the project is finished.

If you are sharing, resources with other project managers, ensure you plan this properly as change of plans can impact other projects, or you might lose your resources for another project.

**4. Plan for risk, opportunities and change**

All project plans, including time plan, budget, and human resource plan can change as a result of unforeseen events, Whether it is a possible risk causing a delay in your project or whether an opportunity that speeds up your project, when these happen, all your plans need to be revisited and revised Any change makes an impact on your original plan.

Always perform risk analysis to identify risks and create action plans to minimize the impact of potential risks. By allowing time for possible risks and opportunities identified, you will encourage some flexibility in your plan to accommodate any changes. Follow a change control process to manage these changes.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. Ensure your quality plans are in place**

There are many quality standards you need to follow in your projects. Quality planning is essential for the success of the project as it specifies all the organizational and industry standards in delivering projects successfully. Ensure you have a quality plan describing what quality criteria and standards will be met in your projects.

What we have seen are some of the most critical planning requirements for a successful project. You need to ensure that all plans are ready before you move to the next level - execution of the project. During the project execution stage you will implement the project according to the plans drawn up and agreed upon.

**References**


Belbin, RM., Management Team: Why they succeed or fail? Heinemann: London, 1991.

Haynes, Marion E., Project Management Menlo Park, CA. : Crisp Publications, 1995.

Heeks, R., Reinventing Government in the Information Age, Rutledge: London, 2001.

http://www.ogc.gov .uklsdtoolkit/reference/deliverylifecycle/impplans/proL mgmt.html.

Locke, E.A. & Latham, G.P., A Theory of Goal Setting and task performance, Prentice Hall:
Englewood cliffs, NJ, 2000.




சேர்பொன் இராமநாதனால் பாவிக்கப்பட்ட தளபாடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசானுபவம்

கலாபூஷணம் ஆசை. இராசையா
(ஓவியர்)

நாம் புடைவைக் கடைக்குச் செல்கிறோம். அங்கே எம்தலையில் மிளகாய் அரைப்பதற்கென்றே காத்திருப் பார்கள் பணியாளர்கள். "அக்கா இது நல்லாயிருக்கு இது நல்ல கலர் இது தான் லேற்றஸ்ற் பாசன் (Latest Fashion)" என்பர். வாங்குபவர்கள் ஏமாளிகள் என்று அவர்களுக்கு நன்கு தெரியும். எப்படியும் அவர்களுக்கு வியாபாரமானால் சரி.

இங்கே கவனிக்க வேண்டிய பல விடயங்கள் உள்ளன. கலர் நல்லாயிருக் கிறதென்று அவன் சொன்னால் வாங்கு கின்ற எம்மவர்களுக்கு சுயபுத்தியில் இயங் கும் வல்லமை இன்மையோ என்னவோ அவனுடைய பசப்பு வார்த்தைக்கு எடு பட்டு விடுகிறார்கள். "கலர் நன்றாக இருந் தால் உன்னுடைய மனைவிக்கு போட்டு அழகு பார்" என்று சொல்வதற்கு இவர் களால் முடிவதில்லை.

ஒவ்வொருவருக்கும் இரசனை வேறுபடும் என்பது விற்பவனுக்கும் தெரிய வேண்டும். வாங்குகின்றவர் களுக்கும் தெரிய வேண்டும். உண்மையில் இங்கே எம்முடைய, வர்ணம் சம்பந்தமான உணர்வு, அறிவு, இரசனை (Colour Sense) இல்லாத தன்மை பெருங்குறைபாடு,. அந்தத் தெளிவு இருப்பின் அவனுடைய பசப்பு வார்த்தைக்கு இவர்கள் எடுபட மாட்டார்கள்.

**எப்படி வர்ணங்களைத் தெரிவு செய்வது?**

வர்ணங்களில் வெப்பு வர்ணங்கள் (warm Colours), குளிர் வர்ணங்கள் (Cool colours) என இரண்டு வகையுண்டு. வர்ணங்களில் அடிப்படையாக மூல வர்ணங்கள் சிவப்பு, மஞ்சள், நீலம் என மூன்று வர்ணங்கள் உண்டு. இவற்றிலிருந்து அநேகமான பிற வர்ணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். இவற்றுள் நீலம் குளிர் வர்ணம் சிவப்பு, மஞ்சள் இருக்கும். சிவப்பு வர்ணங்கள். நீலம் +மஞ்சள் சேர்ந்தால் பச்சை வர்ணம் (குளிர் வர்ணம்) நீலம் + சிவப்பு சேர்ந்தால் ஊதா (குளிர் வர்ணம்), சிவப்பு + மஞ்சள் சேர்ந்தால் ஒரேஞ்ச் (வெப்பு வர்ணம்).

நாம் அணியும் உடைகள் குளிர் வர்ணத்தில் அமைந்தால் பல விதத்திலும் எமக்கு நல்லது. உடற் சுவாத்தியத்திற்கும் நல்லது. பலவிதமான நிறங்களையும் ஒரேஇடத்தில் வைத்து விட்டுத் தூர நின்று பார்த்தால் பளிச்சென்று தெரியக்கூடியது சிவப்பு வர்ணந்தான். அதனாற்றான் வீதிகளில் "சமிக்ஞை" விளக்குக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனங்களுக்கு பிறேக் லைற்றாகவும் பாவிக்கின்றார்கள். சிறுகுழந்தைகள் சிவப்பு வர்ணத்தால் கவரப்படுவது இதனாற்றான். அந்த வயதில் வர்ணங் களைப் பகுத்தறியும் ஆற்றல் அவர்களுக்கு இல்லாததால் இலகுவில் அவர்கள் இதன் பால் ஈர்க்கப்படுகிறார்கள்.

தனித்து சிவப்பு வர்ணத்திலோ, கறுப்பு வர்ணத்திலோ உடைகள் அணிவது நல்லதல்ல. அவை உடல் ரீதியான மாறுதல்கள் மட்டுமல்ல, உளரீதியான மாறுதல்களையும் உண்டாக்குபவையா கவும் இருக்கும். உளவியல் ரீதியாக ஒவ்வொரு வர்ணத்திற்கும் ஒவ்வொரு குணம் இருப்பதாகக் குறிப்பிடுகிறார்கள். சிவப்பு வர்ணம் உள்ளத்திலே கோபத் தையும், வெறித்தனத்தையும் ஊட்டக் கூடியது. கறுப்பு வர்ணத்துக்குக் குரூரமான சிந்தனை, மஞ்சள் ஆன்மீக உணர்வுக்கும், பச்சை பசுமையான எண்ணங்களுக்கும், நிறைவேறாத ஆசைகளும், சோகமும் உள்ளவர்கள் இருண்ட வர்ணத்தை விரும்புவதாகவும் உணரக்கூடியதாக உள்ளது. எப்பொழுதும் "ஜொலி" மூட்டில் உள்ளவர்கள் பிரகாசமான வர்ணங்களை விரும்புவர். அநேகமானோர் எதிர் வர்ணங்களை (Contrasting colours) விரும்புவர். எதிர் வர்ணங்கள் எவை என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். சிவப்புக்கு எதிர் வர்ணம் பச்சை, மஞ்சளுக்கு எதிர் வர்ணம் - ஊதா, நீலத்துக்கு எதிர் வர்ணம்- ஒரேஞ்ச்.

சில வர்ணங்கள் பார்வைக்கு வெறுப்பாக இருக்கும். ஒரு ஓவியத்தை அவதானித்தோமானால் அதில் பல வர்ண அமைப்புகள் (Colours Scheme) காணப்படும். சில வேளைகளில் எமக்கு வெறுப்பாக இருக்கும் அந்த வர்ணம் இந்த ஓவியத்தில் பிற வர்ணங்களுடன் சேர்ந்து இரசிக்கக் கூடியதாகக் காணப்படும். இன்னும் ஒரு படி மேலாக சொல்வதா னால் அந்த வர்ணம் இல்லாவிட்டால் அந்த ஓவியம் சிறப்பாக அமைந்திருக்காது என்று சொல்லும்படி அமைந்துவிடுவது முண்டு.

தனித்து சிவப்பு வர்ணத்தில் உள்ள ஆடையை ஒரு கருநீல வர்ணத்துடன் சேர்த்து அமைக்கும் போது அந்த சிவப்பு வர்ணத்தை இரசிக்கக்கூடியதாக அமைந்து விடுகிறது. பொதுவாக ஒத்திசைவான வர்ண அமைப்பு (Harmonical Colours) உள்ள ஆடைகள் மனதுக்கு இதமாக இருக்கும் உடலுக்கு அழகாக இருக்கும். எம்மைச் சார்ந்தவர்களுக்கும் மன அமைதி யைக் கொடுக்கும்.

எம்மை அறியாமலேயே நாம் வர்ணங்களின் ஆளுகைக்குள் ஆட்பட்டுள் ளோம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகையால் அவற்றைப் பற்றிய அறிவை பெற்றுக்கொள்வோமாக.

அடுத்து "லேற்றஸ்ற் பாசன்" என்று பரவலாகக் கதைக்கப்படுவதில் உண்மையில் நாகரிகம் என்று எண்ணி அநாகரிகமாவதைத்தான் காணக்கூடிய தாக உள்ளது. ஒருவருடைய உடல் அமைப்புக்கும், உடல் நிறத்துக்கும் ஏற் பவே ஆடையைத் தெரிவு செய்ய வேண்டும். "லேற்றஸ்ற் பாசன்' என்று சொல்லிக்கொண்டு அவலட்சணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலாவருவதில் பெருமைப்படுவதற்கு ஒன்றுமில்லை. நாம் அழகாக இருப்பதும் அழகாக ஆடை அணிவதும் எமது கைகளிலேயே தங்கி உள்ளது.

அன்றாட வாழ்வில் நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலும் மற்றவர்களுக்கு இடைஞ்சல் செய்வதாக இருக்கக்கூடாது என்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். பல பேர் அமர்ந்திருந்து சாப்பிடும் போது அடுத்தவர் முகம் சுழிக்கும்படி எமது சாப்பிடும் முறை அமையக்கூடாது. உள்ளங்கையில் உணவு படாமல் ஐந்து விரல்கள் மட்டுமே அந்தத் தொழிலைச் செய்ய அனுமதிக்க வேண்டும். சாப்பாட்டை வாய்க்குள் வைத்த பின் வாயை மூடிக்கொண்டு சாப்பிட வேண்டும். சிலர் சாப்பிடும் பொழுது "சப்புக் கொட்டி சாப்பிடுவார்கள்". கண்ணை மூடிக் கொண்டு அந்தச் சத்தத்தைக் கேட்டால் நன்றி உள்ள பிராணி சாப்பிடும் சத்தமாகவே உணரலாம். இது அருகில் இருந்து சாப்பிடுபவர்களுக்கு அருவருப்பையும் மேற்கொண்டு அந்த இடத்திலிருந்து சாப்பிட முடியாத நிலையையும் உண்டு பண்ணி விடலாம்.

கவி காளமேகம் என்ற புலவர் ஒரு நாள் ஒரு சத்திரத்திற்குச் சாப்பிடச் சென்றுள்ளார். அவருடைய கஷ்ட காலம், அவருக்கு அருகே சோழ நாட்டைச் சேர்ந்த ஒருவன் - பல நாட்கள் பட்டினி இருந்தவன் போலும் - அவனுடைய முன்குடுமி அவிழ்ந்து நாலா பக்கமும் சுழன்றடிக்க, சோற்றுப் பருக்கைகள் அடுத்தவன் இலையில் விழுவதையும் பொருட்படுத்தாது தன் கருமமே கண்ணாகியிருந்ததைக் கண்ட கவிஞர் பின்வருமாறு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார்.

"சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா, சோற்றுப்
பொருக்குலர்ந்த வாயா, புலையா - திருக்குடந்தைக்
கோட்டானே, நாயே, குரங்கே, யுனை யொருத்தி
போட்டாளே வேலையற்றுப் போய்."
என்றார்.

சாப்பிடும் பொழுதும் அடுத்தவர் நலன் பேணப்பட வேண்டும் என்பது இங்கே வலியுறுத்தப்படுவது நாம் கவனிக்கத் தக்கது.

எனக்குத் தெரிந்த ஒருவர் உணவை சிறு உருண்டையாக உருட்டி - மேசன் சந்தடைப்பதற்கு சீமெந்தை எறிவது போல - வாய்க்குள் எறிந்து சாப்பிடுவதை அவதானித்துள்ளேன். பார்ப்பதற்கு இது வேடிக்கையாக இருந்தாலும் அவரைப் பொறுத்தவரை அது ஒரு அலாதியான சுகம் தான்.

சாப்பிட்ட பின்னர் பல்லுக்குத்தும் சடங்கொன்றை சிலர் நடாத்துவார்கள். சிலருடைய பல்லமைப்பின் நிமித்தம் உணவுப் பண்டம் பல்லிடுக்குக்குள் அடைவது தவிர்க்க முடியாதது தான். அதற்காக தாய்க்காகத்திடமிருந்து உணவைப் பெறுவதற்காக வாயை அகலத் திறக்கும் காகக்குஞ்சு போல் எல்லோருக்கும் தமது பல்லழுக்கைக் காட்டிய படி - அந்தச் சடங்கை நடாத்த வேண்டுமா? ஒரு

கையால் வாயை மறைத்துக் கொண்டு, அடுத்தவர்கள் முகஞ் சுழிக்காதபடி நாசுக் காகச் செய்வது நாகரிகமாக இருக்கு மல்லவா?

சிலர் கொட்டாவி விடும் பொழுது அவதானிக்கலாம். ஒரு ராக ஆலாபனையையே செய்து முடிப்பார்கள். ஆனால் அடுத்தவர்கள் அந்த ஆலாப னையை இரசிப்பார்களா என்பதைச் சிந்திப்பதில்லை. அதைப் போன்றதே தும்மலும். சிலர் தும்மும் போது வீடே அதிர்ந்து விடும். ஒரு இருதய நோயாளி அருகில் இருந்தால் அவருடைய இருதய ஓட்டமே நின்று விடலாம். இவற்றைக் கொஞ்சம் அடக்கி வாசிப்பதில் எந்தச் சிரமமும் இல்லையே.

**நாம் எங்கே செல்கின்றோம்?**

கற்றலும் அதற்கேற்ப நிற்றலும், எம் சமூகத்தில் அருகிப்போய்க் காணப்படு வது ஒரு பெரும் குறைபாடாகும்.

கருவறையிலிருந்து கல்லறை வரைக்கும் உள்ள இந்தச் சிறிய கால இடைவெளியில் மனிதன் எப்படியெல் லாம் நடக்க முற்படுகின்றான் என்பதை எண்ணிப் பார்க்கிறேன்.

பிறப்பு என்ற ஒன்று இருக்கு மாயின் இறப்பு என்பது நிச்சயமானது. நாம் வாழுகின்ற ஒவ்வொரு வினாடியும் சுடலையை நோக்கிய பயணத்தைத்தான் நாம் மேற்கொண்டிருக்கின்றோம் என்பதே யதார்த்தமானது. எத்தனை பேர் இந்த யதார்த்தத்தை புரிந்து கொண்டிருக் கிறார்கள் என்றால் அது கேள்விக்குறியே.

காட்டிக்கொடுப்பும் சுயமைத் தனமும் தான் மட்டும் நான்றாக இருக்க வேண்டும் என்ற சுயநலப்போக்கும் அடுத்தவனுடைய மகிழ்ச்சியைப் பொறுக்கமுடியாத சின்னத்தனமும் ஏனெ ன்று புரியவில்லை. வாழ்க்கை நிலை யாமையைப் புரிந்து கொள்ள முடியாத தன்மையா? நியாயம் எது என்ற விளக்க மின்மையா அவனுடைய பகுத்தறிவின் குறைபாடா? அல்லது அவன் படிக்க வேண்டியதைப் படிக்காதது காரணமா? புரியவில்லை.

இறை நம்பிக்கையற்ற சமய வழிபாடு இறைவனுக்கே இலஞ்சம் கொடுக்கும் வியாபார மனப்பாங்கு ஆத்திகத்துக்கும் நாத்திகத்துக்கும் இடை யேயான வேறுபாடு தெரியாமை இப்படி யான சமூகத்தில் பல குறைபாடுகள் விரவிக்கிடப்பது கண்கூடு. நெற்றிநிறைய விபூதியும் உருத்திராக்க கொட்டையும் காவி உடையும் அணிந்தவுடன் அவன் ஆத்திக்கன் ஆக முடியுமா?

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' ஆன இறைவனை உலகத்து மனிதக் குழுமங்கள் தத்தம் கற்பனைக்கேற்ப உருவம் சமைத்து பெயர் வைத்து வணங்கு கின்ற சூழலில் ஒவ்வொருவரும் தாம் வணங்கும் கடவுளே மேலானது என்ற போர்க் குணம் ஏன்? ஒருவனுடைய நம்பிக் கையில் கைவைக்கும் அதிகாரத்தை நாம் ஏன் எடுக்கவேண்டும்? தேவையானால் அவர்களுடைய நம்பிக்கைக்கு நாம் உதவி புரியக் கூடாதா? எல்லா மதங்களையும் ஒன்றாக மதிக்கும் பண்பை நாம் ஏன் வளர்க்கக்கூடாது? ஒவ்வொரு மதமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவே அமைக்கப்பட்டுள்ளன. ஆகையால் ஒவ்வொரு சமயத்திலுமுள்ள நல்ல போதனைகளை நாம் ஏன் பின்பற்றக் கூடாது? இங்கே நாம் கவனிக்க வேண்டியது சமயம் என்ற போர்வையில் வைக்கப்படும் சில சம்பிரதாயங்களையே. பக்தியை வைத்துப் பகற்கொள்ளை அடிப்பதற்கு நாம் உடந்தையாக வேண்டுமா?

முழுமையான இறை நம்பிக்கையுள்ளவனிடம் பயம் உண்டாவதற்குக் காரணமில்லை. பலவீனம் மரணத்திற்கு அடிகோலும். பலம் தான் வாழ்க்கையின் அடித்தளம். பிறருக்கு உதவியாக வாழ்தல் கல்வியின் நோக்கம். இதையே "ஏழை எளியவர்களுக்குச் சேவை செய்வதே எமது வாழ்வின் இலட்சியமாக கொள்ள வேண்டும்" என்பார் சுவாமி விவேகானந்தர். நாம் சேவை செய்யாவிட்டாலும் மனதாலும் வாக்காலும் மற்றவர்களுக்குக் கெடுதி செய்யாதிருந் தாலே போதுமே.

நாம் இயற்கையோடு ஒட்டி வாழ வேண்டும். இந்திய தத்துவ ஞானி "ஓஷோ" நாங்களும் இயற்கையின் ஓர் அங்கமே' என்பார். மரம், செடி, கொடி மிருகங்கள் பறவைகள் போன்று மனிதனும் இயற்கையின் ஓர் அங்கமே. பண்டைக் காலத்தில் முனிவர்கள் இயற்கையோடு ஒட்டிய நிலையில் அமர்ந்துதவம் செய்துள்ளமை இதனாற்போலும். இயற்கை வழிபாடு தான் திராவிட சமூகத்தின் வழிபாட்டு முறையாக அமைந்திருந்தன. சிவனுடைய உருவகமே இயற்கையை அடியொற்றியதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இயற்கையைப் பேணிக்காப்பதன் மூலம் எல்லா ஜீவராசிகளும் நலமாக வாழலாம் என்பது சத்தியமானது. எப்பொழுது மனிதன் இயற்கையில் கைவைத்தானோ அப்பொழுதே எமது அழிவு நிர்ணயிக்கப்பட்டுவிட்டதை நாம் உணர வேண்டும். இப்பொழுது நாம் கண்கூடாக கண்டு கொண்டிருக்கும் இயற்கையின் சீற்றத்திற்கு இவையே காரணம் என்பதை நாம் உணரத்தலைப்பட வேண்டாமா?

யாரும் பிறக்கும் பொழுதே கெட்டவனாகப் பிறப்பதில்லை. அவனை நல்லவனாகவோ, கெட்டவனாகவோ மாற்றுவது அவன் சூழலே. நல்லவர்களுடைய சகவாசத்தை நாம் தேடிக் கொள்ளவேண்டும் என்பது இதனாற்றான். "உன்னுடைய நண்பன் யார் என்று சொல், என்பதை நான் சொல்வேன்" என்பது ஆங்கிலப் பழமொழி. இராம வள்ளலார் என்ற மகான் வாடிய பயிரைக் கண்டே மனம் வாடி "ஒருமையுடன் நினது திருவடி நினைக்கின்ற உத்தமர் தம்வேண்டும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார், கலவாமை வேண்டும்..." என்று இறைவனை வேண்டுகிறார். வேண்டுதலும் நாம் நல்ல சகவாசத்தைத் தேடிக்கொள்ள முக்கியத்துவத்தை நமக்கு உணர்த்தி நிற்கின்றதல்லவா?

"எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்றார் வள்ளுவர் யாருடைய வாயிலிருந்தும் வார்த்தைகளை அப்படியே நம்பிவிடாது; அதன் உண்மைத் தன்மையை அறியவேண்டும் என்பது இதன் பொருள். இதையே கிரேக்க நாட்டு ஞானி "சோக்கிரடிஸ்" என்பவரும் "அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னார் இவர் சொன்னார் என்று நம்பாது எதையும் ஏன்? எப்படி? எதற்காக? என்று உன்னையே எண்ணிப் பார்" என்று குறிப்பிடுகிறார்.

நம் துன்பங்களுக்கெல்லாம் மூல காரணம் ஆசை. ஆசைப்படாமல் "ஓடும் செம்பொன்னும், ஒக்க நோக்கும்" மன நிலையை நாம் எய்தினால் எமக்குத் துன்ப மில்லை என்பது ஆன்றோர் வாக்கு. கைகேயி இராமனைக் காடேகவும், பரதனை நாடாளவும் பணிக்க இராமனின் முகம் அன்றலர்ந்த செந்தாமரை போல் இருந்ததாக கம்பநாடன் குறிப்பிடு கின்றான். துன்பத்தையும் இன்பத்தையும் ஒருநிலையில் கொள்ளும் நிலை இராமனி டம் இருந்தது.

பலவிதமான ஆமைகளைப் பற்றி யும் நாம் அறிந்திருக்க அவற்றுள் பொல்லாத ஆமை ஒன்று உண்டு. அது தான் பொறாமை. ஒருவனிடம் பொறாமை குடி கொண்டால் அவனுடைய வாழ்வே நாசமாகும். ஒருவன் மாடி வீடு கட்டினால் நாமும் கட்டவேண்டும், அவன் வாங்கி னால் இவனும் வாங்கவேண்டும் என்று அங்கலாய்ப்பான் நல்ல நகைகள் அணிந் தால் அடுத்தவள் அதைப்போல் வாங்க வேண்டும் என்பாள். பொறுமை என்னும் நகை அணிந்துகொள்ளவேண்டிய பெண்கள் அற்பமான பொன் நகைகள் மேலும் கொள்ளலாமா? உடன் பிறந்தவர் கள் பொருள் பண்டத்துடன் சந்தோஷமாக இருப்பினும் பொறாமையில் புழுங்கி மடியும் அற்ப ஜந்துக்களாக மக்கள் மாற்ற மடைந்து வருவது வேதனைக்குரியதே. பிறர் இன்பத்தில் மகிழ்ச்சி கொள்வதை விட மகிழ்ச்சி வேறில்லை. பிறர் துன்பத்தில் தாமே வலிந்து சென்று உதவுவதே மனிதப்பண்பு அதை விடுத்து பிறர் துன்பத்தில் இன்பம் கொள்ளும் அறிவிலிகளாக - மனித நேயமற்றவர்களாக வாழ்வது கொடுமை அல்லவா?

"தனக்கு மிஞ்சியே தானமும் தர்மமும்" என்று கூறுவார்கள் தனது தேவைக்குரியதை வைத்துக் கொண்டு மிகுதியைக் கொடுப்பது தான் தானம் என்று சொல்லப்படுகிறது. எனக்கும் என் பெற்றோர் அப்படித்தான் சொல்லியுள் ளார்கள். ஆனால் மிஞ்சியதைக் கொடுப் பதில் என்ன தர்மம் என்பது எனக்குப் புரியவில்லை. உண்மையில் தனக்கு இல்லாவிட்டாலும் தனது சக்திக்கு மிஞ்சிக் கொடுப்பது தான் தானம் என்று இப் பொழுது புரிகிறது.

நாம் பிறக்கும் பொழுதும் ஒன்றும் கொண்டு வருவதில்லை. இறக்கும் பொழுதும் ஒன்றும் கொண்டு போகப் போவதில்லை. "காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே". நாம் செய்யும் பாவ புண்ணியமல்லாது நாம் அரையில் அணியும் கோவணமும் எம்முடன் கூடவராது" என்பது பட்டினத்தார் அடிகளின் பட்டறிவு. இன்று எம்முடை யது நாளை யாருடையதோ! யாரும் எதையும் நிரந்தரமாக சொந்தம் கொண்டாட முடியாது. கடமையை செய் பலனை எதிர் பாராதே" இவை கீதையின் சாரம்.

சுயநலமாக வாழ்வதை விடஒரு இழிவான வாழ்க்கை வேறில்லை. ஆண்டவனை வேண்டும் போது சுயநலத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடு வேண்டுவதால் எந்தப் பலனும் கிட்டுவதில்லை. "எல்லா உயிரும் இன்புற்றிருப்பதல்லால், வேறொன்றறியேன் பராபரமே" இதுவே நாம் இறைவனை வேண்டும் முறை. கிறிஸ்து சமயத்தவர்கள் ஒருவர் சுகவீனமுற்றிருந்தாலோ அல்லது வேறு துன்பத்திற்கு ஆட்பட்டிருந்தாலோ எல்லோரும் சேர்ந்து அவருக்காக பிரார்த்தனை செய்யும் உயரிய பண்பைக் கைக்கொள்கிறார்கள். நிச்சயமாக அவர்களுடைய வேண்டுதலுக்கு ஆண்டவன் செவி சாய்ப்பான். காரணம் அவர்களுடைய வேண்டுதலில் சுயநலமில்லை.

இஸ்லாமியர்களிடம் ஒரு நல்ல பண்புண்டு. ஒரு குமர் கரைசேர முடியாத படி கஷ்ட நிலையில் இருப்பின் அந்த ஊர் மக்கள் ஒன்று சேர்ந்து செலவு செய்து அவளுக்கு ஒரு வாழ்க்கை அமைத்து கொடுப்பார்கள். விழாக்களில் உணவு உண்ணும் போது ஏழை பணக்காரர் என்ற பாகுபாடின்றி ஒரு பாத்திரத்தில் ஒன்றாகச் சாப்பிடுவார்கள் என்றும் அறிந்துள்ளேன். அந்த சகோதரத்துவ உறவுக்கு நாம் தலை வணங்க வேண்டும்.

"அன்னசத்திரம் ஆயிரம் அமைத்தலிலும் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் சிறப்பு" என்றான் பாரதி. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான். பணம் படைத்தோர் நல்ல மனம் படைத்தோர் ஏன் ஒரு ஏழைக்காயினும் கல்வி கற்பதற்கு உதவக்கூடாது? எத்தனையோ உயிர்கள் ஒருநேர உணவுக்கே வழியில்லாது அல்லற்படுகின்றார்கள். இவர்களின் ஒரு நேர உணவுக்காயினும் உதவி செய்யலாகாதா? வெறும் கேளிக்கை வினோதங்களுக்குச் செய்யும் செலவில் ஒரு பங்கை ஏழைகளுக்கு கொடுக்கலா காதா?

"தீதும் நன்றும் பிறர் தரவாரா", "திணை விதைத்தவன் திணை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்". நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் பிரதி பலன் உண்டு. நாம் நன்மை செய்யின் நன்மையே கிட்டும். தீமை செய்தால் அது வட்டியுடன் எமது சந்ததியையே வாட்டும். ஆகையால் நல்லதையே நினைத்து நல்லதையே செய்யும் பக்குவத்தை நாமடைய வேண்டாமா?

"சிக்காகோ" நகரில் நடைபெற்ற சமய மாநாட்டில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய உரை பிரசித்தமானது. "சீமாட்டிகளே, சீமான்களே என்று விழித்து தமது உரையை ஆரம்பிப்பது ஆங்கிலமரபு ஆயினும் சுவாமி விவேகானந்தர் அவர்கள் "சகோதரிகளே, சகோதரர்களே" என்று தமது உரையை ஆரம்பித்தமை எல்லோரையும் சிந்திக்கவைத்தமை வரலாறு. இனம், மதம், மொழி என்ற நிலையைக் கடந்து உலக மக்கள் அனைவரையும் சகோதரர்களாக நேசிக்கும் பண்பு அவர்களிடம் காணப்பட்டது. யார்க்கும் அஞ்சாத நோக்கும் ஞான வீச்சும் அவருடைய தோற்றத்திலும் பேச்சிலும் செய்கைகளிலும் காணப்பட்டது. காரணம் அவருடைய உள்ளத்திலே சத்தியம் என்னும் ஒளி காணப்பட ஏழைகளில் இறைவனைக் கண்டார். அதனால் ஏழைகளுக்கு சேவை செய்வதே இப்பிறப்பின் பயன் என்றார். "ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்." ஆகையால் அவர்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு நாமும் முயற்சிக்கலாகாதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேப்பமர உச்சியில் நின்று, பேயொன்று
ஆடுதென்று
விளையாடப்போகும் போது சொல்லி
வைப்பாங்க அவர்
வீரத்தை முளையினிலே கிள்ளி வைப்பாங்க
வேலையற்ற வீணர்களின் மூளையற்ற
வார்த்தைகளை
வேடிக்கையாகக் கூட நம்பிவிடாதே..."

இன்றும் இப்பாடலின் இனிமை மனதை நிறைக்கின்றது. கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனாரின் அர்த்தமுள்ள பாடல் வரிகள். சிறுபிள்ளைகளை எப்படி நாம் வளர்க்கின்றோம், அவர்களுடைய தன்னம்பிக்கையை உடைத்து அவர்களைக் கோழையாக வளர்க்கின்றோம் என்பது ஒரு கசப்பான உண்மை. அவர்கள் பிறந்த உடனேயே நாம் அதைத் தான் செய்கின்றோம். முனி வருகுது பேய் வருகுது, உம்மாண்டி வருகுது" என்று அவர்களை எவ்வளவு பயமுறுத்த முடியுமோ அவ்வளவு பயமுறுத்தி அவர்களைக் கோழையாக்கும் கைங்கரியத்தை வெகு சிறப்பாகச் செய்கிறோம். பெரியவர்களுடைய சிந்தனையில் தெளிவின்மையே அதற்கு காரணம் எனலாம். நாம் எமது ஆறாவது அறிவைப் பயன்படுத்துவதில்லை. எம்மவர்களில் பலரையும் கையிலே மந்திரித்துக் கட்டப்பட்ட நூல் இல்லாமல் காணமுடிவதில்லை. அந்த நூலிலே வைத்திருக்கும் நம்பிக்கையை எம்மிலே நாம் வைத்திருப்பதில்லை. எவ்வளவு கோழையாகவும் மனத்தைரியம் இல்லாமலும் நாம் வளர்ந்திருக்கிறோம். அதே போலவே வருங்காலச் சந்ததியினரும் பகுத்தறிவற்ற கோழையாகவே ஆக்கப்படுகிறார்கள் என்பதை நாம் மனம் கொள்ள வேண்டாமா?

கடவுள் பெயரால் பல துண்டுப் பிரசுரங்கள் அடித்து "இதைப் பத்து பேர்களுக்கு அனுப்பினால் உன் வாழ்க்கையில் நன்மைகிட்டும். இல்லையெனில் உன் மண்டைவெடித்துச் சிதறும்" என்று சில வேலையற்ற கோழைகள் அனுப்பி வைப்பதும் இங்கே நடைபெறும் வேடிக்கைகளில் ஒன்று. ஆச்சரியம் என்னவென்றால் இதை நம்பி, படித்துப் பதவியில் இருப்பவர்களே பயந்து அந்த கட்டளைக்கு அடிபணிவதுதான். எம்முடைய சிந்தனையும் செயலும் நேர்மையாகவும் தர்மமாகவும் இருப்பின் நாம் யாருக்கும் பயப்பட வேண்டிய தில்லை என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். "உண்மைக்காக எதையும் துறக்கலாம். ஆனால் எதன் பொருட்டும் உண்மையைத் துறக்கக் கூடாது. உண்மை, தூய்மை, நலமின்மை ஆகிய இந்த மூன்றும் எங்கெல்லாம் காணப்படுகின்றன. அவற்றை பெற்றிருப்பவர்களை நசுக்கக் கூடிய ஆற்றல் விண்ணுலகிலோ மண்ணுலகிலோ எங்கும் கிடையாது. இந்த மூன்றையும் பெற்று ஒருவனை பிரபஞ்சம் முழுவதையுமே எதிர்த்து நிற்கக்கூடிய ஆற்றல் அவனுக்குண்டு, என்ற சுவாமி விவேகானந்தரின் கூற்று இதை நன்கு விளக்கி நிற்கிறது.


பிள்ளைப்பேறு நடைபெற்ற வீடு, மரணம் நடைபெற்ற வீடுகளில் பச்சைத் தண்ணீரும் அருந்த மறுக்கும் பண்பாளரும் எம்மத்தியில் உள்ளனர். கேட்டால் "கோவிலுக்குப் போவதால் துடக்கு வீட்டில் தண்ணீர் அருந்த மாட்டோம்" என்பர். இறைவணக்கத்திற்கும் துடக்குக்கும் சம்பந்தமோ தெரிய வில்லை. இறைவணக்கத்திற்கு முக்கியம் தூய்மை. கோவி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுக்குச் செல்பவர் குளித்துத் தூய்மையாகச் செல்வது நன்று. அதே நேரத்தில் அகத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டுவது மிக முக்கியம். அகத்தூய்மை இல்லாத இறை வணக்கத்தால் எந்த பலனும் கிட்டாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எமது உடம்புக்கு உள்ள அழுக்கை எப்படி இவர்கள் இல்லாது ஒழிப்பர் இவர்களின் வீட்டில் இப்படியான சம்பவம் நடந்தால் இவர்களுடைய செயற்பாடு எவ்வாறு அமையும்? சகோதரங்கள் கஷ்டப்படும் போது துடக்கு என்று எந்த உதவியும் செய்யாது விலகி நிற்பவர்களுக்கு இறை அருள் எப்படிக் கிட்டும்.

ஆகையால் வேண்டாத சம்பிர தாயங்களால் எம்மை விலங்கிட்டுக் கொள்ளவேண்டுமா? நாம் மகானாக வேண்டாம். சாதாரண மனிதனாக வாழ வேண்டாமா? எம்முடைய இறப்புக்கும் அப்பால் நல்லமாதிரிப் பேசப்பட வேண்டும் விலங்குகளுக்கும் மனிதர்களுக் கும் இடையே உள்ள வேறுபாடு அவர்களு டைய ஆறாவது அறிவுபகுத்தறிவே. அந்தப் பகுத்தறிவை வளர்த்துக் கொள்ள சிறிதளவு முயற்சிப்போமாக?





பித்தளைக் கெண்டிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கைகளும் நடைமுறைகளும் ஓர் ஆய்வு நோக்கு

திருமதி றஜனி நரேந்திரா
B.A.(Hons); M.Phil. (Jaffna)
கலாசார உத்தியோகத்தர் – தற்காலிக இணைப்பு,
பிரதேச செயலகம், நல்லூர்.

மனிதகுலத்தின் வாழ்க்கை 'நம்பிக்கை'யின் அடிப்படையில் அமைந்துள்ளது என்பர். ஒவ்வோர் இனத்தின் சமூகவரலாற்றிலும் இடம்பெறும் வாழ்வியற் செயற்பாடுகளை நோக்கின் பெரும்பான்மையான செயல்நிலைகள் நம்பிக்கைகளின் இயங்கு தளத்திலே அமைந்திருப்பதனை அவதானிக்க முடியும். இந்நம்பிக்கைகளை மக்கள் காரணகாரியத் தொடர்பின்றியே நம்பத் தொடங்கிவிடுகின்றனர். வளர்ந்துவரும் அறிவியல் துறையின் காரணமாக சமுதாயத்தின் பெரும்பாலான நம்பிக்கைகள் இன்று மூடநம்பிக்கைளாகக் கருதப் படுகின்றன. அதேபோல் மூடநம்பிக்கைகளாகக் கருதப்பட்டவை அறிவியலின் மூலம் காரணகாரியத் தொடர்புடையனவாகவும் மாறியுள்ளன.

தமிழர்களின் வாழ்வில் நடைமுறைகளை நோக்கின்; அவை அனைத்துமே தொல்சீர் மரபிலிருந்து பல்வேறு பரிமாணங்களுடன் கையளிப்புச் செய்யப்பட்ட ஒரே உணர்வலையாகவே தோற்றமளிக்கின்றது. உணர்வுகளின் உரத்தினை வெளிப்படுத்துவனவாக நம்பிக்கைகளை எடுத்துக்கொண்டால்; நம்பிக்கைகளின் வெளிப்பாட்டுச் சின்னமாக சடங்குகளை - நடைமுறைகளைக் கருதலாம். பாமர மக்கள் முதல் படிப்பறிவுள்ள மக்கள் வரையில் இந்நம்பிக்கைகளின் ஆதிக்கம் பெருமளவிற் பயின்று வருவதைக் கவனிக்கலாம்.

'நம்பிக்கை' என்ற சொல் தொன்மைக் காலத்திலிருந்தே பலவிதமான பொருட்புலப்பாட்டுடன் பயில் நிலையில் இருந்து வந்துள்ளது. சொல்லாடல் நிலையில் 'நம்பிக்கை' என்ற சொல் வேறுபட்டிருப்பினும் கருத்தாடல் நிலையிலே ஒற்றுமைப்பட்டிருப்பதனை அவதானிக்கலாம்.

'நம்பிக்கை' என்பதைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் `Belief' எனப்படும். இச்சொல் இடைக்காலத்தில் இருந்தே பயிற்சி பெற்றதனை ஆங்கில அகராதிகள் தெரிவிக்கின்றன. தமிழில் இச்சொல் நம்பிக்கையினைக் குறிக்கப்பயன்பட்டுள்ளதனைச் சங்க இலக்கியங்கள் சுட்டி நிற்கின்றன.

தொல்காப்பியத்தில் 'நம்பு' என்ற சொல் 'விருப்பம்' என்ற பொருளில் ஆளப்பட்டிருக்கக் காணலாம்.[1] நற்றிணையில் 'நம்பு' என்ற வினைச்சொல் நம்பிக்கை என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது.[2]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை தொடர்பாக அகராதிகள், சொற்களஞ்சிய நூற்தொகுதிகள் முதலானவை பன்முகப் பாங்கிலே விளக்கம் செய்துள்ளன. இவ்விளக்கங்களின் ஒட்டுமொத்தப் பார்வையில் நம்பிக்கையை நோக்கின்;

(அ) மரபு வழியில் பேணப்பட்டு வந்த செயல் நிலைகள்,
(ஆ) பண்பாட்டுப் பேணுகைக்கான மூலங்கள்,
(இ) எண்ணங்களின் அழுத்தக் குறியீடுகள்,
(ஈ) உணர்வுப் பிரக்ஞை சார்ந்த பிரதிரூபங்கள்,
(உ) அனுபவக் கருவூலங்கள்

முதலான கருத்தியல் நிலைகளின் தன்மையினை அனுமானிக்கலாம்.

நம்பிக்கைகளின் தோற்ற-வளர்ச்சி நிலைப்பாட்டினை ஆராய்ந்து உண்மையினைக் காண்பதற்கு மானிடவியல் (Anthrpology) சமுதாயவியல் (Sociology), உளவியல் (Psychology) மற்றும் அறிவியல் சிந்தனைகளை வளர்த்துக் கொள்வது மிக்கதுணை செய்யும்.

'நம்பிக்கை' தொடர்பான ஒட்டுமொத்தப் பிழிசாறாகப் பின்வரும் பகுப்பினை அனுமானிக்க முடியும். அதாவது;

(அ) அறிவியல் நம்பிக்கைகள் (Belief of Knowledge)
(ஆ) மூட நம்பிக்கை - அவநம்பிக்கை (Superstition - Disbelief - Distrust)
(இ) உளவியல் நம்பிக்கைகள்
(ஈ) பண்பாட்டுப் பேணுகைசார் நம்பிக்கைகள்
(உ) சமூகக் கட்டமைப்பைப் பேணும் நம்பிக்கைகள்
(ஊ) பொருளாதாரப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நம்பிக்கைகள்
(எ) இனரீதியான நம்பிக்கைகள்
(ஏ) போகப் பொருட்கள் தொடர்பான நம்பிக்கைகள்
(ஐ) சடங்கு நடைமுறை தொடர்பான நம்பிக்கைகள் முதலியனவாகும்.

அடுத்து சடங்குகளும் - நம்பிக்கைகளும் எவ்வாறு மனித வாழ்வில் செல்வாக்குச் செலுத்துகின்றன என்று நோக்குவோம்.

சடங்குகள் மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை நடைபெறும் வாழ்வியற் செயற்பாடுகள் எனலாம். சடங்கு (Ritual) என்ற சொல்லுக்கு; இயல்பூக்கத்தால் எழுந்ததும், முன்கூட்டி உணரத்தக்கதும்; அறிவார்ந்த தொடர்பற்றதுமான ஒரு செயல் அல்லது செயலின் வரிசை எனப் படுகின்றது.[3] நம்பிக்கைகளின் செயற்பாட்டுத்தொடர் விளைவு சடங்காகப் பரிணமிக்கின்றது. மனித வாழ்வுச் சக்கரத்திலே பிறப்பு, பூப்பு, திருமணம், தொழில், இறப்பு முதலான அனைத்துச் செயற்பாடுகளிலும் 'நம்பிக்கை' என்ற முள்ளந்தண்டு ஊடுருவியுள்ளது. அம்முள்ளந் தண்டினைப் பேணுவதாக சடங்குகள் என்ற சதையும் - இரத்தமும் இயங்குகின்றது எனலாம். வாழ்வியற் சடங்குகளைத் தனித்தனியே நுணுகி நோக்கி ஆய்வு செய்தால் அவற்றில் செறிந்திருக்கும் நம்பிக்கைகள் பற்றி அறியலாம். இவ்விடயம் தனியான ஆய்விற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் தன்னல உணர்வும், சமூக உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. இதனால் நம்பிக்கைகளை உளஉருவாக்கம் (Mentel Creation) என அறிஞர் குறிப்பிடுவர்.

வளர்ந்துவரும் விஞ்ஞான அறிவு, விழிப்படைந்த சமூக முன்னேற்றம், உலக ஒருமையில் ஏற்பட்டுள்ள சிரத்தை ஆகியனவே அவநம்பிக்கைப் பிரச்சினையை உருவாக்கியுள்ளன. தற்காலத்தில் விஞ்ஞான அறிவியலால் நம்பிக்கைகளின் நாடியோட்டம் பிடிபடுகின்றது.

அறிவுபூர்வமான சிந்தனையுள்ள மக்கள் தாம் மேற்கொள்ளும் சில நம்பிக்கைச் செயற்பாட்டுச் சடங்குகள் அர்த்தமற்றவை என்று தெரிந்தோ, தெரியாமலோ சமுதாய நீரோட்டத்தில் இணையும் பாங்கில் கடைப்பிடிக்கின்றனர். நம்பிக்கைகளை விஞ்ஞான ரீதியில் விளங்கிக் கொண்டு செயற்பட முற்படினும், எமது அடிமனம் அறிமனத்தினை வென்று தனது ஆதிக்கத்தினையே நிலை நிறுத்த முற்படுகின்றது. இந்நிலை நிறுத்தத்திற்கு ஒரு காரணம், எமது பண்பாட்டுப் பெருவட்டத்தின் தாக்கமான செயற்பாடு; மற்றையது உளவியல் ரீதியான தாக்கம் ஆகும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக நாம் நமது வாழ்வியல் நடைமுறைகளிலே நம்மை அறியாமலேயே அநேக நம்பிக்கைகளைக் கைக்கொள்வதன் பிரதான காரணம் சமூக அந்தஸ்து எனலாம்.

யாழ். மாவட்டத்தின் பகுதிகளிலே பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு, சகுனம் - நிமித்தம், மந்திரம் - பில்லி - சூனியம் - பேய், நாள், மாதம், கிழமை, வானியல், திட்டு, தொழில், மருத்துவம் முதலியன பற்றிய நம்பிக்கைகள் - சடங்குகள், நகரம்- கிராமம் என்ற எல்லைகளுக்கு அப்பால் தமது இருப்பினை வியாபித்திருக்கின்றமையை அவதானிப்பு நோக்கில் உணர்ந்து கொள்ளலாம். இக்கட்டுரையில் அனைத்து நம்பிக்கைகளையும் எடுத்து நோக்குவது சாத்தியப்பாடற்ற விடயம். எனவே, வகைமாதிரிக்கு ஒன்று என்ற நிலையில் பயில்நிலை முக்கியத்துவம், சமூகவியல் பின்புலம் பற்றிச் சுருங்க நோக்குவது பொருந்தும்.

**பிறப்பு**

ஒரு உயிரானது கருமவசப்படி தகுந்த தாய் தந்தையைப் பெற்று;தாயின் உடலில் ஒரு சரீரத்தைத் தயாரித்துக் கொண்டு பூமிக்கு வருவதே 'பிறப்பு' எனப்படுகின்றது. குழந்தை பிறப்பதற்கு முன்னர் மேற்கொள்ளப்படும் சடங்குகளிலிருந்து, குழந்தை பிறந்த பின்னர் அதன் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் ஆற்றப்படும் சடங்குகள்வரை நிறைந்த நம்பிக்கைகள் பயில்நிலையில் உள்ளன. இவை மருத்துவம், சுகாதாரம், அறிவியல், உளவியல், சமயப்பண்படுத்தல்... முதலான பின்னணி களைத் தன்னகத்தே கொண்டனவாகத் தோற்றமளிக்கின்றன.

ஒரு பெண் கருவுற்றதும் அவளின் நடைமுறைகள், உணவு, உடை முதலியன தொடர்பில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. கருவுற்ற பெண்ணின் கணவனுக்கும் நம்பிக்கையின் பின்னணியில் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவுற்ற பெண் தவிர்க்கவேண்டிய நடைமுறைகளாவன: கருவுற்ற மூன்றாம் மாதத்திற்குப் பின் கோவிற்படி கடத்தல், இறப்புச் சடங்கிற் பங்குபற்றல், மக்கள் பெருமளவு கூடுகின்ற இடங்களுக்குச் செல்லல், பொழுதுபடும் வேளையில் வெளியே செல்லல், பாரமான பொருட்களைத் தூக்குதல், மோதகம் - கொழுக்கட்டை பிடித்தல், தையல் ஊசியில் நூல்கோர்த்தல், தலையணை உறையை மூடித்தைத்தல், அடுப்பு மெழுகுதல், பப்பாசி, அன்னாசி, எள்ளு உண்ணுதல், அளவுக்குமீறிய ஒலிகளைக் கேட்டல் முதலியனவாகும்.

பொதுமக்கள் கூடுகின்ற இடங்களில் கருவுற்ற பெண் செல்வதனால் நெருக்குதல் ஏற்பட்டுக் கருக்கலைப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏற்படும். இறப்பு வீடுகளிலே ஏற்படும் மிதமிஞ்சிய சோக நிலையால் கருவுற்ற பெண்ணுக்கு மனோநிலை தாக்கப்படும்போது; அத்தாக்கம் சிசுவையும் பாதித்துவிடும். பப்பாசி, அன்னாசி, எள்ளு முதலியன கருவைக் கலைக்கும் மருத்துவக்குணம் நிறைந்தவை. பொதுவாகவே 'கரு' வானது ஆரோக்கியமான வளர்நிலைகளுடன் பிறப்பதற்கும், தாய் சுகமாக இருப்பதற்கும் என்ற ஆழமான சிந்தனையின் பிரதிபலிப்பாகவே கருவுற்ற காலத்து நம்பிக்கைகள், நடைமுறைகள் துலங்குகின்றன.

குழந்தை பிரசவித்த பெண்ணுக்கு நொச்சி, பாவட்டை, பருத்தி, வேப்பிலை... முதலான இலைகளை அவித்து அந்நீரினால் குளிப்பாட்டுவார்கள். இக்குழந்தைகளின் சேர்வையால் உடலுக்கு வலுவும், தொற்றுநீக்கும் ஏற்படும் என்ற நம்பிக்கையே அடிப்படை யாக உள்ளது.

குழந்தை பிரசவித்த பின்னர், 'ஆசௌச நீக்கம்' எனப்படும் துடக்கு நீக்கம் 31 நாட்கள் வரைக்கும்; தாய்க்கும் சேய்க்குமான உடைகளைக் கட்டாடியே (சலவைத்தொழிலாளி) வழங்குவான்; சலவை செய்வான். இந்நடைமுறையானது வருணப்பாகுபாட்டின் பொருளாதாரப் பின்னணியாலும், வெள்ளாவிச்சலவை எனும் சுகாதார அடிப்படையாலும் ஏற்பட்டதாக இருக்கலாம்.

குழந்தை பிறக்கின்ற நேரம், நட்சத்திரம், கிழமை, மாதம், இவற்றின் அடிப்படைகளை வைத்துச் சோதிடரினால் எழுதப்படுகின்ற குறிப்பேடு, 'ஜனன ஜாதகம்' எனப்படுகின்றது. ஜனனஜாதகப் பலனின்படி குழந்தைக்கு, குழந்தையின் பெற்றோருக்கு, தாய்மாமனுக்கு ஏற்படக் கூடிய எதிர்கால நிகழ்வுகள் கணிப்பிடப் படுகின்றன.

இந்நம்பிக்கைகளை வெளிப் படுத்துவதாகப் பழமொழிகள், மரபுத் தொடர்கள் முதலியன வழக்கத்தில் உள்ளன. கட்டுரையின் விரிவஞ்சி இங்கு அவை குறிப்பிடப்படவில்லை.

மேலும் பால்பருக்குதல், முடி இறக்குதல், விற்று வாங்குதல், பல்லுக் கொழுக்கட்டை கொட்டுதல், தொட்டிலிடல், நாமம் இடல், ஏடு தொடக்குதல் முதலான சடங்கு நடைமுறைகள் மிகுந்த நம்பிக்கைகளைத் தம் மகத்தே கொண்டனவாகத் தென்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூப்பு**

பூப்படைதல் என்பது சாமத்தியப் படுதல், பெரிசாகுதல், புத்தியறிதல், பருவமடைதல், குந்துதல், சமைதல், பக்குவப்படுதல், ருதுவாகுதல் என்றும் அழைக்கின்றனர். அறிவியல் ரீதியில் நோக்கின்; பெண்ணுடைய உடலின் உள் உறுப்புக்களில் ஏற்படும் வளர்ச்சி வேறு பட்ட மாற்ற நிலைகளின் அறிவிப் பாகவே இதனைக் கொள்ளமுடிகின்றது. 'பூப்பு' அடைந்ததை உறுதிப்படுத்திய உடனேயே சடங்குகள் தொடங்கி விடுகின்றன. சமையல் செய்யும்போது எண்ணெய்ச் சட்டியின் பின்புறம் நெருப்புப் பொறிகள் காணப்பட்டால், உறவுக்குள் ஒரு பெண் 'சமைவாள்' என்பது நம்பிக்கை. இதனை 'சட்டி சிரிச்சால் சமையும் பொம்பிளை' என்ற பழமொழி உணர்த்துகின்றது.

பூப்படைதலைத் தெரிவித்தல், பூப்படைந்த நேர ஜாதகம் கணித்தல், குப்பைத் தண்ணி வார்ப்பு, உணவு நடைமுறை, ஆடை - அணிகலன்கள், இருப்பிடம், துடக்குக் கழிவு, பாலறுகு வைத்தல், அலங்காரம், ஆராத்திச் சடங்கு, தாய் மாமன் முக்கியத்துவம், மறு சாமத்தியம், மாதவிலக்கு, நாகதோசம் முதலான நடைமுறைகள், நம்பிக்கைகள் விரவிய சடங்குகளாகப் பயில்நிலையில் உள்ளன.

**திருமணம்**

சமூக நிறுவனத்தின் கட்டுமானத்தினை உறுதிசெய்யும் அச்சாணியாகத் 'திருமணம் - சடங்கு' உருப்போடப் பட்டுள்ளது. திருமணச் சடங்கு பற்றிப் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்.

"சடங்கு யாவற்றுள்ளும் மனித வாழ்வைப் பெரிதும் பாதிப்பது திருமணச் சடங்கேயாதலால், சடங்கு என்னும் சொல் பேச்சு வழக்கில் திருமணத்தையே குறிக்கும்.[4] என்பதாகும்.

பலதரப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் தொகுதியான மணவினை முறைகள் அறிவியற் தளத்திற்கு அப்பாற்பட்ட ஆன்மீகத் தளம் சார்ந்ததாகவே புலனாகின்றன.

திருமணத்திற்கான சடங்குகள் திருமணத்தின் முன் - பின் என்று இரண்டு பிரிவாக உள்ளன. நிச்சயம் செய்தல், நாள் வைத்தல், பந்தற்கால் நடுதல், பொன்னுருக்குதல், மணநாள் நிகழ்வுகள், கன்னி காதானம், தாலி கட்டுதல், ஆசீர் வாதம், கால்மாறுதல், பூதாக்கலம், கொழுக்கட்டை கொண்டு செல்லல், நாட்கடை முதலான சடங்குகள் நம்பிக் கைத்தளத்தில் செயல்வடிவம் பெறு கின்றன.

**இறப்பு**

இயங்கிக் கொண்டிருக்கும் உடலில் ஏற்படும் நிரந்தர அசைவியக்க நிறுத்தமே 'மரணம்' எனப்படுகின்றது. எந்தவொரு செயற்பாட்டின்போதும் நிமித்தம் - சகுனம் பார்க்கும் வழக்கம் உள்ளது. மரணத்தினை உணர்த்தும் நிமித்தங்களாகப் பின்வருவன சுட்டப்படுகின்றன.

1. எண்ணெய்ப்போத்தல் உடைதல்
2. கண்ணாடி உடைதல்
3. சுவாமிப்படங்கள், சிலைகள் உடைதல்
4. நாய் தொடர்ந்து ஊளையிடல்
5. சோறு அவியும்போது பொங்கி வட்டமாகக் கொட்டுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. செய்யும் செயல்களில் தடைகள் ஏற்படல்
7. உச்சியில் பல்லி விழுதல் (உச்சியில் பல்லி விழுந்தால் உடன் மரணம்)
8. பொங்கற்பானை சரிதல் - உடைதல்
9. அண்டங்காகம் அலறுதல்
10. முருங்கைமரம் முறிதல்
11. ஆட்காட்டி, சுடலைக்குருவி (சாக் குருவி), பசுமாடு, கூகை கத்துதல் என்பனவாகும்.

மரணம் நிகழ்வதற்கு அறிகுறியாகச் சுட்டப்படும் கனவு நிலைகளாவன: திருமணம் நிகழ்தல், பல்லு விழுதல், கிணற்றுத்துலா முறிதல், ஒற்றைப் பிராமணர், கறுப்பு நிற எருது - நாய், பனை தென்னை முறிதல், ஆலயத்தை ஒழுங்கற்ற முறையில் காணுதல், எலுமிச்சம் பழத்தினைப் பிழிதல், தலைவிரிகோலம், முழுகுதல் முதலியனவாகும். இவற்றில் ஏதாவது ஒன்றினைக் கனவிற் கண்டால் உறவு மரணம் நிகழும் என்பது தமிழ் மக்களது நம்பிக்கை.

ஒருவருக்கு இறப்பு நடந்தவுடன் நடைபெறும் சடங்குகள், இறப்பிற்குப் பின்னரான சடங்குகள் என்றவகையில் நடைமுறைகள் உள்ளன. மரணப்பலன் பார்த்தல், பிணத்தினைப் பேணுதல், இறுதிக் கிரியைகள் செய்தல், பிணம் எடுத்தல், கொள்ளிவைத்தல், தகனத்தின் பின் செய்யப்படுபவை, உரிமைக்கஞ்சி வார்ப்பு, காடாற்றுதல், எட்டுச் செலவு, துடக்குக் கழித்தல், அந்தியேட்டி, ஆண்டுத்திவசம் முதலான சடங்குகள் மக்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இறக்கும் தறுவாயில் உள்ள ஒருவருக்கு 'சேடம் இழுத்தல்' நிகழ்கின்றது. சீரற்ற சுவாசத்தினால் ஏற்படுவதே இந்நிலை. சேடம் இழுப்பவரின் காதிற்குள் 'மூல மந்திரம் ஓதுதல், தேவாரம் படித்தல் முதலான செயற்பாடுகள் நிகழ்த்தப்படுகின்றன. இச்செயற்பாடுகள் ஒலியதிர்வின் மூலம் சம்பந்தப்பட்டவரின் இதயத்துடிப்பினை நிறுத்துவதாக ஊகிக்க இடமுண்டு. சேட இழுப்பின்போது பால் பருக்குதல் நிகழ்வு இடம்பெறுகின்றது. சுவாசிக்கச் சிரமப்படுகின்ற இந்நிலையில் உறவினர் ஒருவர்பின் ஒருவராகப் பால்பருக்குவதால் மூச்சுத்தடைப்படுகின்றது. இச்செயற்பாட்டினை ஒருவகையான கருணைக் கொலை (Mercy Killing) எனலாம். இறப்புத் தொடர்பிலே உதிரியான நடைமுறைகள் மிகையாக உள்ளன.

உயிர்பிரிந்த உடலை உரியமுறையில் அகற்றிச் சுத்தம் (அகச்சுத்தம், புறச்சுத்தம்) செய்யும் ஒரு நிகழ்ச்சித் திட்டமே இறப்புச் சடங்கும், நடைமுறைகளும் என்று குறிப்பிடலாம்.

நிறைவாக நோக்கின் உயிரின் தோற்ற அடிப்படைக் காரணியாகிய பிறப்புத் தொடர்பான நம்பிக்கைகளின்மூலம் தாய், சேய் நலப்பேணுகையே குறிக்கோளாக இருந்திருக்கின்றது.

வாழ்க்கைச் செல்நெறியின் செப்பமான போக்கினை உறுதிப்படுத்தும் தன்மைத்ததாகத் திருமண நம்பிக்கைகள் காணப்படுகின்றன.

'இறப்பு' நடைமுறைகள் நம்பிக்கைகள் அனைத்திலுமே அச்சம் விரவிய செயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைகளைத் தரிசிக்கமுடிகின்றது. மக்களின் மனோபாவத் தாக்கு நிலைகளையும்; அவற்றிலிருந்து மீள்வதற்கான உளவியல் ரீதியான பயிற்சிகளையும் வழங்குகின்ற செயல்நிலைச் சடங்குகளே இறப்புத் தொடர்பான சடங்குகளாகக் காணப்படுகின்றன.

சடங்குச் செயல்நிலைகளில் சமூக, பொருளாதார, காலநிலைகளுக்கு ஏற்ப பல்வேறு நெகிழ்ச்சித் தன்மைகளைப் பேணிவருவது தெரிகின்றது. இத்தன்மையைப் பெண்களுக்கு உரித்தான "பூப்பு' சடங்கின்மூலம் அறியலாம். நம்பிக்கையின் மூலகங்களை இனங்காண முற்படும் செயற்பாடு எவ்வளவு தூரம் வெற்றியளிக்கும் என்று உறுதியாகக் குறிப்பிட முடியாது. மக்களிடையே நம்பிக்கைகளின் சமூகவியற் பின் புலங்களை வெளிப்படுத்தினாலும்; மனோநிலையில் அவற்றினை ஏற்கும் பக்கும்; குறிப்பாகக் கிராமப்புறங்களிலே குறைவாகவே உள்ளது. மாறிவரும் அறிவியல் கணினியுகத்திலே பண்பாட்டுக் கலப்புக்கள் அதிகரித்த நிலையிலே இந்நம்பிக்கைகளும் - நடைமுறைகளும் - சடங்குகளும் எவ்வாறு நின்று தாக்குப் பிடிக்கப்போகின்றன என்பது சுவாரசியமான விடயமாகும்.

"ஓம்" என்பது நம்பிக்கையின் மூலத்திலிருந்தே தோற்றம் எனலாம்."

**அடிக்குறிப்புக்கள்**

1. "நம்பு மேவு நசையாகும்மே", தொல். சொல். 329
2. "சேரியம் பெண்டிர் சிறுசொல் நம்பிச்சுடுவான் போல நோக்கும்", நற்றிணை 175;7-8
3. International Encyclopedia of the Social Science Vol. 13; PP. 521 - 522
4. "நாவலும் வாழ்க்கையும்; பேராசிரியர் கா. சிவத்தம்பி, பக். 08

**உசாத்துணைகள்**


1. வாய்மொழித்தகவல்கள் - பிரதேச மக்கள்
2. "தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்"; டாக்டர் க. காந்தி, 1980, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
3. "யாழ்ப்பாண மாவட்டத் தீவகமக்களின் நம்பிக்கைகள் - ஓர் ஆய்வு நோக்கு", சிந்தனை", வெள்ளிவிழாச் சிறப்பிதழ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட வெளியீடு - 1999.
4. "நம்பிக்கையின் பரிமாணங்கள்"
   மூலம் : ருஸ்தம் பருசா
   தமிழில்: எஸ். ராமகிருஷ்ணன், 1993




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நல்லாட்சியும் அபிவிருத்தியும்

**அ. சோதிநாதன்**
உதவிப் பிரதேச செயலர்,
பிரதேச செயலகம், நல்லூர்.

வேகமாக மாறிவருகின்ற அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் சர்வதேச சூழமைவுகளுக்கு ஏற்றவகையில் பிராந்திய அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு செயற்பட வேண்டிய தேவை அரசுகளுக்குண்டு. அந்த வகையில் சமகால நிர்வாக எண்ணக்கருக்களில் நல்லாட்சி என்பது முதன்மை பெற்று விளங்குகின்றது. நல்லாட்சி தொடர்பில் பல்வேறு நிர்வாக அமைப்புக்கள் பல்வேறு விதமான அர்த்தங்களை கொண்டுள்ள போதிலும் அனைவரதும் நல்லாட்சிக்கான பண்புகள் ஒத்திருப்பது இங்கு நோக்கப்பட வேண்டிய அம்சமாகும்.

நல்லாட்சி தொடர்பான எண்ணக் கரு உலக நாடுகளின் அபிவிருத்தி தொடர் பில் வளங்களையும், ஆலோசனைகளையும், தொழில் நுட்பங்களையும் ஒன்றுசேர வழங்கி, நாடுகளை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்வதற்கு முழுமையான பங்களிப்பை வழங்கி வருகின்ற சர்வதேச நிறுவனங்களில் உலக வங்கி பிரதான இடத்தை பிடித்துள்ளமை யாவரும் அறிந்த விடயமாகும். அபிவிருத்தி தொடர்பான முன்னெடுப்புகளில் நாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் உலக வங்கி அந்த நாடுகளின் செயற்பாடுகள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு ஆய்வு முடிவினை ஆவணங்களாக வெளியிடுகின்ற செயற்பாடும் காணப்படுகின்றது. அந்த வகையில் 1989ம் ஆண்டு ஆபிரிக்க தேசத்தில் வெளியிடப்பட்ட உலக வங்கியின் அறிக்கையில் "நல்லாட்சி" எண்ணக்கரு வெளித்துலங்கியது.

நல்லாட்சி தொடர்பிலான பங்குதாரர்கள் மூன்று வகைகளில் உள்ளடக்கப் படுகின்றனர்.




இங்கு அரசாங்கம் என்ற வகையில் ஆட்சியாளர்கள் எனப்படுகின்ற அரசியலாளர்கள், சட்டங்களை அமுல்படுத்துகின்ற சட்டவல்லுனர்கள், அரச கொள்கைகளை நிறைவேற்றுகின்ற நிர்வாகிகள் என்போர் அடங்குகின்றனர், சமூகக் குழுக்களின் வகுதிக்குள் தனிநபர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூகமட்ட நிறுவனங்கள், தகவல்துறை, வணிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றியங்கள் எனப் பலதரப்பட்டவர்களும் தனியார் துறைக்குள் சிறிய, நடுத்தர, பெரிய அளவிலான முதலீட்டாளர்களும் அடங்குகின்றனர். அரசாங்கம், சமூகக் குழுக்கள், தனியார் துறையினர் ஆகிய முத்தரப்பினரும் வினைத்திறனுடன் ஒன்றிணைந்து செயற்படுவதன் ஊடாகப் பொதுவான இலக்கினை அடைய முடியும். அந்த வகையில் நல்லாட்சி என்பது பொதுமக்களுக்கு நட்பு ரீதியானதும், பாதுகாப்பானதும், பொறுப்பு கூறுகின்றதுமான நிர்வாகச் செயற்பாட்டைக் குறிக்கின்றது.

நல்லாட்சி என்கின்ற நிர்வாக எண்ணக்கரு எங்கோ ஓர் இடத்தில் தொடங்கப்பட்டு அது முடிவுறுத்தப் படுவதாக அமையாது தொடர்ச்சியான புதுமைகள் மாறுதல்களுடன் இயங்குகின்ற ஓர் முடிவுறுத்தப்படாத செயற்பாடாக காணப்படுகின்றது.

நல்லாட்சி தொடர்பில் குறிப்பிடப்படுகின்ற பிரதான பண்புகள்.

**1) சமத்துவம்**

சகலரும் சட்டத்தின்முன் சமனாகப் பாவிக்கப்படுவதோடு அவர்கள் அனைவரும் சட்டத்தினால் பாதுகாக்கப்பட வேண்டும். இங்கு இன, மத, மொழி, பால், அரசியல் ரீதியிலான எவ்விதமான பாகுபாடுகளுக்கும் இடமளிக்காதிருத்தல்.

**2) வினைத்திறனும், செயற்றிறனும்**

இலக்குகளை அடைவதற்கு வளங்களை வினைத்திறனான வகையில் பயன்படுத்தும் போது அதி கூடிய பெறுபேறை அடைதல்.

**3) ஊடுகாண் தன்மை**

ஊடுகாண் தன்மை எனப்படுவது செயற்பாடுகள் அனைத்தும் வெளிப்படையாக அமைந்திருப்பதாகும். நல்லாட்சியில் பங்குதாரர்களான மூன்று குழுவினரிலும் ஊடுகாண் தன்மைபிரதானமாக எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் பொதுமக்கள் செயற்பாடுகளை அறிந்து கொள்வதற்கு பூரண உரிமை அளிக்கப்படுகின்றது.

**4) பொறுப்பு கூறுதல்**

செயற்பாடுகள் அனைத்திற்குமான பொறுப்பை ஏற்று விளைவுகள் குறித்து பதிலளிக்க வேண்டியவர்கள் பங்குதாரர்களேயாவர்.

**5) நம்பகத்தன்மை**

செயற்பாடுகள் அனைத்திலும் நம்பகத்தன்மை பேணப்படுவது அவசியம்.

**6) பங்குபற்றல்**

செயற்பாடுகள் தொடர்பிலாகத் தீர்மானமெடுத்தலில் அனைவரினதும் பங்களிப்பு நேரடியான வகையிலோ, மறைமுகமான வகையிலோ இருப்பது அவசியம். நல்லாட்சியானது திறந்த பங்குபற்றல் மூலமே வலுப்பெறும்.

**7) எதிர்வு கூறல்**

எதிர்காலத் திட்டங்கள், செயற்பாடுகள் குறித்த கொள்கைகளாகும்.

மேற்கூறப்பட்ட சிறப்பியல்புகளை கொண்டிருக்கின்ற நல்லாட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கின்ற நிர்வாக முகாமைத்துவ சிந்தனைப்போக்கு அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் பின்னடைவு நிலையில் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. சட்டங்களும், விதிகளும் எழுத்திலும், அறிக்கையிலும் மட்டுமே இருப்பதாலேயே நல்லாட்சி நலிவான நிலையில் உள்ளது. இவ்வாறான சட்டங்களுக்கும், விதிகளுக்கும் செயல்வடிவம் கொடுக்கப்படும் போது மட்டுமே நல்லாட்சி எனும் நிர்வாகப் பொறி செழுமையாக இயங்க முடியும். நல்லாட்சி என்கின்ற எண்ணக்கரு வலுப்பெறுவதற்கு அரசு ஸ்திரமான தன்மையினையும், நேரிய சிந்தனையுடைய தலைமைத்துவத்தையும் கொண்டிருப்பது அவசியமாகின்றது.

நல்லாட்சி, ஜனநாயகம் என்கின்ற இரு எண்ணக்கருக்களுக்கு மிடையே நெருக்கமான தொடர்பு இருப்பதைக் காணக்ககூடியதாக உள்ளது. ஜனநாயக சுதந்திரம் உயர்வாக உள்ள வளர்ந்துவரும் நாடுகளில் மக்கள் குற்றம் செய்துவிட்டு மனித உரிமைகளை முன்னிலைப்படுத்தித் தப்பித்துக் கொள்கின்றனர். சிங்கப்பூரில் ஜனநாயக சுதந்திரம் குறைவாக இருப்பினும் நல்லாட்சியில் முன்னிலை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நல்லாட்சி செயலுருப்பெறுவதற்கு அதிகாரத் துஷ்பிரயோகம் இல்லாத தூரநோக்குக் கொண்ட சிறந்த தலைமைத்துவம் அவசியமாகின்றது. இவ்வாறான தலைமைத்துவத்திற்கூடாகப் பணிக் குழுக்கள் நல்லாட்சிப் பண்புகள் கொண்ட சிறப்பான நிர்வாகத்தினைச் செயற்படுத்தி நாடுகளின் அபிவிருத்திக்கு வித்திடுகின்றன. குறிப்பாக கிழக்காசியாவில் பொருளாதார விருத்தி அடைந்த நாடுகளில் அவற்றின் வளர்ச்சி பாதைக்கு நல்லாட்சி பங்களிப்பு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

"பிளேட்டோ" கூறியது போன்று "ஆட்சியாளன் ஒழுக்கமுடையவனாகவும், தத்துவவியலாளனாகவும் இருக்கவேண்டுமேயொழிய; மக்களின் அனைத்து விருப்பு வெறுப்புக்களுக்கும் செவி சாய்ப்பவனாக இருக்ககூடாது" ஆட்சியாளர் தெளிவான சிந்தனையுடன் கூடிய சிறந்த தலைமைத்துவத்தினைக் கொண்டிருப்பின் ஆட்சியாளர்களினால் நல்லாட்சியினை மேற்கொள்ளமுடியும். பிராந்திய நிர்வாகக் கட்டமைப்புக்களில் நல்லாட்சி எனப்படும் எண்ணக்கரு செயலுருப் பெறுவதற்கு அரசுகளின் தலைமைத்துவமே காரணமாகின்றது. மாறாக இன்றைய காலகட்டங்களில் வளர்முக நாடுகளில் சமூக, பொருளாதார, நிர்வாக செயற்பாடுகளில் அரசியற் காரணிகள் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் நல்லாட்சியினை ஏற்படுத்துவதுடன் அதனூடான அபிவிருத்தி நோக்கிய நகர்விலும் பாதக விளைவுகளை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்பத்தித் திறன் தொடர்பான ஐவகை எண்ணக்கருக்கள் (5S)

**இ. சுரேந்திரநாதன்**
B.Sc(Jaff), M.Sc(Pera)
உதவித்திட்டமிடல் பணிப்பாளர்,
பிரதேச செயலகம், நல்லூர்.

### 5S பற்றிய அறிமுகம்

ஐவகை எண்ணக்கருக்கள் யப்பானில் தோற்றம் பெற்றது. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் யப்பான் அதிவேகமாக கைத்தொழில் அபிவிருத்தியடைவதற்கு காரணமாக அமைந்தது. இந்த 5S நடைமுறையை பின்பற்றியமையாகும். இதனால் யப்பானின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது.

யப்பானை தொடர்ந்து சிங்கப்பூர், மலேசியா, தென்கொரியா, தாய்லாந்து, தாய்வான் ஆகிய நாடுகள் 5S நடைமுறை பின்பற்றி அதிவேக பொருளாதார வளர்ச்சி அடைந்துள்ளன. உறுதியான கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்கு அத்திவாரம் எவ்வளவு முக்கியமானதோ அதே போன்று பலமான நிறுவனமொன்றை நிர்வகிப்பதற்கு 5S முறையினை நடைமுறைப் படுத்தல் அவசியமாகும். வீடுகளிலும், நிறுவனங்களிலும் 5S எண்ணக்கருக்களை நடைமுறைப்படுத்த முடியும். இதன் மூலம் நிர்வாகத்தை இலகுவாக செயற்படுத்த முடியும். வீட்டு வாழ்க்கை சிறப்பாக அமையும்.

### 5S இனை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவம்

5S இனை பற்றிய போதுமான அறிவு இல்லாத காரணத்தினாலும், இதனை பிரபல்யப்படுத்துவதற்கு வேகமான முறையொன்று இல்லாத காரணத்தினாலும் மக்கள் இதனைப் பற்றி குறைந்தளவிலேயே அறிந்துள்ளார்கள். எனினும் 5S நடைமுறையானது மிகவும் இலகுவாக நடைமுறைப்படுத்தக் கூடியது. எல்லோரும் மிகவும் இலகுவாகப் புரிந்து கொள்ளலாம். வேண்டிய எல்லா இடங்களிலும் நடைமுறைப்படுத்தலாம், செலவு குறைவானது, உற்பத்தி திறனை மேம்படுத்தக் கூடியது.

5S நடைமுறையின் மூலம் வேலைத்தளத்தை ஒழுங்கமைத்துக் கொள்ளமுடியும். அதை எந்நேரமும் சுத்தமாக வைத்துக்கொள்ள முடியும். அதை எந்நேரமும் ஒரே நிலையில் வைத்துக் கொள்ள முடியும். அதைப் பற்றி தொடர்ந்து கவனம் செலுத்த முடியும்.

### 5S படிமுறைகள்

*1.* செய்ரி (Seiri) - ஒழுங்கமைப்பு

முதலில் அலுவலகத்தில் தேவையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னதும், தேவையற்றதுமான பொருட்கள் எவையென இனங்கண்டு தேவையற்றவற்றை ஒதுக்குதல் வேண்டும். எஞ்சிய தேவையானவற்றை வகைப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

தேவையற்ற பொருட்களை 3 வகையாக வேறுபடுத்தி அகற்ற முடியும்.

(a) தேவையற்ற, பெறுமதியில்லாத, இலகுவாக ஒதுக்கக் கூடிய பொருட்கள். இப்பொருட்கள் பெறுமதியற்றவை. பழைய உக்கிப் போன பொருட்கள், பழைய பிளாஸ்டிக் உறைகள், துருப்பிடித்த இரும்புகள், பழைய பலகை போன்றன இவ்வகையில் அடங்கும். இவற்றை தீ வைத்தல், குழி தோண்டிப் புதைத்தல் ஆகிய முறைகள் மூலம் அகற்ற முடியும்.

(b) தேவையற்ற ஆனாலும் பெறுமதியான பொருட்கள்
தேவையற்றவையாக இருந்தாலும் சில பொருட்கள் பொருளாதார பெறுமதியுடைய பழைய பத்திரிகைகள், போத்தல்கள், விலை மதிக்கக் கூடிய இரும்பு, பலகை ஆகியவற்றை மிக விரைவாக விற்பனை செய்ய முடியும். இதன் மூலம் போதிய இடவசதி கிடைப்பதுடன் சூழலும் தெளிவாகும். மேலும் பொருளாதார நன்மையும் கிடைக்கும்.

(c) பெறுமதி அற்றவையாக இருந்த போதிலும் அகற்றுவதற்கு கடினமானவை. சில பொருட்களுக்கு பணப்பெறுமதி இல்லாவிட்டாலும் அவற்றை நினைவாக வைத்துக் கொள்ள முடியும் (Sentimental Value) பழைய டிரங்கு பெட்டி இவற்றை களஞ்சிய அறையில் வைத்துக் கொள்ள முடியும். அலுவலகத்தில் 2,3 வருடங்களுக்கு முந்திய கடிதங்கள், வவுச்சர்கள் போன்றன எழுதுவினைஞருடைய அலுமாரிக்குள் காணப்படக்கூடும். இவை கணக்காய்வு செய்யும்போது மட்டும் பயன்படும். எனவே இவற்றை உரிய எழுதுவினைஞரிடம் இல்லாமல் கணக்காய்வு களஞ்சிய அறையில் வைத்துக் கொள்ள முடியும்.

இவ்வாறு தேவையற்றவற்றை ஒதுக்கிய பின் தேவையானவற்றை 2 பகுதிகளாக வேறுபடுத்தி வைத்துக் கொள்ள முடியும்.

(i) அடிக்கடி தேவைப்படுபவை.
இவ்வகையான பொருட்களை, பாவிப்பவருக்கு அருகில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும். ஏனென்றால் அவை எப்பொழுதும் தேவைப்படுவன. அலுவலகத்தில் பேனை, பென்சில், கோப்பு, கிளிப், பன்சர் என்பவற்றைக் குறிப்பிடமுடியும்.

(ii) அடிக்கடி தேவைப்படாதவை: -
அடிக்கடி பயன்படுத்தாத பொருட்களை தூரத்தில் வைத்துக் கொள்ள முடியும். அலுவலகத்தில் கத்தரிக் கோல், டிபெக்ஸ் போன்றவற்றை குறிப்பிட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2) செய்தோன் (Seiton) - ஒழுங்குபடுத்துதல்**

இரண்டாவதாக செய்ரி மூலம் தரம் பிரிக்கப்பட்டவற்றை இலகுவாக பயன்படுத்தக்கூடியவாறு ஒழுங்குபடுத்தும் செயன்முறை செய்தோன் எனப்படும். இதன்மூலம் ஆவணங்கள் சரியாக முகாமைத்துவம் செய்யப்படுவதுடன் காலத்தை மீதப்படுத்த முடியும். வளங்கள் வீண்விரயமாதலைக் குறைக்கமுடியும். இதன் போது பின்வரும் முறைகளை பின்பற்ற முடியும்.

a) முதல் வைத்த பொருட்கள் முதலில் எடுப்பதற்கேற்ற வகையில் களஞ்சியப்படுத்தல்.

b) ஒவ்வொரு பொருளும் வைப்பதற்கென குறிப்பிட்ட இடத்தை ஒதுக்குதல்.

c) களஞ்சியப்படுத்திய பொருட்களை இலகுவாக இனங்காணும்படி பொருட்களுக்கு பெயரிடுதல்

d) தேவையான பொருட்களை இலகுவாக எடுக்கக்கூடிய விதத்தில் களஞ்சியப்படுத்தல்.

e) உபகரணங்களை தேவைப்படும் நபருக்கருகில் வைத்துக்கொள்ளல்.

**3. செய்சோ (Seiso) - சுத்தம்**

மூன்றாவதாக செய்தோன் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்ட பொருட்களை எப்போதும் சுத்தம் பேணும் செயன்முறை செய்சோ எனப்படும். பின்வரும் செயல்களை பின்பற்றுவதன் மூலம் இதனைச் செய்ய முடியும்.

a) தினந்தோறும் 5-10 நிமிடம் சுத்தம் செய்வதற்கு ஒதுக்கி அந்நேரத்தில் சுத்தம் செய்வதில் ஈடுபடல்

b) ஒவ்வொரு திணைக்களப்பிரிவுக்கும் அதனை பொறுப்பேற்கக்கூடிய ஒருவரை நியமித்தல்

c) இடத்தின் சுத்தத்தை அடிக்கடி பரிசோதித்தல்

d) சுத்தம் செய்தல், துடைத்தல், புதியதொன்றைப் பொருத்துதல் ஆகியவற்றை தொடர்ந்து செய்தல்

e) குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறுவனத்தில் சுத்தப்படுத்தும் தினத்தை ஒழுங்கு செய்து சகலருடைய ஒத்துழைப்புடன் சுத்தம் செய்தலில் ஈடுபடல்.

**4) செய்கெத்சு (Seiketsu) - உறுதிப்படுத்தல்**

இப்படிமுறையினூடாக செய்தி, செய்தோன், செய்சோ ஆகியன மேலும் விருத்தி செய்யப்படுகின்றன. இதனை பின்வரும் முறைகளைக் கையாள்வதன்மூலம் செயற்படுத்த முடியும்.

a) சித்திரவரைபடங்கள், வெளியீடுகள், கண்காட்சி செய்தல், அழகான காட்சிகள் சேர்ப்பதன் மூலம் சூழலை மேலும் அலங்கரித்தல். உதாரணமாக பூச்சாடி வைத்தல், பிரவேசபாதைகளை அம்புக்குறிகளினால் காட்டுதல் போன்றவற்றை குறிப்பிட முடியும்.

b) 5S நடைமுறையின் முன்னேற்றத்தை பரிசோதித்தல் நிறுவனத்தின் தலைமைத்துவ மட்டத்தில் இருப்பவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலகத்தின் சூழல் முழுவதிலும் அடிக்கடி நடமாடுதலும் பாராட்ட வேண்டிய வற்றை கண்ணுற்றபோதே அவர் களை பாராட்டுவதுடன், முன் னேற்ற வேண்டிய இடங்களிருந்தால் அதுபற்றி செயற்பாட்டுக் குழுவிற்கு தெரியப்படுத்துதல் வேண்டும்.

c) நிறுவனத்திற்குள் 5s செயல் செய்பவர் களை ஊக்குவித்தல். ஊக்குவிப் பதற்கு பல்வேறு முறைகள் உள்ளன. வார்த்தைகள் மூலமாக பாராட்டுதல், பாராட்டு சான்றிதழ் அல்லது பரிசுவழங்கல். இவற்றின் மூலம் 5s இனை மேம்படுத்தி செயற்படுத்தி தொடர்ந்தும் நடைமுறைப்படுத்து வதற்கு முயற்சி செய்வார்கள்.

d) நிறுவனத்தில் உள்ள பிரிவுகளினூடாக 5s போட்டிகளை நடாத்தி பரிசு, சான்றிதழ் வழங்குதல். இதனை வாராந்தம், மாதாந்தம், வருடாந்தம் எனப் பிரித்து நடைமுறைப்படுத்தல்.

**5. சித்சுகே (Shitsuke) - ஒழுக்கம்**

இப்படி முறையினூடாக 5s செய் வதை பழக்கமாக்குதலும், இதற்காக சகலரையும் பயிற்று வித்தலும் செய்யப்படும். இதன்போது பின் வரும் முறைகள் கையாளப்படு கின்றன.

a) 5S ஐ பற்றி மற்றவர்களை அறிவூட்டல்
b) உமது சேவையாளர்களை அன்பாக அழைத்தல்
c) நன்றாக செவிமடுத்தல்
d) சட்டத்தை மதித்தல்
e) சரியான நேரத்திற்கு வேலை செய்தல்
f) எந்நேரமும் வேலை செய்யும் இடத்தை சுத்தமாகவும், அழகாகவும் வைத்திருத்தல்.

இத்தகைய 5S திட்டத்தை நடைமுறைப் படுத்துவதன்மூலம் ஒரு நிறுவனத்தின் உற்பத்தி அதிகரிப்பதோடு வீண்விரய மின்றி சுத்தமான, அழகிய சூழலில் வினைத் திறனுடன் இயங்கும் நிலை உருவாகும்.



பித்தளைப் பாத்திரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச திட்டமிடலில் நீர்வள முகாமையின் முக்கியத்துவம்

**P.A.G. மோகன்**
நிர்வாக உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், நல்லூர்.

**நீர்**

மனிதர்களின் வாழ்விற்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளில் ஒன்றே நீர்வளம் ஆகும். நீரின்றி மனிதன் உயிர்வாழ முடியாது. அத்துடன் மனிதன் தனது அன்றாட தொழில் முயற்சிகளான விவசாயம், கைத்தொழில்துறை என்பவற்றைத் திறமையாக நகர்த்திச் செல்வதற்கும் அதிலிருந்து அதிகூடிய விளைவுப் பெருக்கத்தையும், உற்பத்தித் திறனையும் அதிகரிப்பதற்கும் நீர் இன்றியமையாததாக அமைகின்றது.

நீர் பின்வரும் மூலகங்களிலிருந்து கிடைக்கப்பெறுகின்றது.

- மேற்பரப்பு நீர்
- நிலக்கீழ் நீர்

நீர் ஓர் இயற்கை மூலவளமாக இருந்துவருவதுடன், அது பெறப்படும் மூலம் மற்றும் அதன் உபயோகம் என்பவற்றைப் பொறுத்து புதுப்பிக்கத்தக்க ஒரு வளமாக இருந்து வருகின்றது. நீர் விநியோகமானது தரை மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர் போன்ற மூலதாரங்களிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றது. மேற்பரப்பு நீர் ஏரிகள், ஓடைகள் மற்றும் சமுத்திரங்கள் என்பவற்றால் உள்ளடக்கப்படுகின்றன. இவை புவியின் நீரியல் சுழற்சியினால் வழங்கப்பட்டுவரும் புதுப்பிக்கத்தக்க நீர் மூலதாரங்களாக இருந்து வருகின்றன. நிலத்தடி நீர் பாறைப்படலங்களுக்கு நடுவில் அமைந்திருக்கும் இடங்களில் பல்லாயிரம் ஆண்டுகளாக ஒன்று திரண்டு வந்திருக்கும் நீர் வளமாக உள்ளது. நிலத்தடி நன்னீர் தீர்ந்து போகக்கூடிய ஒரு வளமாகவே இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆசிய நகரங்களுக்கு தற்பொழுது கிடைக்கக்கூடியதாக இருந்துவரும் நீரின் அளவு தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கி பெருமளவுக்குக் கவலை கொண்டுள்ளது. அதாவது 2025ஆம் ஆண்டளவில் ஆசியாவின் குடித்தொகையில் சுமார் 56 சதவீதத்தினர் நகரங்களிலேயே வாழ்ந்து வருவார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆசிய வளர்முக நாடுகளிலும், பசுபிக் பிராந்தியத்திலும் வாழ்ந்துவரும் சுமார் ஒரு கோடி மக்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதில்லை. அதேவேளையில் 200 கோடி மக்கள் போதிய அளவிலான பொதுச் சுகாதார வசதிகள் இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர். ஆசிய அபிவிருத்தி வங்கி அதன் ஆண்டறிக்கையில் ஒரு பாரிய மனித அவலம் என இந்த நிலையை வர்ணித்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்ட விளைவுகளைக் கவனத்தில் எடுத்திருக்கும் விஞ்ஞானிகள் 2030ஆம் ஆண்டளவில் நிச்சயமாக மிகக் கடுமையான ஒரு நீர்வள நெருக்கடி தோன்றும் என எதிர்வு கூறியுள்ளனர். ஒரு மனிதனுக்கு ஒரு நாளைக்கு சராசரியாக 135L நீர் தேவைப்படுகிறது. ஒரு மனித னால் ஒரு நாளைக்கு 20L நீர் வீண்விரயம் செய்யப்படுகிறது என ஆய்வுகள் தெரிவிக் கின்றன.

**நீர்வள முகாமை**

இருக்கும் நீர் வளங்களை வினைத் திறன்மிக்க திட்டமிடல் ஊடாக சிக்கன மாகப் பயன்படுத்துவதற்கு ஏற்ற விதி முறை களை, கட்டமைப்புகள், கட்டுப்பாடுகளை கொள்கையாகவும், சட்ட விதியாகவும் வகுத்து செயற்படுத்துகின்ற ஒரு செயன் முறை நீர்வளமுகாமை எனப்படும்.

**நீர்வள முகாமைத்துவத்தின் அவசியம்**

மனிதன் நன்னீரை வற்றாத வளமாகக் கருதி அதனைப் பாதுகாக்கத் தவறியுள்ளான். எந்தவொரு வளமும் சுற்றோட்ட முறையில் தரும் தொகுதிகள் குழம்பப்படாமல் இருந்தால்தான் அவ்வளம் வற்றாத வளமாக இருக்கும். புவியில்வாழத் தேவையான நன்னீரைக் கிடைக்கச் செய்யும் முக்கிய காரணி ஈரத்தைப் பேணும் மண்ணின் ஆற்ற லாகும். இவற்றால் காடு, புல்நிலம் போன்ற தாவரமூடுகை இருப்பைப் பொறுத்த தாகும். மனிதர்களும், விலங்குகளும் பயன்படுத்துவதற்கு நேரடியாகக் கிடைக் கும் நீரானது ஏரிகள், தடாகங்கள் ஆகியவற் றின் மேற்பரப்பிலும் நில நீராக மேற் பரப்புக்குக் கீழேயும் சேர்ந்திருக்கும் நீர் வளமாகும். மனிதச் செயற்பாடு விசேட மாகக் கைத்தொழில் செயற்பாடுகள், விவசாயச் செயற்பாடுகள் முதலியன வாகும். இச் செயற்பாடுகளால் நீர் மாசடை கின்றது. இதன் விளைவாக நன்னீரை வழங்கும் இயற்கையின் ஆற்றல் ஓரளவுக் கும் பாதிக்கப்படுகின்றது. இன்று கிராமங் கள் பலவற்றில் மக்கள் தினமும் பயன் பாட்டுக்குத் தேவைப்படும் நீரைப் பெறு வதில் பெரும்துன்பத்தை அனுபவித்து வருவதுடன், அதிகரித்துவரும் சனத் தொகைக்கேற்ப நீரின் தேவையும் அதி கரித்து வருகின்றது. எதிர்காலத்தில் நீர்த் தட்டுப்பாடு உருவாகலாம். இந் நிலை யில் இருக்கின்ற நீர்வளத்தை வினைத்திறன் வாய்ந்ததாகப் பயன்படுத்துவதற்கும்; நீரை ஒழுங்காகப் பங்கீடு செய்வதற்குமான தெளிவான கொள்கைகள் இனங்காணப் பட்டு; இதற்கான திட்டங்களை ஏற்படுத்தி பாவனையாளருக்கு வழங்குவதற்கு நீர் முகாமை அவசியமாக அமைகின்றது.

பலவிதமான தேவைப்பாடுடைய வர்களிடம் நீரைப் பகிர்வு செய்வதற்கு ஒரு திறமையான பங்கீட்டு முறை இல்லாததன் காரணமாக நீர்வள அபிவிருத்திகளில் தடை ஏற்படுகின்றது. இவற்றினைத் தவிர்ப்பதற்கு நீருடன் சம்பந்தப்பட்ட முகவராண்மைகள் அனைத்தையும் ஒன்றி ணைக்கவேண்டும். நீர் ஒதுக்கீட்டிற்கு ஏற்ப நீர் பகிர்ந்தளிக்கும் முறையினை ஏற்படுத்துவதன் மூலம் நீர்ப்பாசனம், கைத் தொழில், வீட்டுப்பாவனை போன்றவற்றிற் குரிய தேவைகளின் முன்னுரிமை அடிப் படையில் பங்கீடு செய்யப்பட்டு வழங்கு வதன்மூலம் பிரதேசத்தின் அபிவிருத்தியை தடையின்றி மேற்கொள்வதற்கு நீர் முகாமைத்துவம் உதவுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரின் தரம் பலவிதமான காரணிகளால் மாசடைதல் இன்று பெரும் பிரச்சினையாகவுள்ளது. தாவரம் போசணையூட்டல், அல்கா வளர்ச்சி ஆகியவற்றைத் தூண்டும் மேலதிக இரசாயனப் பொருட்கள் சேருவதால் நீர்ப்பாசனக் குளங்களிலும், பிற நீர்த்தாங்கிகளிலும் நீரின் தரம் பாதிக்கப்படுகின்றது. மேலும் நிலநீர் மாசுபடுவதானது சனத்தொகை கூடிய பிரதேசங்களில் அதிகமாகவுள்ளது. அதாவது மெல்லியதான மண்படையைக் கொண்ட பிரதேசங்களில் மலப்பொருட் கழிவுகளால் நிலநீர் மாசடைகின்றது. கைத்தொழில் அபிவிருத்தியின் விளைவாக பயன்படுத்தப்படாத அல்லது போதியளவு பதப்படுத்தப்படாத நீரியற்கழிவுகள் ஆகியவைகளும், திண்மக் கழிவுகளும் கூட வாய்க்கால், ஆறு, குளங்கள், கிணறுகள், ஆகிய நீர்நிலைகளில் சென்றடைகின்றன. மற்றும் இறால் வளர்ப்பு பண்ணைகள் அமைப்பதினாலும் நீர் மாசடைகின்றது. இவ்வாறு நிலநீர் மாசடைதலைத் தடுப்பதற்கும் நீர்முகாமைத்துவம் அவசியமாகின்றது.

பிரதேச திட்டமிடல் ஒன்றினை செயற்திறன் வாய்ந்ததாக மேற்கொள்வதற்கு நீர்வளம் இன்றியமையாததாக அமைகின்றது. நீர் தொடர்பாக பிரதேச திட்டமிடலை மேற்கொள்ளும்போது கீழ் வரும் வகையில் திட்டமிடுதல் வேண்டும்.

1. பிரதேசத்தில் இருக்கின்ற நீர்வளங்களை அடையாளம் காணல்
2. அப்பிரதேசத்தின் அபிவிருத்திக்கும், பயன்பாட்டிற்கும் துறைசார்ந்த வகையில் நீரின் தேவைப்பாட்டை மதிப்பீடு செய்தல்
3. எதற்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்பதற்கான சட்ட வரையறையை ஏற்படுத்தல்
4. நீர் வழங்கல், நீர் பாவனை முகாமைத்துவத்தில் சம்பந்தப்பட்டுள்ள பல்வேறு நிறுவனங்களின் செயற்பாடுகளை வழிநடத்தி ஒருங்கிணைப்பதற்கு தனியான அமைப்பு ஒன்றினை உருவாக்கி அதன்மூலம் வினைத்திறன்மிக்க நீர் முகாமைத்துவத்தை பிரதேசத்தில் ஏற்படுத்தல்.
5. ஒவ்வொரு துறைசார்ந்த வகையில் நீரை திறமையாகப் பயன்படுத்துவதையும், இதற்கான தேசிய கொள்கை ஒன்றும் உருவாக்கப்பட்டு நிச்சயப்படுத்தும் வண்ணம் சீர்திருத்தங்களைச் செயற்படுத்தல்.
6. நீரின் தரத்தைக் கண்காணிப்பதற்கான ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை வடிவமைத்து செயற்படுத்தல். அதாவது நல்லூர் பிரதேசத்தில் உள்ள நிலத்தடி நீரின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு இக் கண்காணிப்புத் திட்டம் மிகவும் அவசியமாகவுள்ளது.
7. மக்கள் பங்களிப்புடன் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி நீர் முகாமைத்துவத்தை இப்பிரதேசத்தில் ஏற்படுத்துதல்.

பிரதேச திட்டமிடலில் விவசாய அபிவிருத்தித் திட்டமிடலை உருவாக்கும் போது அங்கு தற்போது விளைவிக்கப் படுகின்ற ஏக்கர் அளவிலும் பார்க்க கூடுதலான ஏக்கரை விவசாயத்திற்கு உட்படுத்துவதே அத்திட்டமிடலின் நோக்கமாக அமைகின்றது. உதாரணமாக: 50 ஏக்கர் பயிர் செய்யப்படுகிறது எனவும், அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

200 ஏக்கராக உயர்த்துவதற்கு நீர்முகாமை செயற்றிறன் வாய்ந்ததாக மாற்றியமைப் பது மிகவும் அவசியமாகும். இதன் பொருட்டு பின்வரும் மாற்று நடவடிக்கை கள் செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

1. தற்போது இருக்கும் நீர் நிலைகளை திறன்முறையாக புனர்நிர்மாணம் செய்யப்படுவதுடன் அவை கமக்கார அமைப்புக்களினூடாக ஒழுங்கான முறையில் பராமரிப்பை உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டும்.
2. நீர் பாய்ச்சும் வாய்க்கால்கள் சீமெந்து கட்டுமானங்களாக மாற்றியமைக்கப் படுதல் வேண்டும்.
3. நீர் பாய்ச்சும்போது நீர் திரும்பும் வழிகளும், நீர்மாறும் வழிகளும் சரியான முறையில் திட்டமிடப்பட்டு சீமெந்து கட்டுமானங்களினால் ஏற் படுத்தப்படவேண்டும்.
4. சரியான, ஒழுங்கான நீர் விநியோ கத்தை உரிய கமக்கார அமைப்புக் களுக்கூடாக செயற்படுத்தப்பட வேண்டும்.
5. நீரை விரயமாக்குவதற்கும், பொருத்த மான தண்டங்கள் விதிக்கப்படுதல் வேண்டும்.
6. குறுகிய காலத்தில் கூடிய விளைச்சல் தரக்கூடிய பயிர்களைத் தெரிவு செய்யவேண்டும்.
7. அதிகமான நீர் பாய்ச்சுவதைத் தவிர்த்து, தூவல் நீர்ப்பாசன முறையை அறிமுகப் படுத்தி நடைமுறைப் படுத்தல்
8. ஒவ்வொரு விவசாயிக்கும் நீர் முகா மைத்துவ கட்டணமாக ஒரு சிறிய தொகையை அறிவிடுவதன்மூலம் நீர் விரயமாவதைத் தடுத்து அந்நீரின் உச்சப்பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

மேற்கூறப்பட்ட நடிவடிக்கைகளை சிறப்பான முறையில் மேற்கொள்வோமா யின் நீரின் உற்பத்தித்திறன் பின்வரும் வழிகளில் அதிகரிக்கும்.


1. பயன்படுத்தத்தக்க மிகை நீரைப் பெற்றுக்கொள்ளல்.
2. பயிர் பதிவேட்டின்மூலமும் குறைந் தளவு நீர்ப்பாசனத்தை வழங்குவதன் மூலமும் ஆவியாகும் நீரின் அலகு ஒன்றுக்கான உற்பத்திகளை அதிகரித் துக் கொள்ளல்.
3. ஆவியுயிர்ப்பு இழப்புகளை குறைத்துக் கொள்ளல்
4. கடல் மற்றும் ஆழமான நீர் நிலைகள் என்பவற்றுக்கான நீரோட்டத்தைக் குறைத்தல்
5. உவர்த்தன்மை மற்றும் மாசடைதல் என்பவை உருவாவதைத் தடுத்தல்
6. குறைந்த மதிப்புக்கொண்ட பயிர்களில் இருந்து உயர் மதிப்புக்கொண்ட பயிர்களுக்கு நீரை மீள்பகிர்வு செய்தல்

மேற்கூறப்பட்ட நடைமுறை களை செம்மையாகவும், வினைத்திறன் வாய்ந்ததாகவும் செயற்படுத்துவதன் ஊடாகக் குறித்த இப்பிரதேசத்தின் அபி விருத்தி திட்டமிடல் இலகுவாக அமை யும். இத்திட்டமிடலின்மூலம் நீரின் உற்பத்தித்திறன் அதிகரித்து, விளைவு பெருக்கமடைந்து அப்பகுதி விவசாயி களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைவது டன் அப்பிரதேசத்தின் மொத்த உற்பத்தி யின் அளவு அதிகரித்து, இறுதியில் இந் நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தி அதி கரித்து, பொருளாதாரம் வளர்ச்சியடைய வாய்ப்புண்டாகும். இதுவே பிரதேச திட்டமிடலின் இலக்காகவும் அமைய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்ட வகையில் தொகுத்து நோக்குவோமாயின் வேகமாக சனத்தொகை அதிகரித்து வருகின்றது. இருக்கின்ற நீர்வளப்பாவனை அதிகரித் துள்ளது. இந்நிலையானது நீர்வளம் குறைந்து அருகிடும் நிலைக்கு இட்டுச் செல்லப்படுகின்றது. இதனைத் தெளி வாகக் கூறுவோமாயின் சனத்தொகை அதிகரித்துச் செல்ல நீர்வளம் குறைந்து செல் கின்றது. இதனால், எதிர்காலத்தில் பாரிய நீர் பற்றாக்குறை ஒன்றை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படலாம். அத்துடன் இந்நிலை வேறு பல பாரதூரமான விளைவுகளுக்கும் மக்களை உட்படுத் தலாம். இந்நிலையில் நீர் தட்டுப்பாடான இடங்களில் கூடிய நீர் முகாமைத்துவம் பேணப்படவேண்டும். நீர் முகாமைத் துவம் இல்லாத இடங்களில் சிறப்பான பிரதேச திட்டமிடல் நடைபெற்று வருகின்றமையை நாம் அவதானிக்கலாம். எனினும் இது நீண்டகாலத்தில் பாரிய தாக்கத்தையும் ஏற்படுத்தலாம் என்பதில் எவ்வித சந்தேக மும் இல்லை.



ஆடைத் தாங்கி



அலங்காரப் பாத்திரம்



நாகர் விளக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை வியக்க வைக்கும் நனோ தொழில் நுட்பம்

ம. தவேந்திரன் B.Sc (Hons)
விஞ்ஞான தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், நல்லூர்.

கருவிகள், கைவினைகள் என்பவற்றைப்பயன்படுத்துவதும், செயலாற்றுவதற்காக கையாளப்பட்ட உத்தியுமே பொதுவாக "தொழில்நுட்பம்" எனப்படுகிறது. இது மனிதன் சூழலைக் கட்டுப்படுத்தும்போதும், அதனோடு இசைந்து வாழும்போதும் ஏற்படும் தாக்கத்துடன் தொடர்புடைய ஒரு பரந்த கருத்துரு ஆகும். ஆகையால் இதற்கு, தெளிவான ஒரு வரைவிலக்கணத்தைக் வழங்க முடியாதுள்ளது. இது மனித இனத்திற்குப் பயன்படும் பொறிகள், வன்பொருட்கள், பயன்பாட்டுப் பொருட்கள் போன்றவற்றையும் பரந்த முறைமைகள், அமைப்பு முறைகள், நுட்பங்கள் போன்றவற்றையும் குறிக்கக் கூடும். எனவே, இது பொதுவாக கையாளுவது மட்டுமன்றி, கட்டுமானத் தொழில் நுட்பம், மருத்துவத் தொழில் நுட்பம், உணவுத்தொழில் நுட்பம் போன்ற குறிப்பிட்ட துறைகள் சார்பாகவும் பயன்படுத்தப்படுகிறது.


மனித இனத்தின் தொழில்நுட்ப பயன்பாடு எளிமையான கருவிகளைச் செய்வதற்கு இயற்கை வளங்களை பயன்படுத்தியதிலிருந்து தொடங்கியுள்ளது. எனினும், இது காலத்திற்குக் காலம் ஏற்பட்ட அறிவியல் வளர்ச்சியின் பயனாக பல்துறைகளிலும் வளர்ச்சியடைந்து வருவதைக் காணலாம். இத்தொழில்நுட்ப வளர்ச்சியைப்பற்றி ஆராய முற்படுகின்ற போது 1780ஆம் ஆண்டளவில் ஆரம்பமாகி உலகின் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்திய முதலாவது கைத்தொழில் புரட்சியிலிருந்து நோக்குவது சாலவும் பொருத்தமானதாகும். 1780இல் ஐக்கிய இராச்சியத்தில் ஏற்பட்ட முதலாவது கைத்தொழில் புரட்சியானது, தொழில்நுட்ப வளர்ச்சியின் ஆரம்ப கட்டமெனக் குறிக்கப்படுகின்றது. இக்காலகட்டத்திலேயே நீராவி இயந்திரம், நெசவுப்பொறி மற்றும் இயந்திரப் பொறிகள் என்பன உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டன. 1840ஆம் ஆண்டளவில் ஏற்பட்ட இரண்டாவது கைத்தொழில் புரட்சியின் முன்னேற்றமானது இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மன் உட்பட ஐரோப்பிய நாடெங்கிலும் பரவ ஆரம்பித்தது. இக்காலகட்டத்தில் உருக்குத் தொழில் நல்ல முன்னேற்றம் அடைந்த அதேவேளை, புகையிரதத்தின் கண்டு பிடிப்பானது உலக மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. கைத் தொழில் புரட்சியின் மூன்றாவது காலகட்டம் 1900ஆம் ஆண்டு முதல் 1950 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு நீடித்தது. இக்காலகட்டத்தில் ஐக்கிய அமெரிக்க இராச்சியம் முன்னணியில் நின்று பல சாதனைகளை ஏற்படுத்தியது. இக்காலகட்டத்திலேயே மினபிறப்பாக்கி, இரசாயனத்துறை வளர்ச்சி, வாகன உற்பத்தி மற்றும் நாளாந்த வாழ்க்கைக்குத்தேவையான பாவனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களின் உற்பத்தி என்பன தழைத் தோங்க ஆரம்பித்தன. இதன்பின்னர் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் நான்காவது கட்டம் 1950ஆம் ஆண்டு முதல் இன்றுவரை வியாபித்திருக்கின்றது. இந்த முன்னேற்றத்தில் அமெரிக்காவின் கலிபோர்னியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் முன்னணியில் திகழ்கின்றன. அத்தோடு பசுபிக் சமுத்திரத்தை அடுத்துள்ள நாடுகளும் இவ்வாறான பொருளாதார முன்னேற்றத்தை அடைந்தவண்ணமுள்ளன. எரிபொருளாக காபன் போன்ற இரசாயனப் பொருட்களும், தகவல் தொழில்நுட்பமும் இக்காலகட்டத்தில் பெரும் வளர்ச்சியடைந்து வருவதை கண்கூடாகக்காணக்கூடியதாகவுள்ளது.

இது இவ்வாறிருக்கையில் கைத்தொழில் புரட்சியின் ஐந்தாவது கட்டம் எவ்வடிவத்தில் ஏற்படப்போகின்றது என்பது பற்றியும், இதன்மூலம் உலகிற்கு அறிமுகமாகவிருக்கின்ற தொழில்நுட்பம் எத்தகையது என்பது பற்றியும் நோக்குவது அவசியமாகும். அந்தவகையில் கைத்தொழில் புரட்சியின் ஐந்தாவது கட்டத்தில் இடம்பெறும் தொழில்நுட்பம் “நனோ தொழில்நுட்பம்“ (Nanotechnology) என்று அழைக்கப்படுகின்றது. இங்கு நனோ தொழில்நுட்பம் என்பது “நனோ“ என்கின்ற மிகச்சிறிய பிரமாணத்தின்கீழ் முன்னேற்றமடையும் ஒரு தொழில் நுட்பமாகும். அதாவது “100 நனோ மீற்றருக்கும் குறைவான அளவுகளில் அமைந்த உருவ அமைப்புக்களைக் கொண்டு, அச்சிறு அளவாக அமைவதால் ஏற்படும் சிறப்பான பண்புகளின்மூலம் ஆக்கப்படும் கருவிகளும், அப்பொருட் பண்புகளைப் பயன்படுத்தும் நுட்பியலுமே நனோ தொழில்நுட்பம்” என்று அழைக்கப்படுகின்றது.



(15,342 அணுக்களாலான Parallel-Shaft speed reducer gear)

“நனோ தொழில்நுட்பம் என்பது 1-100 நனோ மீற்றர் அளவிலான பொருளின் இயல்புகளை அறிந்து கட்டுப்படுத்தி, அதன் தனிச்சிறப்பால் நிகழும் சிறந்த விளைவுகளின் அடிப்படையில் புதிய பயன்பாடுகளுக்கு வழிவகுப்பதாகும்.” என அமெரிக்காவின் “நனோ தொழில்நுட்ப முன்னூாட்டு“ (Nanotechnology Initiative) வரையறுக்கின்றது. மேலும் “மூலக்கூறு அளவில் செய்யப்படுகின்ற ஒருபொறிமுறைச் செயற்பாடு” என்பதாலும், “முழுமையானதும் உயர்வினைத்திறன் உடையதுமான பொருட்களை அவற்றின் மூலக்கூறு மட்டத்தில் இருந்து கட்டியெழுப்பக் கூடியதான செயற்பாட்டுத்திறன்” என்பதாலும் இதனை விளங்கிக் கொள்ளலாம்.

இங்கு “நனோ“ என்பது கிரேக்க மொழிச்சொல்லாகும். அதாவது “நனோ“ என்றால் மிகவும் சிறிய குள்ளமான கூறு என்று பொருள்படும். அதாவது ஒரு நனோமீற்றர் (nanometer) என்பது ஒரு மீற்றரின் 1,000,000,000 இல் (ஒரு பில்லியனில்) ஒரு பங்காகும். இதன் பிரகாரம் சில பொருட்களின் அளவுகள் நனோமீற்றரில் வருமாறு:




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பொருள் | அதன் அளவு |
|---|---|
| மனிதர்களின் தலைமுடி | 70,000 - 80,000 nm |
| குருதிக் கலம் ஒன்று | 10,000 nm |
| பக்றீரியா ஒன்று | 100 – 1000 nm |
| புகையிலைப் புகையின் மிகச்சிறிய கூறு | 10 nm |
| வைரஸ் ஒன்று | 0 – 1 nm |

நனோ தொழில்நுட்பம் என்பது உண்மையிலேயே பல துறைகளிலும் செல்வாக்கைச் செலுத்தக்கூடியதும், செலுத்திவருவதுமான ஒரு நுட்பம் ஆகையால் நனோ தொழில்நுட்பங்கள் (நனோ நுட்பியல்கள்) என்று பன்மையில் அழைக்கப்பட வேண்டியதொன்றா கின்றது. ஏனெனில், இது ஒரு தனிப்பட்ட துறையில் மாத்திரம் செல்வாக்குச் செலுத்தத்தாது, உயிரியல் (Biology), இரசாயனவியல் (Chemistry), பௌதிக வியல் (Physics), மின்னியல் (Electrical), மருத்துவம் (Medicine), பொறியியல் (Engineering) என்று பல துறைகளிலும் தாக்கம்செய்து வருகின்றது. இத்தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும்போது கருவிகள் அல்லது சாதனங்கள் சிறிதாகிக் கொண்டே போவதன் விளைவாக "அணுப்புறவிசை நுண்ணோக்கி" (Atomic Force Microscope) மற்றும் "வாருதல் வகை புரை ஊடுருவு மின்னோட்ட நுண் ணோக்கி" (Scanning Tunneling Microscope) போன்ற மிகத்துல்லியமான நுண்கருவி களும் உருவாக்கப்பட்டு தற்போது பயன் பாட்டில் உள்ளன.



இந்த நனோ தொழில்நுட்ப மானது இயற்கையிலிருந்தே உருவாக்கப் பட்டதொன்றாகும். இதற்கான சிறந்த உதாரணமாக தாமரை இலையைக் கூறலாம். தாமரை இலைமீது ஒரு துளி நீர் விழுந்தாலும்கூட அது இலையுடன் தொடுகையுறாது கீழேவிழுந்து விடு கின்றது. இதற்குக் காரணம் தாமரை இலை மிகவும் மென்மையாக இருப்பதாலாகும். இதனை நாம் எமது வெற்றுக்கண்களால் அல்லது நுண்கண்ணாடி மூலமாகப் பார்க்கும்போது இலையின் மேற்புறம் சொரசொரப்பான தன்மையுடையதாக இருப்பதை அவதானிக்கலாம். இதற்கான பிரதான காரணம் இலையின் மேற்பரப் பானது நனோமுறையில் உருவாகியிருப் பதேயாகும் இதன்மூலம் நனோ தொழில் நுட்பத்திற்கும், இயற்கைக்குமிடையில் உள்ள நெருங்கிய தொடர்பை அறியக் கூடியதாகவுள்ளது.

நனோ தொழில்நுட்பமானது இயற்கையிலுள்ள பொருட்களைப் பயன் படுத்தி மிகச்சிறிய பொருட்களை தயாரிப் பதற்குப்பயன்படுவதனால் இதன்மூலம் மிகச்சிறந்த சாதனங்களையும், நுணுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான வடிவமைப்பையும் செய்யமுடிகின்றது. எனவே, இச்சாதனங்கள் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத அளவிற்கு அதிவேக வினைத்திறன் கொண்ட சாதனங்களாக இருக்கும். இவ்விதம் நனோ தொழில்நுட்ப முறையினை பண்டைய நாகரிகங்களிலும் பயன்படுத்தி வந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. கி.பி. 4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புராதன உரோமர்களை நனோ தொழில்நுட்பத்தின் முன்னோடிகளாக கருதலாம். இவர்கள் நிகாஸ் என்ற பாரிய பூந்தொட்டியைத் தயாரிப்பதற்கு 70 நனோ மீற்றர் தூய வெள்ளியைப் பயன்படுத்தி அதன் பளபளப்பை மேம்படுத்தியிருக்கிறார்கள். மேலும் இவர்கள் தங்கத்தின் ஊசிமுனை அளவிலான துணிக்கைகளின் சிவப்பு நிறமாக ஒளிரும் தன்மையினைப் பயன்படுத்தி தங்கத்தை ஏறத்தாழ 10 நனோ மீற்றர் அளவிலான துணிக்கைகளாக மாற்றி சிவப்புக் கண்ணாடி தயாரிக்கும் வழக்கத்தையும் கொண்டிருந்ததோடு, தமது தலைமுடியின் நிறத்தை கருமையாக்க, ஏறத்தாழ 5 நனோ மீற்றர் அளவிலான துணிக்கைகளையுடைய சாயத்தையும் பாவித்து வந்துள்ளனர். இதேபோலவே கி.பி.5ஆம் நூற்றாண்டில் வரையப்பட்ட இலங்கையின் சிகிரியா ஓவியங்கள் இன்றும் கூட பளபளப்பாக காட்சி தருவதால் நனோ முறையில் எண்ணெய் கலந்த பூச்சை இங்கு பயன்படுத்தியிருக்கக்கூடும் என விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.



நனோ தொழில்நுட்பமானது இயற்கையாகவே உருவாகி, எமது முன்னோர்களால் பயன்படுத்தப்பட்டிருந்தாலும்கூட, அதனைக்கண்டு பிடித்து இதனை நாம் பயன்படுத்த வேண்டும் என உலகிற்கு அறிமுகம் செய்த பெருமை பௌதிகவியலாளரான "றிச்சாட் ஃபெயின்மன்" (Richard Feynman) என்பவரையே சாரும். 1959ஆம் ஆண்டில் நோபல் பரிசை வென்ற இவரே நனோ தொழில்நுட்பத்திற்கான எண்ணக்கூற்றை முதன்முதலில் விஞ்ஞான ரீதியாக முன்வைத்தவராவார். அமெரிக்காவின் கலிபோர்னியா தொழில்நுட்ப நிறுவகத்திலுள்ள பௌதிகவியல் விஞ்ஞான சங்கத்தில் 1959ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29ம் திகதி உள்ளே ஏராளமாக இடம் உள்ளது (There is plenty of room at the bottom) எனும் தலைப்பில் இவர் ஓர் உரை நிகழ்த்தினார் அதில் அணுவின் பரிமாணம் முதல் கட்டட நிர்மாணம் வரை எதிர் நோக்கும் சவால்கள் பற்றிக் குறிப்பிட்டதுடன் "எந்த சிறிய விடயத்திற்குள்ளும் பாரிய பரிமாணங்களை உள்ளடக்க முடியும்" என்று தெரிவித்த கருத்தானது நவீன நனோ தொழில்நுட்பம் பற்றி வெளியிட்ட முதலாவது கருத்தாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்வுரையில் "நீங்கள் மிகச்சிறிய சாதனங்களை உருவாக்க முடியும்" எனவும் "மூலக்கூறு என்ற பிரமாண அணுச்சிறுதுணிக்கை மட்டத்தையும் நீங்கள் விருப்பமான வகையில் பயன்படுத்தலாம்" என்றும் அவர் கூறியுள்ளார். "இந்த எதிர்கால தொழில்நுட்பத்தில் பௌதிகவியலின் வழிப்பயன்பாடுகளில் மாற்றம் ஏற்படும்" என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதாவது, புவியீர்ப்புக் கொள்கை போன்றவை செயலிழந்து போவதுடன், மேற்பரப்பு இழுவிசை மற்றும் வேண்டர்வாலின் கவர்ச்சி என்பன முக்கியத்துவம் பெறுகின்றன என்பது அவரது கருத்தாக இருந்தது.

நனோ தொழில்நுட்பம் தொடர்பான கருத்துக்கள் றிச்சர்ட் பெயின்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களால் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், "நனோ தொழில்நுட்பம்" என்ற பதம் முதன்முதலில் "டோக்கியோ விஞ்ஞான பல்கலைக்கழக" (Tokyo Science University) பேராசிரியர் "நொரியோ தனிகுச்சி" (Norio Taniguchi) என்பவரால் 1974இல் அறிமுகப்படுத்தப் பட்டது. பின்னர் 1977 இல் டாக்டர் மு.எரிக் ட்றெக்ஸ்லர் (K.Eric Drecler) என்பவரால் இது பகுத்தாராயப் பட்டு பிரபல்யப்படுத்தப்பட்டது. இவரே நனோ தொழில் நுட்பத்தை பேச்சுக்கள் மற்றும் புத்தகங்கள் மூலம் வெளிக் கொணர்ந்தவராவார். இதனைத் தொடர்ந்து 1980களில் "சிறுகூட்ட அணுத் தொகை விஞ்ஞானம்" அல்லது "துணுக் கறிவியல் (Cluster Science) பிறப்பு" மற்றும் "புரை ஊடுருவு மின்னோட்ட வருடு நுண்ணோக்கி" (Scanning Tunneling Microscope (STM)) என்பவற்றின் கண்டு பிடிப்புக்களுடன் நனோ தொழில் நுட்பம் வளர்ச்சியடையத் தொடங்கியது.

இன்றைய காலகட்டத்தில் எமது வாழ்க்கை முறையை மாற்றியமைக்கும் வகையில் மருத்துவம், இலத்திரனியல், விவசாயம், தொடர்பாடல், உற்பத்தி போன்ற பல துறைகளிலும் நனோ தொழில்நுட்பம் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியுள்ளது. இதன்மூலம் ஒரே நேரத்தில் பல்வேறு பணிகளை மேற் கொள்ளக்கூடியதாக இருப்பதால் இத் தொழில்நுட்பத்தை கைக்கொள்ளுவதும் தவிர்க்கமுடியாததாகிறது. இந்நிலையில் நனோ தொழில்நுட்பம்மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் ஏற்கனவே சந்தைக்கு வந்திருப்பினும், மக்கள் மத்தியில் அவை தொடர்பான விழிப்புணர்வு மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. எனவே, இது குறித்த விளக்கத்தை ஓர் எடுத்துக்காட்டு மூலமாகப்பார்க்கும் போது, இலத்திரனியல் சாதனங்கள் இலத்திரன்கள் நகர்வதன் மூலமே செயற்படுகின்றன. இங்கு இலத்திரன்கள் நகரும் தூரத்தைக் குறைக்கும்போது அவற்றின் செயற்றிறன் மேலும் துரிதப் படுத்தப்படுகின்றது. இவ்வாறு இலத்திரன் களின் வேகத்தை அதிகரிக்கும்போது அவற்றின் பகுப்பாய்வு வேகமும் அதிகரிப் பதால் ஒரே நேரத்தில் இரு வழிகளிலும் ஒரே வகையில் செயற்படக்கூடிய, உயர் செயற்றிறன் கொண்ட, அமைப்பில் சிறிய சாதனங்களை உற்பத்தி செய்யமுடிகிறது.

இன்றைய உலகில் பலரதும் கவனத்தை ஈர்த்துள்ள இந்நனோ தொழில் நுட்பம் எமது அன்றாட வாழ்க்கையில் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாகக்கணப் படுகின்றமையை பின்வருவனவற்றின் மூலம் அறியலாம்.

- தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நனோ தொழில்நுட்பப் பிரயோகத் தாலான குளிர்சாதனப் பெட்டிகளில் எந்தவொரு உணவையும் மிக நீண்ட நாட்களுக்கு பழுதடையாமல் பாது காக்க முடியும்.
- நனோ தொழில்நுட்பம் மூலம் உறுதி மிக்க கட்டடப்பொருட்கள் மற்றும் ரயர்களை உருவாக்க முடியும்.
- நனோ மூவாயிகளின் (Nano Transistors) அறிமுகத்தின் மூலம் மேசையில் வைத்துப்பாவிக்கப்படும் கணினிகளை சாதாரண மக்களும் உள்ளங்கையில் வைத்துப்பாவிக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை. இம்மூவாயிகள் எதிர்காலத்தில் சிலிக்கன் குறைகடத் திக்கான உலகச்சந்தை வாய்ப்பை முற்றாக இல்லாதொழிக்கும் சாத்தியப் பாட்டை ஏற்படுத்தக்கூடும் என்ப தோடு, சகல தகவல் தொழில்நுட்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனங்களையும் வினைத்திறன்மிக்க வகையில் உற்பத்தி செய்யவும் வழி வகுக்கின்றன.

- நனோ தொழில்நுட்பத்தால் உற்பத்தி செய்யப்படும் துணிவகைகள் நுண்ணிய இழைகளைக் கொண்டிருப்பதால் அவற்றில் அழுக்குகள் தங்காதிருப்பதுடன் கசங்கும் தன்மையற்றன வாகவும் காணப்படுகின்றன. இதனால் அத்துணி வகைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் ஆடைகளை சலவை செய்யவோ, அழுத்தவோ வேண்டிய தில்லை.
- முன்னைய காலங்களில் சூரிய வெப்பத்திலிருந்து சருமத்தை பாதுகாப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட பூச்சு (கிறீம்) வகைகள் பூசிய பின்னர் வெள்ளை நிறமாக தோற்றமளிக்கும். ஆனால், தற்போது நனோ தொழில்நுட்பத்தால் உற்பத்தி செய்யப்படும் அத்தகைய பூச்சு வகைகள் பூசிய பின்னரும் பூசியதுபோல் தோற்றமளிக்காத தன்மையுடையனவாகக் காணப்படுவதோடு, இவை மேற்றோலிலுள்ள இறந்த கலங்களுடன் மட்டுமே தாக்கமுறுவதால் மனிதனுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்து வதில்லை.
- காபன் அணுவைப்பயன்படுத்தி உருவாக்கப்படும் காபன் நனோ குழாய்கள் (Carbon nano tubes), டெனிஸ் மட்டைகள் (Tennis Rackets) போன்ற பல பொருட்கள் நனோ தொழில்நுட்பத்தின்மூலம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இத்தகைய டெனிஸ் மட்டைகள் குறைந்த பாரமுடையன வாகவும் உறுதிமிக்கன வாகவும் உள்ளதால் வர்த்தக ரீதியாக பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.
- நனோ தொழில் நுட்பம் மூலம் தயாரிக்கப்பட்ட சுவர் பூச்சை (paint) பயன்படுத்தும்போது அது சுவரிலுள்ள மிகச்சிறிய துவாரங்களையும் அடைத்து மிகவும் நேர்த்தியான அமைப்பைக் கொடுப்பதுடன் நீண்ட காலத்திற்கு நிலைக்கக் கூடியதாயும் உள்ளது.
- நனோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அமைக்கப்படும் மலசல கூடத்தை அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டிய தேவை இல்லை. ஏனெனில், நனோ பரிமாணத்தைவிட பெரிய துணிக்கைகள் அதன் மேற்பரப்பில் தங்காமை இதற்குரிய பிரதான காரணமாகும்.
- நனோ என்னும் பெயரை வர்த்தகப் பெயராகக் கொண்டிருக்கும் பெரும்பாலான பொருட்கள் நனோ தொழில் நுட்பத்தின்மூலம் உற்பத்தி செய்யப்பட்டவையாகவே இருக்கின்றன. (உதாரணமாக சில்வர் நனோ சலவை இயந்திரங்களைக் குறிப்பிடலாம்.)

நனோ தொழில்நுட்பத்தின் பிரயோகம் மருத்துவத்துறையில் மாபெரும் புரட்சி ஒன்றை ஏற்படுத்துமென்பதில் எவ்வித ஐயமுமில்லை. இத்தொழில் நுட்பத்தால் தயாரிக்கப்பட்ட மருந்துகள் உட்கொண்ட மறுகணமே சம்பந்தப்பட்ட பகுதியில் தொழிற்படும் ஆற்றல்மிக்கன என்பதால் சாதாரண நோயாளி ஒருவர் தனது நோய் குணமாக நீண்ட நேரமோ அல்லது நீண்ட நாட்களோ காத்திருக்க வேண்டிய அவசியமற்றுப் போகின்றது. தற்காலத்தில் மருத்துவத்துறைக்கு மாபெரும் சவாலாக இருப்பது புற்று நோயாகும். வேகமாகப் பரவும் ஆற்றல் மிக்க புற்றுநோய்க் கலங்களை தற்போதுள்ள மருத்துவ முறையில் வேறுபடுத்தி அறிவது மிகக்கடினமாக உள்ளது. ஆகையால் விரைவாக வளர்ச்சியடையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது பரவும் கலங்களை அழிக்கும் செயற்பாட்டை மட்டும் இன்றைய மருத்துவத் தீர்வுகள் மேற்கொள்கின்றன. இதன் காரணமாக புற்றுநோய்க்கலங் களுடன் சேர்ந்து அதே இயல்புடைய ஏனைய சில கலங்களும் அழிக்கப்படு கின்றன. இதனாலேயே புற்றுநோய்க்கான சிகிச்சையை மேற்கொள்பவர்களின் தலைமுடி வேகமாக உதிர்கிறது. ஆனால், நனோ தொழில்நுட்பம்மூலம் புற்று நோய்க்கான சிகிச்சை முறையில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று கருதப்படுகின்றது. இத்தொழில்நுட்பத்தால் உருவாக்கப் படும் நனோகோளங்கள் (Nano Robots) புற்றுநோய்க்கலங்களை மட்டும் தேடி அழிக்கக்கூடிய வல்லமை கொண்டவை யாக இருப்பதால் புற்றுநோயால் பாதிக்கப் படாத கலங்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்பது முன்னேற்றகரமான ஒரு விடயமாகும். எனவே, இத்தொழில் நுட்பத்தினால் புற்றுநோய்க்கான சிகிச் சையை வழங்குவதுடன், சிகிச்சையால் ஏற்படும் பக்க விளைவுகளையும் கட்டுப் படுத்த முடியும். அத்துடன் இத்தொழில் நுட்பத்தால் உருவான நுண் ரோபோக்களை உடலினுள்ளே செலுத்தி தொற்றுநோய்க் கிருமிகளையும் நோய் கலங்களையும் கண்டறியும் முயற்சிக்காக ஆராய்ச்சிகள் நடைபெற்ற வண்ண முள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றைய உலகம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனைகளில் பூகோளம் வெப்பமடைதலும் ஒன்றாகும். மனித செயற்பாடுகளால் அதிகளவில் வெளி விடப்படும் காபனீரொட்சைட் மற்றும் பச்சை வீட்டு வாயுக்கள் என்பன பூகோளம் வெப்பமடைதலில் பெரும்பங்கு வகிக்கின் றன. தற்போது பரிசோதனை மட்டத் தில் உள்ள விசேட நனோ துணிக்கைகள் மேலதிகமாக உள்ள மேற்படி வாயு மூலக்கூறுகளை அழிக்கவல்லன எனவும், இதனால் எதிர்காலத்தில் காலநிலை மாற்றத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியும் எனவும், விஞ்ஞானி கள் எதிர்வுகூறியுள்ளனர். மேலும் மின்சக்தியைப் பெற்றுக் கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும் எரிபொருட்களாலும் எதிர்காலத்தில் பாரிய தாக்கங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளதால் இப்பிரச்சனைக் குத்தீர்வாக நனோ தொழில்நுட்ப ஆற்றலைப் பயன்படுத்தி "ஐதரசன் வில்லைகள்" (hydrogen Capsules) தயாரிக்கப்படுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. இதனை எரிபொருள் தாங்கியி னுள் சேர்த்துவிடுவதன் மூலம் இதிலுள்ள ஐதரசனானது ஒட்சிசனுடன் எதிர் விளைவை ஏற்படுத்தி, கூடுதலான சக்தி யைப்பெற்றுக்கொடுப்பதோடு, கழிவுப் பொருளாக நீர் சுற்றாடலுக்கு வெளி யேற்றப்படும் என்பதால் இதன்மூலம் சூழல் மாசடைவதிலிருந்து பாதுகாக்கப் படுவதோடு, நீர்ப்பிரச்சனைக்கும் தீர்வு கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது எனலாம்.

இவ்வாறு எமது அன்றாட வாழ்க்கையில் முக்கியத்துவம்பெறும் இந்நனோ தொழில்நுட்பத்தைப் பயன் படுத்தி உலக நாடுகள் தமது உற்பத்தி களையும் அவற்றிகான ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டுவருவதையும், இதற்கு மிக முக்கியத்துவமளித்து பெரும்பணத்தை செலவிடுவதையும் அவதானிக்க முடிகின்றது. உதாரணமாக: அமெரிக்கா ஒரு பில்லியன் டொலரிற்கும் கூடுதலான பணத்தை ஆண்டுதோறும் இதற்காகச் செலவிடுவதையும், ஜப்பான் நனோ தொழில்நுட்ப நிகழ்ச்சிகளுக்காக 700 தொடக்கம் 800 மில்லியன் டொலர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவிடுவதையும் காணலாம். மேலும் இந்தியா உட்படப் பலநாடுகளில் இது தொடர்பான ஆராய்ச்சிகள் நடைபெறு கின்றபோதிலும் இது அடுத்த தலை முறையின் தொழில்நுட்பம்எனக் கருதப் படுவதால் அவை மிகவும் இரகசியமாகவே நடைபெறுகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில் நனோ தொழில்நுட்பமானது எதிர்காலத்தில் ஒரு சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தலாம் என நம்பப்படுகின்றது. இதனால் இத்துறை சார்ந்த ஆய்வுக்கென ஜனாதிபதியின் வழிகாட்டலுடன் தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸவிதாரண அவர்களின் முயற்சியினால் "இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவகம்" (Sri Lanka Nanotechnology Initiative) தற்போது நிறுவப்பட்டுள்ளது. இது எமது நாட்டில் ஆக்கபூர்வமான நனோ தொழில்நுட்ப ஆய்வுகளுக்கும், கண்டுபிடிப்புகளுக்கும் களம் அமைத்துக்கொடுப்பதற்கான முயற்சியாக மட்டுமன்றி மற்றைய நாடுகளுடன் பொருளாதார ரீதியாக போட்டியிடத்தக்க ஒரு ஆரம்ப முயற்சியாகவும் அமைகின்றது. இதன்மூலம் எமது நாட்டின் மதிநுட்பத்தையும், புத்தாக்கத் திறனையும் வெளியுலகிற்கு எடுத்துக் காட்டி உலகத்தரத்திற்கேற்புடைய பொருட்களைத் தயாரிக்கமுடியும் எனவும் கருதப்படுகின்றது. மேலும் "காபன் நனோ குழாய்கள் உருக்குக்கம்பியினால் உருவாக்கப்பட்ட குழாய்களைவிட 20 மடங்கு கூடுதல் பலத்துடனும், அலுமினியத்தைவிட அரைப்பங்கு குறைந்த நிறையுடனும், வைரத்தைவிட அதன் ஜொலிப்பு இரண்டு மடங்கு வேகமாக, தூரத்திற்கு தெரியக்கூடியதாகவும் இருப்பதனால், எதிர்காலத்தில் சிகிரியா மலையுச்சியில் நிறுவப்படவுள்ள விண்வெளி ஆய்வு கூடத்திலிருந்து விண்வெளியிலுள்ள ஆய்வுகூடத்துடன் இப்பலம் வாய்ந்த கம்பியை இணைத்து, அக்கம்பியின் உதவியுடன் ஒரு பாரம் தூக்கியை (lift) பயன்படுத்தி, மக்களை உல்லாசப் பிரயாணிகளாக அழைத்துச் செல்வதற்கான வாய்ப்புக்களை எதிர்காலத்தில் இந்த நனோ தொழில்நுட்பம் ஏற்படுத்திக் கொடுக்கும்" என்று இலங்கையின் முன்னணி ஆராய்ச்சி நிறுவனங்களுள் ஒன்றான நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி.கிளார்க் நிறுவனம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

எப்போதுமே எந்தவொரு நல்ல விடயத்திலும் சில தீமைகள் இருப்பது போன்று, நனோ தொழில்நுட்பத்திலும் சில எதிர் விளைவுகள் இருக்கலாம் என நம்பப்படுகின்றது. இன்று உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் சூழல் மாசடைதலும், பூகோளம் வெப்பமடைதலும் 19ஆம் நூற்றாண்டின் கைத்தொழில் புரட்சி தந்த விளைவுகளே என்பது வெளிப்படை உண்மையாகும். மனிதன் இதனைக்கட்டுப்படுத்துவதில் இன்னும் முழுமையான வெற்றியை ஈட்டாத நிலையில், நனோ தொழில்நுட்பத்தால் உருவாகவிருக்கும் புதுயுகம் தரப்போகும் பக்கவிளைவுகள் பற்றியும் எதிர்வுகூறுவது சற்றுக்கடினமானதே. இங்கு நனோ துணிக்கைகள் மிகவும் சிறியனவையாக இருப்பதால் நச்சுத்தன்மை உருவாகலாம் என்ற அச்சம் விஞ்ஞானிகள் மத்தியில் நிலவுகின்றது. எனவே, இவற்றை மருத்துவ ரீதியாக உள்ளெடுக்கையில் அவை மூளை, தொண்டைக்குழி, நுரையீரல் போன்ற பாகங்களில் ஒன்றுதிரட்டப்பட்டு, வேறு நோய்களையோ, உயிராபத்துக்களையோ ஏற்படுத்தக்காரணமாகலாம். மேலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நச்சுத்தன்மையால் நனோ தொழில் நுட்பத்தைப்பிரயோகிக்கும் தொழிற் சாலைகளில் வேலைசெய்யும் தொழி லாளர்களுக்கும் பாதிப்பு ஏற்படலாம். அத்துடன் நனோ தொழில் நுட்பத்தால் திறன்மிக்க, சக்திவாய்ந்த, பருமனில் சிறிதான போராயுதங்களை மிகவும் குறைந்த செலவில் வடிவமைக்க வாய்ப் புள்ளதால் ஆயுதக்கலாசாரம் மலிந்துள்ள இன்றைய உலகில் தனிநபர் மற்றும் நாடுகளின் பாதுகாப்பை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கும் என்பது அதிர்ச்சி தரக்கூடிய ஒரு விடயமாகும். நனோ தொழில்நுட்பம் மரபணுக்களை மாற்றியமைக்கப் பயன் படலாம் என விஞ்ஞானிகள் கருதுவதால் உயிரினங்களின் இயற்கையான வாழ்வியல் மீறப் படலாம் என்ற அச்சமும் நிலவுகின்றது. அந்தவகையில் இதனால் ஏற்படப்போகும் விளைவுகள் குறித்து முழுமையாக எதிர்வுகூற முடியாதுள்ளது.

முடிவாக உயர் தொழில் நுட்பத் தால் இயற்கையை மீறத்தெரிந்த மனிதனுக்கு இயற்கையின் சீற்றத்தை துல்லியமாக எதிர்வு கூறுவதோ, பூரண மாக எதிர்கொள்வதோ இன்னும் கடின மாகவே இருக்கின்ற நிலையில், இயற் கையை மீறாத வகையில் நனோ தொழில் நுட்பத்தால் ஏற்படும் எந்தவொரு முன்னேற்றமும் வரவேற்கத்தக்கதே. இதை உணர்ந்து நனோ தொழில்நுட்பத் துறையில் அனைவரும் ஆர்வம் காட்டாது விடுவோமேயானால் எமது எதிர் காலத்தை நாமே படுகுழிக்குள் தள்ளப் போகின்றோம் என்பது உறுதியாகின்றது. எனவே இன்றைய காலகட்டத்தில் நனோ தொழில் நுட்பத்துறையில் ஈடுபாடு காட்டுவது காலத்தின் தேவையாகும். ஏனெனில் இத்தொழில்நுட்பம் மூலம் ஒரு துறைக்கு மட்டுமன்றி சகல துறைகளுக்கும் பயனளிக்க முடியும் என்பதனால், எமது எதிர்காலச்சந்ததியினருக்கும் உதவமுடியு மென்பது நிதர்சனமாகும்.



எண்ணெய்க் கெண்டி



ஐம்பொன் தட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால் நிலை சமத்துவமும் சமுதாய முன்னேற்றமும்

**திருமதி தயாபரி கிரிதரன் B.A (Hons), M.A**
மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், நல்லூர்.

இன்று அனைவராலும் பேசப்படு கின்றதும்; சமுதாய நீரோட்டத் தில் செல்வாக்குச் செலுத்துகின்றதுமான விடயம், "பால்நிலை - பால் நிலைச் சமத்துவம்" என்பதாகும். பால் நிலை (Gender) என்பது பெண்களுக்கும், ஆண்களுக்கும் என தனித்தன்மையுடன் ஒதுக்கப்பட்ட சமூக, கலாசார குணாம் சங்களைக் குறித்துக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அதாவது சமூக, கலாசார ரீதியாக ஆணும், பெண்ணும் எத்தகைய நடத்தைக் கோலங் களைக் கொண்டிருக்க வேண்டும் என்ற சமுதாயத்தின் எதிர்பார்க்கையே 'பால் நிலை' எனக் கொள்ளப்படுகின்றது. சமுதாய முன்னேற்றத்தில் பால்நிலைச் செல்வாக்குப் பெறும் தன்மைகள் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

ஆணுக்குரிய குணநலன்களாக வீரம், உழைப்பு, தலைமைத்துவப் பண்பு, ஆளுமையான நடத்தை முதலியன கருதப்படுகின்றன. பெண்ணுக்குரிய குணநலன்களாக பணிவு, அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, அன்பு, நெகிழ்ச்சித் தன்மை முதலியன கருதப்படுகின்றன. அத்துடன் ஆண் - பெண் இருபாலருக்கும் வரையறுக்கப்பட்ட ஆடை - அணிகலன் களும் விதிக்கப்பட்டுள்ளன.

பால்நிலை ரீதியான எதிர் பார்க்கை முறையாகப் பின்பற்றப்படாத விடத்து அங்கு மறுதலிப்பு எதிரொலிக் கின்றது. இம்மறுதலிப்பின் தாக்கம் பால்நிலை வன்முறைகளுக்கு களம் அமைக்கின்றது எனலாம். பால் நிலை வேறுபாட்டின் அடிப்படையில் ஒருவர் மீது மற்றவரால் பிரயோகிக்கப்படுகின்ற வேண்டத்தகாத செயப்பாடுகள் 'பால் நிலை வன்முறை' என வரையறுக்க முடிகின்றது.

மேற்குறிப்பிட்ட வன்முறைப் பிரயோகமானது தாயின் கருவறை சிசுமுதல் முதியவர் வரை இனமத பேதங்கடந்து பரந்து காணப்படுகின்றது. பால்நிலைசார் வன்முறைகள் உடல், உளம், வாய்மொழி, பொருளாதாரம் சார்ந்த நிலைகளில் பாகுபடுத்தப்படுகின்றன. அன்பு காட்டாமை, பராமரிப்பின்மை, வேலைப்பளு, வாழ்வாதார வளமறுப்பு, பொருளாதாரச் சுரண்டல், பலவந்தத் திருமணம், சிசுக்கொலை, உரிமை மறுப்பு, ஊதிய ஏற்றத்தாழ்வு, போதைப் பாவனைத் தூண்டல், பாலியல் துன்புறுத்தல், புறக்கணிப்பு முதலான வடிவங்கள் அனைத்தும் பல்நிலை வன்முறைக்குள் அடங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி வன்முறைகள் வீடுகள், வேலைத்தளம், கல்வி நிறுவனங்கள், வழிபாட்டிடங்கள், சேவைகள் வழங்கப் படும் நிலையங்கள், பொது இடங்கள், அரசாங்க அரசியல் அதிகாரம் உள்ள இடங்கள் ஆகியவற்றிலேயே நிகழ்கின் றன. வலிமையானவர் எவரோ அவரே வன்முறைகளுக்கு பெரிதும் காரணகர்த் தாவாக இருப்பர். வலிமை என்பது இங்கு உடல், உள பொருளாதார, அதிகார துஷ்பிரயோகம் மற்றும் சமூகச் செல் வாக்கை உணர்த்துகின்றது.

உடலியல் ரீதியான வேறுபாட்டி னைத் தவிர்த்து ஆண் பெண் இருவரும் சமத்துவமானவர்கள். ஆனால் பெண் சிசுக்கொலைகள் சமூகத்திலே கணிசமான அளவு இடம்பெறுகின்றன. எந்தவொரு குழந்தைக்கும் உயிர்வாழ்வதற்கான உரிமை உண்டு. இது அடிப்படை மனித உரிமைகளுள் முக்கியமானது. பெற்றோர் ஆண் - பெண் என்ற பேதம் பாராட்டாது. பிள்ளைகள் என்ற பார்வையிலே வளர்ப்பு முறைகளை முன்னெடுத்தல் காலத்தின் கட்டாயமாக உள்ளது.

திருமணக் கட்டமைப்பில் 'சீதனம்' 'சீர்வரிசை' என்கின்ற பேசு பொரு ளானது பால்நிலை வன்முறையில் கூடிய வகிபாகம் பெறுகின்றது. 'சீதனம்' என்ற நோக்கில் பெண்கள் மட்டும் பாதிக்கப்படு வதில்லை. மாறாக தந்தை, தனயன் என்ற ஆண் உறவுகளும் பாதிப்பிற்கு உள்ளா கின்றனர். பால்நிலை வன்முறையில் சீதனம் பற்றிய விடயங்கள் கட்டுரையின் விரிவஞ்சி சுருங்கிய நிலையிலேயே நோக்கப்பட்டுள்ளது.

சந்தர்ப்பவசத்தால் தத்தமது வகி பாகத்தினின்றும் பிறழ்ந்து ஆண் பெண் களுக்குரிய கடமைகளையும், பெண் ஆண் களுக்குரிய கடமைகளையும் செய்கின்ற போது சமூகம் அத்தகையோரை முறையே பெண் தன்மை உடையவன் என ஆண் களையும், ஆண் தன்மை உடையவள் எனப்பெண்களையும் முத்திரை குத்திப் பழித்துரைக்கின்றது. பெண்கள் தமது கணவனின் போதைப்பொருட் பாவனை யால் உடல் - உளத்தாக்கங்களுக்கு உள்ளா கின்றனர். அத்துடன் கணவன் மற்றும் கணவரது உறவினர்களால் சீர்வரிசைகோரி துன்புறுத்தப்படுகின்றனர். வேலை செய்யும் இடங்கள், பொது இடங்களில் பாலியல் இம்சைக்கு பெண்கள் உட் படுத்தப்படுகின்றனர். பெண்களைப் போன்றே ஆண்களும் அரசியல் வன்முறை கள், பணம், பெண், சொத்துப்போன்ற தேவைகளுக்காக பாரிய பிரச்சினை களுக்கு முகம்கொடுக்கின்றனர்.

முதுமைப்பருவத்தினர் இன்றைய சமூகத்தில் கூடியளவில் ஆதரிப்பார் இன்றி வீடுகளிலும் வீதிகளிலும் நிர்க்கதியாகின் றனர். இயற்கை அனர்த்தங்கள், நாட்டில் நிலவிய யுத்தச் சூழ்நிலைகளினால் அங்கவீனர்கள், மனநிலை பாதிப்புற்றோர், தங்கி வாழ்வோர் முதலிய பிரிவினர் சமூகத்தில் அதிகரித்துள்ளனர். இவர்களின் பராமரிப்பில் பால்நிலை பேதம் செல் வாக்குச் செலுத்தி நிற்கின்றது.

நல்லூர் பிரதேசத்தைப் பொறுத்த வரை பால்நிலைசார் வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்கள் மிகையாகக் காணப் படுகின்றனர். யாழ் மவாட்டத்தில் பிரதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலர் பிரிவினடிப்படையில் நோக்கும் போது பால்நிலை வன்முறைகள் முறைப் பாட்டில் நல்லூர் பிரதேசம் முதலிடம் பெறுகின் றமை குறிப்பிடத்தக்கது. இந் நிலையில் முறைப்பாடு செய்யப்படாத எத்தனை பால்நிலைசார் வன்முறைகள் இங்கு நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக் கின்றன என்ற விடயத்தில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

ஆண், பெண் பேதங்காட்டலும், அதனோடிணைந்த வன்முறைகளும் இறுதி யில் குடும்ப உறுப்பினர்களை இழத்தல், காவல்துறை மற்றும் நீதி மன்றத்தினால் மேற்கொள்ளப்படும் குற்றவியல் தண்ட னைகளுக்கு ஆளாகுதல் என்ற நிலைகளை ஏற்படுத்துகின்றது. இந்நிலைகள் வன்முறை யுடன் கூடிய நடத்தைத் தீவிரம், சுயமதிப் பிழத்தல் போன்ற எதிர்மறையான விளைவு களை ஏற்படுத்துகின்றன. இவ்விடத்தில் சமூகக் கட்டமைப்பு அங்கத்தவர்கள் அனைவரும் பாரிய உடல் உளச்சிக்கல் களுக்கு உட்படுகின்றனர். இதனால் சமூக ஊடாட்ட ஆரோக்கியம் பாதிக்கப்படு கின்றது.

மேற்கூறப்பட்டவாறான அனைத் துச் செயற்பாடுகளுக்கும், அவற்றின் விளைவுகளுக்கும் உண்மையில் பொறுப் பாளிகளாக நாம் எவரையும் தனித்த நிலையில் சுட்டிக்காட்ட முடியாது. சமூக அசைவியக்கத்திற்கு உயிரோட்டம் தருகின்ற; சிந்தித்துச் செயல் படைக்கும் திறனை பகுத்தறிவைக் கொண்டுள்ள மனித ஜீவராசிகளாகிய நாம் ஒவ்வொரு வரும் பால்நிலை முரண்பாடுகளுக்கு அறிந்தோ அறியாமலோ களம் அமைத்துக் கொண்டிருக்கின்றோம். ஒவ்வொரு தனி நபரும் அடுத்தவர் மீது பேதங் காட்டலை கட்டவிழ்த்து விடாதபடி தன்னை சுயபரி சோதனையும் சுயமதிப்பீடும் செய்து கொள்ளவேண்டும். தனி மனித சுயம்சார் சாதக வளர்ச்சி சமூகத்தின் சுயமான வளர்ச்சிக்கு ஊட்டமளித்து நிற்கும் என்பது வெளிப்படை.

பால்நிலை பேதங்காட்டலை வளரவிடாது தடுப்பதற்கு விழிப்புணர் வினை ஏற்படுத்தல், குடும்ப-சமூக ஆதரவினை ஏற்படுத்தல், பொருளாதார ரீதியாக வலுப்படுத்தல், உளவளத்துணை சேவை, தொழிற்பயிற்சி, தலைமைத்துவப் பயிற்சிகள் மருத்துவ - சட்ட உதவிகள், சிறிய கடனதவித் திட்டங்கள், இனப் பெருக்க சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தல், தரவுகள் - ஆய்வுகளைப் பேணல், தகுந்த சட்டங்கள், தண்டனைகளை நடைமுறைப்படுத்தல், ஊடகங்களில் வன்முறை தொடர்பான காட்சி களைத் தவிர்த்தல், மூடநம்பிக்கை களை அகற்றல், மது அடிமைத்தனத்தினை ஒழிக்க நடவடிக்கை எடுத்தல், உரிய நிறுவனங்களுக்கு வழிப்படுத்தல், பாது காப்பான சூழலை உருவாக்கல், குழந்தை கள் காப்பக வசதிகளை உருவாக்கல் போன்ற செயற்பாடுகளை சகல மட்டங் களிலும் ஏற்படுத்த வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் பால் நிலைசார் வன்முறைகளைக் குறைப்ப தற்கும் இல்லாதொழிப்பதற்கும் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் எத்தனையோ அனுசரணைகள் வழங்கிக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலகம் சார் கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் போன்றோர் பால்நிலைசார் வன்முறைகளால் பாதிக்கப் பட்டவர்களுக்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் காணப்படுகின்ற பால் நிலைசார் வன்முறைகளுக்கு எதிரான செயற்பாட்டு மையம் (G.B.V Desk, அறை இல. 32) தேவைநாடும் மகளிர் அமைப்பு, பெண்கள் அபிவிருத்தி மையம், உளவியல் சேவைக்கான சாந்திகம், அகவொளி சுகவாழ்வு சட்டசேவைக்கான மனித உரிமை ஆணைக்குழு, சட்ட உதவி மன்றம், மனித உரிமைகள் இல்லம் ஆகியனவும் இத்தகைய சேவைகளை வழங்கி வருகின்றன.

இவைமட்டுமன்றி அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், யாழ் சமூக செயற்பாட்டு மையம், அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம், டனிஷ் அகதிகள் சபை (DRC) ஆகிய அரசசார்பற்ற நிறுவனங்களும் பெண்கள் சிறுவர்களுக் கான தற்காலிக பாதுகாப்பு நம்பிக்கை இல்லம் மற்றும் பொலிஸ் நிலையங்கள் ஆகியனவும் இவ்வாறான சேவைகளை முன்னெடுத்து வருகின்றன.

இந்தவகையிலே தொகுத்து நோக்குமிடத்து; எதுவிதபேதமும் அற்ற சிறந்த சமுதாயம் அமைவதற்கு தனிநபர் அவர்சார்ந்த குடும்பம், சமுதாயம் என்ற அடிப்படையில் மனிதவிழுமியங்களைக் கைக்கொண்டு வாடித்தலைப்பட வேண்டும். குழந்தைகளுக்கு அன்புகாட்டி, அரவ ணைத்து நற்பக்கங்களைப் போதித்து நல்லமுறையில் ஆற்றுப்படுத்த வேண்டும். நாம் வாழும் சமுதாயத்தில் காணப்படு கின்ற வன்முறைகளைக் களைவதற்கு அனைத்து நிலையினரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும். ஆண் - பெண் என்ற பால்நிலைப் பாகுபாடற்ற ஆரோக்கிய சமூகம் மலர அனைவரும் அணிதிரள வேண்டும். இவ்வாறு அணிதிரள் வோமானால் எமதுவாழ்வு வளம் பெறும்; சமுதாயம் சீர் பெறும்; நாடு நலம் பெறும் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் தலைமைத்துவம் - ஒரு பார்வை

**திருமதி இராகினி இராமலிங்கம்**
கிராம உத்தியோகத்தர் – தரம் I
நல்லூர் தெற்கு, J/108

'குடும்பம்' என்ற கட்டமைப் பானது கணவன், மனைவி, பிள்ளைகள் முதலிய பாத்திரங்களின் சேர்வையால் உருவாக்கப்படுவது. குடும்பத்தின் ஒவ்வொரு பாத்திரத்தின் இயங்கு நிலையும் ஆரோக்கியமாகத் திகழும்போது சமூகம் பண்பட்டதாகத் திகழும். சமூகம் பண்பட்டால் நாடு-தேசம் என்ற வியாபகங் கள் முன்னேற்றமடையும். இந்தவகையிலே "பெண் தலைமைத்து வம்" தொடர்பாக நோக்குவதாக இக் கட்டுரைச் செல்நெறி அமைந்துள்ளது. அத்துடன் பண்பாடு எனப்படும் ஊடு நூலும்; குடும்ப-சமூக ஆரோக்கியம் எனப்படும் பாவு நூலும் கொண்டு நெய்யப் பட்ட பெண் தலைமைத்துவ நோக்குத் தன்மை இக்கட்டுரையில் விரவியுள்ளமை யும் இங்கு குறிப்பிடத்தக்க தாகும்.

இன்றைய காலகட்டத்தில் பெண் களின் தலைமைத்துவமானது முக்கிய மானதாகக் காணப்படுகின்றது. புராண இதிஹாச காலம் தொடக்கம் இன்றைய நவீனயுகம் வரை பெண்களின் தலைமைத் துவ பங்களிப்பு முக்கியத்துவம் பெற்ற தாகவே இருந்துள்ளது. இதனை,

**"ஆவதும்/ஆழ்வதும் பெண்ணால்**
**அழிவதும் பெண்ணால்"**

என்ற முதுமொழி அழுத்தி நிற்கின்றது. குடும்பத்தில் பெண் என்ற பாத்திரம் பெறும் முக்கியத்துவம் பற்றி ஔவையார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். அதாவது

**"ஆறில்லா ஊருக்கு அழகுபாழ்**
**நீறில்லா நெற்றிபாழ்.... பாழே**
**மடக்கொடி இல்லா மனை"**

என்கிறார். ஒன்றில்லாவிட்டால் ஒன்று பாழ்; ஆனால் பெண் இல்லா விட்டால் அனைத்து நிலைகளும் பாழாகவே திகழும் என்பதை அன்றே இயம்பிவிட்டார்.

காலம் என்பது கறங்கு போன்றது. மேலது கீழாய், கீழது மேலாய் சுழன்றடிப்பது. சமூகக்கட்டமைப்புக் களும் சுற்றிச் சுழன்றடிக்கும் நவீனத்துவ பாய்ச் சலில் நலிந்தும், நெகிழ்ந்தும், மறைந்தும், அருகியும் வந்துகொண்டிருக் கின்றன. இந்நிலையில் பாரம்பரியம் பண்பாடு என்று கட்டிக்காத்த குடும்பக் கட்டமைப்பு ஆட்டம் காண்பது தவிர்க்க முடியாத ஒன்றாகக் காணப்படுகின்றது.

இன்று குடும்பப்பாத்திரங்களின் ஒன்றுபட்ட வகிபாகத்தில் பிளவுகள், முரண்பாடுகள், புரிந்துணர்வின்மை, விட்டுக் கொடுக்காமை, ஏற்றத்தாழ்வுகள், தேவைகள், தேடல்கள், நவீனமயப்பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்வாங்கல்கள் முதலியன முனைப்புப் பெற்ற விடயங்களாகத் தம்மை இனங் காட்டி நிற்கின்றன. இந்நிலைகளில் இருந்து தேறுவதற்கு சீரிய பெண் தலை மைத்துவமானது இன்று சமூகத்திற்கு அத்தி யாவசியமானதாகவும், அவசியமானதாக வும் மேற்கிளம்புகின்றது.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை யால் குடும்பத்தலைவனை இழந்த; "பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்" அதிகரித்துள்ளன. இப்பெண்களுக்குரிய தலைமைத்துவ மானது இரட்டைத்தன்மை உடையதாகக் காணப்படுகின்றது. அதா வது பொருளாதாரத் தேடல், குடும்பப் பராமரிப்பு ஆகிய இரு பொறுப்புக்களும் கணவனை இழந்த பெண்களுக்கு சுமையா கின்றன.

மேற்குறிப்பிட்டகால சமூகக் கட்டமைப்பிலே பெண்தலைமைத்துவம் பிரதான பேசுபொருளாக இன்று பரிணமி த்துள்ளது. ‘பெண் தலைமைத்துவம்’ என்பது ஆண்களைத் தூக்கி எறிந்து; எங்களால் எல்லாம் முடியும் என்ற தான் தோன்றித் தனம்மிக்க சமத்துவம் பேசும் தலைமைத்துவமாக உருவகிப்பது தவறான விடயமாகும். இவ்வாறான பெண் தலை மைத்துவ செல்நெறி பண்பற்ற ஆரோக்கிய மற்ற சமூகத்தையே தோற்றுவிக்கும். பண்பாடு கலந்த பெண்தலைமைத்துவம் சிரஞ்சீவியாக நின்று நிலைக்கும்.

பெண் தலைமைத்துவமானது குடும்பம் என்ற நிலையில் மட்டும் நிற் காது; சமூக மட்ட நிறுவனங்கள், வேலைத் தளம், பொதுநலச் செயற்பாடுகள் முதலிய இடங்களிலும் செயற்படுத்தப்படு கின்றது. சில பெண்கள் குடும்பம் என்ற வட்டத் தினைவிட்டு வெளியே வருவதற்கு தயக்கம் காட்டுகின்றார்கள். சில பெண்கள் வெளி யில் மட்டும் தலைமைத்துவம் ஏற்றுக் கொண்டு குடும்ப வாழ்வை சிதறடிக்கின் றார்கள். குடும்பத்தின் உள்ளேயும் வெளி யேயும் சிறந்த தலைமைத்துவ முகாமையை ஏற்கின்ற பெண்ணே சிறப்பிற் குரியவள் ஆகின்றாள்.

சமூகமட்டத்தில் பெண் தலை மைத்துவம் பற்றிநோக்குமுன், பெண்கள் அனைவரையும் ஒரே மட்டத்தில் வைத்து நோக்காது, பொருளாதார - நாகரீக அடிப்படையில் நோக்க வேண்டும். அடி மட்டம், மேல் மட்டம், இடைநிலை மட்டம் என்ற பகுப்பில் பெண்தலைமைத் துவத்தினை சிந்திப்பது சாலவும் பொருந் தும். எடுத்துக்காட்டாக; மேல்மட்டத்தில் உள்ள பெண்களின் தற்துணிவுத் தன் மையை மட்டும் எடுகோளாக வைத்துக் கொண்டு,

"இன்றைய காலகட்டத்தில் அனைத்துப் பெண்களும் தற்துணிவுடன் தீர்மானம் எடுக்கும் தன்மை படைத்த வர்கள்"

என்ற வாதத்தினை முன்வைக்க முடியாது.

பண்டைய காலத்திலே இனக் குழும வாழ்க்கை முறையில் வாழ்ந்த மனிதன் காலம் செல்லச் செல்ல பொருளா தார இருப்பை முன்னிலைப்படுத்தி; பெண்ணை ஓரிடத்தில் இருத்தி விட்டு ஆண் பொருள் தேடலில் ஈடுபட்டுள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண் தேடிவரும் பொருளைப் பேணுதல், பிள்ளைகளின் நலன் முதலிய செயற்பாடுகள் பெண்ணிடத்தில் கையளிக்கப்பட்டிருந்தன. உலகம் வேகமாக மாறிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் நவீன மாற்றங்களை உள்வாங்கி, நவீன சமுதாய நீரோட்டத்திற்கு ஏற்ப தம்மைப் பொருத்திக் கொள்பவர்களாக முயல்ப வர்களாக இன்றைய சமுதாயப் பெண்கள் காணப்படுகின்றனர்.

ஔவையார் தொடக்கம் இன்று வரை தமிழ்ப்பெண்கள் தமது இருப்பு, நவீன மரபுமாற்றம் உள்வாங்கல்கள், அரசியல் செயற்பாடுகள். அவை பெண்கள் மீது செலுத்தப்படும் தாக்கம். மரபு ரீதியான கலாசாரக் கட்டுக்கள், காலங் காலமாகக் கூறப்பட்டு வந்த பெண்மை பற்றிய வர்ணிப்புக்கள், பொருளாதாரப் பேணுகைகள் தொடர்பாக தங்களது கருத்துக்களை சமுதாய மட்டத்திலே பல் வேறு விதமாகவும் பலவேறு தளங்களிலே பகிர்ந்து கொண்டுள்ளனர் கொண்டிருக் கின்றனர்.

எடுத்துக்காட்டாக பெண்ணியக் கவிஞர் அ. சிவசங்கரியின் "சொல்லாத சேதிகள்" கவித்தொகுப்பினைக் குறிப் பிடலாம்.

"எனக்கு முகம் இல்லை............
.... அவர்களின் பார்வையிலே
சமையல் செய்தல், படுக்கை விரித்தல்
குழந்தை பெறுதல், பணிந்து நடத்தல்... என்பதாகும்.

இன்றைய காலகட்டத்திலே ஆணாதிக்கம், பெண்ணாதிக்கம், பாலியல் வன்முறைகள், அடக்கு முறைகள் தொடர்பான கூக்குரல்கள் ஓங்கி ஒலிக்கி ன்றன. இவ்வொலிப்பின் எதிரொலியாகப் பெண்ணியவாதிகள், பெண்ணிய அமைப்புக்கள், பெண்கள் வலுவூட்டல் அமைச்சு உத்தியோகத்தர்கள் மற்றும் மகளிர் தினம் என்ற கட்டமைப்புக்கள் தோற்றம் பெற்றுள்ளன.

பெண் அடக்குமுறை என்பது ஆண்களினால் மட்டும் மேற்கொள்ளப் படும் ஒரு செயற்பாடு அன்று என்பதை தெளிவாக விளங்கிக் கொள்ளவேண்டும். எந்தவொரு சிக்கலையும் தீர்ப்பதற்கு அச்சிக்கலின் மூலவேர்ப்பிரச்சினையை பகுப்பாய்வு செய்து தீர்வுபெற்றுக் கொள்ளலாம். பெண் தலைமைத்துவம் தொடர்பில் மேற்குறிப்பிட்ட பகுப்பாய்வு பிரயோகித்தல் சாலப்பொருந்தும். திருமணத்தின் முன் அல்லது திருமணத்தின் பின் ஏற்படும் தவறான உறவுகள், ஆண் பெண்ணைக் கைவிடல், ஏமாற்றுதல் முதலான வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. இவ்வன்முறைகள் ஆண் - பெண் இருபாலராலும் மேற்கொள்ளப் படுகின்றது. எனினும் முற்றுமுழுதான பாதிப்புக்கு உள்ளாவது பெண் மட்டுமே. இந்நிலைக்கு பெண்ணின் உடலியற் கூற்றுத் தன்மையும் காரணியாக அமைந்து விடுகின்றது.

இவ்விடத்தில் மேற்குறிப்பிட்ட பாதிக்கப்பட்ட பெண் - ஆண் இருவரது வளர்ப்பினையும் மேற்கொண்ட பெண்ணின் (தாயின்) தலைமைத்துவமே குற்றத் திற்கு உள்ளாகின்றது.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணிற்பிறக்கையிலே-பின்நல்லவராவதும்
தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே"
என்றான் ஒரு கவிஞன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குதான் "பெண் தலைமைத்து வத்தின்" அடிநாதம் மீட்டப்படுகின்றது. குடும்பத்தில் பெண் தலைமைத்துவம் சிறப்புடன் இருந்தால் பிள்ளை வளர்ப்பு சீராகும். சீரான வளர்ப்புடைய பிள்ளைகள் சமூகத்திலே நற்பிரஜைகளாகத் திகழ்வர் என்பது வெளிப்படை.

தற்காலத்தில் குடும்பக் கட்டமை ப்புக்கள் மாற்றமடைந்துள்ளன. கூட்டுக் குடும்ப வாழ்வு அருகிவிட்டது. பெருகி வரும் செலவீனங்களுக்கு ஈடு கொடுப்பதற் காக பெண் கல்வி, பெண் தொழிலாளர்கள் அதிகரித்துள்ளனர். வாழ்க்கை பரபரப் பாகிவிட்ட நிலையில் அமைதி, ஆன்மீகம், பொறுமை, தியாகம், அன்பு முதலான பண்புகள் நிறம்மாறி வெளிறிக்கொண்டே செல்கின்றன.

பெற்றோர் எனப்படும் ஆண் - பெண் இருவரும் தமது சுயத்தில் பொறுப்பு டன் கருமமாற்றுவதால்; பிள்ளைகள் என்ற ஆண் - பெண் இருபாலரும் நிர்க்கதி நிலையை அடைகின்றனர். அதாவது தொழில் செய்யும் பெற்றோர் கூடியளவில் தமது வேலைகள், பதவி உயர்வுகளில் கூடியளவில் கருத் தூண்றுவதால் பிள்ளை வளர்ப்பு முறைமை பிறழ்கின்றது. இத்தகைய பிறழ்வுகள் நாகரீகம் என்ற போர்வையில் சமுதாய சீர்கேடுகளைப் பிரசவிக்கின்றது. இதில் பெண்களின் பாதிப்பு நிலைகள் நிவாரணம் தேடும் படலமாகப் பரிணமிக்கின்றது. பெண் அடக்கு முறை என்ற ஓலம் ஓங்குகின்றது.

குடும்பக்கட்டமைப்பில் தொடங் கும் சீரிய பெண் தலைமைத்துவமானது ஆரோக்கியமானதாகத் தன்னை அத்தி பாரப்படுத்த வேண்டும். இதன் தொடர்ச்சி யிலே சமூகத்திலும் பெண் தலைமைத் துவம் மதிப்பார்ந்த நிலையைப் பெறும். பெண்ணிய வாதிகள் சிறந்த பெண்தலை மைத்துவ உருவாக்கத்திற்காக உழைக்கின் றனர். ஆனால் வெறுமனே குடும்பத்தில் நிம்மதி இன்மை, குடும்ப வாழ்வின் வெறுப்பு - தாக்கம், நாகரீக மோகம் இவற்றின் உந்துதலால் பெண்ணிய வாதியானோர், ஆணாதிக்க எதிர்ப்புணர்வு வெறியுடன் பெண்ணியம் பேசுவது பொருத்தமற்ற விடயமாகும்.

குடும்பத்தில் ஏற்படும் சுழல்தாக்க மானது சமூகத்தில் செயற்படும்போது பிரதிபலிப்பது தவிர்க்க முடியாததாக உருப்பெற்றுவிட்டது. இதற்கு தற்காலப் புதுமை மிகு பண்பாட்டுப் பெருவட்டத் தின் தாக்கமும் ஒரு ஊக்கியாகக் கொள்ள லாம்.

ஆணினால் மட்டும் பெண் அடக்கப்படுவதில்லை. பெண்ணினாலும் பெண் அடக்கப்படும் சந்தர்ப்பங்களும் எமது வாழ்வியலில் அதிகமாக உள்ளது. இதற்கு பெண்களின் தலைமைத்துவப் பண்பின் பலவீனமான செயற்பாடே காரணம் எனலாம்.

குடும்பத்தை செவ்வனே திட்ட மிட்டு கருமமாற்றும் பெண்ணால் சமுதாயத்தையும், நாட்டையும் வளமாகத் திட்டமிட்டு வழிநடத்த முடியும். பெண்கள் குடும்பச்சுமைகளைக் காரணம் கூறி சமூகப்பணிகளைப் புறக்கணிக்காது செயற்படுதல் வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பழையன கழிதலும் புதியன புகுதலும் காலவழுவில" எனினும் புதியன புகும்போது பண்பாட்டு விழுமியங்களில் இருந்து பிறழ்வுபடாது செயற்படுதல் சிறப்பாக அமையும். பெண்ணைப் பெண்ணாகவும், ஆணை ஆணாகவும் பண்படுத்தும்போது வன்முறைகள் பாரியளவில் தடுக்கப்படும்.

'இம்' என்னும் முன்னம் எழுநூறும் எண்ணூறும் 'அம்' என்றால் ஆயிரமும் பேசும் பெண்களைப் புதுமைப் பெண் களாக ஆரோக்கிய சமூகம் ஏற்காது. அவர் களைப் போகப் பொருட்களாகவே கை யாளும்.

சிவமும் - சக்தியும் உலக இயக்கத் திற்கு சமத்துவமானவர்களாகவே சிருஷ்டி க்கப்பட்டுள்ளனர். ஆண் - பெண் குடும்ப தலைமைத்துவ நிலையும் இத்தகையதே. பண்பாட்டுடன் கூடிய பெண் தலைமைத் துவம் நிலையான ஆயுட்பேறு பெறும் என்பது நிதர்சனம்.



பறவைகள் தங்குவதற்காக ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட புறாக்கூடு
[நெடுந்தீவு]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதகுலநெருக்கடியும் முதலாளித்துவ அமைப்பும்

**இ. தவரட்ணம்**
கிராம உத்தியோகத்தர்,
வண். வடமேற்கு J/99

மனிதகுலம் இன்று எதிர் நோக்கும் அனைத்து பிரச்சினைகளும் முதலாளித் துவ அமைப்பின் விளைபொருளாகும். மனிதனின் தேவைகள் பொருளாதார முறைமையில் இருந்து உற்பத்தியாகின்றன. இந்தவகையில் மனித சிந்தனை என்பதும் புறநிலை யின் வெளிப்பாடாகும். புறநிலை என்பது மனிதன் வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளும் அறிவாகும். புறநிலை முரண் பட்ட அமைப்பாக இருக்கும்வரை மனித னுடைய சிந்தனையும் முரண்பட்ட அமைப்பாகவே இருக்கும்.

இந்த வகையில் மனிதனின் நடத் தை என்பது புறத்தின் விளைவாகும். புற நிலை அமைப்பு பொருள் உற்பத்தி நுகர்வு எந்த வகையைக் கொண்டன என்பதை வைத்தே அந்த அமைப்பின் இயக்கம் எப்படிப்பட்டது என வரையறுக்கப்படு கிறது. இந்த வகையில் இன்றைய பொரு ளுற்பத்தியும் நுர்வும் இலாப நோக்கம் கொண்ட குறிப்பிட்ட ஒரு சிறிய வர்க்கம் பெரும்திரளாக மக்களின் உழைப்பை தனது நலனுக்கு கீழ்ப்படியக் கூடிய வகையில் சுறண்டல் செய்வதன் மூலம் இலாபம் சம்பாதிக்கும் அமைப்பாகும். இந்த வகையான இலாப அமைப்பே இன்று நடைமுறையில் காணப்படு கின்றது. இந்த அமைப்பானது தனது இலாப நோக்கங்களை நிலை நிறுத்து வதற்கு அதற்கு ஒரு சட்டம் அமைத்து அதனைப் பாதுகாப்பதற்கு ஒரு அரசு அவசியமானதாகும் இந்த வகையில் இன் றைய சட்டங்களும் கொள்கைகளும் இலாப நோக்கம் கொண்ட வர்க்க நலன் நாள் பேணும் ஒரு சாரருக்கு சாதக மானவையாக இதனை பாதுகாக்கவே பொலிசும் படைகளும் கொண்ட அரசு அவசியமான தாகும். இந்த அரசுகளுக்கு பின்னால் இந்த வர்க்க அமைப்பே செயற்படுகின்றது. இதனால் தான் அரசு வர்க்கத்தின் கருவி என மார்கஸ் குறிப் பிட்டார்.

இந்த வர்க்க நலன் கொண்ட அரசு முதலாளித்துவப் பொருளாதார அமை ப்பை பாதுகாக்கவே செயற்படும். அது ஜனநாயகம் என்ற போர்வையில் தொழி லாளவர்க்கத்தின் கூலியுழைப்பை சுறண்ட வும் அதன் மூலம் பெரும் மூலதனச் சொந்தக்காரருக்கு ஏற்ப செயற்திட்டங் களை வகுத்து நடைமுறைப்படுத்தவுமே பாராளுமன்றம் மற்றும் அரசியல் அமை ப்பை கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அரசின் கொள்கைகளே உற்பத்தி நடத்தையை தீர்மானிக்கின்றன என்ன உற்பத்தியை செய்தல் எவ்வாறு உற்பத்தி செய்தல் எவ்வாறு விநியோகித்தல் என்ற திட்டங்களைச் செயற்படுத்து கின்றன. இது இலாபநோக்கம் கொண்டமையினால் தனது மூலதனத்துக்கு கூலியுழைப்பை பெற்றுக் கொண்டு உற்பத்தி நடத்தையில் ஈடுபடும் போது உற்பத்தி செய்யப்படும் பொருள் தொழிலாளியின் உழைப்பின் விளை பொருளாகும். ஆனால் அப்பொருளின் விற்பனைப் பெறுமதிக்கும் உற்பத்திப் பெறுமதிக்கும் இடையே உள்ள வித்தியாசம் இலாபம் என்ற வகையில் தொழிலாளியின் உழைப்பே சுறண்டப்படுகின்றது. இந்த இலாபம் திரட்சி பெறப்பெற பெரும் மூலதனமாக வடிவெடுத்து மேலும் மேலும் தொழிலாழியை இச் சுறண்டல் வட்டத்துக்குள் இழுக்கின்றன. இந்த முறையே முதலாழித்துவ உற்பத்தி முறையாகும்.

இதனால் எவ்வளவு வேலை வழங்கவேண்டும் எங்கு வேலை வழங்க வேண்டும் என்ற தீர்மானம் இந்த மூலதனச் சொந்தக் காரரால் மட்டுமே தீர்மானிக்கப் படும். ஆனால் பெரும் திரளான மக்களின் நலனை இம்மூலதனச் சொந்தக்காரர்கள் தீர்மானிக்கமாட்டார்கள். இவர்கள் இலாபம் பெறுவதே ஒருநோக்கம். இதனால்தான் இன்றைய முதலாளித்துவம் நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி தொழிலாளிகளின் எண்ணிக்கையை குறைக்க முயற்சிக்கின்றன அல்லது மலிந்த கூலி பெறக்கூடிய நாடுகளை நோக்கி முதலீடுகள் செய்யும் நோக்கில் மூலதனம் நாட்டை விட்டு நாடு கடந்து செல்கின் றன. இந்த நிகழ்வுதான் அமெரிக்கா போன்ற நாடுகளின் மூலதனச் சொந்தக்காரர்கள் சீனா போன்ற கீழ்திசை நாடுகளின் மலிந்த கூலியைப் பெறும் நோக்கில் முதலீடுகளைச் செய்கின்றனர். இவ்வாறு இவர்கள் நவீன தொழில் நுட்பத்தையும் மலிந்த கூலி உழைப்பையும் பெற்று உற்பத்தி செய்யப்படும் பொருட்களைக் கூட விற்பனை செய்ய நுகர்வோரையும் தேடிப் பிடிக்க வேண்டியுள்ளது. இதுவே இன்று சந்தையை நோக்கி முதலீட்டாளர்கள் செல்ல வேண்டியுள்ளது. இந்த முறையே நாடுகளுக்கு இடையேயான போட்டிகளை உருவாக்கு கின்றன. இந்தப் போட்டியே உலக அரசுகளுக்கு இடையே பகைமையையும் போரையும் கொண்டு வருகின்றன. இதில் வலிமை பொருந்திய நாடு தனக்கு சாதகமாக சட்டங்களையும் கொள்கை களையும் ஒவ்வொரு நாடும் உருவாக்க வேண்டும் என எண்ணுகின்றன. அதற்கு ஏற்ற அழுத்தங்களையும் நிபந் தனை களையும் விதிக்கின்றன. இந்த வகை யில் உடன்படாத நாடுகளுக்கு மேல் போர் தொடுக்க வலிமையான நாடு பின் நிற்ப தில்லை. இதனையே இன்று அமெரிக்கா உலகம் முழுவதும் மேற்கொள்வதனைக் காணலாம்.

எனவே அமெரிக்கா என்பது முதலாளித்துவம் தனது நாட்டுக்குள் வரையறுக்கப்படாத வளர்ச்சிகண்ட ஒரு ஏகாதிபத்தியம் எனப்படும். அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளித்துவ உற்பத்திமுறையானது ஆரம்பத்தில் ஒவ்வொரு நாட்டுக்குள் ளும் உள்ள உற்பத்தி செயற்பாடுகள் மூலம் அந்த நாட்டுத் தொழிலாளர்களையே சுறண்டியது. இது காலப் போக்கில் இலாபம் பெருகப் பெருக மூலதனத்தை திரட்டி அந்த மூலதனத்தை மீண்டும் முதலீட்டாக்கி அந்த தொழிலாளர்களை மட்டும் அல்லாமல் அயல்நாட்டுத் தொழிலாளர்களையும் சுறண்டும் நோக்கில் மூலதனம் பாய்ச்சல் நடவடிக்கை அகலத் தொடங்கவே உற்பத்தியானது. இன்று பூ கோளமயமாக்கப்பட்டு பூமி முழுதும் உற்பத்தி நுகர்வு செயற்பாட்டை தீர்மானிக்கும் சக்தியாக ஏகாதிபத்திய மூலதனச் சொந்தக்காரரின் கையில் சென்றது.

இந்த விளைவே பண்டைய கிராமிய பொருளாதாரம் சுயசார்புப் பொருளாதாரம் வீட்டுக்கைத்தொழில் போன்ற சிறு பண்ட உற்பத்திமுறையை பெருமூலதன உற்பத்தி முறை விழுங்கிய தாயிற்று இந்த வகையில் தான் இன்று எந்த ஒரு நாடும் தனது உற்பத்தியை தீர்மானிப் பதோ அல்லது சந்தைப்படுத்த சந்தையை தனது கட்டுக்குள் வைத்து இருக்கவோ முடியாதுள்ளது.

இந்த வகையில்தான் தேசிய பொருளாதாரம் முடிவுக்கு வந்தன தேசிய பொருளாதாரம் பூகோள பொருளாதார நிலைக்கு இன்று மாறியதால் தேசிய அரசுகளும் தனது சுய ஆதிபத்தியத்தை இழந்தன இந்த வகையில் தேசிய அரசு முறையானது இன்று பெயரளவு அரசுகளே ஆகும். இந்த அரசுகள் ஏகாதிபத்திய அரசுகளின் தேவைகளுக்கு அதாவது இலாப நோக்கம் கொண்ட ஏகாதிபத்திய மூலதனச் சொந்தக்காரர்களுக்கு எதிராக செயற்பட முடியாது. அவ்வாறு செயற் படாமல் தடுக்கவே அவை ஏகாதிபத்திய அரசுகளைப் பயன்படுத்துகின்றன. இந்த ஏகாதிபத்திய அரசு என்பது இந்த பெருமூலதனச் சொந்தக்காரர்களின் பிரதி நிதிகள் இவர்கள் சுதந்திரமான அரசகள் அல்ல அப்படியான அரசுகளாக இயங்க வும் முடியாது. சமூகம் வர்க்கங்களாக உள்ளமையால் ஏதோ ஒரு வர்க்கத்தின் பக்க முடைய அரசுகளாகவே இவை அமைய முடியும். இந்த வகையில் இன்றைய எல்லா அரசுகளும் முதலாளித் துவ அரசுகளாகும்.

இவை மூலதனச் சொந்தக்காரர் களுக்கு கூலிக்கு தொழிலாளர்களைக் கீழ்ப் படியச் செய்யக்கூடிய பொருளாதார அரசி யல் ஒழுங்கை ஏற்படுத்தி நிலை நிறுத்தி பாதுகாக்க வென சட்டங்களையும் கட்டுப் பாடுகளையும் வகுத்து செயற்படுத்தும் கருவியாகும்.

இதனால்தான் இந்த அமைப்பில் தொழிலாளர்வர்க்கம் சுயாதீனமாக செயற் பட முடியாது. இந்த அமைப்பின் சுரண்ட லால் வறுமை நோய் யுத்தம் என்பன விளைபொருளாக நாளாந்தம் பெருக் கெடுக்கும் இதனைத் தீர்க்க இந்த அமைப்பு முழுமையான பங்குபணி ஆற் றாது ஏனெனில் அதன் இலாபநோக்க கொள்கையே இவ்வாறான பிரச்சினை களின் தோற்றுவாயாக காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே ஒட்டுமொத்தமாக முதலாளித்துவ அமைப்பு முரண்பட்ட அமைப்பாகும். இந்த முரண்பட்ட அமைப்பில் இரண்டு பிரதான சக்திகள் செயற்படுகின்றன. இரசாயனவியலில் நேர் ஏற்றமும் எதிர் ஏற்றமும் போல் கணிதவியலில் மைனஸ்பிளஸ் என இரு முரண்பாடு போல் இங்கு மூலதனமும் கூலியுழைப்பும் இரண்டு முரண்பட்ட சக்திகளாகும். இது ஒருபோதும் சமமாக இருக்க முடியாது. லாபம் கூடினால் கூலி குறைய வேணும். கூலி கூடினால் இலாபம் குறைய வேணும். இந்த இரண்டும் அற்ற மூன்றாவது பாதை இங்கு இல்லை எனவே முதலாளித்துவ அமைப்பு முரண்பட்ட அமைப்பாகும். இதுவே தன்னுக்குள் முரண்பட்டு முழுமையாக வெடித்து சிதறும் எனவும் அதன்மூலம் புதிய அமைப்புக்கு வழி இந்த அமைப்புக்குள் இருந்து பிறப்பு எடுக்கும் எனவும் மார்க்ஸ் குறிப்பிடுகின்றார். இந்த அமைப்பையேஅவர் சோஷலிச அமைப்பு என்கின்றனர்.

இந்த வகையில் இந்த முதலாளித்துவ அமைப்பின் தவிர்க்க முடியாத மோதலின் விளைவாக புதிய சமூக அமைப்பை நோக்கி நகரும். இதற்கு தொழிலாளர் வர்க்கமே தலைமை சக்தியாக செயற்படவும் வரலாறு பணிக்கும்.

இவ்வாறு முதலாளித்துவ உற்பத்தி முறையே தொழிலாள வர்க்கத்தை தன்னைத் தோற்கடிக்கும் அனைத்துலக சக்தியாக புறத்தே ஒழுங்குபடுத்துகின்ற இன்றைய முதலாளித்துவம் தனது மூலதனப் பெருக்கத்தால் அது நாடு கடந்த நிறுவனங்களின் சொந்தக்காரர்களின் பூகோளமயப்பொருளாதாரமாகி உலகம் முழுவதும் ஒரே பொருளாதார உற்பத்தி நடத்தையை உருவாக்கி வரவர உலக தொழிலாளர்களும் தமது தேசிய சுய நிர்ணயம் பிராந்தியம் பிரிவினை அனைத்தும் இழந்து மூலதனத்தின் கீழ் கூலிக்கு வேலை செய்யும் கூலிக்கு தமது உடல் உழைப்பு மூலதன உழைப்பை விற்கும் ஒரு பண்டமாக மாறியுள்ளனர். பூகோள மூலதனத்தின்கீழ் கட்டுண்டு உழைக்கும் பூகோள கூலியாட்களாக இன்றைய தொழிலாளர்களும் வந்துள்ளனர். எனவே இன்றைய தொழிலாளர்களுக்கு பிரதான எதிரியாக பூகோள மூலதனம் அமைகிறது. இந்த மூலதனம் ஒரு நாட்டிற்குள் வரையறுக்காமல் அனைத்து நாட்டுத் தொழிளார்களையும் சுரண்டும் ஏகாதி பத்திய மூலதனமாகையால் தொழிலாளர் வர்க்கமும் இதன்கீழ் இன்று அனைத்துலக வர்க்கமாக மாறிய நிலையில் ஒரு அனைத்துலக வர்க்கமாகும் இதனைதான் மார்க்ஸ் உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்றார். இந்த வர்க்கமே அடுத்த அமைப்பை படைக்கும் படைப்பாளியாகும். இந்தப் படைப்பாளியை உருவாக்கும் இடமாக முதலாழித்துவ அமைப்பே காணப்படும்.

இவ்வாறு முதலாளித்துவ பொருளாதார அமைப்பானது தொழிலா ளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்கத்தை அனைத்துலகம் முழுதும் சுறண்டவும் லாபம் சேர்க்கவும் எடுக்கும் முயற்சியே அந்த அமைப்பு உலக வழங்களை முதலாளித்துவ இலாப நோக்கங்களுக்கு ஏற்ப பயன்படுத்த மூலப்பொருட்களையும் மலிந்த கூலிஉழைப்பையும் பெறுவதற்கு இன்று ஆக்கிரமிப்பை மேற்கொள்கின்றன.

இந்த ஆக்கிரமிப்பு என்பது முதலாளித்துவ சுறண்டலும் அதன் முரண்பாடும் அதன் எதிர்முரண்பாடான தொழிலாளர்வர்க்கம் அதன் அமைப்புக்குள்ளே பெரும் சக்தியாக வளர்ந்துவரும் நெருக்கடியை தீர்க்கவும் அதனை உடைக்கவும் இறுதியில் தொழிலாளர் வர்க்கங்களை தாய்நாடு தேசியம் என்ற வரலாற்றுக்கு எதிரான கொள்கையில் பிரித்துப் போட்டு அவர்களுக்கு இடையே மோதலை உருவாக்கி இறுதியில் தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலக சக்தியை உடைக்கின்றன. எனினும் இயக்கவியல் போக்கின்படி முதலாளித்துவ முரண்பாடு தொழிலாளர் வர்க்கம் அனைத்துலக வர்க்கமாக ஐக்கியப்படவும் பொது எதிரியான மூலதனத் தாக்குதலை முறியடித்து தொழிலாளர் வர்க்க அரசை நிறுவும் இறுதி இலக்கை நோக்கி நகரும் இது தவிர்க்க முடியாது.

இந்த இலக்கு அனைத்து மக்களுக்கும் உழைப்பவருக்கும் ஏற்ப உலகப் பொருளாதாரத்தை மனிதனின் தேவைக்கு ஏற்ப ஒழுங்குபடுத்த அது தலைமை தாங்கும் இது இயல்பியல் போக்கின்படி வளங்கள் அனைத்தும் பொது உடமைக்கு இட்டுச் செல்லும் புதிய உலக ஒழுங்கின் கட்டமாகும். இதனைத்தான் சோஷலிய உற்பத்திமுறை எனலாம்.




அலங்காரப் பாத்திரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் புகைப்படக்கலை வரலாறு

**செல்வி ம. சுஜாத்தா**
கலாசார நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்,
பிரதேச செயலகம், நல்லூர்.

இலங்கையில் வரலாற்று ரீதியா கவும், கலாசார ரீதியாகவும் அதிகம் சிறப்பு வாய்ந்த பண்பட்ட பிரதேசமாக யாழ்ப் பாணம் விளங்குகின்றது. இலங்கையில் முதன்முதலில் யாழ்ப் பாணத்தில் தான் புகைப்படக்கலை தோன்றி வளர்ந்ததாக அறியமுடிகின்றது. யாழ்ப்பாணம் பாரிய அழிவுகளையும் புலம்பெயர்வுகளையும் எதிர்கொண்ட போது வரலாற்றுச் சான்று களாக இருந்த புகைப்படங்களை பாது காத்துக்கொள்ள முடியவில்லை. நாட்டுப் பிரச்சினை காரணமாக இம் மண்ணில் இருந்து எடுத்துச்செல்லப்பட்ட புகைப் படங்கள் அழிவடைந்ததோடு எஞ்சியவை இலகு விலே பழுதடையக் கூடியனவாக உள்ளன. எனவே சேகரிக்கப்பட்ட புகைப் படங்களைக் கொண்டு யாழ்ப்பாணத்தில் காண்பியக்கலையில் அதிகம் பேசப்படாத புகைப்பட வரலாற்றை நினைவுகொள்வ தாகவே இக்கட்டுரை அமைகின்றது.

அமெரிக்கமிஷனரிமார் ஈழ நாட்டில் கல்வி, கலை, இலக்கிய, கலாசார அம்சங்களிலே ஏற்படுத்திய தாக்கத்தி னையும் விளைவுகளையும் பற்றிய ஆய்வு கள் இன்னும் பூரணமாக வெளிவராத நிலையில், ஈழநாட்டிற்கே சிறப்பாக யாழ்ப்பாணத்திற்கு ஓர் உலகளாவிய தொடர்பினை, சிறப்பினை வட்டுக் கோட்டை மிஷனரி வழங்கியது என்பதை மறுக்க முடியாது. யாழ்ப்பாணத்தின் புகைப்படக்கலை வரலாற்றின் ஆதி மூலத்தை வட்டுக்கோட்டை மிஷனரியின் வரலாற்றின் மூலம் அறிய முடிகின்றது. யாழ்ப்பாணத்திலே மட்டுமல்ல இலங்கை யிலே முதல் புகைப்படம் வட்டுக் கோட்டை மிஷனரியினாலே பதிவு செய்யப்பட்டது.

1853ஆம் ஆண்டு அமெரிக்க மிஷனரிமார் புகைப்படக்கருவிகளையும், அதற்குரிய கையேட்டையும் வட்டுக் கோட்டைக்குக் கொண்டுவந்தனர். ஆனால், அமெரிக்க மிஷனரிமாரால் அந்தக் கையேட்டைக் கிரகித்து புகைப் படக் கருவியை இயக்க முடியாமல் போயிற்று.

கென்றி மாட்டின் என்பவர் வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக்கல்லூரி மாணவனாக இருந்தபோது கல்லூரி அதிபர் கைக்கடிகாரம் ஒன்றினை வழங்கிப் பறங்கியரிடம் கொடுத்துத் திருத்தி வருமாறு அனுப்பிவைக்க, கடிகாரத்தை; பேனா, சிறுகத்தி என்பவற்றின் உதவியுடன் தானே திருத்தி அமைந்தமையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபரின் பாராட்டைப்பெற்றார். அத்துடன் அதிபர் கைக்கடிகாரம் திருத்துவதற்குரிய உப கரணங்களை வாங்கிக் கொடுத்து ஊக்கு வித்தார். இந்நிலையில் மிஷனரியால் இயக்க முடியாத புகைப் படக் கருவியை கென்றி மாட்டினிடம் வழங்கினால் இயக்குவார் என நம்பினார்கள். கென்றி மாட்டினை மட்டக்களப்புக் கிறிஸ்தவ தேவாலய கூட்டத்திற்கு அழைத்து முதுநிலை மிஷனரி வணபிதா ஈ.பி. ஹஸ்ரிங் (E.P. Hasting) அவர்கள் புகைப்படக்கருவியை அவரிடம் கொடுத்து இயக்க முயற்சிக்குமாறு கேட்டுக் கொண்டார். கூட்டம் முடிந்து மிஷனரிகள் தேவாலயத்தில் இருந்து வெளியேறும் போது கென்றி மாட்டின் அவர்களை நிறுத்திப் புகைப்படம் பிடித்தார் எனவும், இதுவே இலங்கையில் பிடிக்கப்பட்ட முதல் புகைப்படம் என்றும் நம்பப்படுகின்றது. கென்றி மாட்டினின் நுணுக்கமான மதிநுட்பத்தையும், வேகத்தையும், திறமையையும் பாராட்டி மிஷனரிகள் புகைப்படக்கருவியையும் கையேட்டையும் அவருக்கு பரிசாகக் கொடுத்தனர் என்று அறியப்படுகின்றது. 1853ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட புகைப்படம் இப்போது கிடைக்கவில்லை. அது அமெரிக்காவில் உள்ள மிஷன் நூலகங்களில் இருக்கலாம் என நம்பப்படு கின்றது. 1853ஆம் ஆண்டிலேயே இலங்கையில் புகைப்படம் மூலமான ஆவணப்படுத்தல் இடம்பெற்றது. முன்னர் ஓவியமுறை மூலமான ஆவணப்படுத்தல் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் புகைப்படக்கருவியைக் கொண்டு கென்றி மாட்டின் ஒருபுகைப்பட நிலையத்தை (Studio) ஆரம்பித்தார். இதுவே இலங்கையில் முதலாவது புகைப்படநிலையமாகும். 1855இல் அவர் மூன்று கதிர்ப் பொறிகளை உருவாக்கி அவற்றை முறையே களஞ்சிய அறையிலும், (Store) தனது பணிமனையிலும், இல்லத்திலும் அமைத்து புகைப்படங்களை எடுத்துவந்தார். கென்றி மாட்டின் 1856ஆம் ஆண்டு கொழும்பிலும் புகைப்படக் கலையை அறிமுகப்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தின் புகைப்படக் கலை வரலாறு மாட்டினுக்குப் பின்னர் S.K. லோட்டனால் புத்துணர்வு பெற்றது. இவர் கென்றி மாட்டினின் உதவியுடன் இக்கலையில் தேர்ச்சி பெற்றார். ஆரம்ப காலத்தில் தொழில்நுட்பவசதிகள் அற்ற நிலையில் புகைப்படம் எடுப்பதற்கு கண்ணாடித் தட்டிலே (Plate) சில்வனைத்தி ரேற்றினை பூசி, புகைப்படம் பதிவு செய்யப்பட்டது. இதனை வெளியிலே கொண்டு செல்ல முடியாததால் இருட்டறை உருவாக்கப் பட்டது. இவ்வாறான ஆரம்பகால புகைப்படப்பதிவுகள் கறுப்பு வெள்ளை நிறமாக காட்சியளிக்கின்றன. அடுத்து, புகைப்படம் பதிவு செய்யக்கூடிய தாள் முன்னர் கிடைக்காமையால் சாதாரணமான தாளிலே பதியக்கூடியவாறு சில்வனைத்திரேற்று பூசி படப்பதிவு இடம்பெற்றது. அவ்வாறு எடுக்கப்பட்ட அடுத்த கட்டப் புகைப் படங்கள் இளம் சிவப்பு நிறமாகக் காட்சியளிப்பதை அவதானிக்கக் கூடிய தாக உள்ளது.

லோட்டன் தனது இல்லத்தில் "லோட்டன் ஸ்ரூடியோ" என்ற புகைப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்தை ஆரம்பித்து, புகைப்படம் பிடித்தல், கழுவுதல் (Finishing) போன்ற பல பகுதி வேலைகளை, தானே செய்து, இதை முழுநேரத் தொழிலாகச் செய்தார். பின்னர் இவரது லோட்டன் ஸ்ரூடியோ, யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கு நகர்ந்தது. இவர் சில வருடங்களின் பின்னர் இத் தொழிலைச் செய்வதற்கு உதவியாளரை நியமித்துச் செவ்வனவே பணியாற்றி வந்தார். அத்துடன் ஆடல், பாடல், சிற்பம் முதலான கலைகளிலும் ஆர்வமுடைய வராக விளங்கினார். நடிகர்களையும் நாடகக் காட்சிகள் சிலவற்றையும் இவர் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்க தாகும். இவரது மாணாக்கர்களே இன்றும் யாழ்ப்பாணப் புகைப்படக்கலையில் தேர்ச்சி பெற்றுள்ளவர்களாகத் திகழ்கின்ற னர். லோட்டனுக்குப் பின்னர் அவரத பெறா மகனான மண்டலநாயகமும், அவரது மகனான லோட்டன் துரைச்சாமி யும் லோட்டனுக்கு உதவியாளராக இருந்த வீரகத்தி மருதப்புவும் சேர்ந்து 1920களில் "S.K.லோட்டன் ஸ்ரூடியோ" என்ற பெயரில்புகைப்படநிலையமொன்றை ஸ்தாபித்தார்கள். சில ஆண்டுகளின் பின்னர் லோட்டன் துரைச்சாமிக்கு அரச வேலைவாய்ப்பு கிடைக்க, துரைச்சாமி புகைப்பட நிலையத்திலிருந்து விலக, மருதப்பு தனியே நடத்தி வந்தார். பின்னர் இந்த ஸ்ரூடியோ "பிறின்ஸ் ஸ்ரூடியோ" எனப் பெயர்மாற்றம் பெற்றது. இந்த ஸ்ரூடியோ பிறின்ஸ் தெருவில் இருந்த படியாற் பிறின்ஸ் ஸ்ரூடியோ என அழைக்கப்பட்டது. புகைப்படத்தின்மேல் வர்ணங்கள் தீட்டி வர்ணப்புகைப் படங்களைப் பதிவுசெய்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இரண்டாம் உலகமகாயுத்திற்குப் பின் கொழும்பிலிருந்த பிறின்ஸ் ஸ்ரூடியோ யாழ்ப்பாணம், பிரதான வீதியில் இயங்கியது. பின்னர் ஸ்ரான்லி வீதியில் இயங்கி வந்தது. 1946ஆம் ஆண்டு மருதப்பு இயலாமை காரணமாக ஸ்ரூடியோவைத் தனது மருமகன் அப்பாத் துரையிடம் கையளித்தார். பின்னர் அப்பாத்துரை சுன்னாகத்திற் பிறின்ஸ் ஸ்ரூடியோவை நிறுவினார். இவரிடம் மாணிக்கவாசகர், பபி மரியதாஸ், ஆகியோர் புகைப்படக் கலையை பயின்று வந்தார்கள். மாணிக்க வாசகர், கலாஜோதி, "வாசன் புகைப்பட நிலையத்தை" தனியே ஆரம்பித்தார்கள். இவர்களிடமிருந்து முத்தையா (ஜீவனா போட்டோ) பொன்னுத்ரை, (லீலா ஸ்ரூடியோ) சுப்பையா (ஜோன்சன்ஸ் ஸ்ரூடியோ) சிதம் பரநாதன் (சர்மிளா ஸ்ரூடியோ) ஆகியோர் புகைப்படக் கலையைக் கற்றுக் கொண்ட னர்.

இதனைவிட லோட்டனிடம் N. பிலிப் மாணிக்கத்தம்பி என்னும் கலைஞ னும் புகைப்படத்துறையில் வேலை செய் தார். மாணிக்கத்தம்பியின் தந்தையாரான அண்ணாவியார் ஸ்கிறீன் பிறிண்டிங் வரைவதிலும், சிற்பங்கள் செய்வதிலும் வல்லவர். இவர் புகைப்படக் கலையைத் தொழிலாகக் கருதாது கலையாகவே கருதினார். 1922ஆம் ஆண்டு "லில்லி ஸ்ரூடியோவை" (Lilly Studio) ஆரம்பித்தார். சில வருடங்களின் பின்னர் லில்லி ஸ்ரூடியோவை மூடிவிட்டு, யாழ்ப்பாணம், மூன்றாம் குறுக்கத் தெருவில் "டிசைன்ஸ் ஸ்ரூடியோ"வை (Designs Studio) ஆரம்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கத்தம்பியின் மாணவர்களுள் செல்வராஜா ஜோன் மத்தியூஸ், மாட்டீன் மனுவேற்பிள்ளை, நிக்கலஸ் (மகன்) ஞானப்பிரகாசம் (ஞானம்ஸ் ஸ்ரூடியோ) முதலியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் ஈழத்தின் பல பாகங்களிலும் புகைப்படக்கலை வல்லுநர்களாகத் திகழ்கின்றனர்.

மத்தியூஸ் மன்னாரில் ஸ்ரூடியோவை ஆரம்பித்தார். நிழற்படக் கலைக்குச் சம்பந்தப்பட்ட சகலவிதமான பொருட்களையும் விநியோகம் செய்யும் முகவராக ஞானப்பிரகாசம் (ஞானம்ஸ் ஸ்ரூடியோ) விளங்கினார். இவர் படிப்பிடிப்பு நுணுக்கங்களையும், உள்ளக் காட்சிகளையும் சூரிய வெளிச் சத்தின் மூலம் எடுக்கும் நுட்பத்தையும் கற்றுக் கொண்டு, புகைப்படம் பெருப் பித்தல், பதித்தல் என்பனவற்றைச் சூரிய வெளிச் சத்தின்மூலம் செய்து வந்தார்.

ஞானப்பிரகாசம் டிசைன் ஸ்ரூடியோ, ஜெமினி ஸ்ரூடியோ, பாரத் ஸ்ரூடியோ மற்றும் வாசன் ஸ்ரூடியோவிலும் வேலை செய்தார். பின்னர் இவர் 1954ஆம் ஆண்டு ஸ்ரான்லி வீதியில் "ஞானம்ஸ் ஸ்ரூடியோவை" ஆரம்பித்தார். அதன் பின்னர் 1967 ஆம் ஆண்டு மணிக்கூட்டு வீதியில் இயங்கியமை குறிப்பிடத்தக்க தாகும்.

மாணிக்கத்தம்பியின் மகனான நீக்கிலஸ் என்பவர் புகைப்படக்கலையைப் பலருக்கு பயிற்றுவித்தார். நீக்கிலஸ் சிறு வயதிலிருந்து தந்தையாரிடம் கற்றுக் கொண்ட இக்கலையை தன் தொழிலாக மேற்கொண்டார். ஆயினும் இவரது புகைப்படங்கள் கலைத்துவ நுட்பத்துடனே வெளிவந்திருப்பதனை அவதானிக்க முடிகின்றது. "அன்றுட் கல் பிறக்டு" என்ற ஆளுநர் இலங்கைக்கு வந்த போது அன்னம் போன்ற படகிலே பயணித்த காட்சியை பதிவு செய்தார். இந்த புகைப்படம் "The time of Ceylon" என்ற செய்தித்தாளில் வெளிவந்து பிரபல்யமடைந்தது. இவர் 1948முதல் 1985வரை கன்னாதிட்டிச் சந்தியில் "செல்வம் ஸ்ரூடியோவை" நிறுவி; புகைப்படக் கலையில் தனக்கெனத் தனி முத்திரை பதித்தார். அவரது மகன் ஜோன் ஜெயக் குமார் (வீரகேசரி படப் பிடிப்பாளர்) மற்றும் ராஜரட்ணம் (பேபி ஸ்ரூடியோ) ஆகியோர் இக்கலையை இவரிடம் கற்றுக் கொண்டனர். இவர்களுள் ஜெயக்குமார் செய்தித்தாள் புகைப்படக்காரராக விளங்கினார்.

ராஜரட்ணம் என்பவர் புகைப் படக்கலையை K.K.V. செல்லையாவிடம் (சபாஸ் ஸ்ரூடியோ) 1955-1956 ஆண்டு வரை கற்றார். பின்னர் நீக்கிலஸிடம் 1958-1973ஆம் ஆண்டு வரை புகைப்பட நுட்பங்களைப் பயின்று கொண்டார். இவர் 1973ஆம் ஆண்டு "பேபி ஸ்ரூடியோவை" (Baby Studio) பரமேஸ்வராச்சந்தியில் ஆரம்பித்தார். தற்போது பேபி ஸ்ரூடியோ கந்தர்மடத்தில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இவரது புகைப் படம் கூடுதலாக கலைத்துவம் நிறைந்து காணப்படுகின்றது குழந்தைகளின் பல்வேறு அசைவுகளையும், உணர்ச்சிகளையும் கலைத்துவமான முறையில் புகைப்படக்கருவியில் உள்வாங்குவதில் கைதேர்ந்தவராக விளங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1940ஆம் ஆண்டில் "பாரத் ஸ்ரூடியோவை" ஐயாத்தம்பி (சிவசுப் பிரமணியம்) என்பவர் ஆரம்பித் தார். சொந்த முயற்சியாற் புகைப்படம் பிடிப்ப தைக் கற்றுக்கொண்ட இவர், லங்கா போட்டோ உரிமையாளர் மாட்டின், மாணிக்கவாசகன் (வாசன்ஸ் ஸ்ரூடியோ) ஆகியோருடனான கலந்துரையாடல் மூலம் தன்னை வளர்த்துக் கொண்டா ரெனக் கூறப்படுகின்றது. இவர் திருச்சியில் பகல் ஒளியில் கறுப்பு வெள்ளைப் படம் பிடித்தல் பற்றி மூன்று மாதகாலப் பயிற்சியையும் பெற்றிருந்தார். அவரது பிள்ளைகளான மெய்ஞானமும், ஜீவராஜ் ஜும் இந்தியாவிலே பாரத் ஸ்ரூடியோவை நடாத்த, பெறாமகனான கணேஸ் மல்லாவியிலும் யாழ்ப்பாணத் திலுள்ள பாரத் ஸ்ரூடியோவை ஐயாத்தம்பியின் சகோதரரான ஜெகதீஸ் வரனும் நடாத்தி னார்கள். தற்போது பாரத் ஸ்ரூ டியோ மருமகன் மேகநாதன் அவர்களால் நடாத் தப்பட்டு வருகின்றது.

சுயமுயற்சியினால் புகைப்படக் கலையைக் கற்றுக்கொண்ட இன்னொரு சாராரான பாலசிங்கம், ஜெயராஜ், சந்திரன் ஆகிய மூவரும் சேர்ந்து "முருகன் ஸ்ரூடியோவை" 1949, 1950ஆம் ஆண்டள வில் நல்லூர் உற்சவ காலங்களுக்கு மட்டும் என்ற ரீதியில் ஆரம்பித்தனர். இதற்கு ஞானம்ஸ் அதிபர் ஞானபிரகாசம் ஒத்துழைப்பு வழங்கினார். பின்னர், இந்த ஸ்ரூடியோ பாலசிங்கத்தால் பாலன் ஸ்ரூடியோ எனப் பெயர் மாற்றப்பட்டு, ஐந்து வருடங்கள் நல்லூரில் இயங்கி, பின்னர் 1964இல் ஸ்ரான்லி வீதியில் "சித்திராலயா ஸ்ரூடியோவாக" பொலிவு பெற்றது.

மானிப்பாய் கனகசபை என்ப வரும் சுயமுயற்சியினால் "கொழும்பு ஸ்ரூடியோ"வை ஆரம்பித்து, அதில் மதங்க சிங்க என்ற சிங்களவருடன் பணிபுரிந்தார் என்றும் பின்னர் இவரே கொழும்பு ஸ்ரூடி யோவைப் பொறுப்பேற்று, மணிக்கூட்டுக் கோபுர வீதியில் நடத்தினார் எனவும் அறிய முடிகிறது. இவருக்குப் பின் குரும்பசிட்டி குகதாசன், கொழும்பு ஸ்ரூடியோவை பொறுப்பேற்று, ஸ்ரான்லி வீதியில் புதுப்பொலிவுடன் நிறுவினார். நாகரத்தினம் என்பவரால் சாவகச்சேரியில் ஆரம்பிக்கப்பட்ட "குகன் ஸ்ரூடியோ" தனித்துவமான முறையில் புகைப்படக் கலையை மெருகூட்டிவரும் ஒரு நிறுவன மாகத் திகழ்ந்தது. பறங்கித் தெருவில் வசித்த லோட்டனுக்குச் சமகாலத்தவரான திரு. நைற் (1899-1959) என்பவரிடம் இருந்து புகைப்பட நுட்பங்களைக் கற்றறிந்ததாக கலாநிதி எஸ். சிவலிங் கராஜா தனது யாழ்ப்பாணப் புகைப்படக் கலை பற்றிய முன்னோடிக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். நைற் சிங்கப்பூரிலே கல்வி கற்றார் என்றும் மலேசியத் தொடர் புடையவர் என்றும் வட்டுக் கோட்டை யில் குடும்பத்துடன் வசித்தார் எனவும், தனது இல்லத்தில் "நைற் அன்கோ ஸ்ரூடியோ"வை நிறுவினார் எனவும் அறிய முடிகிறது. இவரது தொழிலைக் கருணா கரன், தயாபரன் என்னும் அவரது புதல்வர்கள் சிலகாலம் மேற்கொண்டனர்.

அத்துடன் இரண்டாம் உலகமகா யுத்த காலத்தில் மலேசியாவில் இருந்து இலங்கைக்குத் திரும்பிய டேவிட் கனக நாயகம் என்பவர் (1938-1955) யாழ்ப் பாணம், முதலாம் குறுக்குத் தெருவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேவிட் ஸ்ரூடியோவை" நடாத்தி வந்தார்.

1950களில் நடராஜா அவர்கள் "கணேஷா ஸ்ரூடியோவை" ஸ்தாபித்தார். இவரிடம் மகன் கந்தசாமி புகைப்பட நுட்பங்களைக் கற்று, யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ஸ்ரூடியோ ஒன்றை நடாத்திய தோடு வீரகேசரி இதழியல் படப்பிடிப் பாளராகவும் விளங்கினார். 1960களில் நாராயணசாமி அவர்கள் "ரகு போட்டோ ரெக்னிக்ஸ் ஸ்ரூடியோவை" ஸ்தாபித்தார். இவற்றைவிட இலங்கேஸ் போட்டோ (இலங்கேஸ்) "A.V.M. படப்பிடிப்பு நிலையம்" (மகாலிங்கம்), அசோகா போட்டோ (கதிரவேலு), எலைட் ஸ்ரூடியோ றோஸ் ஆட்ஸ் ஸ்ரூடியோ, சற்குணம் ஸ்ரூடியோ, முதலிய பல ஸ்ரூடியோக்கள் யாழ்ப்பாணத்தில் தொழிற்பட்டுள்ளன. இதனைவிட துரையப்பா முதலியவர்கள் 1930களில் ஸ்ரூடியோ அமைக்காமல் நிகழ்ச்சி களுக்குச் சென்று படப்பிடிப்பாளராகவும் செயற்பட்டனர்.

யாழ்ப்பாணத்தின் முன்னணி புகைப்பட நிலையங்களில் செல்வரத்தினத் தின் "கலைஞானி ஸ்ரூடியோ"வும் ஒன்றாகும். கலைஞானி புகைப்பட கலையின் பல நுட்பங்களை பரிசோதித்து தேர்ந்தவராகத் திகழ்ந்தார்.

தொகுத்துநோக்கும் போது சுயம், தேசியம், அடையாளம் பற்றி ஆழமாக சிந்திக்கின்ற ஒரு இனம், தனது மரபையும், தனித்துவ அடையாளங்களையும் மீள்வாசிப்புக்கு உட்படுத்திக்கொள்ளும் கலை வடிவங்களில் புகைப்படக்கலையும் ஒன்றாக விளங்கு கிறது. அந்த வகையில் யாழ்ப்பாணச் சமூக இருப்பில் பல்வகைத் தன்மைகளையும், புகைப்பட பதிவுகள் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது. காலனித்துவ ஆட்சிக்கு முன்னர் இருந்த சாதி மயப் பட்ட பயில்வு, அதிகார வர்க்கமுறை என்பன நீக்கம்பெற்று, யாரும் எந்தத் தொழிலையும் செய்யலாம் என்ற நிலை புகைப்படத் தொழிலைப் பலரும் பின் பற்றக்கரணமாகியது எனலாம். இங்கு சேகரிக்கப்பட்ட புகைப்படங்களில் மெய்யுருக்களே அதிகமானவையாகும். ஏனைய இயற்கைக்காட்சிகளோ, பொதுக் கட்டடங்களோ, விழாக்களோ மிக அரிதாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆரம்ப காலத்தில் புகைப்படம் கலை வெளிப்பாடாகவோ, பொழுது போக் காகவோ அல்லாமல், தொழிலாகவே கருதப்பட்டது. யாழ்ப்பாணத்தின் புகைப் படக்கலை வரலாற்றில் பல பெயர்களில் புகைப்படநிலையங்கள் பதிவாகியுள்ளன. இங்கு குறிப்பிடப்பட்ட முன்னனி புகைப்படநிலையங்களில் பல தற்போது இயங்கவில்லை. ஆனாலும் புகைப்படக் கலை வளர்ச்சிக்கு அவையே வித்திட்டன. இந்நிலையில் நவீன தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தி கலைத்திறன் வெளிப்படுத்தும் வண்ணம் புகைப்படப் பிடிப்பாளர்கள் செயற்படுவதன்மூலம் யாழ்ப்பாணப் புகைப்படக்கலை வரலாறா னது அதிகம் பேசப்படும் என்பதில் எவ்வித ஐயமு மில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணை நூல்கள்**

- எஸ். சிவலிங்கராஜா - யாழ்ப்பாணத்திற் புகைப்படக்கலை (சில குறிப்புக்கள்)
- யாழ்ப்பாணக் கல்லூரி வெள்ளிவிழா மலர் (எமது கல்லூரித்தாய்)
- கலையரசு க. சொர்ணலிங்கம் - ஈழத்தில் நாடகமும் நானும்
- மணிவிழா மலர் - ஞானம்ஸ்
- நேர்காணல் - மாணிக்கத்தம்பி, நீக்கிலஸ், ராஜரட்ணம், கருணாகரன், முத்துலிங்கம், பாலகிருஷ்ணன்



திருமண வைபவம் – 1910



நிகழ்வுப்பதிவு – 1902



மருத்துவக் குழு



பொங்கல் வைபவம் – 1901



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்





தம்பதியினர் – 1901



தம்பதியினர் – 1902



திருமண வைபவம் – 1902



மெய்யுரு – 1901



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவார்ந்த சமூக மறுமலர்ச்சி நோக்கிய படிமுறைகள்

**கா. ஐங்கரவேள்**
கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், நல்லூர்.

இருபத்தியோராம் நூற்றாண்டில், அறிவே பிரதானமானது. கசடறக் கற்று, கற்றவற்றைப் பயன்படுத்தும் அறிவுதான் இந்த யுகத்தில் மிகவும் முக்கியமான ஆதார வளம். நாம் ஓர் அபிவிருத்தியடைந்து வரும் நாட்டிலிருந்து கொண்டு அறிவார்ந்த ஒரு சமுதாயமாகப் பக்குவமடைந்து, அறிவு சார்ந்த பொருளாதார சக்தியாக மறுவடிவம் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளையும், வாய்ப்புக்களையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அத்துடன் எமது அரச நிர்வாகத்திலும், தலைமைத்துவத்திலும், வெளிப்படையான அணுகு முறைகளையும், புதுமையான மாதிரிகளையும், பின்பற்றுவதனூடாக அறிவார்ந்த சமூக மறமலர்ச்சியின் எழுச்சியை உருவாக்கும் பொறுப்பு நம் அனைவரையும் சார்ந்தது. அறிவாற்றல் யுகத்தின் உதயகாலம் இது எனில் மிகையாகாது. இந்த புதுயுக விடியலில் தெரியும் சரியான திசையில் நாம் அடியெடுத்து வைக்க வேண்டும் காலத்தின் கட்டாயமும் இதுவே.

கடந்த சில நூற்றாண்டுகளாக இந்த உலகம் பல சமூகமறுமலர்ச்சிகளைக் கண்டிருக்கின்றது. மனிதன் முதலில் உடலுழைப்பை மூலாதாரமாகக் கொண்ட விவசாய சமூகத்திலிருந்த போது பொருளாதார வளர்ச்சியென்பது பெருமளவுக்கு மூலப்பொருட்கள் மற்றும் விவசாய உற்பத்திப் பொருட்கள் போன்ற இயற்கைப் பொருட்களில் சார்ந்திருந்ததை காணமுடிந்தது.

தொழிற் புரட்சி மலர்ந்தவுடன், மனித உழைப்புக்கு மாற்றாக இயந்திரங்களைப் படைக்கும் தொழில் நுட்ப விருத்தி பொருளாதார முன்னேற்றத் திற்கு உந்துசக்தியாக அமைந்திருந்தன. தொழிற் புரட்சி நடந்த காலகட்டங்களில் எமது நாடு அன்னிய சக்திகளின் ஆதிக்கத்தில் சிக்கியிருந்ததால், அதன் முழுப்பலனையும் அடைய முடியாதிருந்ததால், எமது சமுதாயம், வெளிப்படையாகக் கிடைத்த அறிவை, அதாவது தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி மதிப்புக் கூட்டப் பட்ட பொருட்களை உற்பத்தி செய்ததோடு, தொழிலாளர்களை நிர்வாகம் செய்யும் திறன், மூலதனம் போன்றவற்றால் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மாற்றங்களைக் கொண்டு வந்தனர்.

இந்த உலகம் ஏற்கனவே தகவல் சார்ந்த ஒரு சமுதாயமாக மாறியிருக்கின்றது. பலவிதத் தொடர்புகள் மூலம் கிடைக்கும் வெளிப்படையான அறிவைக் கொண்டு, பொருட்களுக்கு மேலும் மெருகூட்டி, மதிப்புக்கூட்டுவதன் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சமூகம் பொருளாதார வளர்ச்சியை எட்டுவதுடன்; தொலைத்தொடர்பு வசதிகளும், மென்பொருள் சாதனங்களும், எமது நாட்டின் பொருளாதாரத்தை முன் நகர்த்திச் செல்ல உதவுகின்றன.

நாளைய உலகம், ஆழமான, பரந்த அறிவை அடையாளம் கண்டு கொண்டு, பல தொடர்புகள் மூலம் மதிப்புக்கூட்டப் பட்ட அறிவடர்ந்த பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்யும் உலகமாக அமைய வேண்டும். இப்படிப்பட்ட அறிவுப் பொருட்கள்தான் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்காற்ற முடியும்.

மக்களின் திறமை, மதி நுட்பம், கற்பனை வளம் மற்றும் நாகரிக பலம் ஆகியவைதான் ஒரு நாட்டின் விலைமதிப் பற்ற சொத்துக்கள். உலகமயமாக்கல், இன்று போட்டியை உருவாக்கியுள்ளது. இந்த நிலையில் பல நாட்டு மக்கள் அவரவர் நாட்டிற்கே உரித்தான பலன் களைப் பெறுவதற்கு தங்களுக்கு சாதக மாகப் பயன்படுத்திக் கொண்டு போட்டி யில் முந்திக்கொள்ளும் திறனைப்பெற வேண்டும். இந்த விடய ஞானம், பட்டறிவு, கற்பனைவளம், நம்மை முழு மனிதர்களாக்கும் மனோபாவங்கள் என்ற இத்தனை அம்சங்களும் ஒருங்கிணைக்கப் பட்டு, தேவைக்கும் திறமைக்கும் ஏற்ற திட்டங்களை தீட்ட அடித்தளம் அமைக் கப்படல் வேண்டும். இந்த அறிவையும் திறன்களையும் வளர்த்துக் கொள்வதற்காக மேலும் கற்றுக்கொள்வது என்பது போட்டிக்குத் தேவையான வலிமையைத் தருவதோடு பொருளாதார வளர்ச்சிக்கும் இது அடிப்படையாக அமையும்.

ஏற்கனவே இருக்கும் அறி வாற்றலை செம்மையாக பயன்படுத்தி னால் தேசத்திற்கு சிறந்த நல்வாழ்வு, கல்வி, உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கி பிற சமூகத்துறைகளிலும் ஏராளமான வளத் தைச் சேர்க்கலாம். அறிவாற்றல் உட் கட்டமைப்பை உருவாக்கி அதைப்பரா மரிக்கும் திறன், பணியாளர்களை உருவாக்கி அவர்களது உற்பத்தித்திறனை மேம்படுத்தும் திறன், புதிய அறிவை உருவாக்கி அவற்றை பயன்டுத்திக் கொள்ளும் ஆற்றல் என்பவைதான் அறி வார்ந்த சமூகத்தின் முன்னேற்றத்திற்கு அடிப்படையானவை. அவையாவன சமூக மறுமலர்ச்சி, வழமையான வசதி வாய்ப்புக் கள் முதலிய உருவாக்கத்திற்கு உதவ முடியும்.

எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிப் பாதையில் மானியங்களின் பங்களிப்பு முக்கிய இடத்தினை வகிக்கி ன்றது. இம் மானியங்கள் மக்களுக்கு குறுகிய கால விடிவினை அல்லது நிவாரணத்தை வழங்குமேயன்றி நீண்ட காலம் நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத் திக்கு இவை உதவமாட்டா. எனவே மக்களுக்கு வறுமை நிவாரணங்கள், மானியங்கள் என்பவற்றை வழங்கி, அவர் களின் உள்ளார்த்தங்களை முடங்கச் செய்வ திலும் பார்க்க, பொருள் உற்பத்தி, அதிகரி த்த வேலைவாய்ப்பு என்பனவற்றை மையமாக கொண்ட கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் சந்தர்ப்பத்தில் வறுமைக் குறைப்பில் அவை கூடிய தாக்கத்தினை ஏற்படுத்தமுடியும். எந்த ஒரு நாட்டிலும் பொருளாதார வளர்ச்சியும், சமூக நல வளர்ச்சியும் ஒருசீரான வளர்ச்சிப் போக்கினை கொண்டிருக்குமாயின், அங்கு வறுமை ஒழிப்பு பெரும்பாலும் உறுதிப்படுத்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்த உற்பத்தித் திறனுடைய விவசாயத் துறையிலிருந்து கூடிய உற்பத்தித்திறனுடைய கைத்தொழில் மற்றும் சேவைகள் துறைக்கு அமைப்பு ரீதியான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும். சர்வதேச ரீதியில் போட்டித் தன்மைக்கு இலங்கை தாக்குப்பிடிக்க வேண்டுமெனில் கைத்தொழில் துறையினைக் கூடிய தொழில்நுட்ப உட்புகுத்தல்களுடன் மாற்றியமைத்து வெளிநாட்டுப் பொருட்களின் தரங்களுக்கு இணையாக உற்பத்தி தொழில்நுட்பத்தினை பெருக்குதல் வேண்டும். உற்பத்தி மற்றும் சேவைகள் துறையினை ஏற்றுமதி இயலளவுடைய துறைகளாக மாற்றுதல் வேண்டும். நாட்டின் எல்லாப் பிராந்தியங் களையும் உள்ளடக்கியதாக தனியார் துறைக்கு உகந்ததான கைத்தொழில் அமைப்பிற்கான சூழலை ஏற்படுத்தல். கைத்தொழில் நகராக்கம், தகவல் தொழில் நுட்பப் பூங்கா என்பன ஏற்படுத்தப்பட வேண்டும்.

தொழில் உருவாக்கத்திற்கு அதி சிறந்த தலைமைத்துவம் தேவைப்படுகின்றது. இதன் முதல் அம்சமாக வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் பிரச்சினையை அடையாளம் கண்டு, பிறகு அதற்கான தீர்வைக் கண்டுபிடிப்பது. நமது தேவைகளை புரிந்து கொள்வதுடன், மனிதர்களான நம் அனைவர்களுக்கும் இதே போன்ற தேவைகள் இருக்கின்றன என்ற உணர்வில் தான் தொழில் உருவாகும் திறன் அரும்புகிறது. புதிய சவால்களை எதிர்கொள்வதில் விருப்பம் இருக்க வேண்டும். வித்தியாசமாக செயல்படுவது என்பது தொழில் உருவாக்கும் திறனுக்குத் தேவையான தகுதி ஆகும். துணிவுடன் சிந்திக்கும் அளவுக்கு மனதில் உறுதி வேண்டும். ஒரு பெருத்த இலாபத்தை அடைய வேண்டும் என்பதற்காக கணித்துப் பார்த்து ஒரு குறிப்பிட்ட அளவுக்கு, இடர்களை எதிர்கொள்வதற்கு நாம் கண்டிப்பாகக் கற்றுக்கொள்ள வேண்டும். எதையும் சரியாகச் செய்து முடிக்கும் மனோபாவம் தொழில் உருவாக்கும் தகுதிக்கு இருத்தல் வேண்டும். தேசத்தின் விலைமதிப்பற்ற சொத்துக்கள், தொழில்நுட்பம் உருவாக்கித்தந்த தொழில் துறை வளர்ச்சியை ஒரு புதுமையான முறையை ஏற்படுத்துவதன் மூலமாக மட்டும் தக்க வைத்துக் கொள்ள முடியும். இந்த புதுமையான நடவடிக்கைகளின் மூலமாகத்தான் அறிவாற்றலை செல்வ மாக மாற்ற முடியும்.

தேச நிர்மாணத்திற்கான திறன்களை, திறமைகளை உருவாக்குவது தான் ஒரு தேசத்தின் மிக முக்கிய இலட்சியமாகும். இந்த இலட்சியங்களை நிறைவேற்றுவதற்காக உயர் கல்வி நிலையங்களில் ஆராய்ச்சி அல்லது தோண்டித்துருவி அறியும் திறன், ஆக்கசக்தி, மற்றும் புதுமைபுனையும் திறன் குறிப்பாக அறிவாற்றலை ஆக்கபூர்வமாக திசை மாற்றிவிடுவது. நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தும்திறன், தொழில் முனைவுக்கான தலைமைத் தகுதித்திறன் மற்றும் நேர்மையான தலை மைக்கான திறன்களை நமது இளைஞர் களிடத்தே வளர்த்து விட வேண்டும்.

இருபத்தியோராம் நூற்றாண்டில் நாம் இதுவரையில் உருவாக்கி, மதிப்புக் கூட்டியிருக்கும் அனைத்துவித அறிவாற்றல் மற்றும் தகவல்களை நிர்வாகம் செய்பவர்களின் யுகமாக அமையப் போகிறது. இந்த யுகத்தில் பயணம் செய்வதற்கான ஒரு வழியை கண்டுபிடிக்க கூடிய திறன்களை நமது இளைஞர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயமாக வழங்க வேண்டும். ஆயுள் முழுவதும் கற்றுக்கொள்பவர்களாக இருந்து நமக்கு நாமே கற்றுக்கொடுக்கும் திறனை தகவல்தொழில்நுட்பம் மூலம் இன்று நாம் அடைந்திருக்கின்றோம். பொருளாதார அபிவிருத்தி மற்றும் அரசியல் மேம்பாட்டைத் தக்க வைத்துக் கொள்ள விரும்பும் எந்த சமுதாயத்திற்கும் வாழ்நாள் முழுவதும் கற்கும் திறன் அவசியமாக இருத்தல் வேண்டும்.

அறிவாற்றல் வலிமை படைத்த சமுதாய வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் சாதனமாக அறிவு இருந்து வருகிறது. அறிவுக்கு உருக்கொடுக்கவும், அதனைப் பரப்பவும், பாதுகாக்கவும், பயன்படுத்தவும் திறன் கொண்ட ஒரு சமுதாயத்தால் பொருளாதார வளமையையும், சமூக மறுமலர்ச்சியையும் உருவாக்க முடியும். கல்வி, நலவாழ்வுப் பராமரிப்பு, விவசாயம் மற்றும் ஆளுகையில் ஏற்படும் வளர்ச்சியின் மூலம் சமூக மறுமலர்ச்சி உருவாகும். வேலைவாய்ப்பு, அதிக உற்பத்தித்திறன், கிராம சுபீட்சம் ஆகியவற்றுக்கு இது வழிவகுக்கும். தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்பம், உயிரித்தொழில்நுட்பம், வானிலை முன்கணிப்பு, பேரழிவை சமாளித்தல், தொலைமருத்துவம், தொலைக்கல்வி, உள்ளூரில் வாய்ப்புள்ள அறிவடர்ந்த பொருட்களை உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்பம் என்பவற்றை சேவைத் துறை மூலம் இணைக்க முடியும். எனவே நாம் விரும்பும் அறிவுசார் சமுதாயத்தை உருவாக்குவதற்காக பல்வேறு தொழில் நுட்பங்களையும் நிர்வாக கட்டமைப்புக்களையும் ஒருங்கிணைக்க வேண்டியுள்ளது. சமுதாய மறுமலர்ச்சிதான் அறிவுசார் சமூகத்திற்கான அடித்தளம். இதற்கு நல்லாட்சி தேவை. பொதுமக்களோடு நேரடியாக தொடர்பு கொள்ள வேண்டியுள்ள அரசுப் பணிகளில் தகவல் மற்றும் தொழில் நுட்பத்தின் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டியது. இந்த பின்னணியில் மிகவும் அவசியமான ஒன்று. விதி முறைகள், வழிமுறைகள் மற்றும் அரசு தொடர்பான ஏனைய செயற்பாடுகளைக் குறிப்பதற்கான மென்பொருள்கள் உருவாக்கப்படல் வேண்டும். தகவல் தொழில்நுட்பத்தின் வாயிலாக அரசுத் துறைகளை பொது மக்கள் தொடர்பு கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும். இதன் மூலம் வெளிப்படையான ஆட்சி நிர்வாகத்தை உருவாக்க வேண்டும்.

அறிவுசார் சமுதாயம் என்பது சமூக மாற்றம், வளமைப் பெருக்கம் என்ற இரு பரிமாண குறிக்கோளைக் கொண்டுள்ளது. அறிவுசார் நாடாக மறு வடிவம் பெற வேண்டுமென்றால் அடுத்த பரிமாணமாக கடுமையாகப் பாடுபட்டு உருவாக்கிய செல்வச் செழிப்பு, சமுதாய மறுமலர்ச்சி என்ற இரு தூண்களையும் பாதுகாப்பதன் மூலம் அறிவுசார் சமூகத்தை நிலைத்து வைத்திருக்க முடியும். அறிவுசார் நாடு என்ற அந்தஸ்து, அறிவுசார் சொத்துரிமையை வலுப்படுத்துவதற்கும் பெருமளவிலான உயிரியல், நுண்ணுயிரியல், ஆதார வளங்களைப் பாதுகாப்பதற்கு மான மிகப்பெரும் பொறுப்பையும் நம்மிடம் தந்துள்ளது.

பல திசைகளிலிருந்து தொடுக்கப்படும் பல்வேறு தாக்குதல்களிலிருந்து நமது தொன்மையான அறிவுச் செல்வத்தையும், கலாசாரத்தையும் பாதுகாப்பதோடு, பொருளாதார சுபீட்சம், தேசப்பாதுகாப்பு என்ற இரண்டு முக்கிய அம்சங்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனத்தில் கொள்ள வேண்டும். நமது தகவல் ஆதாரங்களையும், இணைய சேவையையும் கண்காணிப்பு உத்தி மூலம் உளவு மற்றும் மின்னணுத் தாக்குதல் களிலிருந்து பாதுகாக்க வேண்டும். இப்படிப்பட்ட தாக்குதல்களை சமாளிப் பதற்கான தொழில்நுட்பத் தடுப்பு உத்திகளையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும். இந்த அறிவைப் பாதுகாப்பதற் கான ஆதாரத்தேவை இரண்டு வகையான அணுகுமுறையை கொண்டுள்ளது. அறிவு சார் சொத்துரிமை மற்றும் அது தொடர் பான பிரச்சினைகளை தீர்ப்பதில் ஒரு முகப்பட்ட கவனம் சிதறாத அணுகு முறைகள் பின்பற்ற வேண்டும்.

அறிவுப்பலம்கொண்ட நாடாக விஸ்வரூபம் எடுப்பதற்கு அறிவாற்றல் அடித்தளத்தில் உருவான கிராம முன்னேற் றம் தான் ஆதாரசக்தி, கல்வி, நல வாழ்வு வசதி, விறுவிறுப்பான பொருளா தார நடவடிக்கைகள் எல்லாம் கிராமங்களை எட்டுவதற்கு குறைந்த பட்சம் ஒருங் கிணைந்த நவீன தகவல் தொடர்பு வசதி களை அங்கு ஏற்படுத்த வேண்டும். பாடசாலைகள், நலவாழ்வு மையங்கள், கிராமிய சந்தைகள், சேமிப்பு கிடங்குகள் மற்றும் வர்த்தகமையங்கள் விறுவிறுப்பாகச் செயல்பட வைத்து கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு இவற்றின் பலன்களையும், வசதிகளையும் குறைந்த செலவிலும், சிக்கனமாக பயன்படுத்தக்கூடிய வசதிகள் அமைத்துக் கொடுத்தல் வேண்டும். அத்துடன் கிராமிய மக்களுக்கு தொலைக் கல்வி வசதிகளை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது. கிராமிய இணையத்தள மையங்கள், பொதுத் தொலைபேசி மையங்கள், தொலை மருத்துவம், இலத்திரனியல் சந்தை இலத்தினயல் நிர்வாகம், இலத் திரனியல் வர்த்தகம் போன்ற பல்வேறு வசதிகளை உள்ளடக் கியதான தகவல் தொழில்நுட்ப பூங்காக் கள் கிராமங்கள் தோறும் உருவாக்க வேண்டும்.

இந்த வகையில் தேசத்தின் ஆணி வேராக அமைந்திருக்கும் கிராமப் பகுதி களில் விண்வெளித் தொழில் நுட்பத்தின் பயனாகக் கிடைத்த தகவல் தொழில்நுட்ப புரட்சியை அனைத்து துறைகளிலும் ஏற்படுத்துவதன் மூலம் அறிவார்ந்த சமூக மறுமலர்ச்சியை நாம் அடைவது உறுதி.

**உசாத்துணை**


1. ஆ.ப.ஜெ. அப்துல்கலாம். ஆ. சிவதாணுபிள்ளை., "உதயமாகிறது வலிமை படைத்த பாரதம்"
2. ந. ரவீந்திரகுமாரன்., மு. கணேஷமூர்த்தி., "பொருளாதார அபிவிருத்திச் செல்வழி"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகரமான உறவுப் பேணுகையில் தொடர்பாடல் ஒரு குறிப்பு

க.தர்மசேகரம் B.A. (Hons)
உளவளத்துணை உதவியாளர்,
பிரதேச செயலகம், நல்லூர்.

உலகில் உள்ள உயிரிகளின் வாழ் நிலை இயக்கத்திற்கு துணைசெய்கின்ற அம்சமாக தொடர்பாடல் காணப்படு கிறது. மனித வாழ்வும் தொடர் பாடல் என்ற அடிப் படை மூலக்கூற்றின் மூலமே கட்டி வளர்க்கப்படுகின்றது. நாம் எமது தேவை களை வெளிப்படுத்தவும், செய்திகளைப் பரிமாறிக்கொள்ளவும், பிறரது தேவை களைப் புரிந்துகொள்ளவும் தொடர் பாடலே பாலமாய் அமை கின்றது. இத் தொடர்பாடலானது பொது வாக வாய்மொழி மூலமான தொடர் பாடல் (Verbal Communication), வாய்மொழியற்ற தொடர்பாடல் (Non-Verbal Communication) என இரண்டு பிரதான வகைப்பாட்டிற்குள் பொதுவாக அடக்கப்படுவது உண்டு. மனித உறவுப் பேணுகையில் தொடர் பாடலானது பிரதான வகிபாகத்தை ஏற்று நிற்கிறது என நாம் திடமாகக் கூறமுடியும். "மனிதன் ஒரு சமூகப் பிராணி" என்பதற்கேற்ப ஏனைய வர்களோடு இணைந்து வாழ வேண்டிய தேவை ஒவ்வொரு மனிதனுக் கும் உண்டு. இந்த வகையில் நோக்கும் போது மனிதர்கள் இணைந்து உருவாக்குகின்ற உறவுக்கட்டுமானத்தைப் பின்னுகின்ற இழையாகத் தொடர்பாடல் இருக் கின்றது. இத்தொடர்பாட லானது மனிதர் களுக்கிடையில் மகிழ்ச்சி கரமானதாகவும், இதயபூர்வமானதாகவும் அமைகின்ற போது வெற்றிகரமான உறவுப் பேணுகை என்பது சாத்தியமாகின்றது. அவ்வாறு அமையத்தவறின் முரண் பாடுகள் நிறைந்து உறவு நிலைகளில் முறிவுகள் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே தொடர் பாடல் திறனை நாம் விருத்தி செய்து கொண்டு வாழ்வைச்சிறப்புற அமைத்துக் கொள்ள வேண்டியது அவசியமானதாக இருக்கிறது.

சமூகத்தின் அடிப்படைக் கட்டு மான அலகாகக் குடும்பம் அமைந்து காணப்படுகின்றது. கணவன், மனைவி, பிள்ளைகள் ஆகியோருக்கிடையில் தொடர்பாடலானது ஆரோக்கியமான தளத்தில் இல்லாதிருக்கும்போது முரண் பாடுகள் உருவாகி பிரச்சனைகள் தோன்று கின்றன. கணவன் மனைவியை யும், மனைவி கணவனையும், பிள்ளைகள் பெற்றோரையும், பெற்றோர் பிள்ளைக ளையும் மதித்துத்தொடர்பாடும் போதே குடும்பத்தில் இயல்பான மகிழ்ச்சி மலர்ச்சி பெற்றுத்திருப்தியான குடும்ப வாழ்வு வாய்க்கப்பெறும். அநேகமான முரண் பாடுகளின் மூலவேரை ஆராயத் தலைப் படும்போது அது உரையாடலாக இருப் பதை நாம் கண்டுகொள்ள முடியும். இரண்டு நபர்களுக்கிடையிலான கை கலப்பு, குழு மோதல்கள் போன்ற வன் போக்கு நிலைகளை நோக்கும்போது இத்தகைய முரண்பாட்டிற்கான அடிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையாக வார்த்தைகளே இருக்கும். எனவே வார்த்தைகளை நாம் மிகுந்த அவதானத்துடன் பிரயோகித்து தொடர் பாடல்களை நிகழ்த்தும்போது முறிவு களற்ற வெற்றிகரமான உறவை நாம் கட்டி வளர்க்க முடியும்.

மக்கள் தொடர்புறுகின்ற பணி நிலைகளில் சேவை புரிகின்றவர்களுக்குத் தொடர்பாடல் திறன் (Communication Skill) என்பது மிகவும் வேண்டப்படுகின்ற ஒன்றாகவே காணப்படுகின்றது. மக்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு அவர் களுக்கேற்ற வகையிலான சேவைகளை திருப்திகரமாக வழங்குவதற்கு இத்திறன் மிகவும் உதவிகரமானதாகும். மக்கள் நலனை முன்னிறுத்தி பணியாற்றுகின்றவர் களின் தன்மையை நாம் அவதானிப் போமாயின், அவர்களிடம் ஆரோக்கிய மான தொடர்பாடல் திறன் இருப்பதை நாம் கண்டுகொள்ள முடியும். இத்தகைய சேவையாளர்கள் பொது மக்களின் அன் பிற்குப் பாத்திரமானவர்களாகவும், மக்க ளின் அபிமானத்தைப்பெற்ற வர்களாகவும் இருப்பர். இதே போன்றே வர்த்தகம், மருத்துவம் போன்ற துறைகளில் பணி யாற்றுகின்றவர்களும் பிறருடன் ஊடாட் டம் நிகழ்த்துவதை உகந்த வகையில் மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் திருப்திகரமான சேவையை வழங்க முடிவதோடு நற்பெயரையும், தொழில் விருத்தியையும் ஈட்டிக்கொள்ள முடியும்.

அமெரிக்க அறிஞரான "மார்ஷல் ரொஷன் பேர்க்" என்பரால் அறிமுகப் படுத்தப்பட்ட தொடர்பாடல் நுட்பமாக (Communication Technique) வன்முறை யற்ற தொடர்பாடல் (Non-violent Communication) அமைந்து காணப்படுகிறது. இந் நுட்பமானது பிரத்தியேகமான அம்சங்கள் எதனையும் உள்ளடக்கவில்லை. மனித வாழ்வுடன் நெருங்கிய, இணைந்த விடயங்களை தன்னகத்தே கொண்டு வடிவம் பெற்றதாகக்காணக்கிடக்கின்றது. வன் முறை யற்ற தொடர்பாடலானது நமது பலத்தை அதிகரிக்கச்செய்து வன் முறைச் சூழலிலும் (Violent Environment) மனித இயல்பை நாம் இழக்காதிருக்கத் துணை புரிகின்றது. வன்முறையற்ற தொடர்பாடலானது ஒருவர் இன்னொரு வருடன் எவ்வாறு இணைந்திருக்க வேண்டும் என்பதையும் இம்முறை மூலம் வாழ்க்கையை எவ்வாறு கொண்டு செலுத்த முடியும் என்பதையும் காட்டி நிற்கின்றது.

மனித வாழ்வில் பிரச்சினைகளும், முரண்பாடுகளும், தவிர்க்கப்பட முடியாதவை. ஆனால் அவற்றை நாம் வெற்றிகரமாக எதிர்கொண்டு ஆரோக்கிய மான சூழலில் வாழ்ந்து பிறரையும் அத்தகைய சூழலுக்குள் எவ்வாறு உள்ளீர்க்க முடியும் என்பதை நடைமுறைச் சாத்தியமான வழிமுறைகள் மூலம் வன் முறையற்ற தொடர்பாடலானது, தெளி வுறுத்துகின்றது. "மார்ஷல் ரொஷான் பேர்க்" வன்முறையற்ற உலகம் (Giraffe World), வன்முறை உலகம் (Jackal World) என்ற இரண்டு விதமான உலகங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். அந்த வகையில் வன்முறையற்ற உலகத்தை ஒட்டகச்சி விங்கிக்கும், வன்முறை உலகத்தை ஓநாய்க் கும் ஒப்பிட்டுக் கூறப்படுகின்றது. வன் முறையற்ற உலகத்தைச் சார்ந்தோரின் செயற்பாடு ஒட்டைச்சிவிங்கியின் செயற் பாட்டை ஒத்ததாக இருக்கும் என "மார் ஷல்" குறிப்பிடுகின்றார். இவ் உலகத்தைச் சார்ந்தோரின் உரையாடலானது இதய பூர்வமானதாக இருக்கும். இவர்கள் தூரநோக்குடையவர்களாகவும், பரந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையுடையவர்களாகவும் இருப்பர். பிறர் பேசும் வார்த்தைகள் தம்மைத் தாக்குவன எனக்கருதமாட்டார்கள். உதாரணமாக தமக்கு முன் இருப்பவர்கள் தம்மைப்பழித்துக் கூறினாலும் அதைத்த வறாக நோக்காது இவ்வாறு பழித்துக் கூறும் நபர் தமக்குத் தேவையாக இருக்கும் ஏதோ ஒன்றை நிறைவேற்றிக் கொள்வதற் காகவே இவ்வாறு பேசுகின் றார் எனக் கருதிக்கொள்வார். இவர்களின் உளப்பாங் கானது (Attitude) நேர்நிலை யாக இருப்பதன் காரணமாக வெற்றிகர மான உறவுப் பேணுகை என்பது இவர்கள் மட்டில் சாத்தியமாகிறது.

வன்முறை உலகச்சூழலைச் சார்ந் தோரின் செயற்பாட்டை ஓநாய் என்ற விலங்குடன் "மார்ஷல்" ஒப்பிட்டு விளக்கு கிறார். இவ்வுலகத்தைச் சார்ந்தோர் பய உணர்வு கொண்டோராகவும், வன்மொழி பேசுபவர்களாகவும் காணப்படுவர். யார் எதைச்சொன்னாலும், எதைச்செய்தாலும் தம்மைத்தாக்குவதன் பொருட்டாகவே கூறப்படுகிறது அல்லது செய்யப்படுகிறது எனக்கருதிக் கொள்வர். இவ்வுலகத்தைச் சார்ந்தோரிடம் தீர்ப்பிடல், முத்திரை குத்திப் பார்த்தல் போன்ற பண்புக்கூறுகள் காணப் படும். இவ்வுலகைச் சார்ந்தோரால் வெற்றிகரமான உறவுப் பேணுகை என்ற தளத்தில் நிலைபெற முடியாமல் போகின் றது. இவ்வாறு "மார்ஷல்" சுட்டி நிற்கும் இவ்விரு உலகச் சூழல் சார்ந் தோரின் வகைமாதிரிகளிற்குள் நாமும் உள்ளடங்கு கின்றோம். "மார்ஷ"லின் கருத்துப்படி நாம் பிறக்கும்போது ஒட்டகச் சிவிங்கியின் (Giraffe natured) பண்புகளைக் கொண்டே பிறக்கிறோம். எமக்கு "ஓநாய்மொழி" (Jackal language) கற்பித்துக்கொடுக்கப் பட்ட ஒன்றாகவே காணப்படுகிறது என்கிறார்.

எமது ஆளுமைப்பண்புகளை (Personality characteristics) பகுத்தா ராய்ந்து எம்மை ஆரோக்கியமானவர்க ளாக விருத்திசெய்து கொள்வதற்கான தொடர்பாடல் முறைகளை எம்முள் வளர்த்துக்கொள்வதன் ஊடாக வெற்றி கரமான உறவுப்பேணுகையை நாம் கைவரப்பெற முடியும். நாம் பேசும் வார்த்தைகள் முதற்கொண்டு தொடர் பாடல் நிகழ்த்தும் அனைத்து வழிமுறை களிலும் வன்போக்கு நிலையினைத் தவிர்த்துக் கொள்வோமாயின் உலகில் சிறந்த மாதிரிகளாகவும் (Models), நல்லுறவைப்பேணுகின்ற வர்களாகவும் எம்மை நாமே உருவாக்கிக் கொள்ள முடியும்.

நாகரிக விருத்திப்போக்கில் தொடர்பாடலானது பிரதான இடத்தைப் பெறுகின்றது. இன்றைய உலகச்சூழல் சிக்கல் நிறைந்ததாக மாற்றமடைவதற்கு தொடர்பாடலில் காணப்படுகின்ற பிறழ் வுகள் அல்லது தவறுகள் பெரிதும் காரணமாகின்றன எனக்கூறமுடியும். இன்றைய உலக விருத்திக்கு தகவல் பரி மாற்றல் முறை (Information Technology) எவ்வாறு உதவிநிற்கின்றதோ அதற்கு எதிர் நிலையான போக்கினை மக்களின் தொடர்பாடலில் ஏற்படுகின்ற பிறழ்வுகள் அல்லது தவறுகள் ஏற்படுத்தி நிற்கின்றன. எனவே ஒவ்வொரு மனிதனும் தன்னை நன்கு உணர்ந்து வன்முறைச்சூழலற்ற வகையிலான தொடர்பாடல் மார்க்கத் தைப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு பயன்படுத்துகின்றபோது தனிமனித வாழ்வு மலர்ச்சி பெறுவதோடு உலக மக்கள் அனைவரது வாழ்வும் செழிப்புற்று முழுமை பெறும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை
1. Non - violent Communication
   By Marshall B.Rosenberg,Ph.D.
2. Straight Talk
   By Sherod Miller, Ph.D & Daniel Wackman, Ph.D
3. Human Communication
   By Steward L.Tubbs & Sylvia Moss
4. Collections from internet



மயில் விளக்கு



பண்டைய நகைப்பெட்டி



மண்ணெய் விளக்கு



பண்டைய கூசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் வளர்ச்சியும் சமுதாய மாற்றங்களும்

ப. தமிழ்மாறன்
கலாசார அபிவிருத்தி உதவியாளர்,
பிரதேசசெயலகம், நல்லூர்.

**அறிமுகம்**

உலகிலுள்ள இயற்கையின் நியதிகளை அவதானித்து நிரூபணம் செய்து பெற்றிடும் அறிவுத்துறையே அறிவியல் எனப்படுகிறது. இதனையே விஞ்ஞானம் என்று அழைக்கிறார்கள். எம்முன்னோர்கள் விஞ்ஞானம் என்பதற்கு அறிவின் உடல் அனுபவநேர்வுகள் பற்றிய ஒழுங்குபடுத்தப்பட்ட அறிவு என விளக்கம் கூறியுள்ளனர். சாதாரணமக்கள் சோதனைச்சாலைகளிலிருந்து கொண்டு சதாகாலமும் பணியாற்றும் ஒருசிலர் செய்கின்ற செயற்குரிய காரியமே அறி வியல் என எண்ணுகிறார்கள். இந்நிலை யில் "நமது உலகத்தைப் பற்றியும் பிரபஞ் சத்தைப்பற்றியும் சமூகம் முழுவதுமாக ஒன்று சேர்ந்து திரட்டிய அறிவுத்தொகு தியே விஞ்ஞானம் ஆகும். இந்த அறிவை எண்ணிப் பெருகச் செய்யும் முறைகளும் இதை வாழ்க்கையில் தெரிந்து பயன் படுத்தும் முறைகளும் விஞ்ஞானம் என்ப தில் அடங்கும்" எனப் பேராசிரியர் கொனண்டு (President of the Harvard University) வரையறை செய்துள்ளார்.

ஆறறிவுபடைத்த மனிதனால் ஆற்றத்தக்க செயற்கரிய செயல்களையே அறிவியல் என்கின்றோம். அதாவது புல், மரம் போன்றன பரிசம் என்னும் அறிவையும், சிப்பி, சங்கு முதலானவை பரிசம், ரசம் ஆகிய அறிவுகளையும், கறையான், எறும்பு என்பன பரிசம், ரசம், கந்தம் ஆகிய மூன்று அறிவுகளையும் தும்பி, வண்டு ஆகியன பரிசம், ரசம், கந்தம், ரூபம் ஆகிய நான்கு அறிவு களையும், மிருகங்களும் பறவைகளும் பரிசம், ரசம், கந்தம், ரூபம், சத்தம் ஆகிய ஐந்தறிவுகளையும் பெற்றிருக்க மனிதன் மாத்திரம் இவற்றோடு பகுத்தறிவு என்ற ஆறாவது அறிவினைப்பெற்றுள்ளான். இச்சிறப்பினால்தான் மனிதனால் அறிவி யல் பாதையில் பயணிக்கமுடிகிறது.

தீயைக் கண்டறிந்தமை கற்கருவி களைத்தயாரித்தமை, சக்கரம் இயற்றிப் பானைவனைந்தமை, படகு தயாரித்தல், கூடைமுடைதல், வீடுகட்டுதல் முதலான செயற்பாடுகளில் நாகரிகம் தோன்று வதற்கு முன்னரே அதாவது ஆயிரம் வருடங்களுக்கு முன்பாகவே மனிதன் ஈடு பட்டு வந்துள்ளான். சரித்திரத்திற்கு முற் பட்ட பண்டைய காலத்திலேயே விஞ் ஞான முறைமைகள் தோன்றிவிட்டன. மிகப்பழங்காலத்தில் நாகரிகம் பெற்றிருந்த நாடுகளான எகிப்து, பாபிலோனியா, மொசப்பத்தெமியா, இந்தியா முதலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளில் விஞ்ஞான முறைமைகள் இருந்தமைக்குப் பல ஆதாரங்கள் உள்ளன. அந்த வகையில் மனிதன் இயற்கையை வசப்படுத்தித் தெரிந்துகொண்ட அறிவும் வெளியுலகம்பற்றி தனது மனத்தால் நோக்கிய சிந்தனைகளும் வளர்ச்சியடைய விஞ்ஞான முறைமைகளும் பெருவளர்ச்சி கண்டன.

கிரேக்கத்திலும் ரோமர்களிடையேயும் அரேபியாவிலும் படிப்படியாக வளர்ந்து வந்த விஞ்ஞானம் ஐரோப்பாவை அடைந்து மறுமலர்ச்சியடைந்தது. ஆனாலும்கூட சுமார் இருநூற்றைம்பது வருடங்களுக்கு முன்னரேயே விஞ்ஞான யுகத்தின் அருணோதயம் உண்டாகியது. அதன் பின்னர் புதுப்புது விடயங்களையும் அறிவியல் சாதனைகளையும் நாளாந்தம் காணவும் கேட்கவும் முடிந்தது. இன்றைய உலகம் நாளுக்கு நாள் கணத்துக்குக் கணம் மிகவேகமாக மாற்றமடைதவற்கு அறிவியலின் அபரிமித வளர்ச்சியே காரணமாகும்.

**மாறுதல்கள்**

ஹெக்காட்டஸ் (Hecataeus) என்பவர் மாற்றம் ஒன்றே உண்மையானது என்று கூறியுள்ளார். மாறுதல் இந்த ஜகத்தின் முதலாவது விதி என்றார் மகாகவி பாரதியார். "ஒரு பண்பாடோ சமயமோ நிறுவனமோ நிலைத்திருக்க வேண்டுமாயின் காலத்துக்குக் காலம் தோன்றும் மாறுதல்களுக்கும் தேவைகளுக்கும் முகம் கொடுக்கும் ஆற்றல் பெற்றதாய் அது இருத்தல் வேண்டும். பழைய பெருமைகளிலும் சாதனைகளிலும் தன்னை இழந்துவிடாது பழையவற்றுள் உதவாதவற்றை ஒதுக்கிவிட்டு உகந்தவற்றைப்பேணிக் கொள்ளத் தயாராயிருத்தல் வேண்டும். முன்னைய காலங்களில் ஈட்டிய அனுபவங்களைத்துணையாகக்கொள்வதோடு, எதிர்கால வளர்ச்சிக்குவேண்டிய புதிய முயற்சிகளிலும் முனைந்து நிற்க வேண்டும். பழையதைச் சற்றும் விடா மலும் புதியதை முற்றும் வேண்டாமலும் இருத்தல் சாத்தியமன்று. அந்தவகையில் பழையன கழிதலும் புதியன புகுதலும் பற்றி எண்ணிப்பார்த்தல் பயனுடையதாகும்." என்பது பேராசிரியர் சி. தில்லை நாதனின் கருத்தாகும்.

இவற்றினடிப்படையில் சமயம், கலை, பண்பாடு, அரசியல், இலக்கியம் பொருளாதாரம், மொழி, நடை, உடை பாவனை, குடும்ப அமைப்பு முதலான அனைத்துத் துறைகளிலும் பண்டைய காலத்திலிருந்தே மாறுதல்கள் இடம் பெற்று வந்திருப்பினும் தற்காலத் தில் மாற்றத்தின் வேகம் மிகை மடங்காகியுள்ளது. எங்கும் எதிலும் அறிவியல் புகுந்துவிட்டமையால் உலகம் உள்ளங்கைக்குள் அடங்கிவிட்டது.

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" எனப் பாரதியும் "சீனா தேசம் வரை சென்றாயினும் அறிவு கிடைக்கக்கூடிய இடங்களில் இருந்து அதனைப்பெறுக" என முகம்மது நபியும் கூறியமைக்கு அமைவாக அசையாத குட்டையிலே அழுக்குகளும் கிருமிகளும் தேங்குவதுபோல மூடக்கொள்கைகளால் மனித சமுதாயம் கீழ்நிலைப்படாதிருக்க விதேசிய விழுமியங்களையும் பிறநாட்டு நல்லறிஞர் கருத்துக்களையும் அறிவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்பங்களையும் வேறுபாடு பாராது பின்பற்றும் புதிய கலாசாரம் உலககெங்கணும் பரவத்தலைப்பட்டமையால்; மாற்றங்களை கோல்கொண்டு அளக்க முடியாதுள்ளது. இதனால் எண்ணிட முடியாத நன்மைகள் பல்தேசத்தவர்க்கும் பரவியது என்பது எவ்வளவு உண்மையோ அதேயளவு தீயவிளைவுகளால் வார்த்தைகளால் விளக்கமுடியாத துன்பியல் சம்பவங்கள் நடந்தமையும் வெளிப்படையான உண்மையேயாகும்.

விண்வெளிச்சாதனைகள் தானியங்கிக்கருவிகள், மருத்துவ நுட்பங்கள், தொடர்பு சாதனப் பெருக்கம், பல்லூடகப் பொறிமுறைகள் அதிசயிக்கவைக்கும் கட்டிட அமைப்புக்கள், கணனி வெளியீடுகள் என இயந்திர நிலைப்பட்டிருக்கும் இன்றைய உலகில்; வறுமையும் பிணியும், மனிதனது ஆயுளும், பொதுநலமும், பெருகியுள்ளதா? குறைவடைந்துள்ளதா? என எண்ணிப்பார்ப்பது அவசியமாகும். அன்பு, மனிதநேயம், ஜீவகாருண்யம், சகோதரத்துவம் ஆகியவற்றிற்கு இலக்கணமாக மனிதன் வாழ்கின்றானா? பண்பட்ட மனித சமுதாயத்தை எங்கேனும் காண முடிகிறதா? நல்லவற்றுக்குக் காலமில்லையா? எனப்பலவாறும் அங்கலாய்க்கும் மனிதகுலமுன்னோடிகள் சமுதாய மாற்றங்களை பொறுப்புணர்ச்சியுடன் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். புதியது ஒன்றினைப் பின்பற்றும்போது என்ன? எப்படி? யாருக்காக? எனச்சிந்தித்து விளைவுகளை அலசி நோக்கி அவற்றை உகந்ததாயின் ஏற்றுக்கொண்டும் தகாததாயின் விலக்கியும் நடக்கும் பண்பினை கொண்டிருப்பது அவசியமாகும்.

இந்நிலையில் பிரதேச வேறுபாடின்றி ஒரு இனத்தின் கலாசார பண்பாட்டு முறைமைகளும் வாழ்வியலும் கடிவாளமற்ற குதிரைபோல் தன்போக்கில் மாற்றமடைதற்கு அறிவியல் காரணமாவது உண்மையே, ஆனாலும் ஒரு நாடு அறிவியலில் எத்தகைய ஈடுபாடு காட்டுகிறதோ அதற்கேற்ற வகையிலேயே உலக அந்தஸ்து கிடைக்கும் நிலையாகி விட்டது. அறிவியலும் தொழிநுட்பத்திறனும் நிறைந்த நாடுகளே வல்லரசுகள் என்ற உயர் கௌரவத்தை அடையும் வாய்ப்புள்ளது. இன, மத, தேச பேதமின்றி அறிவியல் பாதையில் பயணித்தவாறே ஒன்றுபட்ட ஒழுக்கத்தில் சிறந்த இனத்துக்குகந்த உலகத்தைப் படைக்க முயல்வது சாலவும் பொருத்தமானதாகும்.

**ஒரே உலகம்**

மனித சமுதாயம் நாகரிக வாழ்க்கை வாழத்தொடங்கிய காலம் முதல் கண்டுவந்த பெருங்கனவுகளுள் ஒரே உலகம் உருவாதல் என்பதும் ஒன்றாகும். நயத்தகு நாகரிகம் கண்ட சமுதாயங்களிளெல்லாம் தத்தமது எல்லைகளைக் கடந்து உலகெங்கும் தழுவும் உயர்ந்த குறிக்கோள் காலத்துக்குக் காலம் எழுந்திருக்கின்றது.

சங்கத்துக் கவிஞன் கணியன் பூங்குன்றனார். "யாதும் ஊரே யாவரும் கேளீர்" எனப் பாடியதும் கிரேக்கப் புலவனான பிளேற்றோ "மனுக்குலம் ஒன்று மானுடம் ஒன்று" என்று மொழிந்ததும் சிற்றூர்களினூடாகப் பேருலகொன்றினைப் படைத்திடல் வேண்டும் என்ற எண்ணத்திலேயாகும். சமயஞானிகளும் பல நூற்றாண்டுகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே உலகு உருவாகுவதற்கு முயன்றனர். ஆனாலும் சமயப் போட்டிகள், பிளவுகள் காரணமாக அவை சாத்தியமற்றுப் போயின. காலத்துக்குக் காலம் தோன்றிய பேரரசுகளும் தமது ஆணைக்குக் கீழ்பட்ட பரந்த உலகினைப் படைக்கத் துடித்தன. அலெக்சாந்தர் முதல் ஆங்கிலேயர் வரை இதற்காக உழைத்தனர். இருப்பினும் பலாத்காரத்தை பயன் படுத்தியமையால் இப்பேரரசுகளால் உலக அரசாக முடியாது போனது.

உலகில் முதலாளித்துவம் வளர்ச்சி யுற்றபோது பொருளாதார பௌதீக வளங்களின் அடிப்படையில் பொதுவான உலகம் உருவாகும் நிலை தோன்றியது. புதிய உற்பத்திப் பொருட்கள் உள்நாட்டில் மட்டுமல்லாது உலகின் அனைத்துப் பாகங்களுக்கும் உபயோகப்பட நாடுகள் உலக ரீதியில் ஒன்றையென்று சார்ந்து கொண்டன. அறிவுப் பொருளுற்பத்தியி லும் தனிப்பட்ட நாடுகளின் படைப்புக்கள் பொதுச் சொத்தாகின. சார்ந்து நோக்கும் தேசியப்பார்வையும் குறுகிய மனப் பான்மையும் மேலும் அசாத்தியமானது. பலதேசிய இலக்கியங்களிலிருந்து ஓர் உலக இலக்கியம் உதயமானது. ஆயினும் சுரண்டல், யுத்தம், ஆக்கிரமிப்பு போன்றன மலிந்துவிட்ட நிலையில் மனிதர்கள் ஒற்றுமையாகவும் அமைதியுடனும் வாழ முதலாளித்துவம் தடையாகிவிட்டது. இந்நிலையில் முதலாளித்துவத்தின் ஆக்கிரமிப்பை நீக்கியழிக்கும் வகையில் சமவுடைமைப் பொருளாதாரம் வளர்ச்சி கண்டது. இதன் மூலம் எல்லோருக்கும் உரிமையளித்து நாமே எம்மை வழிப்படுத் தல் என்ற புதிய சமுதாய அமைப்பு உருவாகியுள்ளதால் பண்டைய கொள்கை களையும், கோட் பாடுகளையும் நீக்கி விட்டு பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் தம்பாடல்களில் கூறியது போல் ஒரேநீதி, ஒரே கடவுள், ஒரே காற்று, ஒரே நீர், ஒரே வானம், ஒரே பூமி, ஒரே பாதை, ஒரே தீர்ப்பு என்கின்ற நிலை ஏற்படுமிடத்து ஒரே உலகக் கனவு நனவாகும் என்பதில் ஐயமில்லை.

இன்று அறிவியல் பெருவளர்ச்சி கண்டுள்ள நிலையில் மனிதசமுதாயம் அறிவியல் மாற்றங்களையும் நுட்பங் களையும் தேர்ந்து பிரயோகித்து வரும் காலகட்டத்தில் தொடர்பு சாதனங்களி னால் இப்பேறடையும் வாய்ப்புக்கனிந் துள்ளது. ஆனால் மனித சமுதாயத்தின் அழிவுப்பாதைக்கு தொடர்புசாதனங்கள் காரணமாகும் நிலையில் இதுவும் சாத்திய மற்றுப்போய்விடலாம். எனினும் பொது நலநோக்கின் ஒன்றுபட்டு அக்குறை போக்கி உழைத்தால் ஒரே உலகக்கனவு நன வாகும்.

**ஈழத்து அறிவியலும் சமுதாயமும்**

இந்து சமுத்திரத்தின் நித்திலம் எனப்படும் எழில்மிகு இலங்கை பொருளா தார நிலையிலும் கல்வித்தரத்திலும் உயரிய நிலையில் இருந்த காலத்தில் சிறுமைப்பட்டுப்போயிருந்த பல நாடுகள் இன்று அறிவியலில் மேன்னிலை அடைந் துள்ளன. நாட்டில் ஏற்பட்ட இனப்பிரச் சனையையும் யுத்தத்தையும் இலங்கையின் பின்னடைவுக்கான காரணங்களாகக் கூறினாலும் அவை முழுமையாக ஏற்கத் தக்கன அல்ல.

அறிவியல் எமது மக்களுக்குப் புதியதன்று. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே எம்மவர்கள் அறிவியல்துறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதித்துள்ளார்கள். ஆனாலும் இன்று நாம் காணும் அறிவியலும் தொழில்நுட்பமும் எமக்குப்புதியவையாகும் இருப்பினும் இந்த அறிவியல் தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெறும் தன்மை கொண்டே உலக அரங்கில் இலங்கையின் நிலை கணிக்கப் படும் என்பதால் அவ்விலக்கினை எட்டு வதற்குரிய ஆக்கமுயற்சியில் இலங்கை யர்கள் ஒவ்வொருவரும் முழுமையாக உழைப்பது அவசியமாகும். உலக சந்தை யில் இலங்கை ரூபாவின் பெறுமதி நாளாந் தம் வீழ்ச்சியடைவதால் உள் நாட்டிலும் வெளியேயும் ஏற்படும் பாதிப்புக்களை எண்ணிப்பாராதிருப்பது பேதமையே. நாடு கடன் பெற்றுள்ளது என்று கூறினா லும் அக்கடனில் குடிமக்கள் அனைவரும் பங்காளிகளே. ஆகையால் முறையான திட்டங்கள் வகுக்கப்பட்டு அபிவிருத்தி குறித்து உழைப்பதும் பொருளாதார இருப்பைப்பாதுகாப்பதும் காலத்தின் தேவையாகிறது.

1927 ஆம் ஆண்டு நவம்பர்மாதம் இலங்கைக்கு விஜயம் செய்து, காலியி லுள்ள மகிந்தாக் கல்லூரிக்கு வருகை தந்து உரையாற்றிய மகாத்மாகாந்தி குறிப் பிட்டது போல் கைத் தொழில் துறையை விருத்தி செய்வதன் மூலமும் கல்விக் கொள்கையுடன் வாழ்க்கைத் தேர்ச்சிக் கான முயற்சியாண்மையை இள வயதி லிருந்தே ஊட்டுதவன் மூலமும் இலங்கை பொருளாதார உச்சத்தை அடைய முடியும். விதேசிய விழுமியங்களின் ஆக்கி ரமிப்பினால் இன்னது என நோக்காது "பலதும் சேர்த்துச்சாம்பாறு ஆக்குவது போல்" எல்லாவற்றையும் கலந்து பிரயோ கிக்கும் ஒரு கலப்பு மாயை நிலைக்குள் இலங்கையர்கள் தள்ளப் பட்டது தான் இலங்கையின் பிற்போக்குக் காரண மெனலாம். எது எவ்வாறு அமையினும் இன்றைய உலகின் முதன்னிலை நாடுகளின் நிலையை இலங்கையடைய பல நூற் றாண்டுகளாகும் என எண்ணிக் கொண்டு வாழாதிருக்காது ஜப்பான் போன்ற நாடுகளது வளர்ச்சிப்பாதையை உற்று நோக்கி ஆக்கபூர்வமாக முயற்சிப்பது ஒவ்வொரு இலங்கையரதும் கடமை யாகும்.

**ஜப்பானின் முயற்சியும் வளர்ச்சியும்**

இரண்டாம் உலகமகாயுத்தத்தின் போது அணுகுண்டு வீச்சுக்கு இலக்காகி நலிந்து போயிருந்த ஜப்பான் மீளவே வாய்ப்பில்லை என எண்ணியிருந்த நிலையில் இன்றைய அறிவியல் தொழில் நுட்ப உலகில் பொருளாதார, தொழில் வளம் மிக்க நாடாக உருமாறி அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளையும் கதிகலங்க வைத்துள்ளமை கண்டு வியப்படையாம லிருக்க முடியாது.

ஆரம்பத்தில் ஜேர்மனியின் தொழில்நுட்ப முறைகளை அடியொற்றி கமராக்களை உற்பத்தி செய்த ஜப்பானி யர்கள் இன்று பல்துறை உற்பத்திகளிலும் அகலக்கால்பதித்து, சடுதியான வளர்ச்சி கண்டு, மேன்னிலை அடைந்துள்ளார்கள். ஜப்பானியர்களின் கடின உழைப்பு, சிறந்ததலைமைத்துவம், தொலைநோக்கு, நிர்வாகத்திறன், நேற்றைய பாதிப்பைச் சுமக்காது நாளைய வெற்றி குறித்துச் சிந்திக்கும் பண்பு, முதலானவற்றால் உலக சந்தையில் ஜப்பானின் பெயர் முத்திரை யிடப்பட்டுவிட்டது. ஜப்பானின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்த்தியான நுட்பங்களினாலும் உற்பத்தி யினாலும் அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளில் பல உற்பத்திச்சாலைகள் மூடப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப் பிடத்தக்கதாகும். நிர்வாகக் கலையை உலகுக்கு அறிமுகம் செய்து வைத்த அமெரிக்கா ஜப்பானின் நிர்வாகக் கலை இத்தகைய நேர்த்தியாக இருப்பது எவ் வாறு? என்பது குறித்து ஆராய்ந்து வரு கிறது. இன்று ஜப்பானிய நிர்வாகக்கலை (5S) அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகி அங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே ஜப்பானின் வெற்றியின் ரகசியத்தை அறிந்து கொண்டு தமக்கே உரித்தான பாணியில் முனைந்து முயற்சிக்குமானால் இலங்கை எதிர்கால உலகில் முதன்னிலை நாடாகப் பிரகாசிக்க முடியும்.

**யாழ்ப்பாணச் சமுதாயம்**

அறிவியல் வளர்ச்சிகுறித்தும் சமுதாய மாற்றங்கள் குறித்தும் நோக்கிய நிலையில் யாழ்ப்பாணத்துச் சமுதாயத்தின் அறிவியல் வகிபாகம் குறித்து எண்ணிப் பார்ப்பதில் தவறேதுமிருப்பதாகத் தோன்ற வில்லை. யாழ்ப்பாணம் உலகத்தமிழர் களின் கலாசாரத் தலைநகராக விளங்கி யதும், கந்தபுராணக்கலாசாரம் யாழ்ப் பாணக்கலாசாரம் எனக்கருதப்பட்ட மையும், அறிவுபூர்வமாகச் சிந்திக்கும் நுண்ணறிவு படைத்த கல்விமான்களை உருவாக்கும் பண்பட்ட பிரதேசமாக விளங்கியமையும் உலகறிந்த உண்மை. இலங்கையிலுள்ள அனைத்து மாவட்டங் களிலும் கல்வித்தரத்தில் முதலிடம், பண்பாட்டில் ஆணிவேர், கலாசாரத்தின் மகுடம் எனப்பல புகழாரங்களுடன் 'குட்டிச் சிங்கப்பூர்' என அழைக்கப்பட்ட யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலை எவ்வாறுள்ளது என அளவெடுத்துக் கொள் வது அவசியமானதும் அத்தியாவசிய மானதும் ஆகும்.

கல்வியில், பொருளாதரத்தில், கலைகளில், பண்பாட்டில், உற்பத்தியில் உயர்நிலையிலிருந்திருக்க வேண்டிய யாழ்ப்பாணத்தை கீழ்நிலைப்படுத்திய வர்கள் யாவர்? ஒரு பிரதேசத்தின் வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் அப்பிரதேச மக்களே காரணம். "எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே" என 'அறிவரசி ஔவை' பாடியவாறு இடத்தைக்குறை கூறாது அவ்விடத்தில் வாழும் மக்களையே குறைநோக்க வேண்டி யுள்ளது. குறிப்பாக நான்காம் கட்ட ஈழப்போர் முடிவடைந்தபின் குற்றச் செயல்களும் இளவயதுத் திருமணங்களும் குழு மோதல்களும் பல்வகைப் பாதகச் செயல்களும் யாழ்ப்பாணத்திலே அரங் கேற அனுமதியளித்து அவற்றுக்கு எண்ணெய் தெளித்து ஓங்கச்செய்யும் கபளீகரச் செயலை கண்டும் காணாதிருப் பதும் அறிவியலில், கைத்தொழில், நடவடிக்கைகளில், தொழிநுட்ப உற்பத்தி யாண்மையில் ஈடுபாடு கொள்ளாதிருப்ப தும் தற்கொலைக் கொப்பானதேயாகும்.

**நிறைவுரை**

அறிவியல் உலகம் என்பது நம்பிக்கை அடிப்படையில் எதையும் ஏற்றுக்கொள்ளாத மாண்பினை உடையது. தரவுகள் நிறுவல்களை அடிப்படையாகக் கொண்டு முடிவுகளை வெளிப்படுத்தும் பண்பினைக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என வள்ளுவன் மொழிந்தவாறு எதையும் முறையான வாதங்களுக்கும் சோதனைக்கும் உட்படுத்தியே ஏற்றுக் கொள்ளும் தன்மை கொண்டது. இவ்வுலகில் மனிதனாகப்பிறப்போர் அனைவரும் என்றோ ஒரு நாள் இறப்பது திண்ணம். பிறக்கும் போது எப்பொருளையும் தம்முடன் கொண்டு வருவோரும் இல்லை. முடிவில் கொண்டு செல்வோரும் இல்லை. இதனை உணராது புவியின் போகப்பொருட்களில் பேரவாக்கொண்டு சிறுமையடையும் மாந்தரின் மதிநலத்தை என்னவென்று சாடுவது. பிறர் பொருட்களையும் செல்வங்களையும் தம்முடையவையாக்கப் பலரும் விண்டுகட்டியிருப்பதனால் விளையப்போவது யாது? "பொருள் இல்லார்க்கு இவ்வுலகில்லை" என வள்ளுவன் செப்பியதன் உள்பொருள் இது தானோ? "நச்சப்படாதவன் செல்வம் நடுவூரில் நச்சுமரம் பழுத்தற்று" என்னும் பொய்யா மொழியின் தெளிவை யார் கண்டார்? நல்வழியில் பொருளீட்டி பகுத்துண்டு வாழும் மரபை ஏட்டில் மட்டுமே காணும்நிலை ஏற்பட இடந் தருவதா?

இயற்கையிலுள்ள எல்லாவற்றையும் மனிதனால் கண்டறிய முடியும் என்றில்லை. இயந்திரம் எவ்வளவோ நுட்பமானது ஆயினும் எல்லாத்துன்பங்களையும் அதனால் போக்க முடிவதில்லை. மனிதன் வேண்டியவாறு இயந்திரங்களைப் பெருக்கி கொள்ளட்டும். ஆனால் அவன் உணர்ச்சியற்ற இயந்திரம் போலாகிவிடக் கூடாது. இன்று பலர் பணம் தேடும் இயந்திரங்களாகிவிட்டனர். மனிதம் மரணித்த மனிதர்களின் தொகை அதிகரித்துவிட்டது. மனிதனின் மாண்பு அன்பும் அனுதாபமுமாக வடிவெடுக்க வல்லது. இவ்வுலகமோ நிலையற்றது; துன்பத்துக்கு நிலைக்களமாயமைந்தது. தனது மாண்பைக் கொண்டு மனிதன் மண்ணுலகிலுள்ள துன்பத்தைப் பெரிதும் துடைக்கலாம். பண்டு தொட்டுக் கனவிலுள்ள ஒரே உலகினைத்தோற்றுவிக்கலாம். மனிதன் புனிதத் தன்மையைப் பெறுவது முதற்கடமை. இயந்திரத்தைக் கையாளுவது காலத்துக் கேற்ற வாய்ப்பே யாகும்.

"புராதனமாயினும்சரி, நவீனமாயினும் சரி எது விரும்பத்தக்கது. எதுவிரும்பத்தகாதது எது நல்லது, எது கெட்டது, எது சரியானது, எது தவறானது என வேறுபடுத்திப்பார்த்து நல்லவற்றைக் கொள்ளுவதும், அல்லாதனவற்றைத் தள்ளுவதும் ஒவ்வொருவரதும் கடமை" என மகாத்மா காந்தி கூறியவாறு மாற்றங்களை சமூகப்பொறுப்புடன் பகுத்துணர்ந்து பார்த்து உகந்தவற்றை ஏற்று எமது இனத்தின், மொழியின், உலகின் நலன்கருதி பொது நோக்கில் சிந்தித்து ஆக்கப் பாதையில் அறிவியலைக் கைக்கொண்டு சமூகப்பற்றுடன் நெறிபட உழைத்தால் நாளைய உலகில் நாம் நிச்சயமாகப் பேசப்படுவோம் என்பதில் ஐயமில்லை.

முயற்சிப்போம்,
முனைவோம்,
முடிகொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணை நூல்கள்**


1. விஞ்ஞானமும் மதமும், மு. சின்னத்துரை, சுயாதீன வெளியீடு, பக்கம் 50
2. தெய்வசக்தியும் மனிதமுயற்சியும், வி.பி.கணேசன், வானதி பதிப்பகம், சென்னை 17, பக்கம் 23-25
3. ஞானச்சுடர் சன்னதியான் ஆச்சிரம சைவகலைபண்பாட்டுப் பேரவை வைகாசி - 2000, பக்கம்-5
4. தமிழ்மொழியும் - இலக்கியமும் (புதுமைகளும் மாறுதல்களும்) கல்வி வெளியீட்டுத் திணைக்களம் - 2007 (பேராசிரியர் சி. தில்லைநாதன்) பக்கம்1-6
5. விஞ்ஞான விருத்தியின் வளர்ச்சிப் போக்குகள் த. இராஜரத்தினம், மார்க்கம் ஏப்ரல் - 1992 சமூக பொருளியல் பண்பாட்டு ஆய்வு சஞ்சிகை
6. தமிழ்க்கலைக் கோவை, கலைவாணி புத்தகநிலையம், யாழ். கண்டி, மட்டக்களப்பு 1965, பக்கம் 33-38
7. மெய்யியல் நோக்கு படைப்பா? கூர்ப்பா மனிதனின் தோற்றம் - ஓர் அறிமுகம், A. ஆனந்தக்குமார், ஒக்டோபர் 94-பெப்ரவரி 95, பக்கம் 25
8. கலைக்கதிர், மனிதனும் இயந்திரமும், சுவாமி சித்பவானந்தர், பக்கம் 9-12
9. விஞ்ஞானமும் விஞ்ஞான முறையும் ஓர் அறிமுகம், வே. யுகபாலசிங்கம், பட்டப்படிப்புக்கள் கல்லூரி, யாழ்ப்பாணம், 2000
10. அறிவாராய்ச்சியியல் ஞா. ஞானக்குமாரன், பக்கம் 15
11. புராதன இந்தியாவின் அறிவியல் மேதைகள், சாமி சற்குணதாஸ், தமிழ்க்கடல் பதிப்பகம் சென்னை 1998, பக்கம்4
12. வாழ்க்கையும் கலையும் அல்லது கலையும் வாழ்வும், டால்ஸ்டாய் இலக்கியம்(தமிழில் டி.சி. இராமசாமி) தேனருவிப்பதிப்பகம், சென்னை17, பக்கம் 225-240






சேர்பொன் இராமநாதனால் பாவிக்கப்பட்ட தளபாடங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள்

| | |
|---|---|
| திரு. பா. செந்தில்நந்தனன் | பிரதேசசெயலர் |
| திரு. அ. சோதிநாதன் | உதவிப்பிரதேசசெயலர் |
| திரு. இ. பத்மநாதன் | கணக்காளர் |
| திரு. இ. சுரேந்திரநாதன் | உதவித்திட்டப்பணிப்பாளர் |
| திரு. பொ. அமிர்தகௌரிமோகன் | நிர்வாக உத்தியோகத்தர் |
| செல்வி. ச. தம்பிராஜா | பிரதம லிகிதர் |
| திருமதி. றூ. அமிர்தகௌரிமோகன் | முகாமைத்துவ உதவியாளர் I |
| திருமதி. சி. இராசலெட்சுமி | முகாமைத்துவ உதவியாளர் I |
| திருமதி. வி. ரூபகுமார் | முகாமைத்துவ உதவியாளர் II |
| திருமதி. செ. ஜெகமோகன் | முகாமைத்துவ உதவியாளர் II |
| திருமதி. பு. சிவயோகராஜா | முகாமைத்துவ உதவியாளர் II |
| செல்வி. க. மீரா | முகாமைத்துவ உதவியாளர் II |
| திரு. ச. பிறேம்குமார் | முகாமைத்துவ உதவியாளர் II |
| செல்வி. இ. செல்லையா | முகாமைத்துவ உதவியாளர் II |
| திரு. த. அம்பிகைபாகன் | முகாமைத்துவ உதவியாளர் II |
| திரு. செ. சுதாகரன் | முகாமைத்துவ உதவியாளர் II |
| திருமதி. பு. குணராஜா | முகாமைத்துவ உதவியாளர் II |
| திருமதி. யோ. அருட்செல்வம் | முகாமைத்துவ உதவியாளர் II |
| திருமதி. க. சிறீஸ்கந்தகுமார் | முகாமைத்துவ உதவியாளர். II |
| திருமதி. ட. மகிந்தன் | முகாமைத்துவ உதவியாளர் II |
| திரு. பா. பாலசங்கர் | முகாமைத்துவ உதவியாளர் III |
| திரு. மா. அன்ரனி | முகாமைத்துவ உதவியாளர் III |
| திரு. வா. கலாதரன் | முகாமைத்துவ உதவியாளர் III |
| செல்வி. தி. கஜந்தினி | முகாமைத்துவ உதவியாளர் III |
| திரு. க. முரளீதரன் | முகாமைத்துவ உதவியாளர் III |
| செல்வி. அ. வேணுஷா | முகாமைத்துவ உதவியாளர் III |
| செல்வி. பா. நிரோஜினி | முகாமைத்துவ உதவியாளர் III |
| திருமதி. க. பிரவீணா | முகாமைத்துவ உதவியாளர் III |
| செல்வி. க. ஜெனனி | முகாமைத்துவ உதவியாளர் III |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| திருமதி. ப. காமிலா | முகாமைத்துவ உதவியாளர் III |
| செல்வி. ச. வாரணி | முகாமைத்துவ உதவியாளர் III |
| செல்வி. வே. ஜெயவாணி | ஓய்வூதிய உத்தியோகத்தர் |
| திருமதி. பி. மொறின்சாமினா | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - நிதி ( மோட்டார் போக்குவரத்து) |
| திரு. பா. பார்த்தீபன் | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - நிதி ( மோட்டார் போக்குவரத்து) |
| திருமதி. த. கமலாதேவி | நெசவுப் போதனாசிரியர் |
| திருமதி. ப. சறோஜினிதேவி | நெசவுப் போதனாசிரியர் |
| திரு. க. ரமணசுதன் | நெசவுப் போதனாசிரியர் |
| திருமதி. ச. சற்குணதேவி | தையல் ஆசிரியர் |
| திரு. பொ. அருட்செல்வம் | சாரதி |
| திரு அ. இளஞ்செழியன் | சாரதி |
| திரு. ந. சந்திரலிங்கம் | அலுவலகப்பணியாளர் I |
| திரு. கா. சூரியகுமார் | அலுவலகப் பணியாளர் I |
| திரு. க. மயூரதன் | அலுவலகப் பணிப்பாளர் III |
| திரு. தி. கணேஸ்குமார் | அலுவலகப் பணியாளர் |
| திரு. க. திலகேஸ்வன் | அலுவலகப் பணியாளர் |
| திருமதி. வி. யோகேஸ்வரி | அலுவலக உதவியாளர் |
| திரு. ச. லிங்கேஸ்வரன் | அலுவலக உதவியாளர் |
| திருமதி. ர. சிவராணி | அபிவிருத்தி இணைப்பாளர் |
| திருமதி. தி. கீதாஞ்சலி | அபிவிருத்தி உதவியாளர் |
| திரு. தி. திருச்செந்தூரன் | அபிவிருத்தி உதவியாளர் |
| திரு. பொ. ஜெயரூபன் | அபிவிருத்தி உதவியாளர் |
| திரு. ப. காண்டீபன் | அபிவிருத்தி உதவியாளர் |
| செல்வி. மா. சிவகலாராணி | அபிவிருத்தி உதவியாளர் |
| செல்வி. சு. குழலி | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (திட்டமிடல்) |
| திருமதி. உ. கிரிசாந்தி | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் ( திட்டமிடல்) |
| திரு. சு. சஜீஸ் | தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| திருமதி. கு. ரஜனி | கலாசார உத்தியோகத்தர் |
| திரு. ப. தமிழ்மாறன் | கலாசார அபிவிருத்தி உதவியாளர் |
| செல்வி. ம. சுஜாத்தா | கலாசார நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் |
| செல்வி. ப. சசிகலா | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (பொது அபிவிருத்தி) |
| செல்வி. த. உமையாள் | காணி பயன்பாட்டு திட்டமிடல் உதவியாளர் |
| திரு. கா. ஐங்கரவேல் | கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி. ற. பிறேமிளா | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (பொது அபிவிருத்தி) |
| திரு. வி.சண்முகநாதன் | சமூக சேவை உத்தியோகத்தர் |
| திருமதி. பி. ஆனந்தி | சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| செல்வி. ச. ம. யூ. பிறிட்ஜெட் | சிறுவர் உரிமை மேம்பாட்டு உதவியாளர் | |
| திரு. தி. திருமாறன் | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் ( பொது அபிவிருத்தி) | |
| திரு. ம. தவேந்திரன் | விஞ்ஞான தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர் | |
| திரு. ந. சதீஸ்குமார் | விதாதா கள கூட்டிணைப்பாளர் | |
| திருமதி. கி. தயாபரி | மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் | |
| திருமதி. சா. ஸ்ரீசிவசக்தி | மனிதவள அபிவிருத்தி உதவியாளர் | |
| திரு. கா. சுதாகரன் | விளையாட்டு உத்தியோகத்தர் | |
| திரு. க. தர்மசேகரம் | உளவளத்துணை உதவியாளர் | |
| செல்வி. த. கௌரி | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் ( தொழிற்துறை) | |
| திருமதி. யோ. சுபாஜினி | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் ( தொழிற்துறை) | |
| திரு. சோ. சிவலிங்கம் | கிராம உத்தியோகத்தர் | அதி சிறப்புத் தரம் |
| திரு. இ. இராசலிங்கம் | கிராம உத்தியோகத்தர் | தரம் I |
| திரு. ப. வசந்தகுமார் | கிராம உத்தியோகத்தர் | தரம் I |
| திரு. க.முருகையா | கிராம உத்தியோகத்தர் | தரம் I |
| திரு. கு. அம்பிகைபாகன் | கிராம உத்தியோகத்தர் | தரம் I |
| திரு. த. இரட்ணேஸ்வரன் | கிராம உத்தியோகத்தர் | தரம் I |
| திரு. வீ. வேலாயுதசேயோன் | கிராம உத்தியோகத்தர் | தரம் I |
| திருமதி. ப. சேய்மானந்தன் | கிராம உத்தியோகத்தர் | தரம் I |
| திரு. சி. பன்னீர்செல்வன் | கிராம உத்தியோகத்தர் | தரம் I |
| திரு. க. யோகேஸ்வரன் | கிராம உத்தியோகத்தர் | தரம் I |
| திரு. ந. சர்வகுணசீலன் | கிராம உத்தியோகத்தர் | தரம் I |
| திரு. ச. பாலசிங்கம் | கிராம உத்தியோகத்தர் | தரம் I |
| திரு. இ. தவரட்ணம் | கிராம உத்தியோகத்தர் | தரம் I |
| திரு. தி. ஸ்ரீஸ்கந்தராஜா | கிராம உத்தியோகத்தர் | தரம் I |
| திரு. க. பஞ்சலிங்கம் | கிராம உத்தியோகத்தர் | தரம் I |
| திரு. இ. சந்திரகுமார் | கிராம உத்தியோகத்தர் | தரம் I |
| திரு. வ. சுந்தரலிங்கம் | கிராம உத்தியோகத்தர் | தரம் I |
| திரு. வை. சுரேஸ் | கிராம உத்தியோகத்தர் | தரம் I |
| திரு. போ. இ. ஜேசுதாசன் | கிராம உத்தியோகத்தர் | தரம் I |
| திருமதி. இ. இராகினி | கிராம உத்தியோகத்தர் | தரம் I |
| திரு. தி. தருமச்சந்திரன் | கிராம உத்தியோகத்தர் | தரம் II |
| திருமதி. கு. பிரதாபராஜன் | கிராம உத்தியோகத்தர் | தரம் II |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| திருமதி. கி. நாகேந்திரநாதன் | கிராம உத்தியோகத்தர் | தரம் II |
| திரு. சோ. சுந்தரலிங்கம் | கிராம உத்தியோகத்தர் | தரம் II |
| திரு. ந. தவனேசன் | கிராம உத்தியோகத்தர் | தரம் II |
| திரு. பு. தஜிதரன் | கிராம உத்தியோகத்தர் | தரம் II |
| திரு. இ. இரத்தினகோபால் | கிராம உத்தியோகத்தர் | தரம் II |
| திரு. இ. தங்கத்துரை | கிராம உத்தியோகத்தர் | தரம் II |
| திரு. ம. ஞானேந்திரன் | கிராம உத்தியோகத்தர் | தரம் III |
| திருமதி. ந. ரேணுகா | கிராம உத்தியோகத்தர் | தரம் III |
| திரு. க. அரவிந்தன் | கிராம உத்தியோகத்தர் | தரம் III |
| திரு. ஜெ. லினேஸ் | கிராம உத்தியோகத்தர் | தரம் III |
| திரு. ஸ். விஜிதன் | கிராம உத்தியோகத்தர் | தரம் III |
| செல்வி. இ. பவித்திரா | கிராம உத்தியோகத்தர் | தரம் III |
| திரு. தி. சந்திரகாசன் | தலைமையக சமுர்த்தி முகாமையாளர் | |
| திருமதி. யோ. ராகினி | முகாமைத்துவ பணிப்பாளர் மகாசங்கம் | |
| திரு. சி. சிவகுமார் | சமுர்த்தி முகாமையாளர் வலயம் I | |
| திரு. டி. தயாகரன் | சமுர்த்தி முகாமையாளர் வலயம் II | |
| திரு. சோ. சுஜீவகுமார் | சமுர்த்தி முகாமையாளர் வலயம் III | |
| திரு. அ. பிரபாகரன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் | |
| திரு. க. சுரேஸ்மோகன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் | |
| திருமதி.தே. சத்தியதர்சினி | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் | |
| திரு. ஸ்ரீ. கோபிநாத் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் | |
| திரு. மு.சிறிதரன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் | |
| திரு. தி. அருள்நேசன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் | |
| திருமதி. அ. பவளமலர் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் | |
| திருமதி. சி. தர்மிளா | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் | |
| திரு. க. சிவகாந்தன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் | |
| திருமதி. சி. ரஞ்சினி | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் | |
| திருமதி. ஜெ. இராஜசொரூபி | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் | |
| திரு. சு. சுபநாதன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் | |
| திரு. க. விமலராஜ் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் | |
| திருமதி. செ. துஸ்யந்தி | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் | |
| திரு. து. இராமநாதன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| திருமதி. கி. முகுந்தினி | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி. பி. சசிகலா | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. க. பிறைசூடி | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. க. சதீஸ் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி. க. யசோதா | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. மா. குணசேகரம் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி. இ. ஞானவதனி | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. க. டோறாபார்தீபன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. ச. குகதாசன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. பொ. சுபாஸ்குமார் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. ஆ.ஆனந்தராஜா | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி. சி. தமிழ்செல்வி | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திருமதி. பொ. தமிழ்செல்வி | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. பெ. பிரபாகரன் | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| திரு. ஜெ. கலையரசி | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் |

## இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்

| | |
|---|---|
| திருமதி. ந. றஜனி | கலாசார உத்தியோகத்தர் |
| திரு. செ. ஸ்ரீரங்கநாதன் | காணி உத்தியோகத்தர் |
| திரு. க. குகநேசன் | வெளிக்கள போதனாசிரியர் (காணி) |
| திருமதி. பூ. அன்பரசி | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் ( பொது அபிவிருத்தி) |
| திரு. த. இரவீந்திரன் | தொழில் நுட்ப உத்தியோகத்தர் |
| திரு. ந. சு. சத்தியதாசன் | வீடமைப்பு உத்தியோகத்தர் |
| திரு. S. பாஸ்கரன் | புள்ளிவிபர உத்தியோகத்தர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலகம், நல்லூர்.



அலுவலக உத்தியோகத்தர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலகம், நல்லூர்.



வெளிக்கள உத்தியோகத்தர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலகம், நல்லூர்.



கிராம உத்தியோகத்தர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலகம், நல்லூர்.



சமுர்த்தி முகாமையாளர்கள்,
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the best complements....*

# S.V.MURUGESU

*Agent for...*

**Unilever Sri Lanka Ltd., Energizer Lanka Ltd.,**
**Forterra Brand Lanka (Private) Ltd.,**
**Shell Gas Lanka Ltd.,**
**Chevron Lubricants Lanka Ltd.**







Shell GAS

**No.154, Hospital Road,**
**Jaffna.**

**TEL : 021 222 2911**
**021 222 2202**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



DIVISIONAL SECRETARIAT, NALLUR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org